॥ ஸ்ரீ: ॥

ஸ்ரீநிகமாந்தமஹாதேசிகன் அருளிச்செய்த

𑌦𑌯𑌾𑌶𑌤𑌕𑌮𑍍 ॥

(தயாசதகம்).

ஸ்ரீ-உப-வே.

அன்பில், வெ. கோபாலாசார்ய[illegible]வ[illegible]ளால்

அருளிச்செய்யப்[illegible]ட

எளிய தமிழ் வ்யாக்கியானத்துடன்

கூடினது.

ஸ்ரீரங்கம்

ஸ்ரீதேசிக ஸ்ரீஸூக்தி ஸம்ரக்ஷணஸபையாரால்

சித்திரகூடம்

ப்ரொபஸர். ராமாநுஜாசார்யஸ்வாமியின்

வேண்டுகோளுக்கிணங்கி

கும்பகோணம்

ஸ்ரீகோமளாம்பா அச்சுக்கூடத்தில்

அச்சிட்டு வெளியிடப்பட்டது.

தாத்ரு கார்த்திகைமீ.

1936

விலை] [ரூபாய் 1

॥ ஸ்ரீ: ॥

ஸ்ரீநிகமாந்தமஹாதேசிகன் அருளிச்செய்த

𑌦𑌯𑌾𑌶𑌤𑌕𑌮𑍍 ॥

(தயாசதகம்).

ஸ்ரீ-உப-வே.

அன்பில், வெ கோபாலாசார்யஸ்வாமியால்

அருளிச்செய்யப்பட்ட

எளிய தமிழ் வ்யாக்கியானத்துடன்

கூடினது.

ஸ்ரீரங்கம்

ஸ்ரீதேசிக ஸ்ரீஸூக்தி ஸம்ரக்ஷணஸபையாரால்

சித்திரகூடம்

ப்ரொபஸர். ராமாநுஜாசார்யஸ்வாமியின்

வேண்டுகோளுக்கிணங்கி

கும்பகோணம்

ஸ்ரீகோமளாம்பா அச்சுக்கூடத்தில்

அச்சிட்டு வெளியிடப்பட்டது.

தாது௵ கார்த்திகைமீ.

1936

விலை] [ரூபாய் 1

ஸ்ரீ வெங்கடேஸ்வரஸ்வாமி.

𑌶𑍍𑌰𑍀𑌰𑌸𑍍𑌤𑍁 ॥

𑌦𑌯𑌾𑌶𑌤𑌕𑌮𑍍 ॥

தயாசதகம்.

𑌶𑍍𑌰𑍀𑌮𑌾𑌨𑍍 𑌵𑍇𑌙𑍍𑌕𑌟𑌨𑌾𑌥𑌾𑌰𑍍𑌯𑌃 𑌕𑌵𑌿𑌤𑌾𑌰𑍍𑌕𑌿𑌕𑌕𑍇𑌸𑌰𑍀 ।
𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌵𑌰𑍍𑌯𑍋 𑌮𑍇 𑌸𑌨𑍍𑌨𑌿𑌧𑌤𑍍𑌤𑌾𑌂 𑌸𑌦𑌾 𑌹𑍃𑌦𑌿 ॥

ஸ்ரீமாந் வேங்கடநாதார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேதாந்தாசார்யவர்யோ மே ஸந்நிதத்தாம் ஸதா ஹ்ருதி ॥

𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑍇 𑌤𑌂 𑌗𑌿𑌰𑌿𑌂 𑌪𑍍𑌰𑌾𑌯𑌃 𑌶𑍍𑌰𑍀𑌨𑌿𑌵𑌾𑌸𑌾𑌨𑍁𑌕𑌮𑍍𑌪𑌯𑌾 ।
𑌇𑌕𑍍𑌷𑍁𑌸𑌾𑌰𑌸𑍍𑌰𑌵𑌨𑍍𑌤𑍍𑌯𑍇𑌵 𑌯𑌨𑍍𑌮𑍂𑌰𑍍𑌤𑍍𑌯𑌾 𑌶𑌰𑍍𑌕𑌰𑌾𑌯𑌿𑌤𑌮𑍍 ॥

ப்ரபத்யே தம் கிரிம் ப்ராய: ஸ்ரீநிவாஸாநுகம்பயா ।
இக்ஷுஸாரஸ்ரவந்த்யேவ யந்மூர்த்யா சர்க்கராயிதம் ॥

"ஸ்ரீநிவாஸனுடைய தயையே கருப்பஞ்சாருகப் பெருகி ஆருக ஓடிச் சர்க்கரைக்கட்டியாய் கனமாய் உறைந்திருப்பதுபோலுள்ள திருவேங்கடமென்னும் மலையைநான் பலகால் சரணம் அடைகிறேன்".

(தாத்பர்யம்)

ஸ்ரீநிவாஸனுடைய தயையென்னும் உத்தமமான குணத்தைப்பற்றி நூறு பாசுரங்களால் ஸ்தோத்திரம் செய்ய ஆரம்பம். வேங்கடமலையே பாபங்களைப் போக்கும் சக்தியுடையது என்பது அந்தத் திருநாமத்திற்கே பொருள். வேம் என்கிற வார்த்தை வடமொழியில் பாபத்தைச் சொல்லும். கடமென்னும் வினைச்சொல்லுக்குக் கொளுத்துவதென்று அர்த்தம் பாபமென்னும் பஞ்சைக் கொளுத்துவது என்பது அர்த்தம் பாபமென்னும் பஞ்சைக் கொளுத்திச் சாம்பலாக்கும் மஹிமையுடைதென்பது வேங்கடம் என்னும் வடமொழிச் சொல்லின் பொருளாகும். பகவானுடைய தயை என்னும் குணம் பாவத்திலேயே நோக்குடைய நம்முடைய

பிழைகளைப் பொறுப்பதையே தன் வியாபாரமாக உடையது. வேங்கடமென்னும் மலையும் பாபத்தைப் போக்குவதற்கென்றே ஏற்பட்டது. தயை செய்யும் கார்யத்தையே வேங்கடமலையும் செய்கிறபடியால் தயையே பெருமாளிடமிருந்து ஒரு ஆறுகப் பெருகி இந்த மலையாக உரைந்திருக்கிறதோ என்று இங்கே வர்ணிக்கப்படுகிறது. வடமொழியில் சர்க்கரை என்பது சர்க்கரையையும், கல்லையும் சொல்லும். இந்தக் கல்மலை சர்க்கரைக்கட்டியோ என்று சிலேஷையை முன்னிட்டு ரூபணம். ஸ்ரீநிவாஸன் ஒரு பெரிய கரும்பென்றும், அந்தக் கரும்பின் ஸாரமான கருப்பஞ்சாறு ஒரு நதியாகப் பெருகி சர்க்கரைக்கட்டிமலையாய் உரைந்ததோ! கரும்பின் ஸாரமில்லாத சக்கை முதலியவைகளைத் தள்ளிவிட்டு ஸாரமாகிய சாறை மட்டும் நாம் கொள்ளுவதுபோல, இந்த ஸ்ரீநிவாஸனிடத்தில் குற்றத்திற்குத் தக்க தண்டனை விதிப்பது முதலிய கோபகுணங்களைத் தள்ளிவிட்டு நமக்கு வேண்டியதான தயையென்னும் ஸாரமான குணத்தை மட்டும் கொள்ளுகிறோம் என்பது கருத்து. பாபத்தைப் போக்கும் இந்த மலை பாபத்தைப் போக்கும் தயையின் மூர்த்தியாகும். தயையில்லாதவனைக் கல்நஞ்சன் என்பார். தயையைக் கல்மலையாக ரூபணம் செய்வது பொருந்தாது என்று ஆக்ஷேபம் செய்யக்கூடும். தயை செய்யும் கார்யத்தை இந்த மலை செய்வதால் இதைத் தயையின் மூர்த்தியாகச் சொல்லவேண்டியிருக்கிறது. தயைக்கு மலையை ஒப்பிட்டதிற்குக் கருத்து என்ன என்றால், மலையை எப்படி அசைக்க முடியாதோ, அப்படியே குற்றமுள்ள நம்மிடத்தில் ஸ்ரீநிவாஸனுக்குண்டாகும் தயையை அசைக்கமுடியாதென்பதுதான். ஓர் உபமானத்தில் எல்லா அம்சங்களிலும் பொருத்தம் பார்ப்பது ஸாத்யமன்று. ஒருவனைச் சிங்கமென்றால் சிங்கத்துக்குள்ளதெல்லாம் அவனுக்கிருப்பதாகச் சொல்லமுடியாது. ஒருவனிடத்தில் தயை இறங்கிவிட்டால் அது மலையைப்போல் சலிக்காமலிருக்குமென்பது உபமானத்தின் தாத்பர்யம். பாபத்தை நீக்கும் குணமும் நீக்கும் சக்தியுமிரண்டிற்கும் பொதுஎன்பதும் கருத்து. இந்தக் கலியுகத்தில் ஜநங்களுடைய கலியைத் தீர்க்க வேங்கடமலைமேல் வேங்கடநாதன் அவதரித்ததாக சாஸ்த்ரம். இவருடைய தயை பாபவிநாசம் ஆகாசகங்கை முதலியஅருவிகளாக ப்ரவஹித்துப்பாவங்களை நீக்குவதாகவும்இந்த ஸ்தோத்ரத்தில் வர்ணிக்கப்ப

டுகிறது. பகவானைச் சரணம் புகுவதால்பாபங்கள் தொலையுமென்பர். இந்த மலை பாபத்தைத்தீர்க்கும் மலையானதாலும் இதன்மேல் ஸ்ரீநிவாஸன் எழுந்தருளியிருப்பதாலும் இந்த மலையினடிவாரத்திலேயே முதலில் தண்டனிட்டு இந்த மலையைச் சரணம் புகுகிறோம் என்கிறார். சரணாகதி செய்யும் பாபவிமோசனத்தை இந்த மலை செய்வதால் இதைச் சரணமடைவது ந்யாயமாகும். இந்தச்லோகத்தில் தயையென்னும் குணத்தை 'அநுகம்பை'என்கிற சப்தத்தினால் பேசுகிறார். 'அநுகம்பை' என்றால் ஒரு ப்ராணி துக்கத்தால் நடுங்கும்பொழுது அதைக்கண்டு தானும் தயையினால் கூட நடுங்குகிறதென்பது அர்த்தம். ஸ்ரீநிவாஸனை பரம்பொருளைக் கண்டு ஸூர்யன், வாயு, அக்நி, யமன் முதலிய தேவர்களும் நடுங்கித் தங்கள் தங்கள் வேலையைச் செய்துவருகிறார்களென்று வேதம்சொல்லுகிறது. உலகம்முழுவதும் ஸ்ரீநிவாஸனுக்குப்பயந்து நடக்கும். ஸ்ரீநிவாஸனோ என்றால் தன்னுடைய தயாகுணத்தினால் பேதையரான ப்ராணிகள் துக்கத்தினால் நடுங்கும்பொழுது தானும்கூட நடுங்குகிறானென்கிற ஆச்சர்யம் இதனால் காட்டப்படுகிறது. ராமன் தண்டகாரண்யத்திற்குப் புறப்படும் அவஸரத்தில் பக்ஷிகள்கூட 'ஸர்வபூதாநுகம்பியான' அவரைக் காட்டுக்குப் போகக்கூடாதென்று யாசித்துக் கதறினதாக வால்மீகிபகவான் கூறுகிறார். ஒரு குருவிக்குக் கொஞ்சம் சரீரத்தில் நோய் உண்டாகி நடுங்கி வருந்தினால் தானும்கூட அந்த துக்கத்தைப் பொறுக்கமாட்டாமல் நடுங்கும் ஸ்வபாவமுடைய ராஜபுத்திரன் காட்டுக்கு மரவுரியுடுத்தித் தவசிவேஷம் பூண்டு செல்லுவதும் பக்ஷிகளுக்கும் ஸஹிக்கவில்லை. கைகேயிக்கு இது எப்படி ஸஹ்யமாயிற்றோ என்பது கவியின் தாத்பர்யம். (1)

விகாஹே தீர்த்தபஹுளாம் சீதலாம் குருஸந்ததிம் ।
ஸ்ரீநிவாஸதயாம்போதே: பரீவாஹபரம்பராம் ॥ ௨ ॥

விகாஹே தீர்த்தபஹுளாம் சீதலாம் குருஸந்ததிம் ।
ஸ்ரீநிவாஸதயாம்போதே: பரீவாஹபரம்பராம் ॥ (2)

'ஸ்ரீநிவாஸனுடைய தயை என்கிற ஒரு பெரிய ஏரியிலிருந்து ஓடிவரும் வெள்ளங்களான குளிர்ந்த குருபரம்பரையில் அதிலுள்ள அநேக ஸ்நாநகட்டங்களில் இறங்கி ஸ்நாநம் செய்கிறேன்'.

(தா-ம்) ஸ்ரீநிவாஸனுடைய தயை வேங்கடமலைவடிவை எடுத்ததாக முதல் ச்லோகத்தில் அநுபவம். இங்கே குருபரம்பரையிலுள்ள கருணைநிரம்பிய நம்மாசிரியர்கள் ஸ்ரீநிவாஸனுடைய தயையின் பரிவாஹங்களென்று அநுபவம். நாராயணனென்கிற தேவன் மானிடவேடம் பூண்டு ஆசிரியனாகிப் பிறவிக் கடலில் அமிழ்ந்து கிடக்கும் ஜீவர்களைச் சாஸ்த்ரமென்னும் கையினால் தன் கருணையால் தூக்கிவிடுகிறான் என்று சாஸ்த்ரம் சொல்லுகிறது. ஆசார்யனைத் தேவனென்றே பணியவேண்டும். இவ்வாசிரியர்கள் மிகவும் குளிர்ந்த மனமுடையவர். இவர்களுடைய க்ரந்தங்களின் அநுபவத்தில் முழுகினால் குளிர்ந்த ஜலத்தில் முழுகுவதால் தாபம் தீருவதுபோல எல்லாவிதமான தாபங்களும் தீரும் என்பது கருத்து. இந்த தயாப்ரவாஹத்தில் ஒவ்வொரு ஆசிரியரும் ஒரு இறங்கும் துறையாவர். ஸ்ரீநிவாஸனுடைய தயை மேலும்மேலும் அதிகமாகப் பெருகிக்கொண்டேயிருப்பதால் அந்தத் தயை நிரம்பின ஏரி அதிகவெள்ளத்தால் உடைத்துக்கொண்டுவிடும். அதற்காக ஏரி அதிகமாய் நிரம்பிவிட்டால் அதிக ஜலத்தை வெளியில் போக்குவிடுவதுபோல் எப்பொழுதும் பொங்கி வெள்ளமிடும் ஸ்ரீநிவாஸனுடைய தயை ஏரியிலடங்கமாட்டாமல் ஆசிரியர்களாக வழிந்து ஓடுகிறது. முதல் ச்லோகத்தில் சொன்ன கிரியில் முழுகி ஸ்நாநம்செய்து தாபத்தைத் தீர்த்துக்கொள்ள இடமில்லை. இங்கே அதற்கு இடம் ஏற்பட்டது. ஸ்ரீநிவாஸனுடைய தயை என்னும் வெள்ளத்தில் இறங்கி ஸ்நாநம் செய்ய ஒவ்வொரு ஆசிரியரும் ஒரு படிக்கட்டுத் துறையாவர். அவர்கள் வழிகாட்டி நம்மை அந்த வெள்ளத்தில் இறங்கி ஸ்நாநம் செய்விக்கவேண்டும் என்பதும், அவர்களன்றியில் அந்த வெள்ளத்தில் நாம் இறங்கி ஸ்நாநம் செய்யமுடியாதென்பதும் அபிப்பிராயம். (2)

க்ருதிந꞉ கமலாவாஸ காருண்யைகாந்திநோ பஜே ।
தத்தே யத்ஸூக்திரூபேண த்ரிவேதீ ஸர்வயோக்யதாம் ॥

க்ருதிந: கமலாவாஸ காருண்யைகாந்திநோ பஜே ।
தத்தே யத்ஸூக்திரூபேண த்ரிவேதீ ஸர்வயோக்யதாம் ॥ (3)

"ஸ்ரீநிவாஸனுடைய தயையொன்றையே தஞ்சமாகப் பற்றியவரும் தங்கள் ப்ரபந்தங்கள் மூலமாய் வேதங்கள் எல்லாம் எல்லோருக்கும் யோக்யமாகும்படி செய்வித்த புண்யபுருஷர்க

ளுமான ஆழ்வார்களை இடைவிடாமல் ப்ரியமாகத் தொழுகிறேன்".

(தா-ம்) வேதங்களே இந்த ஆழ்வார்களின் ப்ரபந்தங்களின் வடிவை எடுத்துக்கொண்டு எல்லோர்க்கும் பொதுவாயிற்று. இந்தப் பிரபந்தங்களால் தத்வஜ்ஞானமும் மோக்ஷமும் எல்லோர்க்கும் எளிதாயிற்று. இதனிலும் மிக்க கருணை உண்டோ? இவ்வாழ்வார்களை அவதரிக்கச் செய்து இவர்களைக்கொண்டு வேதங்களையே தமிழாகச்செய்வித்தது ஸ்ரீநிவாஸனுடைய தயை. அந்த தயையே வடிவானவர்கள் ஆழ்வார்கள். அவர்களையே நாம் தஞ்சமாக நாடுகிறோம். ஆழ்வார்கள் என்றால் பகவானுடைய கீர்த்தியாகிய குணஸமுத்ரத்தில் தாங்களும்ஆழ்ந்து அவர்கள் ப்ரபந்தங்களை ஸேவிப்பவரையும் ஆழும்படி செய்கிறவர்கள் பகவானையும் தங்களுடைய குளிர்ந்த மனதில் ஆழச்செய்கிறவர்கள். 'தெளியாத மறை நிலங்கள்' இவர்கள் ஸூக்திகளை ஓதுவதால் தெளிகின்றோம் என்றும் கூறப்பட்டது. (3)

ப॒ராஶரமுகா²ந் வந்தே³ ப⁴கீ³ரத²நயே ஸ்தி²தாந் ।
கமலாகாந்தகாருண்ய க³ங்கா³ப்லாவிதமத்³விதா⁴ந் ॥

பராசரமுகாந் வந்தே பகீரதநயே ஸ்திதாந் ।
கமலாகாந்தகாருண்ய கங்காப்லாவிதமத்விதாந் ॥

"பகீரதன் தவஞ்செய்து கங்கையைக் கொண்டுவந்தது போல் ஸ்ரீநிவாஸனுடைய கருணை என்கிற குளிர்ந்த சுத்தமான கங்காப்ரவாஹத்தைக் கொணர்ந்து நம்போன்றவரை அதில் ஸ்நாநம் செய்யும்படி செய்வித்த பராசரர் முதலிய மஹர்ஷிகளை வந்தநம் செய்கிறேன்".

(தா-ம்) இதிஹாஸங்களும் புராணங்களும் இல்லாவிட்டால் பகவானுடைய தயை என்கிற உத்தமகுணத்தின் ப்ரபாவம் நமக்குத்தெரியமாட்டாது. பராசரர் முதலிய மகர்ஷிகள் செய்தருளிய புராணக் கிரந்தங்களால்தான் ஸ்ரீநிவாஸனுடைய தயாமஹிமை நமக்கு வெளியாகிறது. அவர்கள் க்ரந்தங்களைப் பாராயணம் செய்வதாலும் சிரவணம் செய்வதாலும் பகவானுடைய தயாப்ரவாஹமாகிய கங்கையின் அலைகளால் நாம் நனைக்கப்பட்டுக் குளிர ஸ்நாநம் செய்விக்கப்படுகிறோம். முதலில் ஆழ்வார்களை வந்தநம்செய்துவிட்டுப் பிறகு மஹர்ஷிகளை வந்தநம் செய்வதற்குக் கருத்து யாது

எனில், இது தயாஸ்தோத்ரமாகையாலும் ஆழ்வார்கள் ஸ்ரீநிவாஸனுடைய தயையே மோக்ஷோபாயமாகக் கைப்பற்றிய சரணாகதி நிஷ்டராகையாலும், திருவாய்மொழி முதலிய ப்ரபந்தங்கள் நீண்ட சரணாகதியாகும் என்று பெரியோர்கள் சொல்லுவதாலும் பகவானுடைய தயாகுணத்தையே ஆழ்வார்கள் ப்ரதாநமாக ப்ரகாசப் படுத்துவதாலும் பராசரர் போன்ற புராணகவிகள் பக்திநிஷ்டரானபடியாலும், அவர்கள் தயாகுணத்தோடு மற்ற வீர்யம் பலம் தேஜஸ் முதலிய குணங்களையும் அதிகமாகக் காட்டுவதாலும் பகவானுடைய தயையின் அருமையையும் பெருமையையும் அறிந்துகொள்ளும் விஷயத்தில் ஆழ்வார்களின் உதவி பேருதவியாகும் என்பதுதான். மஹர்ஷிகள் பகீரதனைப்போல் தவஞ் செய்பவர்கள். தவத்தால் கங்கையைப் பிறர்க்கு உபகரிப்பதற்காகக் கொண்டுவந்ததுபோல் மஹர்ஷிகளும் தங்கள்தபோபலத்தால் கங்காப்ரவாஹம்போன்ற தங்களுடைய க்ரந்தங்களை லோகோபகாரமாக ப்ரவர்த்திப்பித்தவர்கள். (4)

𑌅𑌶𑍇𑌷𑌵𑌿𑌘𑍍𑌨𑌶𑌮𑌨𑌮𑌨𑍀𑌕𑍇𑌶𑍍𑌵𑌰𑌮𑌾𑌶𑍍𑌰𑌯𑍇 ।
𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑌃 𑌕𑌰𑍁𑌣𑌾𑌮𑍍𑌭𑍋𑌧𑍇𑌃 𑌶𑌿𑌕𑍍𑌷𑌾𑌸𑍍𑌰𑍋𑌤 𑌇𑌵𑍋𑌤𑍍𑌥𑌿𑌤𑌮𑍍 ॥

அசேஷவிக்நசமநம் அநீகேச்வரமாச்ரயே ।
ஸ்ரீமத: கருணாம்போதே: சிக்ஷாஸ்ரோத இவோத்திதம் ॥ (5)

"எல்லா விக்நங்களையும் சமநம் செய்பவரும் ஸ்ரீநிவாஸனுடைய கருணை நிரம்பிய தடாகத்திலிருந்து சிக்ஷணம் செய்கிறது என்கிற வாய்க்காலாகக் கிளம்பினவருமான விஷ்வக்ஸேனரென்னும் ஸேனைமுதலியாரை ஆச்ரயிக்கிறேன்".

(தா-ம்) கீழேயிருந்து குருபரம்பரையில் மேலேமேலே போகிறோர். நம்மாழ்வாரை ஸேனைமுதலியாரின் அம்சமென்னும் சொல்லுவர். பெருமாளுக்கும் தாயாருக்கும் பிறகு இவர் குருபரம்பரையில் முதல்வர். எல்லாத்திக்குகளிலும் இவருடைய ஸேனைகள் பரவியிருப்பதால்இவரைவிஷ்வக்ஸேநரென்றும் ஸேனைத்தலைவரென்றும் சொல்லுவர். இவருடைய ஸேனைகள் பகவானை ஆச்ரயித்து அவரிடத்தில் பக்திசெய்கிறவர்களுக்கு ஏற்படும் பக்திவிக்நங்களை எல்லாம் போக்குவதற்காகவே ஏற்பட்டவர்கள். எல்லா வைதிக கர்மங்களிலும் வைஷ்ணவர்கள் முதலில் விஷ்வக்ஸேநபூஜை செய்வர். ஸ்ரீநிவாஸனுடைய தயாதடாகம் அநேக கால்களாக வெளி

யில் ப்ரவஹிக்கிறது. தன்னை ஆச்ரயித்தவர்களின் ஸங்கடங்களைப் பரிஹரிப்பதென்கிற தயாகுணம் மற்றொரு காலாகும். இப்படி அநேக கால்களின் ஜ்ஞானோபதேசம் என்கிற சிக்ஷையைச் செய்கிறது ஸேனைமுதலியாரென்கிற காலாகும். சிக்ஷை என்பது உபதேசிப்பதைச் சொல்லுவதோடு சிஷ்யன் தவறி நடக்கும்போது கொஞ்சம் சிக்ஷித்துத் திருத்துவதையும் சொல்லும். தவறுதலுக்கு சிக்ஷை விதிப்பதும் தயையின் கார்யமாகும். அப்பொழுது அப்பொழுது சிக்ஷித்துத் திருத்தாவிட்டால் தவறி நடப்பதே ஸ்வபாவமாகிவிடும். (5)

𑌸𑌮𑌸𑍍𑌤𑌜𑌨𑌨𑍀𑌂 𑌵𑌨𑍍𑌦𑍇 𑌚𑍈𑌤𑌨𑍍𑌯𑌸𑍍𑌤𑌨𑍍𑌯𑌦𑌾𑌯𑌿𑌨𑍀𑌂 ।
𑌶𑍍𑌰𑍇𑌯𑌸𑍀𑌂 𑌶𑍍𑌰𑍀𑌨𑌿𑌵𑌾𑌸𑌸𑍍𑌯 𑌕𑌰𑍁𑌣𑌾𑌮𑌿𑌵 𑌰𑍂𑌪𑌿𑌣𑍀𑌂 ॥௬॥

ஸமஸ்தஜநநீம் வந்தே சைதந்யஸ்தந்யதாயிநீம் 1
ச்ரேயஸீம் ஸ்ரீநிவாஸஸ்ய கருணாமிவ ரூபிணீம் 11 (6)

"ஜ்ஞாநமென்கிற முலைப்பாலைக் கொடுப்பவளும் கருணையே வடிவெடுத்ததுபோன்றவளும் உலகத்துக்கெல்லாம் தாயும் ஸ்ரீநிவாஸனுக்கும் ச்ரேயஸ்ஸை அளிப்பவளுமான லக்ஷ்மியை வந்தநம் செய்கிறேன்".

(தா-ம்) குருபரம்பரையில் ஆதிகுருவாகிய பெருமாளுக்கு அடுத்தபடி லக்ஷ்மீ குருவாவாள். குருவாயிருப்பதன்னியில் அவளெல்லோர்க்கும் தாயுமாவாள். அவள் எப்படித்தாயாவாள், அவள் பால் கொடுத்து வளர்க்கிறாளா என்று கேட்டால், அவள் ஜ்ஞானப் பாலைக் கொடுக்கிறாளென்கிறார். ஜ்ஞானத்தைக் கொடுப்பதால் குருவாயும், பாலைக் கொடுப்பதால் தாயாகவும் ஆகிறாள். ஸ்ரீநிவாஸனுடைய தயையென்னும் தத்துவமே லக்ஷ்மீ என்பது தாத்பர்யம். இது பின்னாலும் ஸ்பஷ்டமாய் விவரிக்கப்படும். இந்த சுலோகத்தில் லக்ஷ்மியையும் அடுத்த சுலோகத்தில் பூமிப்பிராட்டியையும் அதற்கு அடுத்த சுலோகத்தில் நீளை என்கிறநப்பின்னைப் பிராட்டியையும் நமஸ்கரிக்கிறார். இந்த மூன்று தேவிகளும் கருணை கார்யத்தை நிர்வஹிக்கிறார்கள். அதில் ஒவ்வொருவரும் ஒரோர் வ்யாபாரத்தைக் கூறுபோட்டுக் கொண்டிருக்கிறார்கள்போலும். முதலில் ஆச்ரிதன் கிட்டவருகையில் அவனுடைய தோஷங்கள் ஸ்ரீநிவாஸன் கண்ணிலேயே படாதபடி நப்பின்னை மறைப்பை

உண்டுபண்ணுகிருள். அந்த மறைப்பையும் மீறி ஏதாவது தோஷங்கள் ஸ்ரீநிவாஸன் கண்ணில் பட்டுவிட்டால் பொறுமையின் மூர்த்தியான பூமிப்பிராட்டி அந்த தோஷங்களைப் பொறுக்கும் படி செய்கிருள். குற்றங்களைப் பொறுத்தாலும் குணமொன்றும் இல்லாததால் ஸ்ரீநிவாஸனுடைய ஸ்வஜநமாக அவர் அருகாமையிலிருந்து அவருக்கு அந்தரங்கமான பணிவிடைகளைச்செய்ய இடமிராது. அந்த பாக்யமும் கிடைக்கும்படி நம்மைத் தன் பரிஜநமாக ஸ்ரீநிவாஸன் லாலநம் செய்யும்படி லக்ஷ்மி செய்விக்கிருள். பெருமாளுக்கு ஸ்வஜநமாகச் செய்விப்பதால் நீ எனக்கு மாதாவாகிருய் என்று ஸ்ரீகுணரத்நகோசத்தில் பட்டர் ஸாதிக்கிருர். அதை அநுஸரித்து இந்த சுலோகத்திலும் பெற்ற தாயாரென்று கூறினர். சரீரத்தைப் போஷணம் செய்யும் மாதாபிதாக்களைவிட ஆத்மாவை ஹிதமாய்ப் போஷணம் செய்ய ஆசிரியர்கள் மேற்பட்டவர்கள். அவர்கள் நமக்கு ஜ்ஞாநப்பிறப்பைக் கொடுப்பவர்கள். 'அன்று நான் பிறந்திலேன்' என்பது மயர்வற மதியுடைய ஆழ்வார் வசனம். (6)

𑌵𑌂𑌦𑍇 𑌵𑍃𑌷𑌗𑌿𑌰𑍀𑌶𑌸𑍍𑌯 𑌮𑌹𑌿𑌷𑍀𑌂 𑌵𑌿𑌶𑍍𑌵𑌧𑌾𑌰𑌿𑌣𑍀𑌮𑍍 ।
𑌤𑌤𑍍𑌕𑍃𑌪𑌾𑌪𑍍𑌰𑌤𑌿𑌘𑌾𑌤𑌾𑌨𑌾𑌂 𑌕𑍍𑌷𑌮𑌯𑌾 𑌵𑌾𑌰𑌣𑌂 𑌯𑌯𑌾 ॥ ௭ ॥

வந்தே வ்ருஷகிரீசஸ்ய மஹிஷீம் விச்வதாரிணீம் ।
தத்க்ருபாப்ரதிகாதாநாம் க்ஷமயா வாரணம் யயா ॥ (7)

"புவநம் முழுவதையும் தாங்குகிறவளும் வேங்கடேச்வரனுக்கு மஹிஷியாயும் க்ஷமையென்னும் பொறுமை குணத்தால் வேங்கடேச்வரனுடைய க்ருபைக்கு விக்நங்களை எல்லாம் தடுப்பவளுமான க்ஷமை என்று பெயரையுடைய பூமிப்பிராட்டியை வந்தனம் செய்கிறேன்".

(தா-ம்) ஆச்ரிதர்களுடைய குற்றங்களைப் பொறுப்பிவிக்கும் பொறுமைக்குணம் இங்கே காண்பிக்கப்படுகிறது. பூமிக்கு க்ஷமை என்றே பெயர். அவள் பொறுமையின் வடிவாவள். ஆச்ரிதர்களின் குற்றங்கள் ஸ்ரீநிவாஸன் கண்ணில் பட்டால் அவைகளால் ஸ்ரீநிவாஸன் க்ருபைக்கு ஏற்படும் தடங்கல்களை அந்தக் குற்றங்களைப் பொறுப்பிவிப்பதன் மூலம் நிவ்ருத்தி செய்கிருள். (7)

𑌨𑌿𑌶𑌾𑌮𑌯𑌤𑍁 𑌮𑌾𑌂 𑌨𑍀𑌳𑌾 𑌯𑌦𑍍𑌭𑍋𑌗𑌪𑌟𑌲𑍈𑌰𑍍𑌧𑍍𑌰𑍁𑌵𑌮𑍍 ।
𑌭𑌾𑌵𑌿𑌤𑌂 𑌶𑍍𑌰𑍀𑌨𑌿𑌵𑌾𑌸𑌸𑍍𑌯 𑌭𑌕𑍍𑌤𑌦𑍋𑌷𑍇𑌷𑍍𑌵𑌦𑌰𑍍𑌶𑌨𑌮𑍍 ॥௮॥

நிசாமயது மாம் நீளா யத்போகபடலைர்த்ருவம் I
பாவிதம் ஸ்ரீநிவாஸஸ்ய பக்ததோஷேஷ்வதசர்நம் II

“யாருடைய போகமயக்குகளினால் பக்தர்களின் குற்றங்களைப்பார்க்கவொட்டாமல் ஸ்ரீநிவாஸனுடைய கண் மறைந்தது போல அவர் அந்தக் குற்றங்களை அடியோடு பார்க்காததுபோலிருப்பரோ, அந்த நீளையென்னும் பிராட்டி என்னைத் தனது நீண்ட கண்களால் பார்த்தருளவேண்டும்”.

(தா-ம்) ‘அல்லிமலர் மகள் போகமயக்குகள்’ என்பதுபோல் இங்கே நப்பின்னைப் பிராட்டியின் போகமயக்குகளைச் சொல்லுகிறார். அதிகபோகத்தால் கண்ணிற்கு மறைவு உண்டாகுமென்று வைத்யசாஸ்த்ராநுபவம். ஸ்ரீநிவாஸனுக்கு அளவில்லாத போக ஸுகங்களைக் கொடுத்துத் தன் குழந்தைகளாகிய பக்தர்களுடைய தோஷங்களைப் பார்க்கவொட்டாமல் அவர் கண்களில் மறைப்பு உண்டானதுபோலச் செய்துவிடுகிறாள். அவரும் அவள் தாக்ஷிண்யத்திற்கு இணங்கி தான் ஸர்வஜ்ஞனும் ஸர்வதர்சியாயுமிருந்தும் பார்க்காததுபோல் பாவனை செய்கிறார். நப்பின்னை என்னைப் பார்க்கட்டுமென்று ப்ரார்த்திப்பதால், பெருமாள் என்னையும் என் குற்றங்களோடு என்னை முதலில் பார்க்காமலிருக்கவேண்டும் என்று த்வனி.

இவள் சலுகைக்கிணங்கி எல்லாவற்றையும் எப்பொழுதும் நேரில் ஸம்பூர்ணமாய்ப் பார்க்கும் பெருமாள் குற்றங்களைப் பாராததுபோல் பாவனை செய்கிறார். குற்றங்கள் என்கிற பன்மையினால் குற்றங்கள் ஆயிரக்கணக்காயிருந்தாலும் ஆயிரம் கண்களையுடைய பெருமாளுடைய ஒரு கண்ணில்கூடப் படுவதில்லைபோல என்று அணி. ஸ்ரீநிவாஸன் என்கிற பதத்தினால் புருஷஸூக்தத்தில் ஆயிரக்கண்ணன் என்று ஓதப்பட்டவனைச் சொல்லுகிறது. புருஷஸூக்தத்திற்கு அடுத்த அநுவாகத்தில் அவனுடைய பத்நி ‘ஹ்ரீ’ லக்ஷ்மீ என்று ஓதப்பட்டது. எவன் ஆயிரக்கண்ணனோ அவனே ஸ்ரீநிவாஸன் ஆவான். (8)

தயாசதகம் 7-ம் பக்கம் 28-வது வரியிலுள்ள ‘ஆண்டாளையும்’ என்பதை ‘நப்பின்னைப்பிராட்டியையும்’ என்று திருத்தவேணும்.

𑌕𑌮𑍍𑌪𑍍𑌯𑌨𑌵𑌧𑌿𑌂 𑌵𑌨𑍍𑌦𑍇 𑌕𑌰𑍁𑌣𑌾𑌵𑌰𑍁𑌣𑌾𑌲𑌯𑌮𑍍 ।
𑌵𑍃𑌷𑌶𑍈𑌲𑌤𑌟𑌸𑍍𑌥𑌾𑌨𑌾𑌂 𑌸𑍍𑌵𑌯𑌂 𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌿𑌮𑍁𑌪𑌾𑌗𑌤𑌮𑍍 ॥௯॥

கமப்யநவதிம் வந்தே கருணாவருணாலயம் I
வ்ருஷசைலதடஸ்தாநாம் ஸ்வயம் வ்யக்திமுபாகதம் II (9)

"கருணை என்னும் குணத்தினால் நிரம்பிய வருணாலயம் என்கிற எல்லையில்லாத ஸமுத்ரமாயும், வேங்கடமலையின் தடத்திலிருப்பவர்களுக்கு ஸ்வயம் வ்யக்தமாய் அணுகியவரும், இன்னார் இப்படிக்கொத்தவர் என்று வர்ணிக்கக்கூடாதவருமான (ஸ்ரீநிவாஸனை) வந்தனம் செய்கிறேன்".

(தா-ம்) இங்கே குருபரம்பரை முடிவை யடைகிறது. ஸ்ரீநிவாஸன் ஆதிகுரு. வருணாலயமென்று ஸமுத்திரத்தைச்சொல்லுறது. தயாஸ்தோத்ரம் முழுவதும் பகவானுடைய தயையை சரணகப் பற்றும் சரணாகதியின் மஹிமையைச் சொல்லுகிறது. பகவானை ஸமுத்ரமென்று சொல்லுகையில் ஸர்வலோகசரண்யனாகவனே சரணம் புகுந்தபொழுது அவரை அலக்ஷ்யம் செய்து இருமாப்படைந்து பொங்கிய ஸமுத்ரமாக ஸ்ரீநிவாஸனை எப்படி ரூபணம் செய்யலாமென்று சங்கை பிறக்கக்கூடியதை அகற்றுவதற்காகக் கருணையென்னும் விசேஷணத்தை வைத்து அவரை அருட்கடலென்றார். வேங்கடமலையின் தடத்திலிருப்பவருக்குத் தானே கிட்டே நெருங்கி ஸேவை ஸாதிப்பவர் என்று சொன்னதில் இரண்டு ஸ்வாரஸ்யமுண்டு. தடமென்றால் கரையைச் சொல்லும். ஸ்ரீநிவாஸனுடைய குணஸமுத்ரத்திற்குள் இறங்குவதற்குத் தங்களுக்குக் கொஞ்சமேனும் வலிமை இல்லை என்று கைவாங்கிக் கரையிலேயே மௌநமாய் நிற்கிறவர்கள் தடஸ்தரெனப்படுவார். யார் ப்ரஹ்மத்தைத் அறியமுடியாது என்று ப்ரஹ்மத்தை நினைப்பாரோ அவர்களுக்குத்தான் ப்ரஹ்மம் தெரிந்ததென்று சொல்லவேணும். யார் ப்ரஹ்மத்தைத் தெரிந்துகொண்டோம் என்று நினைக்கிறார்களோ அவர்களுக்கு ப்ரஹ்மம் தெரிந்ததே அல்லஎன்று வேதம் சொல்லுகிறது. தெரிந்தோமென்று உள்ளே இறங்குகிறவர்களுக்கு ப்ரஹ்மம் தூரத்திலேயே இருக்கும். இறங்க அஞ்சிக்கரையிலேயே நிற்பவரை ப்ரஹ்மம் கிட்ட அணுகி அவர்களுக்குத் தானே ப்ரகாசிக்கும். வேங்கடமலையின் தடத்திலுள்ளவர்க்குத் தானே வலிய அணுகித் தன்

னைப் பிரகாசிப்பித்துக்கொள்கிறுர். தடத்திலுள்ளவர்க்குப் பிர காசிக்கிறுரென்றதினுல் மேற்சொன்ன வேதரஹஸ்யம் காட்டப் படுகிறது. பகவான் யாரைத் தனக்கு அன்பனென்று தன்னி டம் எல்லையில்லா அன்புடைமையைப் பற்றித் தன் க்ருபைக்கு லக்ஷ்யமாகப் பொருக்கி எடுக்கிறுனே; அவனுக்குத்தான் தன்னு டைய ஸ்வரூபத்தைப் பிரகாசப்படுத்துவான் என்று வேதம் சொல்லுகிறது. தனக்கு ப்ரியமான வேங்கடமலையைத் தேடி வந்து அந்த மலை ஏறுகிறவர்களுக்கு ஸ்வயம் வ்யக்தமான தன்னு டைய திவ்யமூர்த்தியைக் காணும் பாக்கியத்தை அளிக்கிறுன்.

𑌅𑌕𑌿𑌞𑍍𑌚𑌨𑌨𑌿𑌧𑌿𑌂 𑌸𑍂𑌤𑌿𑌮𑌪𑌵𑌰𑍍𑌗𑌤𑍍𑌰𑌿𑌵𑌰𑍍𑌗𑌯𑍋𑌃 ।
𑌅𑌞𑍍𑌜𑌨𑌾𑌦𑍍𑌰𑍀𑌶𑍍𑌵𑌰𑌦𑌯𑌾𑌮𑌭𑌿𑌷𑍍𑌟𑍌𑌮𑌿 𑌨𑌿𑌰𑌞𑍍𑌜𑌨𑌾𑌮𑍍 ॥ ॥ ௧௦ ॥

அகிஞ்சநநிதிம் ஸூதிமபவர்கத்ரிவர்கயோ: ।
அஞ்ஜநாத்ரீச்வரதயாமபிஷ்டௌமி நிரஞ்ஜநாம் ॥ (10)

"ஒன்றுமில்லாத பேதைகளும் வேறுகதியற்றவர்களுமான சரணமடைபவர்க்கு நிதிபோன்றதும் அபவர்கமென்னும் மோக்ஷ புருஷார்த்தத்தையும், த்ரிவர்கமென்னும் தர்மார்த்தகாமபுரு ஷார்த்தங்களையும் கொடுப்பவளும் அஞ்ஜநமென்கிற மாசு அடி யோடு இல்லாதவளுமான அஞ்ஜநமலையரசனுடைய தயையென் னும் தேவியைப் பலவிதமாய்த் துதிக்க எண்ணுகிறேன்".

(தா-ம்) நிதியென்பது பூமியின்கீழே மிக்க ஆழத்திலுள்ள தங்கம் முதலிய சுரங்கக்கனியைச் சொல்லும். அதை வெட்டி எடுக்க ஏராளமான பணமும் ஆட்களும் யந்திரங்களும் வேண்டும். ஒன்றுமில்லாத ஏழைகளுக்கு அப்படிக்கொத்த கனியை உபயோ கத்திற்குக் கொண்டுவந்து பலத்தை அடைவது ஸாத்யமல்ல. இந்தத் தயையென்னும் நிதி யாதொரு ப்ரயாஸையும் செலவுமில் லாமல் தன்னை நினைத்தமாத்ரத்தால் பேதையர்க்கு இறங்கி வேண்டுவதைக் கொடுக்கும். அபவர்கத்தையும் த்ரிவர்கத்தை யும் கொடுக்கும். அபவர்கம் என்பது மோக்ஷத்தின் பெயர். த்ரிவர்கம் என்பது மற்ற மூன்று புருஷார்த்தங்களுக்குப் பெயர். தர்மார்த்தகாமமோக்ஷங்களென்று முதலில் த்ரிவர்கத் தையும் முடிவில் அபவர்கத்தையும் சொல்லுவது வழக்கம். அந்த க்ரமத்தை மீறி இங்கே மோக்ஷத்தை முதலில் எடுத்ததற்குக்கார ணம் உயர்ந்த புருஷார்த்தமாகிய மோக்ஷத்தை அளிப்பதிலேயே

தயையின் முக்கிய நோக்கென்பதே. ப்ராணிகள் மோக்ஷம் வேண்டாமென்று தள்ளிச் சில்லரை பலங்களை தங்களுக்கு வேண்டும் என்று கோறி நிர்பந்தம் செய்தால் மட்டும் அல்பமான த்ரிவர்க பலங்களைத் தயையின் இஷ்டத்திற்கு விரோதமாகக் கொடுக்க நேரிடுகிறது' உயர்ந்த பலமாகிய மோக்ஷத்தைக்கொடுப்பதிலேயே தயைக்கு பூர்ணஸந்தோஷமாகையால் அதை இங்கே முதலில் எடுத்தது. வேங்கடமலைக்கு அஞ்ஜநமலை என்றும் பெயர். அஞ்ஜநமலை அரசனுக்குப் பட்டமஹிஷியான தயாதேவிக்குத் துளி அஞ்ஜநம் கிடையாதென்றுவேடிக்கை. அஞ்ஜநம் என்பது குற்றத்தையும் சொல்லும். தயாதேவி அஞ்சநமற்றவள். இந்த ஸ்தோத்ரம் வெவ்வேறு விருத்தங்களில்பத்துப்பத்துப்பாட்டாக அமைந்தது. முதல் பத்துப் பாட்டு இதோடு முடிவடைகிறது. இதில் தயாதேவியை முதலில் நேராக வணங்கி அவளைத் துதிக்கப் போகிறதாகக் கூறுகிறார். முன் ஒன்பது பாட்டுக்களில தயையின் அவதாரங்களான குருபரம்பரைகளையும் கிரியையும் வணங்கினர். பெருமாளோடு அந்த குருபரம்பரை ஒன்பதாவது பாட்டில் முடிந்தது. பத்தாவது பாட்டில் குருபரம்பரையாக அவதாரம் எடுத்த தயாதேவியை நேராக வணங்குகிறார். அடுத்த பாட்டு முதல் அவளைத் துதிக்க ஆரம்பிப்பதாகவும் சொல்லுகிறார். முதல் பத்துப் பாட்டு தயாஸ்தோத்ரத்திற்கு முகவுரையாகும். (10)

𑌅𑌨𑍁𑌚𑌰𑌶𑌕𑍍𑌤𑍍𑌯𑌾𑌦𑌿 𑌗𑍁𑌣𑌾𑌮𑌗𑍍𑌰𑍇𑌸𑌰𑌬𑍋𑌧𑌵𑌿𑌰
𑌚𑌿𑌤𑌾𑌲𑍋𑌕𑌾𑌮𑍍 । 𑌸𑍍𑌵𑌾𑌧𑍀𑌨𑌵𑍃𑌷𑌗𑌿𑌰𑍀𑌶𑌾𑌂 𑌸𑍍𑌵𑌯𑌂
𑌪𑍍𑌰𑌭𑍂𑌤𑌾𑌂 𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌯𑌾𑌮𑌿 𑌦𑌯𑌾𑌮𑍍 ॥ ॥ ௧௧ ॥

அநுசரசக்த்யாதி குணாமக்ரேஸரபோதவிரசிதாலோகாம் ।
ஸ்வாதீநவ்ருஷகிரீசாம் ஸ்வயம்ப்ரபூதாம் ப்ரமாணயாமி தயாம் ॥

"சக்தி, பலம், ஐச்வர்யம், வீர்யம், தேஜஸ் என்னும் குணங்களைத் தனக்குப் பின்தொடரும் ஊழியக்காரர்களாகவும் ஜ்ஞாநமென்னும் குணம் தனக்கு முன்கையில் விளக்கை வைத்துக் கொண்டு வழிகாட்டிக்கொண்டு போகும் வெளிச்சத்தை உடையவளாயும் வேங்கடமலையின் ஈச்வரனைத் தனக்கு ஸ்வாதீநமாக உடையவளாயும், தானே ப்ரபுவாயும், தானே ஆவிர்பவிப்பவளாயுமுள்ள தயாதேவியே கதியென்று அவளைச்சரணம்புகுகிறேன்".

(தா-ம்) ஆறு குணங்களாலும், இன்னும் அநந்தகல்யாணகுணங்களாலும் பூர்ணமான பெருமாளைத் ஸ்துதிசெய்யாமல் அவருடைய குணங்களில் ஒன்றாகிய தயையை ஸ்துதிசெய்ய ஆரம்பித்தது உசிதமாகுமோ ? குணங்களை ஸ்துதி செய்ய ஆரம்பித்தாலும் ஜ்ஞாநம், சக்தி, பலம், ஐச்வர்யம், வீர்யம், தேஜஸ் என்கிற பகவானுடைய ஆறு முக்யமான குணங்களை ஸ்துதிசெய்யாமல் ஏதோ ஒருகுணமாகிய தயையை ஸ்தோத்ரம்செய்வது கூடுமோ? இப்படி ஆக்ஷேபங்கள் வர, இந்த ச்லோகத்திலும் இதற்குப் பின் வரும் ஒன்பது ச்லோகங்களிலும் தயையைத்தான் ஸ்துதிசெய்ய வேண்டியது ந்யாயமென்று நிரூபிக்கிறார். பகவானுக்கு ப்ரஸித்தமான ஆறு குணங்களில் சக்தி முதலுள்ள ஐந்து குணங்களும் தயையின் ஊழியக்காரர்கள்போல் அவள் இட்டது சட்டமாய் அவளைப் பின் தொடர்ந்து போகிறார்கள். அந்தக் குணங்கள் அவளுக்கு அநுசரர்கள். அநுசரரென்றால் வேலைக்காரரென்றும் பின் செல்லுகிறவரென்றும் பொருள். குழந்தைகள் கஷ்டப்பட்டு அழுகிற சப்தம் காதில் கேட்கவே எங்கிருந்து சப்தம் வருகிறது என்றும், எந்தக் குழந்தை அழுகிறதென்றும், பரபரப்புடன் தாயான தயாதேவி அதைக் காப்பாற்றவேண்டுமென்று ஓடுகிறாள். தான் பட்டமஹிஷியாயிருந்தாலும் பரபரப்புடன் வருத்தப்படும் குழந்தையைத் தேடிப்போகும் அவஸரத்தில் பல்லக்கிலேறிப் போகமாட்டாள். பட்டராணியானவள் ஓடும்பொழுது சக்திமுதலான குணங்கள் கூட ஓடுகிறார்கள். ஜ்ஞாநமென்னும் குணம் முன் சென்று இங்கே இங்கே என்று வெளிச்சம் காட்டுகிறது. சக்தி முதலிய குணங்கள் தயைக்குப் பாத்ரமானவர்களிடம் சென்று தயையின் இஷ்டப்படிக்கு அவர்களுக்கு வேண்டிய உபகாரங்களைச் செய்கின்றன. ஜ்ஞாநமென்னும் குணம் எந்த எந்த இடத்திற்குச் சென்று யார் யாரைக் காப்பாற்றலாமென்று தயைக்கு வழி காட்டுகிறது. அறிகிறான், இச்சிக்கிறான், ப்ரயத்நம் செய்கிறான் என்று க்ரமம். ஒரு குழந்தை கஷ்டப்படுகிறது என்கிற அறிவு முதலில் உண்டாகவேணும். அந்த அறிவு உண்டானபிறகு அந்தக் குழந்தையை ரக்ஷிக்கவேண்டுமென்கிற இச்சையுண்டாகும். காக்கவேணுமென்கிற இச்சையைத்தான் தயை என்பர். தயை என்கிற இந்த இச்சை உண்டாகவே இந்த இஷ்டத்தை நிறைவேற்றுவதற்காக ப்ரயத்நமும் வ்யாபாரங்களும்

சக்தி, பலம், ஐச்வர்யம் முதலியவைகளால் கூடும். இந்தக்ரமத்தை அநுஸரித்து தயைக்கு முன்பு ஜ்ஞாநம் சென்று வழிகாட்டுவதாகவும், தயைக்குப் பின்பு சக்தி பலம் முதலியவைகள் சென்று தயையின் இஷ்டத்தை நிறைவேற்றி வைப்பதாகவும் இங்கே கூறுகிறார். ப்ரபுவாகிய ஸ்ரீநிவாஸனுடைய ஸம்மதியன்னியில் ஒரு கார்யமும் நிறைவேறாது. அவனன்றியில் ஓரணுவும் அசையாது. எந்தப் பலமானாலும் அவன் கைதான் கொடுக்கவேணும். அவன் இந்த தயாதேவிக்கு ஸ்வாதீநன் என்கிறார். ப்ரபுவாகிய ஸ்ரீநிவாஸனும் இவளுக்கு ஸ்வாதீநனென்றால் இவளுக்கு மேல் யார் ப்ரபு? என்று சங்கை வர இவள் தனக்குத் தானே ப்ரபு என்கிறார். (11)

𑌅𑌪𑌿 𑌨𑌿𑌖𑌿𑌲𑌲𑍋𑌕𑌸𑍁𑌚𑌰𑌿𑌤𑌮𑍁𑌷𑍍𑌟𑌿𑌨𑍍𑌧𑌯 𑌦𑍁𑌰𑌿𑌤
𑌮𑍂𑌰𑍍𑌚𑍍𑌛𑌨𑌾𑌜𑍁𑌷𑍍𑌟𑌮𑍍 । 𑌸𑌞𑍍𑌜𑍀𑌵𑌯𑌤𑍁 𑌦𑌯𑍇 𑌮𑌾𑌮𑌞𑍍𑌜𑌨
𑌗𑌿𑌰𑌿𑌨𑌾𑌥𑌰𑌞𑍍𑌜𑌨𑍀 𑌭𑌵𑌤𑍀 ॥ ॥ ௧௨ ॥

அபி நிகிலலோகஸுசரிதமுஷ்டிந்தய துரிதமூர்ச்சநாஜுஷ்டம்।
ஸஞ்ஜீவயது தயே மாமஞ்ஜநகிரிநாதரஞ்ஜநீ பவதீ ॥ (12)

"உலகம் முழுவதும் செய்த புண்யம் முழுவதையும் ஒரு கையாலெடுத்து உறிஞ்சிவிடக்கூடிய பாபங்களைச் செய்து அந்தப் பாபவிஷமூர்ச்சை மிதமிஞ்சி ஏறியிருக்கும் என்னையும் அஞ்சந மலைக்கு அதிபதியான ஸ்ரீநிவாஸனை ரஞ்சிப்பிக்கும் தேவியாகிய நீ என்னை உயர்ப்பித்து என் ஆத்மாவை உளதாகச்செய்ய வேணும்".

(தா-ம்) குழந்தைக்கு ஜ்வரத்தாலோ விஷத்தாலோ தோஷம் ப்ரபலமாக மிதம் மிஞ்சி முற்றி மூர்ச்சை ஏற்பட்டு ப்ராணபாயம் வந்திருக்கும் ஸமயத்தில் உயர்ந்த ஸஞ்ஜீவினியாகிய ஔஷதங்களை மலைப் பிரதேசங்களிலுள்ள அபூர்வமான மூலிகைகளைக்கொண்டு செய்து அந்தக் குழந்தையைத் தாயானவள் உயிர்ப்பிப்பாள். உலகத்தில் எல்லோரும் செய்யும் புண்யத்தை ஒரு தட்டில் வைத்து என் பாபத்தை ஒரு தட்டில் வைத்தால் என் பாபமே மிக்க கனமாகும். பாபமென்பது விஷம். அந்த விஷத்தால் என்னுடைய ஆத்மாவுக்கு மூர்ச்சை தலைகொண்டுபோயிருக்கிறது. இந்த அவஸ்தையில் அஞ்ஜநகிரியிலுள்ள ம்ருத ஸஞ்ஜீவன ஔஷ

தியாகிய தயையானவள் என்னைக் காப்பாற்றி என் உயிராகிய ஆத்மாவை எனக்கு அளிக்கிறாள். ஸ்ரீபாஷ்யத்தின் இரண்டாவது மங்களசுலோகத்தில் 'வ்யபகதப்ராணாத்மஸஞ்ஜீவினீம்' என்று வ்யாஸருடைய அம்ருதம்போன்ற ப்ரஹ்மஸூத்ரங்களை வர்ணித்தார். அந்த வர்ணநம் இங்கே இந்த தசகத்தின் இரண்டாவது சுலோகத்தில் அநுஸரிக்கப்படுகிறது. ஸ்ரீபாஷ்யத்தின் முதலாவது மங்களசுலோகத்தில் 'அகிலபுவந' என்ற வார்த்தையை அநுஸரித்து இங்கே முதலில் 'நிகிலலோக' என்று ப்ரயோகித்தார். வேதாந்தாசார்யர் இங்கே கவிபாடுவதால் வேதாந்தத்திற்கு முதல் நூலாகிய ஸ்ரீபாஷ்யத்தின் ஆரம்பத்தை அநுஸரித்துக் கவிபாடுகிறார். இவ்வளவு பாபமூர்ச்சை ஏறிய என்னையும் விஷத்தை நீக்கி உயிருள்ளவனாகச் செய்வதால் பாபத்தைப் போக்குவதில் தயைக்கு உள்ள சக்தி வெளியாகிறதென்கிறார். ஸஞ்ஜீவனமென்பது மோக்ஷமென்கிற நித்யாநந்தாநுபவத்தைக் காட்டும். தயையினால் உயிர்ப்பிக்கப்பட்டபிறகுதான் தான் உளனாக வெண்ணி அதற்குப் பிறகு 'என்னை' என்று தன்னைக் கூறுகிறார். ஹநுமார் ஜாம்பவானால் தெரிவிக்கப்பட்ட ஓஷதிபர்வதத்திற்குச் சென்று அங்கிருந்து ம்ருதஸஞ்ஜீவினீ முதலான ஓஷதிகளைக்கொண்டுவந்து ராமன் முதலிய வீரர்களை உயிர்ப்பித்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஸ்ரீநிவாஸனுடைய தயை ஆத்மாக்களை உயிர்ப்பிக்க அஞ்ஜனமலையிலுள்ள ஓர் ம்ருதஸஞ்ஜீவனஓஷதி என்று பாவம். (12)

𑌭𑌗𑌵𑌤𑌿 𑌦𑌯𑍇 𑌭𑌵𑌤𑍍𑌯𑌾 𑌵𑍃𑌷𑌗𑌿𑌰𑌿𑌨𑌾𑌥𑍇 𑌸𑌮𑌾
𑌪𑍍𑌲𑍁𑌤𑍇 𑌤𑍁𑌙𑍍𑌗𑍇 । 𑌅𑌪𑍍𑌰𑌤𑌿𑌕𑌮𑌜𑍍𑌜𑌨𑌾𑌨𑌾𑌂 𑌹𑌸𑍍𑌤𑌾
𑌲𑌮𑍍𑌬𑍋 𑌮𑌦𑌾𑌗𑌸𑌾𑌂 𑌮𑍃𑌗𑍍𑌯𑌃 ॥ ॥ ௧௩ ॥

பகவதி தயே பவத்யா வ்ருஷகிரிநாதே ஸமாப்லுதே துங்கே ।
அப்ரதிகமஜ்ஜநாநாம் ஹஸ்தாலம்போ மதாகஸாம் ம்ருக்ய: ॥

"பகவதியான தயையே! மிகவும் உயர்ந்த இடத்திலுள்ள வேங்கடகிரிநாதன் உன்னால் பெரிய தயாவெள்ளத்தால் முழுகும்படி செய்யப்பட்டபொழுது அந்த மலைமுழுவதும் கரைபுரண்ட தடுக்கக் கூடாத வெள்ளத்தில் முழுகிப்போகிற என்னுடைய பாபங்களுக்கு எவ்வளவு தேடினாலும் கைப்பிடிப்பு அகப்படமாட்டாது".

(தா-ம்) பாபங்களைப் போக்குவது தயையின் முக்கியமான உபகாரம். பாபமென்கிற நம்முடைய செய்கையால் ஸ்ரீநிவாஸனுடைய நெஞ்சில் நம்மை அதற்காக தண்டிக்கவேண்டுமென்கிற கோபமுண்டாகும். நம் பாபச்செய்கைகள் ஸ்ரீநிவாஸன் நெஞ்சில் கோபமாக நிற்கும். தயாதேவி ரொம்பவும் சாதுர்யமாய் நம்முடைய பாபங்களை முழுகச்செய்து இருக்கவிடமில்லாமல் தொலைக்கிறாள். ஸ்ரீநிவாஸன் உயர்ந்த மலைமேல் இருப்பவர். அவரும் தயையின் ப்ரவாஹத்தால் முழுகிப்போகிறார். மலை முழுகி அவரும் முழுகும் தயாவெள்ளத்தில் அவர் தலைக்கு மேல் வெள்ளம் போகும்பொழுது அவர் நெஞ்சிலுள்ள நம்முடைய பாபங்களும் முழுகிப்போய் இருக்க இடமில்லாமலும் கைப்பிடிப்பு அகப்படாமலும் தொலைந்து போகும். ஜகத்தை எல்லாம் ப்ரளயமென்கிற வெள்ளத்தில் பெருமாள் முழுக்கடிப்பார். அவரையும் தன் வெள்ளத்தில் தயை முழுகச்செய்கிறாள். "ஜ்ஞானமென்னும் நெருப்பு ஸர்வகர்மங்களையும் கொளுத்திச் சாம்பலாக்கும்" என்று அர்ஜுனனிடம் கீதையில் சொல்லப்பட்டது. கருணாமூர்த்தியான தயாதேவி பாபங்களைக் கொளுத்துகிறதில்லை. நம் பாபங்களைத் தன் நெஞ்சில் வைத்திருக்கும் பெருமாளை முழுக அடித்து அவர் நெஞ்சிலிருந்து அந்தப் பாபங்கள் மறக்கும்படி நெஞ்சை அலம்பி விடுகிறாள். (13)

க்ருபணஜநகல்பலதிகாம் க்ருதாபராதஸ்ய நிஷ்க்ரியாமாத்யாம் ।
வ்ருஷகிரிநாததயே த்வாம் விதந்தி ஸம்ஸாரதாரிணீம் விபுதா: ॥ ௧௪ ॥

க்ருபணஜநகல்பதிலகாம் க்ருதாபராதஸ்ய நிஷ்க்ரியாமாத்யாம் ।
வ்ருஷகிரிநாததயே த்வாம் விதந்தி ஸம்ஸாரதாரிணீம் விபுதா:॥

"வேங்கடமலை நாதனின் தயையே! தீனர்களான அகிஞ்சனர்களுக்கு மெல்லியகற்பகக்கொடியாயும், குற்றம்செய்தவருக்கு குற்றத்தைப் போக்கும் முதன்மையான ப்ராயச்சித்தமாகவும் ஸம்ஸாரத்தின் அக்கரை சேரும்படி தாண்டுவிக்கிறவளுமாக சாஸ்த்ர ஆராய்ச்சி உள்ளவர்கள் உன்னைத் தீர்மானிக்கிறார்கள்".

(தா-ம்) தயையென்னும் சிறந்த மாதை வர்ணிப்பதில் அவளை ஓர் இளம் கற்பகக்கொடி என்கிறார். தேவலோகத்திலுள்ள கற்பகக்கொடி தனிகர்களான தேவர்களுக்கு வேண்டியதை அளிக்கும். இந்தக் கற்பகக்கொடி தனக்கு ஒரு கைமுதலில்லாதவரும் வேறு கதியற்றவருமான அகிஞ்சனர்களுக்கு வேண்டுமதைத் தரும். கற்பகக்கொடி வேண்டியபொருளைக் கொடுக்குமேயல்லாது செய்த குற்றத்திற்கு ப்ராயச்சித்தமாகாது. செய்த பாபம் வெகு த்ரவ்யத்தைச் செலவிட்டுப் பட்டினிபாரணைகளோடு ப்ராயச்சித்தம் செய்தால் தொலையுமென்பது சாஸ்த்ரம். செய்த குற்றத்தை மன்னிக்கவேணுமென்று அநுதாபத்துடன் தயையின் தயவைப் பிரார்த்தித்தால் தயைதானே ப்ராயச்சித்தமாக நின்று அது செய்யும் வேலையைச் செய்து பாபத்தைத் தொலைக்கிறாள். கற்பகக்கொடி ஸம்ஸாரபோகங்களைக் கொடுக்குமேயல்லாது ஸம்ஸாரத்தைத் தாண்ட உதவி செய்யாது. தயை நம்மை ஸம்ஸாரத்தைத் தாண்டும்படி செய்து அக்கரை சேர்ப்பிப்பாள். (14)

𑌵𑍃𑌷𑌗𑌿𑌰𑌿𑌗𑍃𑌹𑌮𑍇𑌧𑌿𑌗𑍁𑌣𑌾 𑌬𑍋𑌧𑌬𑌲𑍈𑌶𑍍𑌵
𑌰𑍍𑌯𑌵𑍀𑌰𑍍𑌯𑌶𑌕𑍍𑌤𑌿𑌮𑍁𑌖𑌾𑌃 । 𑌦𑍋𑌷𑌾 𑌭𑌵𑍇𑌯𑍁𑌰𑍇𑌤𑍇
𑌯𑌦𑌿 𑌨𑌾𑌮 𑌦𑌯𑍇 𑌤𑍍𑌵𑌯𑌾 𑌵𑌿𑌨𑌾𑌭𑍂𑌤𑌾𑌃 ॥ ॥ ௧௫ ॥

வ்ருஷகிரிக்ருஹமேதிகுணா போதபலைச்வர்யவீர்யசக்தி முகா: l தோஷா பவேயுரேதே யதி நாம தயே த்வயா விநா பூதா: ll (15)

"தயையே வேங்கடமலையில் குடித்தனம் செய்யும் க்ருஹமேதியான ஸ்ரீநிவாஸனுடைய ஜ்ஞாநம், பலம், ஐச்வர்யம், சக்தி முதலிய குணங்கள் உன்னோடு கூடியிராமல் உன்னைவிட்டு அகன்றிருந்தால் ஜனங்களுக்குக் கெடுதி உண்டாக்கும் தோஷங்களே ஆய்விடும்."

(தா-ம்) ஜ்ஞாநம், சக்தி முதலிய குணங்கள் தயையை விட்டுப் பிரிந்தால் குற்றம் மிகுந்த நமக்குக் கெடுதலையே விளைவிக்கும். தயையில்லாதவனுக்கு சக்தி, பலம், செல்வாக்கு முதலிய திருந்தால் அவனுடைய சக்தி பலம் முதலியது அநர்த்தத்தையே விளைவிக்கும். சக்தி பலம் அதிகமாயிருப்பவர்க்குத் தயையும் இருந்தால் லோகத்திற்கு உபகாரம் அதிகமாயிருக்கும். இதனால்

தயையோடு சேர்ந்தால்தான் சக்தி பலம் முதலிய குணங்கள் குணமாகும். இல்லாவிட்டால் தோஷமாகும். தயாகுணத்தின் சேர்க்கையால் மற்ற குணங்கள் குணமாக்கப்படும். ஆகையால் தயையே தானாக குணமாகும். ஆதலால் தயையை ஸ்தோத்ரம் செய்யவேண்டியது ந்யாயம். வேங்கடமலையில் இருக்கும் குடும்பி என்று ஸ்ரீநிவாஸனைச் சொல்லுகிறார். ப்ரபஞ்சம் முழுமையும் ஸ்ரீநிவாஸனுடைய குடும்பம். குடும்பிக்கு தயையில்லாவிடில் அநர்த்தமே பெரிதாகும். (15)

ஆஸ்ருஷ்டிஸந்ததாநாமபராதாநாம் நிரோதிநீம் ஜகத: ।
பத்மாஸஹாயகருணே ப்ரதிஸஞ்சரகேளிமாசரஸி ॥ ॥ ௧௬ ॥

ஆஸ்ருஷ்டிஸந்ததாநாமபராதாநாம் நிரோதிநீம் ஜகத: ।
பத்மாஸஹாயகருணே ப்ரதிஸஞ்சரகேளிமாசரஸி ॥ (16)

"லக்ஷ்மீஸஹாயமான ஸ்ரீநிவாஸனுடைய தயையே உலகம் படைத்தது முதல் தொடர்ந்து விஸ்தாரமாய் உலகத்தோர் செய்த பாபங்களையெல்லாம் நிரோதம் செய்வதற்காக ப்ரளயம் என்னும் ப்ரதிஸஞ்சரமென்னும் விளையாட்டை நீ ஆசரிக்கிறாய்".

(தாத்-ம்) பெருமாள் தயைக்கு வசமாயிருந்தால் ப்ரளயம் என்பது எப்படிக்கூடும். ப்ரளயம் உலகத்தை அழிப்பதல்லவா? அந்தக்ரூரமான கார்யம் எப்படி தயாராஜ்யத்தில் ஸம்பவிக்கலாம். இப்படி ஆக்ஷேபம் வர, முதலில் ப்ரளயம் தயாரூபமான கார்யம் என்று நிர்வஹிக்கிறார். குழந்தைகள் அதிகமாக துஷ்டத்தனமே செய்துகொண்டு துஷ்டநினைவு அடங்காமலிருந்தால் தாயார் அந்தக் குழந்தைகளை துஷ்டத்தனத்தை மறப்பதற்காகத் தூங்கச்செய்வாள். தூங்கினால், முன்பிருந்த துஷ்டத்தனம்கொஞ்சம்தணியும்.உலகம்ஸ்ருஷ்டித்ததுமுதல்பாபமே மிகுதியாகச் செய்துவந்த ப்ராணிகளே ப்ரளயத்திற்குமுன் உலகத்தில் மிகுதியாயிருப்பவர். நல்வழியுள்ளவர் அதற்குமுன்பே முக்தியடைந்திருப்பர். முக்தியடையாமல் மிகுதியாயுள்ள கொடும்பாவிகள் துஷ்டவாஸனை தலைகொண்டுபோய் நல்வழியில் திரும்புவதற்கு இடமேயில்லாமலிருப்பர். அந்த துஷ்டர்களின் கொடிய துர்வாஸனையை மறக்கடிப்பதற்காக ப்ரளயமென்னும் நீண்ட தூக்

கத்தைத் தயவினால் தாய்போல ஸ்ரீநிவாஸன் செய்விக்கிறான் என்று கூறுகிறார். 'ப்ரதிஸஞ்சர'மென்பது திரும்பிப் பின்னடத்தல் என்பதையும் சொல்லும். ஸ்ருஷ்டியில் 'காரணப்பொருளிலிருந்து உலகம் வெளிப்பட்டு வரிசைக் க்ரமமாய் முன்வரும் ப்ரளயத்தில் உலகம் பின்சென்று காரணப் பொருளுக்குள்ளே ஒடுங்கும். இங்கே பின்செல்லும் ப்ரளயத்தை ஒரு நர்த்தகியின் ப்ரதிஸஞ்சரகேளியாக ரூபிக்கிறார். நர்த்தனகாலத்தில் நர்த்தகி முன் செல்வதும் பிறகு விலாஸத்துடன் பின் திரும்புவதும் விளையாட்டாகும். (19)

𑌅𑌚𑌿𑌦𑍍𑌵𑌿𑌶𑌿𑌷𑍍𑌟𑌾𑌨𑍍 𑌪𑍍𑌰𑌲𑌯𑍇 𑌜𑌨𑍍𑌤𑍂𑌨𑌵𑌲𑍋𑌕𑍍𑌯 𑌜𑌾𑌤
𑌨𑌿𑌰𑍍𑌵𑍇𑌦𑌾 । 𑌕𑌰𑌣𑌕𑌲𑍇𑌬𑌰𑌯𑍋𑌗𑌂 𑌵𑌿𑌤𑌰𑌸𑌿
𑌵𑍃𑌷𑌶𑍈𑌲𑌨𑌾𑌥𑌕𑌰𑍁𑌣𑍇 𑌤𑍍𑌵𑌮𑍍 ॥ ॥ ௧௭ ॥

அசிதவிசிஷ்டாந் ப்ரளயே ஜந்தூநவலோக்ய ஜாதநிர்வேதா । கரணகளேபரயோகம் விதரஸி வ்ருஷசைலநாத கருணே த்வம் ॥

"வேங்கடகிரிநாதனுடைய கருணையே அசேதனத்தோடே சேதனமாய் சேதனகுணமேயில்லாமல் ப்ரளயத்தில் கிடக்கும் ப்ராணிகளைப் பார்த்து மனம் நொந்து நீயவர்கள் கடைத்தேறுவதற்காக ஜ்ஞாநம் ப்ரஸரிக்க உபயோகமான இந்த்ரியங்கள் கூடிய களேபரமென்னும் சரீரத்தை அளிக்கிறாய்".

(கா-ம்) காரணப் பொருளைத்தான் ஸ்துதிசெய்யவேண்டும் என்று சாஸ்த்ரம். தயையை ஸ்துதிசெய்ய அவள் ஜகத்துக்குக் காரணமென்று நிரூபிக்கவேணும். ஜகத்தின் ஸ்ருஷ்டி தயையினால் ஸ்ரீநிவாஸனைக்கொண்டு செய்விக்கப்படுகிறதென்று கூறுகிறார். ப்ரளயகாலத்தில் சேதனங்களும் அசேதநங்களும் ஒன்றுக்கொன்று பிரிவில்லாமல் ஒன்றுப்க்கிடக்கும். அறிவுள்ள சேதனம் அறிவற்ற அசேதனம்போலேயே ஜ்ஞாநத்திற்கே யோக்யதை யில்லாமல் கிடக்கும். ஜ்ஞானம் எல்லையில்லாமல் ப்ரஸரிக்கும் மோக்ஷதசைக்கு இந்தச் சேதனர்கள் யோக்யராயிருந்தும் அவர்கள் ஜடத்தோடு ஜடமாய்க் கிடப்பதைப் பார்த்துத் தாயாகிய தயாதேவிக்கு நிர்வேதம் பிறக்கிறது. அவளுக்கு நிர்வேதம் பிறந்ததும் உலகம் பிறக்கிறது என்று ஸூசிக்கிறார். தேகமிருந்தால்தான் தர்மங்களை அநுஷ்டிக்கவும் மோக்ஷத்திற்கு வேண்டிய

யோகங்களைச் செய்யவும் கூடும். இந்தச் சேதனர்கள் எப்படியாவது கர்மயோகம், ஜ்ஞாநயோகம், பக்தியோகம் ப்ரபத்தியோகம் முதலிய யோகங்களில் இறங்கி மோக்ஷத்தை அடையட்டுமென்று எண்ணி அவர்களுக்குத் தேஹயோகத்தை ஸ்ருஷ்டி ஆரம்பத்தில் தயாதேவி கொடுக்கிறாள். இதனால் ஸ்ருஷ்டி ஒருபெரிய கருணையென்பதும் ஸ்ருஷ்டி தயையினால் செய்விக்கப்படுகிறதென்பதும் ஏற்படுகின்றன. தயைஸ்ருஷ்டிகாரணமாதலால் தயையை த்யாநம் செய்து ஸ்துதிக்கத் தட்டில்லை. (17)

𑌅𑌨𑌗𑌣𑌦𑌶𑌾𑌰𑍍𑌪𑌿𑌤𑍇𑌨 𑌶𑍍𑌰𑍀𑌧𑌰𑌕𑌰𑍁𑌣𑍇 𑌸𑌮𑌾
𑌹𑌿𑌤𑌸𑍍𑌨𑍇𑌹𑌾 । 𑌶𑌮𑌯𑌸𑌿 𑌤𑌮𑌃 𑌪𑍍𑌰𑌜𑌾𑌨𑌾𑌂 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰
𑌮𑌯𑍇𑌨 𑌸𑍍𑌥𑌿𑌰𑌪𑍍𑌰𑌦𑍀𑌪𑍇𑌨 ॥ ॥ ௧௮ ॥

அநுகுணதசார்ப்பிதேந ப்ரீதரகருணே ஸமாஹிதஸ்நேஹா I
சமயஸி தம: ப்ரஜாநாம் சாஸ்த்ரமயேந ஸ்திரப்ரதீபேந II (18)

"ஸ்ரீநிவாஸனுடைய கருணையே! ஸ்நேஹத்தை (எண்ணையை) நிரம்பவைத்து ஸரியான தசையில் (திரியில்) ஏற்றி வைத்த சாஸ்த்ரமயமான ஸ்திரமான தீபத்தினால் ப்ரஜைகளுக்கு இருட்டைப் போக்குகிறாய்".

(தா-ம்) வேதங்களில் சொல்லுகிற கிரமப்படி முதலில் ப்ரளயத்தையும் பிறகு ஸ்ருஷ்டியையும் தயையின் கார்யமாகக் கூறினார். ஜகத்தை ஸ்ருஷ்டிக்க ஆரம்பித்த பிறகு ப்ரஹ்மதேவனை ஸ்ருஷ்டித்து அவருக்கு வேதங்களை உபதேசித்து அவர் மூலமாக உலகத்திற்கு சாஸ்த்ரங்களை ஈச்வரன் கருணையால் கொடுக்கிறார்.

சாஸ்த்ரங்களைக் கொண்டுதான் நாம் நமது ஆத்மாவை ரக்ஷித்துக்கொள்ளக்கூடும். தேஹத்தின் ரக்ஷணத்தைவிட ஆத்மரக்ஷணமே பேருதவியாகும். ப்ரளயத்தையும் ஸ்ருஷ்டியையும் சொல்லிவிட்டு ரக்ஷணத்தைச் சொல்லுமிடத்தில் ஆத்மா உஜ்ஜீவிப்பதற்கு உபயோகமான சாஸ்த்ரத்தைக் கொடுப்பதையே தயையின் பேருதவியாகக் கூறுகிறார். அதீந்த்ரியமான பொருள்களைச் சாஸ்த்ரமொன்றுதான் விளக்கிக் காட்டும். மனதில் இருட்டையும் ஜ்ஞாநத்தை மறைக்கும் தமோகுணத்தையும் நமமுடைய மனதில் ஏற்றிவைக்கப்படும் சாஸ்த்ரமென்கிற ப்ரகாசமான

விளக்குதான் அகற்றும். ஆழ்வார் கூறியபடி 'சுடர்மிகுசுருதி' இந்த ஜ்ஞாநப்ரதீபமாகும். ஸ்ரீரங்கராஜஸ்தவத்தின் உத்தரசதகத்தின் முதல் சதகத்தில் இருட்டைப் போக்கவும் ஸத்தையும் அஸத்தையும் பகுத்தறியவும் ப்ரதீபம்போன்ற சாஸ்த்ரப்ரமாணத்தைக் காருணிகனுன பகவான் அளிக்கிறார் என்று கூறியதை இந்த சுலோகம் அநுஸரிக்கிறது. பட்டரும், கிராதார்ஜ்ஜுநீயமென்னும் மஹாகாவ்யத்தில் பாரவி என்னும் கவி புத்தியானது இருளடையும்பொழுது நன்றாய் ப்ரகாசிக்கும் பரிசுத்தமான சாஸ்த்ரமென்னும் தீபம் பொருள்களை உள்ளபடி காட்டும் என்று கூறியதை அநுஸரித்தார். இங்கே சாஸ்த்ரத்தை விளக்காகக் காட்ட தயாதேவியின் நிறைந்த ஸ்நேஹத்தை விளக்குக்கு வேண்டிய நிறைந்த எண்ணெயாகவும், புத்தி ஸரியான தசையில் உள்ளபொழுது சாஸ்த்ரவிளக்கை ஏற்றிவைக்கவேண்டியபடியால் அந்த தசையைப் பரிசுத்தமான திரியாகவும் காட்டுகிறார். ப்ரஜைகளென்பது சிசுக்களைச் சொல்லும். சிறிய சிசுக்கள் உறங்கும் அறையில் இரவுமுழுதும் ஸ்திரமாய் எரியும்படி எண்ணெயை நிரம்பவிட்டு ஸரியான திரியில் விளக்கை ஏற்றிவைப்பதுபோல் தயையென்னும் தாய் தன் குழந்தைகளுக்கு ஸம்ஸார இருளில் இருட்டை அகற்ற சாஸ்த்ரமென்னும் ஸ்திரமான விளக்கை ஏற்றிவைக்கிறாளென்பது கருத்து. சாஸ்த்ரமயமான விளக்கென்றதால் சாஸ்த்ரத்தையே மிகுதியாகவும் சாஸ்த்ரத்துக்கு விரோதமில்லாத தர்க்கங்களையும் யுக்திகளையும் இடையிடையே உள்ள தீபமென்பது கருத்து. ஸ்திரமான தீபமென்பதால் கேவலமான தர்க்கத்தைப்போல் ப்ரதிஷ்டிதமல்லாமலும் சஞ்சலமாயுமிராமல் அசைக்கக்கூடாத ச்ரத்தையால் ஸ்திரமாய் ப்ரகாசிக்கும் என்பது கருத்து. (18)

ரூடா வ்ருஷாசலபதே: பாதே முககாந்திபத்ரலச்சாயா ।
கருணே ஸுகயஸி விநதாந் கடாக்ஷவிடபை: கராபசேயபலை: ॥ ॥ ௧௯ ॥

ரூடா வ்ருஷாசலபதே: பாதே முககாந்திபத்ரலச்சாயா I கருணே ஸுகயஸி விநதாந் கடாக்ஷவிடபை: கராபசேயபலை: II (19)

"ஏ கருணையே! வேங்கடமலையரசன் திருவடியில் முளைத்து வளர்ந்து அவருடைய 'பச்சை மாமலைபோல் மேனியின்' திருமு

கத்தின் நீலகாந்திகளாகிய இலைகளால் நிறைந்த வ்ருக்ஷமாகிய நீ உன்னை வணங்கி உன் நிழலை அடைந்தவர்களுக்குக் கையால் பறிக்கக்கூடிய பழங்கள் தொங்கும் நீலகடாக்ஷமென்னும் கிளைகளால் ஸுகப்படுத்துகிறாய்''.

(தா-ம்) கருணையை வேங்கடமலைமேல் பெருமாள் திருவடி வாரத்தில் முளைத்து வளர்ந்து ஓங்கிய பச்சை மரமாக நிரூபிக்கிறார். பகவான் தன்னுடைய மேகவர்ணமான திருமுகமண்டலத்தால் தன் திருவடியில் முளைக்கும் தயையென்னும் வ்ருக்ஷத்தைக் குளிர நோக்குகிறபொழுது அங்கிருந்து கீழேவிழும் நீலகாந்திகள் இந்த வ்ருக்ஷத்திற்குத் தலையிலுள்ள பசுமையான அடர்ந்த தழைகளாகி குளிர்ந்த நிழலைக் கொடுக்கும். பகவானுடைய கடாக்ஷங்கள் இந்த வ்ருக்ஷத்தின் கிளைகளாகும். இந்த வ்ருக்ஷத்தில் புருஷார்த்தமென்னும் பழங்கள் நிரம்ப உள. இந்த தயையைவணங்கி தரையில் ஸாஷ்டாங்கமாய் நமஸ்காரம் செய்கிறவர்கள் தரையோடு தரையாய்க் கிடக்கும் ஸ்திதியிலேயே தங்களுக்கு வேண்டிய பழங்களைக் கைபால் பறித்துக்கொள்ளும்படி பழங்கள் கருணையால் அவ்வளவு தாழத்தொங்கும். தயை ஆச்ரிதர்களை ஸுகப்படுத்துகிறாள் என்று சொல்வதால் தயை என்பதுதான் ஸ்வயம் பிறர் துக்கத்தினாலுள்ள துக்கம் என்று சிலர் சொல்லுகிறபடி ஒருகால் துக்கஸ்வரூபமாயிருந்தாலும் அவளை ஆச்ரயித்தவர்களுக்கு அவள் ஸுகத்தையே கொடுப்பாளென்பது திண்ணம்.

𑌨𑌯𑌨𑍇 𑌵𑍃𑌷𑌾𑌚𑌲𑍇𑌨𑍍𑌦𑍋𑌸𑍍𑌤𑌾𑌰𑌾𑌮𑍈𑌤𑍍𑌰𑍀𑌂 𑌦𑌦𑌾
𑌨𑌯𑌾 𑌕𑌰𑍁𑌣𑍇 । 𑌦𑍃𑌷𑍍𑌟𑌸𑍍𑌤𑍍𑌵𑌯𑍈𑌵 𑌜𑌨𑌿𑌮𑌾𑌨𑌪𑌵
𑌰𑍍𑌗𑌮𑌕𑍃𑌷𑍍𑌟𑌪𑌚𑍍𑌯𑌮𑌨𑍁𑌭𑌵𑌤𑌿 ॥ ॥ ௨௦ ।

நயநே வ்ருஷாசலேந்தோஸ்தாராமைத்ரீம் ததாநயா கருணே ।
த்ருஷ்டஸ்த்வயைவ ஜநிமாநபவர்கமக்ருஷ்டபச்யமநுபவதி ॥

ஓ கருணையே! வேங்கடமலைமேல் உதித்த சந்த்ரனுடைய திருக்கண்களில் தாராமைத்ரீஎன்னும் அத்ருஷ்டவசமான அருள் நிறைந்த ஸ்நேஹத்தை உண்டுபண்ணும் உன்னால் குளிர்ந்த கடாக்ஷத்தோடு பார்க்கப்பட்டு பிறவி அடைகிறவன் உழவு முதலிய பயிர்த்தொழில் ச்ரமமன்னியில் மோக்ஷமென்னும் பலத்தை அநுபவிக்கிறான்''.

(தா-ம்) ஸ்ரீநிவாஸனை வேங்கடமலைமேல் நித்யோதிதனை சந்த்ரனாக நிரூபிக்கிறார். அபராதிகளான நமக்கு பகவானுடைய ஸ்நேஹமுண்டாவதற்கு யாதொரு ஸுக்ருதமும் இல்லை. காரணத்தையே நோக்காமல் நிர்ஹேதுகமாக கேவலம் அத்ருஷ்டவசத்தால் தானாக உண்டாகும் ஸ்நேஹத்தை முகம் விழித்த வேளை என்றும் தாராமைத்ரீ என்றும் சக்ஷூராகம் என்றும் சொல்லுவார். தாரை என்றால் நக்ஷத்ரம் நக்ஷத்ரபலத்தால் ஏற்படும் ஸ்நேஹம் த்ருஷ்டமான காரணத்தை எதிர்பாராது. நம்மிடத்தில் ஸ்ரீநிவாஸனுடைய கண்களில் காரணமன்றியில் தாராமைத்ரீ என்னும் ஸ்நேஹம் ஸஹஜமாயுண்டாகும்படி தயாதேவி செய்விக்கிறாள். தயாதேவியின் கடாக்ஷம் நம்பேரில் விழவே அதை அநுஸரித்து ஸ்ரீநிவாஸனுடைய குளிர்ந்த கடாக்ஷம் அதேகாலத்தில் நமது மீது விழும். நாம் பிறக்கும்பொழுது தயாகடாக்ஷம் விழுந்தால் ஸ்ரீநிவாஸகடாக்ஷமும் கூடவிழுந்து நாம் ஸாத்விகராகி மோக்ஷத்தை ச்ரமமன்னியில் அவனுடைய அருளாலேயே அடையலாம். தனிமுதலாய் முளைக்கும் செடி தோட்டக்காரனுடைய க்ருஷியில்லாமல் தெய்வம் வர்ஷிக்கும் மழை முதலியதாலும் நதிப்ரவாஹம் முதலியதாலும் செழித்து வளர்ந்து பலதசையை அடையும். அடுத்த சுலோகத்தில் ஸ்ரீநிவாஸன் சரணாகதர் என்னும் பயிர்களைப் பயிரிட்டு வ்ருத்தி செய்வதற்காக ஜலம் நிறைந்த அருவிகளுடைய திருமலைமேல் ஒரு பயிர்த்தொழிலாளியாக அவதரித்து நிற்கிறானென்று கூறப்போகிறார். உழுது பயிரிடுகிற ச்ரமம் நமக்கில்லாமல் தயாதேவியின் ஸஹாயத்தால் அவனே நாம் மோக்ஷத்திற்காகச் செய்யவேண்டும் க்ருஷியைச் செய்து நமக்கு க்ருஷிச்ரமமன்னியில் மோக்ஷமென்கிற பலம் கிடைக்கும்படி செய்கிறானென்பது கருத்து. பக்தி என்பது க்ருஷியாகும். அந்த ச்ரமமன்னியில் சரணாகதர்கள் விஷயத்தில் தயையின் அருளால் ஸ்ரீநிவாஸன் தானே அந்த ச்ரமத்தை ஏற்றுக்கொண்டு பலம் கைகூடும்படி செய்கிறான். (20)

ஸஹ்யோத்பவைரவஸ்த்வை அவாஹைரநேகை:
க்ருதஸம்ப்லவா யுஷ்மது | ஸாரணாமதஸஸ்யூராஷி
நீயம் வ்ருஷசைலசுக்ருஷீவலம் யிநோதி ||உக||

ஸமயோபநதைஸ்தவ ப்ரவாஹைரநுகம்பே க்ருதஸம்ப்லவா தரித்ரீ । சரணாகதஸஸ்யமாலிநீயம் வ்ருஷசைலக்ருஷீவலம் திநோதி ॥ (21)

“தயையே! ஸமயத்தில் (காலத்தில்) வரும் உனது ப்ரவாஹங்களால் ஜலம் நிறைந்த பூமியானவள் சரணாகதரென்னும் பயிர்களை மாலையாய் அணிந்துகொண்டு வேங்கடமலைக்கு அதிபதியாகிய பயிராளியை ஸந்தோஷப்படுத்துகிறாள்”.

(தா-ம்) ஏலக்காய், தேயிலை முதலிய செடிகளைப் பயிரிடுவதற்காகப் பயிராளிகள் மலைகளில் வாஸம் செய்துகொண்டு பயிரிடுவார்களென்பது ப்ரஸித்தம். சரணாகதரென்னும் பயிர்களைப் பயிரிட்டு வ்ருத்தி செய்வதற்காக வேங்கடமலையில் பெருமாள் குடியிருப்பதாகவும், வடமாமலையின் உச்சியாகிய தம்மிடம் இருந்து ப்ரவஹிக்கும் தயாப்ரவாஹங்களால் பூமியெல்லாம் வெள்ளமிட்டோடி சரணாகதரென்னும், பயிர்கள் மாலை மாலையாகக் கிளம்பி செழித்து அந்த மாலைகளால் அலங்கரிக்கப்பட்ட பூமிதேவியைக் கண்டு வேங்கடமலையாசன் மகிழ்ச்சி யடைகிறார். இங்கே ஸமயத்தால் வரும் தயாப்ரவாஹங்கள் என்று சொல்லியிருப்பது உடையவர் ஸமயமாகிய சரணாகதி தர்சனத்தையும் சொல்லும். ஸமயமென்பதற்கு உசிதகாலமென்றும், தர்சனம் என்றும் பொருள். இரண்டர்த்தங்களையும் இங்கே கொள்ளவேணும். உடையவர் தர்சனம் ஏற்பட்ட பிறகு சரணாகதர்கள் கூட்டம் கூட்டமாகப் பெருகி அவர்களால் பூமி நிறைந்து பூதேவி மகிழ்ச்சி அடைகிறாள். பாபிகளைச் சுமந்து அந்தச் சுமை தாங்க மாட்டாமல் தன் பாரத்தைக் குறைக்கவேண்டுமென்று பூமி தன் நாதனிடம் முறையிட்டுக்கொண்டு அவள் சுமையைக் குறைப்பதற்காகவே அவர் அடிக்கடி அவதாரம் செய்வதுண்டு. இப்பொழுது உடையவர் ஸமயம் ஏற்பட்டபிறகு சரணாகதரென்னும் புண்யவான்களால் பூமி நிறைய அவள் அதனால் மகிழ்ந்து அவள் மகிழ்ச்சியைக் காணும் அவள் நாதனும் மகிழ்கிறார். உடையவர் சமயம் தயாசமயமாகும். தயாபரிபாகஸமயத்தில் தயாப்ரவாஹங்கள் வெள்ளமிட்டோடி சாணாகதர் என்னும் பயிர்களை வ்ருத்தி செய்யும். சரணாகதப் பயிர் மாலைகளால் பூமிதேவி அலங்கரிக்கப்பட்டு மகிழ்வது அவள் நாயகனான வேங்கடேசனையும் மகிழச்செய்கிறது. (21)

𑌕𑌲𑌶𑍋𑌦𑌧𑌿𑌸𑌂𑌭𑌵𑌤𑍋 𑌭𑌵𑌤𑍍𑌯𑌾𑌃 𑌕𑌰𑍁𑌣𑍇 𑌸𑌨𑍍
𑌮𑌤𑌿𑌮𑌨𑍍𑌥𑌸𑌂𑌸𑍍𑌕𑍃𑌤𑌾𑌯𑌾𑌃 । 𑌅𑌮𑍃𑌤𑌾𑌂𑌶𑌮𑌵𑍈𑌮𑌿 𑌦𑌿𑌵𑍍𑌯
𑌦𑍇𑌹𑌂 𑌮𑍃𑌤𑌸𑌞𑍍𑌜𑍀𑌵𑌨𑌮𑌞𑍍𑌜𑌨𑌾𑌚𑌲𑍇𑌨𑍍𑌦𑍋𑌃 ॥ ௨௨ ॥

கலசோததிஸம்பதோ பவத்யா: கருணே ஸந்மதிமந்தஸம்ஸ்க்ருதாயா: l அம்ருதாம்சமவைமி திவ்யதேஹம் ம்ருதஸஞ்ஜீவநமஞ்சநாசலேந்தோ: ll (22)

"கருணையே! அஞ்ஜநமலையில் சந்திரபிம்பம்போல விளங்கும் ஸ்ரீநிவாஸனுடைய ம்ருதஸஞ்ஜீவினிபோன்ற திவ்யதிருமேனியை நன்மதி என்னும் மத்தினால் கடையப்பட்ட பாற்கடல் போன்ற உன்னுடைய அம்ருதமென்னும் ஸாராம்சமாக நினைக்கிறேன்."

(தா-ம்) பூமிதேவிக்கு சரணாகதமாலையைச் சூட்டிப் பெருமாளுக்கு மகிழ்ச்சியென்னும் உபகாரத்தைத் தயை செய்வதாக முன் சுலோகத்தில் கூறினார். இங்கே ஸ்ரீநிவாஸனுடைய திவ்ய மங்களவிக்ரஹம் தயாதேவி கடைந்தெடுத்த அம்ருதஸாரம் என்கிறார். வெண்மையான தயாப்ரவாஹமே ஒரு பாற்கடலாகும். அந்தப் பாற்கடல் தயையாலேயே கடையப்படுகிறது. அப்படிக் கடைவதில் சக்கையைத் தள்ளிக் கேவலம் ஸாராம்சம் மட்டும் ஸ்ரீநிவாஸனுடைய விக்ரஹமாகத் திரண்டுவந்ததுபோலும். இந்த தயாஸமுத்திரத்தைக் கடைவதற்குச் சுபமான ஸங்கல்பமே மத்தாகும். யாருடைய ஸங்கல்பமென்று இங்கே குறிப்பிடவில்லை. அதனால் தயையினுடைய ஸங்கல்பத்தையும், ஸ்ரீநிவாஸனுடைய ஸங்கல்பத்தையும், பக்தர்களான தமர்களுடைய ஸங்கல்பத்தையும் கொள்ளலாம். தமருகந்த உருவத்தைத் தானும் உகந்தானாய், தன்னிச்சையினால் ஆச்ரிதர்களைக் காக்கத் தாம் திவ்யமங்களவிக்ரஹத்துடன் அவதரிப்பதாகக் கீதையில் தமது வார்த்தை. பெருமாளுடைய விக்ரஹம் ம்ருதப்ராயரான ஆத்மாக்களை உயிர்ப்பிக்கும். அந்த விக்ரஹதர்சனமாத்ரத்தால் கலியும் கெடும். கருணாமயமான தயை தன்னையே கடைந்து கொள்ளுகிறாள். வேறொருவரைக் கடையாள். பாற்கடலைக் கடைய அதில் சந்திரன் உதித்

தயாசதகம் 19-ம் பக்கத்தில் 17-வது வரியிலுள்ள "மனம் நொந்து" என்பதற்குப் பதிலாய் "ப்ரளயத்தில் இச்சை ஒழிந்து" என்று திருத்திக்கொள்ளவும்.

தான். தயையென்னும் பாற்கடலைக் கடைய ஸ்ரீநிவாஸனென்னும் சந்திரன் உதித்தான். மதியென்னும் மத்தினால் சாஸ்த்ரமென்னும் கடலைக் கடைய மஹாபாரதமென்னும் சந்திரன் உதித்ததாகப் பாரதத்தில் கூறப்பட்டது. (22)

ஜலதேரிவ ஶீததா தயே த்வம் வ்ருஷஶைலாதிபதே
ஸ்வபாவபூதா । ப்ரளயாரபடீ நடீம் ததீக்ஷாம்
ப்ரஸபம் க்ராஹயஸி ப்ரஸத்திலாஸ்யம் ॥ ॥ ௨௩ ॥

ஜலதேரிவ சீததா தயே த்வம் வ்ருஷசைலாதிபதே: ஸ்வபாவபூதா । ப்ரளயாரபட நடீம் ததீக்ஷாம் ப்ரஸபம் க்ராஹயஸி ப்ரஸத்திலாஸ்யம் ॥ (23)

"தயையே! ஸமுத்ரத்திற்குக் குளிர்ச்சி எப்படி ஸ்வபாவமோ, அப்படியே வேங்கடமலையரசனுக்கு நீ ஸ்வபாவமானவள். ப்ரளயகாலத்தில் தலைவிரிகோலமாய்க் கூத்தாடும் அவருடைய கொடும் பார்வையென்னும் நர்த்தகியை நீ பலாத்காரமாக அந்தக் கொடுமையான ஆட்டத்திலிருந்து, திருப்பி ஸ்ருஷ்டி என்னும் ம்ருதுவான ப்ரஸந்ந நர்த்தனத்தில் ப்ரவர்த்திக்கச் செய்கிறாய்."

(தா-ம்) குளிர்ச்சி என்பது ஜலத்தின் ஸ்வபாவம். ஜலத்தை எவ்வளவு சுடக்காய்ச்சினாலும் அது மறுபடியும் குளிர்ந்துபோகும். அப்படியே திருவேங்கடமுடையானுடைய திருவுள்ளத்திற்குக் குளிர்ந்த குணமுடைய தயைதான் ஸ்வபாவம். நம்முடைய கொடிய அபராதங்களால் நாம் அந்தத் திருவுள்ளத்தை எவ்வளவு சுடச்செய்தாலும் சீக்கிரம் கொதிப்பு நீங்கிக் குளிர்ந்து தயை என்னும் ஸ்வபாவத்தன்மையை அடையும். ப்ரளயகாலத்தில் கோரமாக உலகத்தையெல்லாம் அழிக்கும் க்ரூரமான த்ருஷ்டியை அந்தக் கோபத்தையெல்லாம் தன் வலிமையினால் மாற்றி ஸ்ருஷ்டிகாலத்திலுள்ள குளிர்ந்த கடாக்ஷமாக தயை செய்விக்கிறாள். (23)

ப்ரணதப்ரதிகூலமூலகாதீ ப்ரதிகோஷ்டீ
வ்ருஷாசலேஶ்வரஸ்ய । ஜனனீவ யவஸ்தாவாயநீத்ரா
க்ஷமனே கிங்கரதாம் தயே வ்யானக்தி ॥ ॥ ௨௪ ॥

ப்ரணதப்ரதிகூலமூலகாதீ ப்ரதிக: கோZபி வ்ருஷாசலேச்வரஸ்ய । களமே யவஸாபசாய நீத்யா கருணே கிங்கரதாம் தவோபயாதி ॥ (24)

"தன்னை ஆச்ரயிப்பவர்களுக்கு ப்ரதிகூலமானவர்களை வேரறுக்கும், வர்ணனைக்கு அடங்காத வேங்கடேச்வரனுடைய கோபம் பயிர்வயல்களில் களைபிடுங்கும் ந்யாயத்தைப்போல், கருணையே! உனக்கு ஊழியஞ்செய்கிறது."

(தா-ம்) இந்த சுலோகத்தில் கூறும் த்ருஷ்டாந்தம் மிக்க அழகானது. நெல் பயிரொன்றுக்கு அநேகக் களைகள் விரோதிகளாகும். களைகளை வேரோடு பிடுங்கி எரியாவிட்டால் பயிரழிந்து போகும். களைபிடுங்குவது நெல்பயிரின் வ்ருத்திக்காகவே ஒழிய களைகளை அழிக்கவேண்டுமென்பது முக்கிய நோக்கல்ல. ஸாதுக்களைப் பரித்ராணம் செய்யவும், துஷ்க்ருத்துக்களை விநாசம் செய்யவும் பகவான் அவதாரம் செய்வதாகக் கீதையில் கூறப்பட்டதற்கு ஸாதுக்களை ரக்ஷிப்பதே முக்யமான உத்தேசமென்றும், அதற்கு உதவியாக அவர்களுடைய சத்ருக்களை ஸம்ஹாரம் செய்வதே ஒழிய அதில் முக்யக் கருத்தில்லை என்றும் அர்த்தம். பயிரிடும் குடியாக வேங்கடேசனை வர்ணிக்கிறபடியால் அவருடைய மஹிஷியாகிய தயாதேவிக்கு நன்றாய் அநுபவத்திற்கு வரக்கூடிய வேளாண்மை விஷயமாக த்ருஷ்டாந்தம் கூறுகிறார். களைகளை வேரோடு பிடுங்குவதுபோல் சத்ருக்களைச் சேஷமன்னியில் வேரறுடறுக்கவேணும். ஆச்ரிதவிரோதிகள் விஷயத்தில் கிளம்பின அடங்காத கோபம் தயைக்குள் ஊழியக்காரனாக அடங்கி ஆச்ரிதரக்ஷணம் என்னும் தயாகார்யத்தைச் செய்கிறது. களையை விரல்நுனியாலும் நகங்களாலும் அநாயாஸமாகப் பிடுங்கி எரிவது போல் தசகண்டன் ஹிரண்யன் முதலிய ப்ரபல சத்ருக்களை அங்குள்யக்ரத்தாலும் நகத்தாலும் கிள்ளி எரியக்கூடிய ஸாமர்த்யமும் இந்த த்ருஷ்டாந்தத்தால் ஸூசிக்கப்படுகிறது. (24)

ஶுவஹிஷ்க்ருத நிக்ரஹாநிஃஹஃ கஜலாகாஹதஙணாநு
ஸ்வதந்த்ராதீநு । ஶுவிகஸ்பநுக்ரஹம் ஃஹாநாம் ஹவதீ
மேவ ஃயெ ஹஜந்தி ஸந்தஃ ॥ ॥ உரு ॥

அபஹிஷ்க்ருதநிக்ரஹாந் விதந்த: கமலாகாந்தகுணாந் ஸ்வதந்த்ரதாதீந் । அவிகல்பமநுக்ரஹம் துஹாநாம் பவதீமேவ தயே பஜந்தி ஸந்த: ॥ (25)

"ஸ்வாதந்த்ரியம் முதலிய லக்ஷ்மீகாந்தனுடைய குணங்கள் தண்டித்தல் என்கிற நிக்ரஹத்தை விலக்காதனவென்று அறிந்து தயையே! வேறுபாடில்லாமல் அநுக்ரஹத்தையே எப்பொழுதும் சொறியும் உன்னையே ஸத்துக்கள் பஜநம் செய்கிறார்கள்."

(தா-ம்) தயையைத் தவிர மற்ற குணங்கள் ஐச்வர்யமுறைமையில் குற்றம் செய்தவர்களைத் தண்டிக்கவேண்டிய அவச்யத்தினால் நிக்ரஹமென்பதை அடியோடு தள்ளமாட்டாது. ஸ்வாதந்த்ரியமென்பது ஐச்வர்யகுணம். ஆஜ்ஞையை மீறுகிறவர்களைத் தண்டனைக்குள்ளாக்காமல் ப்ரபுத்வம் நடக்கமாட்டாது. நிக்ரஹத்துக்கு எதிர்த்தட்டானது அநுக்ரஹம். அன்பும் பொறுமையுமே ஸ்வரூபமான தயாதேவி நிக்ரஹமென்பதை அடியோடு பஹிஷ்காரம் செய்து அநுக்ரஹத்தையே பால்போல் சொறிகிறாள். நிக்ரஹத்தை அடியோடு பஹிஷ்காரம் செய்தால்தான் குற்றமுள்ள நம்மை ஸ்வீகாரம் செய்யக்கூடும். நிக்ரஹத்தை ஸ்வீகாரம் செய்தால் நமக்கு பஹிஷ்காரம்தான் ஏற்படும். ஆகையால் புத்திமான்களான ஸத்துக்கள் நிக்ரஹத்தை அடியோடு தள்ளி அநுக்ரஹத்தையே ஸ்வபாவமாக உடைய உன்னையே ஆச்ரயிக்கிறார்கள். (25)

கமலாநிலயஸ்த்வயா தயாளுः கருணே நிஷ்கருணா
நிரூபணே த்வம் । அத ஏவ ஹி தாவகாச்ரிதாநாம்
துரிதாநாம் பவதி த்வதேவ பீதிः ॥ ॥ உசு ॥

கமலாநிலயஸ்த்வயா தயாளு: கருணே நிஷ்கருணா நிரூபணே த்வம் । அத ஏவ ஹி தாவகாச்ரிதாநாம் துரிதாநாம் பவதி த்வதேவ பீதி: ॥ (26)

"கருணையே? ஸ்ரீநிவாஸன் உன்னால் தயாளுவாகிறான். நிரூபித்துப்பார்த்தால் உனக்குக் கருணையில்லையென்று ஏற்படுகிறது. உனக்கு இரக்கமில்லை என்று உன்னை ஆச்ரயித்தவர்களுடைய பாபங்கள் உன்னிடமிருந்துதான் நடுங்குகின்றன."

(தா-ம்) பாபங்கள் ஸ்ரீநிவாஸனைக்கண்டு பயப்படுகிறதில்லை. அவன் நெஞ்சிலேதான் அவைகள் குடிகொண்டிருக்கும். ஸ்ரீநிவாஸனுடைய தயையைக்கண்டுதான் ஆச்ரிதர்களுடைய பாபங்கள் நடுங்கி ஓடும். தயை அந்தப் பாபங்களை முழுங்கிவிடுவாளென்று அவை பயப்படும். தயையின் ஸம்பந்தத்தால் பெரு

மாள் தயாளுவாகிறார். ஆச்ரிதர்கள் பாபங்கள்விஷயத்தில் தயைக்கு தயை கிடையாது. தயையால் பெருமாள் தயாளுவாகையில் தயை ஸ்வயம் நிர்த்தயையாயிருக்கிறுளென்று வேடிக்கை. ஆச்ரிதர்களை ஆச்ரயித்திருக்கும் பாபங்கள்விஷயத்தில் நிர்த்தயையாயிருந்தால்தான் ஆச்ரிதர்கள் விஷயத்தில் தயை செய்யலாம். இரண்டு விஷயத்திலும் தயையைக்காட்டுவது அஸாத்யம். இரண்டுக்கும் அபயம் அளிக்கமுடியாது. (26)

ஊதிலஙிதஶாஸநெஷுவீக்ஷணம் வ்ருஷஶைலாதிபதிர்வி
ஜ்ரும்பிதோஷ்மா । புநரேவ தயே க்ஷமாநிதாநைர்
பவதீமாத்ரியதே பவத்யதீநை: ॥ ॥ உஎ ॥

அதிலங்கிதசாஸநேஷ்வபீக்ஷ்ணம் வ்ருஷசைலாதிபதிர்விஜ்ரும்பிதோஷ்மா I புநரேவ தயே க்ஷமாநிதாநைர் பவதீமாத்ரியதே பவத்யதீநை: II (27)

"தயையே? அடிக்கடி தன்னுடைய ஆக்ஞையை மீறுகிறவர் விஷயத்தில் அதிகக் கொதிப்புடைய வேங்கடமலையரசன் மறுபடியும் அக்குற்றங்களைப் பொருக்கக் காரணமான உன்னால் ஏற்படும் நிமித்தங்களால் உன்னையே ஆதரிக்கிறுன்."

(தா-ம்) நாம் பலகால் செய்யும் குற்றங்களால் ஈச்வரனுக்குக்கொதிப்புண்டாகிறது. ஆயினும் எப்படியாவது அந்தக் குற்றங்களை மன்னிக்கும்வழி ஏதாவது நாம் செய்வோமா என்று பார்த்துக்கொண்டிருக்கிறுன். நம்குற்றங்களைப் பொருக்கும் உபாயங்களை நாம் ஸ்வயமாகத் தேடமாட்டோம். தயைதான் அந்த உபாயங்களில் நம்மை மூட்டிவிக்கவேணும். குற்றங்களை மன்னித்து தன் உஷ்ணம் தணிந்து திருவுள்ளம் குளிரவேணுமென்று ஆசைப்படும் ஸ்ரீனிவாஸன், நீ தான் அதற்கு உபாயமென்று உன்னையே ஆதரிக்கிறுன். (27)

கருணே துரிதேஷு மாமகேஷு ப்ரதிகாராந்தரது
ர்ஜயேஷு கிந்ந: । கவசாயிதயா த்வயைவ
ஶார்ங்கீ விஜயஸ்தாநமுபாஶ்ரிதோ வ்ருஷாத்ரிம் ॥ உஅ ॥

கருணே துரிதேஷு மாமகேஷு ப்ரதிகாராந்தரதுர்ஜயேஷு கிந்ந: I கவசாயிதயா த்வயைவ சார்ங்கீ விஜயஸ்தாநமுபாச்ரிதோ வ்ருஷாத்ரிம் II (28)

"கருணையே? சரமாரியாக நான் குற்றங்களைப் புங்கானு புங்கமாய் தொடுத்துக்கொண்டிருக்கும்பொழுது ப்ராயச்சித்தம் முதலிய உபாயங்களால் என்னைத் துன்மார்க்கத்திலிருந்து திருப்ப ஸாத்யமில்லாமல் நைராச்யத்தையடைந்து உன்னையே கவசமாகப்பூண்டு கையில் சார்ங்கமென்னும் வில்லை வைத்துக் கொண்டு ஒருக்கால் ஜெயத்தையடையலாமென்று வேங்கடமலையென்னும் ஸ்தானத்தை ஸ்ரீனிவாஸன் அடைந்திருக்கிறான் போலும்."

(தா-ம்) நம்முடைய கணக்கில்லாத கொடிய அபராதங்களென்னும் அம்புகளை நாம் ஈச்வரன்பேரில் ப்ரயோகித்து அவன் நெஞ்சைப் புண்படுத்துகிறோம். அந்த அபராதங்களை ப்ராயச்சித்தங்களால் கழிக்கலாமென்றாலும் ப்ராயச்சித்தங்களைச் செய்ய நாம் இணங்காததால் அந்த வழியாக நம்மை ஜெயித்து தன்வசமாக்கிக்கொள்ள அஸாத்யமென்று தீர்மானித்து தயையையே கவசமாகப்பூண்டால் நாம் செய்யும் குற்றங்கள் தன் நெஞ்சுவரையிலும் உள்ளே போகாதென்று தயாகவசத்தைச் சாத்திக்கொண்டு நம்மை ஜெயிக்க உயர்ந்த புண்யக்ஷேத்ரமாகிய வேங்கடமலையில் வில்லுங்கையுமாகக் காத்துக்கொண்டிருக்கிறான் போலும். இந்தப் புண்ய க்ஷேத்ரத்திற்கு நாம் போனால் க்ஷேத்ர ப்ரபாவத்தால் நமக்கு ஸத்வம் தலையெடுத்து நம் மனஸு பெருமாள் வசப்பட்டு பெருமாளுக்கு ஜெயமுண்டாகுமென்று தாத்பர்யம். நாம் வசப்படுவதுதான் அவருக்கு ஜெயம். (28)

𑌮𑌯𑌿 𑌤𑌿𑌷𑍍𑌠𑌤𑌿 𑌦𑍁𑌷𑍍𑌕𑍃𑌤𑌾𑌂 𑌪𑍍𑌰𑌥𑌮𑍇 𑌮𑌿𑌤𑌦𑍋𑌷𑌾𑌨𑍍𑌤
𑌰𑌾𑌨𑍍𑌵𑌿𑌶𑌿𑌨𑍍𑌵𑌤𑍀 𑌤𑍍𑌵𑌮𑍍 । 𑌅𑌪𑌰𑌾𑌧𑌗𑌣𑍈𑌰𑌪𑍂𑌰𑍍𑌣𑌕𑍁𑌕𑍍𑌷𑌿𑌃
𑌕𑌮𑌲𑌾𑌕𑌾𑌨𑍍𑌤𑌦𑌯𑍇 𑌕𑌥𑌂 𑌭𑌵𑌿𑌤𑍍𑌰𑍀 ॥ ॥ ௨௯ ॥

மயி திஷ்டதி துஷ்க்ருதாம் ப்ரதமே மிததோஷாந்தராந் விசிந்வதீ த்வம்। அபராதகணைரபூர்ணகுக்ஷி: கமலாகாந்ததயே கதம் பவித்ரீ ॥ (29)

"ஸ்ரீனிவாஸனுடைய தயையே? பாபிகளுக்குள் முதல்வனான நான் எதிரே நிற்கையில் என்னைக் கவனியாமல் ஸ்வல்ப தோஷமுடைய மற்றவர்களை நீ தேடினால் வர்க்கம் வர்க்கமாக அநேகவித பாபங்களென்னும் ஆஹாரங்களால் உன் வயிறு நிரம்

(தா-ம்) பாபங்கள் தயைக்கு ஆஹாரம். தயையின் வயிறு பெரிது. கணக்கில்லாத அபராதங்களை அவள் பக்ஷித்துக்கொண்டேயிருந்தால்தான் அவள் வயிறு நிரையும். குற்றங்களைப் பொறுத்துக்கொண்டேயிருந்தால்தான் தயைக்கு நல்ல இருப்புண்டு. குற்றங்களைப்பொறுக்க இடமகப்படாவிட்டால் தயைக்கு ஆஹாரமில்லை. பாபங்கள் நிரம்ப அகப்பட்டால் முழு ஆஹாரம். என்னுடைய பாபங்கள் கணக்கற்றன. அநேக வர்க்கங்கள் உள்ளன. என்னை நீ அங்கிகரித்தால்தான் உனக்குப்பூர்ண ஆஹாரம் கிடைக்கும். என்னிலும் கொடியவரில்லை, என்னையபேக்ஷித்து மற்றவர்கள் ஸ்வல்ப குற்றமுடையவர்களே. அவர்கள் தோஷங்கள் உனக்கு ஸ்வல்ப உணவுதான் கொடுக்கும். பூர்ண ஆஹாரம் கையில் கொடுக்கும் என்னை வேண்டாமென்று தள்ளி ஸ்வல்பதோஷமுடையவர்களைத் தேடுவது சமத்தல்ல. கையில் கிடைக்கும் பூர்ணஆஹாரத்தைத் தள்ளலாகாது. உனக்குஉன்வயிறு நிரம்பாமல்பட்டினியினால் உன்னிருப்புக்கேஎன்ன தீங்குவருமோஎன்று தயையாகிய உன் விஷயத்தில் நான் இரக்கப்படுகிறேனென்கிறார்.

அஹமஸ்ம்யபராதி(த)சக்ரவர்த்தீ கருணே த்வம் ச குணேஷு ஸார்வபௌமீ । விதுஷீ ஸ்திதிமீத்ருசீம் ஸ்வயம் மாம் வ்ருஷசைலேச்வரபாதஸாத்குரு த்வம் ॥

அஹமஸ்ம்யபராதி (த) சக்ரவர்த்தீ கருணே த்வம் ச குணேஷு ஸார்வபௌமீ l விதுஷீ ஸ்திதிமீத்ருசீம் ஸ்வயம் மாம் வ்ருஷசைலேச்வரபாதஸாத்குரு த்வம் ll (30)

“நான் அபராதி சக்ரவர்த்தியாயிருக்கிறேன். கருணையே? நீயும் குணங்களுக்குள் அரசியாயிருக்கிறாய், இவ்விதமான ஸ்திதியை அறிந்திருக்கும் நீ என் ப்ரயத்நமன்னியில் நீயாகவேவேங்கடமலையரசன் திருவடிகளுக்கு என்னை ஆளாக்கிக்கொள்ளவேணும்.”

(தா-ம்) குற்றம் செய்பவர் ஸ்ரீனிவாஸனுக்கு எதிரிகளாவார். குற்றமுடையாரில் என்னிலும் பெரியாரில்லை. அபராதிகளுள் என்னையே சக்ரவர்த்தியென்று சொல்லலாம். குணங்களுக்குள் தயைதான் பட்டமஹிஷி, சக்ரவர்த்தியாகிய என்னை ஜெயித்து உனது நாயகனாகிய வேங்கடேச்வரனுடைய திருவடிகளில் என்னை விழும்படி செய்து அவனுக்கு அடிமையாக்கினால் அன்றோ, அவன் பட்டமஹிஷியாகிய உனக்குப்பெருமை. (39

𑌅𑌶𑌿𑌥𑌿𑌲𑌕𑌰𑌣𑍇𑌽𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌨𑌕𑍍𑌷𑌤𑌶𑍍𑌵𑌾𑌸𑌵𑍃𑌤𑍍𑌤𑍌
𑌵𑌪𑍁𑌷𑌿 𑌗𑌮𑌨𑌯𑍋𑌗𑍍𑌯𑍇 𑌵𑌾𑌸𑌮𑌾𑌸𑌾𑌦𑌯𑍇𑌯𑌮𑍍 ।
𑌵𑍃𑌷𑌗𑌿𑌰𑌿𑌕𑌟𑌕𑍇𑌷𑍁 𑌵𑍍𑌯𑌞𑍍𑌜𑌯𑌤𑍍𑌸𑍁 𑌪𑍍𑌰𑌤𑍀𑌤𑍈𑌃
𑌮𑌧𑍁𑌮𑌥𑌨𑌦𑌯𑍇 𑌤𑍍𑌵𑌾𑌂 𑌵𑌾𑌰𑌿𑌧𑌾𑌰𑌾𑌵𑌿𑌶𑍇𑌷𑍈𑌃 ॥

அசிதிலகரணேZஸ்மிந்நக்ஷதச்வாஸவ்ருத்தௌ
வபுஷி கமநயோக்யே வாஸமாஸாதயேயம் ।
வ்ருஷகிரிகடகேஷு வ்யஞ்ஜயத்ஸு ப்ரதீதை:
மதுமதநதயே த்வாம் வாரிதாராவிசேஷை: ॥ (31)

"மதுஸூதநனுடைய தயையே! இந்த்ரியங்கள் தளர்ச்சியடையாமல் ச்வாஸவ்ருத்தியும் பலக்குறைவடையாமல் தேஹம் நன்றாய் நடக்க வலிமை இருக்கையிலேயே ப்ரஸித்தங்களான உயர்ந்த அருவிகளால் உன் தன்மையை வெளிப்படுத்தும் திருமலைத் தாழ்வரைகளில் எனக்கு வாஸம் கிடைக்கவேண்டும்."

(தா-ம்) தயாதேவி தன்னை வசப்படுத்திப் பின் கட்டுமுறையாய்ப் பெருமாள் திருவடிவாரத்திற்குக் கொண்டுபோவதாக முன் சுலோகத்தில் கூறப்பட்டது. "கிளரொளி யிளமை கெடுவதன் முன்னம் வளரொளி மாயோன் மருவியகோயில் வளரிளம் பொழில்சூழ் மாலிருஞ்சோலை தளர்விலராகில் சார்வது சதிரே" என்னும் திருவாய்மொழியில் இளமைப் பருவத்திலேயே திருமாலிருஞ்சோலை மலைக்குச் செல்லவேண்டுமென்று ஆழ்வார் பாரித்ததுபோல இங்கேயும் வேங்கடமலைக்குப் பால்யத்திலேயே செல்லவேண்டுமென்று மனோரதத்தைக் காட்டுகிறார். அங்கே தளர்விலராகில் என்று கூறியதையே இங்கே கரணங்கள் என்னும் இந்த்ரியங்கள் சிதிலமல்லாமல் இருக்கையிலேயே செல்லவேண்டும் என்கிறார். சிதிலமென்பது தளர்வைச் சொல்லும். மலையேறுவதற்கு ச்வாஸமென்னும் ப்ராணன் த்ருடமாயிருக்க வேணும், அப்படிக்கில்லாவிட்டால் இரண்டடி ஏறுகையிலேயே பெருமூச்சு வாங்கும். 'கிளரொளி'த் திருவாய்மொழியில் 'மறுவில் வண்சுனைசூழ் மாலிருஞ்சோலை' என்று குளிர்ந்த சுத்தமான நீர் நிறைந்த அருவிகளை ஆழ்வார் பாடியதுபோல திருமலையில் உள்ள பாபவிநாசம் ஆகாசகங்கை முதலிய குளிர்ந்த தாரைகளையுடைய புண்யமான அருவிகளைத் திருவேங்கடமுடையானுடைய சீதளமான தயாப்ரவாஹங்கள் என்று வர்ணிக்கிறார். இந்தக் குளிர்ந்த அருவிகள் குளிர்ந்த தயைக்கு அடையாளம் என்று கூறுகிறார். (31)

𑌅𑌵𑌿𑌦𑌿𑌤𑌨𑌿𑌜𑌯𑍋𑌗𑌕𑍍𑌷𑍇𑌮𑌮𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌭𑌿𑌜𑍍𑌞𑌂
𑌗𑍁𑌣𑌲𑌵𑌰𑌹𑌿𑌤𑌂 𑌮𑌾𑌂 𑌗𑍋𑌪𑍍𑌤𑍁𑌕𑌾𑌮𑌾 𑌦𑌯𑍇 𑌤𑍍𑌵𑌮𑍍 ।
𑌪𑌰𑌵𑌤𑌿 𑌚𑌤𑍁𑌰𑍈𑌸𑍍𑌤𑍇 𑌵𑌿𑌭𑍍𑌰𑌮𑍈𑌃 𑌶𑍍𑌰𑍀𑌨𑌿𑌵𑌾𑌸𑍇
𑌬𑌹𑍁𑌮𑌤𑌿𑌮𑌨𑌪𑌾𑌯𑌾𑌂 𑌵𑌿𑌨𑍍𑌦𑌸𑌿 𑌶𑍍𑌰𑍀𑌧𑌰𑌣𑍍𑌯𑍋𑌃 ॥௩௨॥

அவிதிதநிஜயோகக்ஷேமமாத்மாநபிஜ்ஞம்
குணலவரஹிதம் மாம் கோப்துகாமா தயே த்வம் ।
பரவதி சதுரைஸ்தே விப்ரமை: ஸ்ரீநிவாஸே
பஹுமதிமநபாயாம் விந்தஸி ஸ்ரீதரண்யோ: ॥ (32)

"தயையே! தன் யோகக்ஷேமங்களை அறியாதவனும், தன்னையே அறியாதவனும், எள்ளத்தனை குணமும் இல்லாதவனுமான என்னைக் காப்பாற்ற விரும்பி ஸ்ரீநிவாஸனானவன் சாதுர்யமுடைய உன் விலாஸசேஷ்டைகளால் உனக்கு வசப்படும்பொழுது, நீ லக்ஷ்மிப் பிராட்டி பூமிப்பிராட்டி இவர்களுடைய நீங்காத கௌரவத்தைப் பெறுகிறாய்".

(தா-ம்) தன்னைத் தயாதேவி கைதியாக்கி பலாத்காரமாகத் திருவேங்கடமுடையானுடைய ந்யாயஸபைக்குக்கொண்டுபோய்ச் சேர்க்கிறாள். அங்கே ஒரு பெரிய ஸபைகூடி கைதி தண்டிக்கத் தகுந்தவனா? அல்லது விடுதலைசெய்து மோக்ஷத்திற்கு அர்ஹனா? என்று விசாரணை நடக்கப்போகிறது. ஒழுங்காக பக்ஷபாதமின்றியில் விசாரணை நடந்து சட்டப் பிரகாரம் தீர்மானம் ஏற்படுவதானால் இந்தக் கைதிக்கு விமோசனத்திற்கு இடமில்லை. தயையின் புருஷகாரமெல்லாம் வீணாய்விடும். ப்ரபுவாகிய ஸ்ரீநிவாஸனைத் தயாதேவி தன் போகமயக்குகளினால் மயக்கினதுபோலத் தானிட்டது சட்டமாயிருக்கும்படி வசப்படுத்திக் கொள்ளுகிறாள். தயாதேவிக்குப் பெருமாள் வசப்படுவதைப் பார்த்து ஸ்ரீதேவியும் பூதேவியும் தங்கள் குற்றம் செய்த குழந்தையைக் காப்பாற்ற முயற்சிக்கப்படுவதைக்கொண்டு மிகவும் ஸந்தோஷம் அடைந்து, தயாதேவியினிடத்தில் நீங்காத பஹுமானத்தை வைக்கிறார்கள். விசாரணைக்கு வந்திருக்கும் குற்றவாளிக்குக் குணலேசமும் கிடையாது. துளியேனும் குணமிருந்தால் அந்தக் குணத்தைக் கொண்டு ரக்ஷித்ததாகுமேயொழிய கேவலம் தயையின் வலிமையினால் ரக்ஷித்ததாகாது. (32)

𑌫𑌲𑌵𑌿𑌤𑌰𑌣𑌦𑌕𑍍𑌷𑌂 𑌪𑌕𑍍𑌷𑌪𑌾𑌤𑌾𑌨𑌭𑌿𑌜𑍍𑌞𑌂
𑌪𑍍𑌰𑌗𑍁𑌣𑌮𑌨𑍁𑌵𑌿𑌧𑍇𑌯𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯 𑌪𑌦𑍍𑌮𑌾𑌸𑌹𑌾𑌯𑌮𑍍 ।
𑌮𑌹𑌤𑌿 𑌗𑍁𑌣𑌸𑌮𑌾𑌜𑍇 𑌮𑌾𑌨𑌪𑍂𑌰𑍍𑌵𑌂 𑌦𑌯𑍇 𑌤𑍍𑌵𑌾𑌂
𑌪𑍍𑌰𑌤𑌿𑌵𑌦𑌸𑌿 𑌯𑌥𑌾𑌰𑍍𑌹𑌂 𑌪𑌾𑌪𑍍𑌮𑌨𑌾𑌂 𑌮𑌾𑌮𑌕𑌾𑌨𑌾𑌮𑍍 ॥

பலவிதரணதக்ஷம் பக்ஷபாதாநபிஜ்ஞம்
ப்ரகுணமநுவிதேயம் ப்ராப்ய பத்மாஸஹாயம் I
மஹதி குணஸமாஜே மாநபூர்வம் தயே த்வாம்
ப்ரதிவதஸி யதார்ஹம் பாப்மநாம் மாமகாநாம் II (33)

"தயையே! செய்த வினைக்குத் தக்கபடி பலனை அளிப்பதில் கைதேர்ந்தவனும் பக்ஷபாதம் என்பதையே அறியாதவனும் உயர்ந்த குணங்களுடையவனுமான ஸ்ரீநிவாஸனென்னும் ந்யாயாதிபதியை அணுகி அநேக குணங்கள் வீற்றிருக்கும் பெரிய ஸபையில் என்னுடைய பாபங்களுக்கெல்லாம் ஸரியான ப்ரமாணங்களோடு தக்கபடி எதிர்வாதம் செய்து உன் கக்ஷியை ஸாதிக்கிறாய்".

(தா-ம்) பெருமாள் ஸபையில் அத்யக்ஷராய் எழுந்தருளி இருக்கிறார். பிராட்டியும் அவருடனிருக்கிறாள். பிராட்டி பக்கத்தில் இருப்பது தயாதேவிக்குப் பரமஅநுகூலம். ஸர்வஜ்ஞத்வம், ஸர்வசக்தித்வம், ஈச்வரத்வம், ஸமத்வம், கர்மபலப்ரதத்துவம் முதலிய அநேக குணங்கள் ஸப்யர்களாக நிறைந்திருக்கும் மஹாஸபை. அந்தக் குணங்களெல்லாம் இந்தக் குற்றவாளியின் குற்றங்களையெல்லாம் முதலித்துக் காட்டி அதற்குச் சிக்ஷிவிதிக்கும் சாஸ்த்ரவசனங்களை உதாஹரித்துச் சட்டப்படிக்குக் கடுந்தண்டனை விதிக்கவேண்டும் என்று வாதாடுகிறார்கள். அந்த வாதங்களுக்கு எதிர்வாதம் செய்வது மிகவும் ஸங்கடமான கார்யம். அந்தக் கார்யத்தைத் தயாதேவி மிகவும் சிரமப்பட்டுத் தன் எதிர் கக்ஷியால் ஸாதிக்கிறாள். தயாதேவி செய்யும் விசித்ரமான எதிர் கக்ஷி அடுத்த சுலோகத்தில் விவரிக்கப்படுகிறது. குணம் என்னும் பதம் வடமொழியில் ஆண்பால். அநேக ஆண்பிள்ளைகள் வீற்றிருந்து வழக்குச் செய்யும் மஹாஸபையில் எனக்காக ராஜமஹிஷியான தயாதேவி வந்து என்னைக் காப்பாற்றுவதற்கு விசித்ரமாக எதிர் வாதம் செய்கிறாளே என்று ஆச்சர்யம். குழந்தையைக் காப்பாற்ற நாணத்தையும் துறந்து ஸபைநடுவே வந்து பேசுகிறாள்.

(33

𑌅𑌨𑍁𑌭𑌵𑌿𑌤𑍁𑌮𑌘𑍌𑌘𑌂 𑌨𑌾𑌲𑌮𑌾𑌗𑌾𑌮𑌿𑌕𑌾𑌲𑌃
𑌪𑍍𑌰𑌶𑌮𑌯𑌿𑌤𑍁𑌮𑌶𑍇𑌷𑌂 𑌨𑌿𑌷𑍍𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌭𑌿𑌰𑍍𑌨 𑌶𑌕𑍍𑌯𑌃 ।
𑌸𑍍𑌵𑌯𑌮𑌿𑌤𑌿 𑌹𑌿 𑌦𑌯𑍇 𑌤𑍍𑌵𑌂 𑌸𑍍𑌵𑍀𑌕𑍃𑌤𑌶𑍍𑌰𑍀𑌨𑌿𑌵𑌾𑌸𑌾
𑌶𑌿𑌥𑌿𑌲𑌿𑌤𑌭𑌵𑌭𑍀𑌤𑌿𑌃 𑌶𑍍𑌰𑍇𑌯𑌸𑍇 𑌜𑌾𑌯𑌸𑍇 𑌨𑌃 ॥ ௩௪ ॥

அநுபவிதுமகௌகம் நாலமாகாமி கால:
ப்ரசமயிதுமசேஷம் நிஷ்க்ரியாபிர் ந சக்யம் ।
ஸ்வயமிதி ஹி தயே த்வம் ஸ்வீக்ருதஸ்ரீநிவாஸா
சிதிலிதபவபீதி: ச்ரேயஸே ஜாயஸே ந: ॥ (34)

"வருங்காலமெல்லாம் செய்த கணக்கிலாப் பாபங்களை அநுபவிக்கப் போதாது. எல்லாப் பாபங்களையும் ப்ராயச்சித்தங்களால் கழிப்பது ஸாத்யமாகாது. தயையே! இந்த ப்ரகாரமாய் நீயாகவே ஸ்ரீநிவாஸனை வசப்படுத்திக்கொண்டு எங்கள் ஸம்ஸார பயத்தைத் தளர்த்தி எங்கள் க்ஷேமத்திற்காக நீ ஸ்வயமாகப் பிறக்கிறாய்".

(தா-ம்) தயாதேவி சொல்லும் எதிர் கக்ஷியை எடுத்துக் காட்டுகிறார். அரைக்ஷணப்பொழுதில் ஒரு மனுஷ்யன் செய்யும் பாபம் அநேகாயிரம் ப்ரஹ்மகல்பங்கள் அநுபவித்தாலும் தீராது. இந்தக் குற்றவாளியின் எண்ணிலாக் கொடும் பாபங்களுக்குத் தகுந்தபடி பலன் கொடுத்து அநுபவிக்கும்படி செய்ய வருங்கால முழுவதும் போதாதே; ஸர்வசக்தனாகிய பெருமாளுக்கும் இவன் குற்றத்திற்குத் தக்கபடி சிக்ஷை விதித்து அநுபவிக்கச் செய்யப் பின்வரும் அநந்த காலம் முழுவதும் போதாதே; தக்கபடி தண்டனை விதிப்பது அஸாத்யமானபடியால் குறைந்த தண்டனைதானே விதிக்கவேணும். போதாத தண்டனையை விதிப்பதை விட தண்டனையை விதிக்காமல் மன்னிப்பது மேன்மை. பாபங்களை அநுபவித்துத்தான் தொலைக்கவேண்டும். அல்லது அந்தந்த பாபத்திற்குச் சாஸ்த்ரங்களால் விதிக்கப்பட்ட ப்ராயச்சித்த கர்மங்களைச் செய்து கழிக்கவேண்டும். அநுபவித்துத் தொலைக்கக் காலம் போகவே போதாது. ப்ராயச்சித்தங்கள் செய்வது ஸாத்யமன்று. ப்ராயச்சித்தம் செய்வதில் அநேகக் குறைவுகள் ஏற்படுவது ஸம்பாவிதம். அந்தக் குறைவுகளைத் தீர்க்க வேறுப்ராயச்சித்தம் செய்யவேணும். இப்படி ப்ராயச்சித்த பரம்பரைகள் ஓயாமல் மேல் மேல் வளரும். செய்த பாபங்க

ளைக் கழிக்க இந்த இரண்டு வழிகளும் கூடாதபடியால் மன்னிப்பினால்தான் தொலைக்கவேணும் என்று தயாதேவியின் எதிர்வாதம். தயாதேவிக்கு இந்தக் குற்றவாளி வக்காலத்துக் கொடுக்கவில்லை. எதிர்வாதம் செய்யும்படி கோரவும் இல்லை. தானாகவந்து வாதாடுகிறாள். குற்றவாளிகளான ப்ரஜைகளின் ரக்ஷணத்திற்காகத் தானாக வந்து பிறக்கிறாள். எங்கள் ச்ரேயஸ்ஸுக்காகத் தயாதேவியான நீ பிறக்கிறாய். பெருமாள் அவதாரமென்னும் பிறப்பினால் தனக்கு ச்ரேயஸ்ஸை அடைகிறான் என்று வேதத்தின் மொழி. தயாதேவி நம்முடைய ச்ரேயஸ்ஸின் பொருட்டுப் பிறக்கிறாள் என்பது ஆச்சர்யம். (34)

𑌅𑌵𑌤𑌰𑌣𑌵𑌿𑌶𑍇𑌷𑍈𑌰𑌾𑌤𑍍𑌮𑌲𑍀𑌲𑌾𑌪𑌦𑍇𑌶𑍈

𑌰𑌵𑌮𑌤𑌿𑌮𑌨𑍁𑌕𑌮𑍍𑌪𑍇 𑌮𑌨𑍍𑌦𑌚𑌿𑌤𑍍𑌤𑍇𑌷𑍁 𑌵𑌿𑌨𑍍𑌦𑌨𑍍 ।

𑌵𑍃𑌷𑌶𑌿𑌖𑌰𑌿𑌨𑌾𑌥𑌸𑍍𑌤𑍍𑌵𑌨𑍍𑌨𑌿𑌦𑍇𑌶𑍇𑌨 𑌨𑍂𑌨𑌂

𑌭𑌜𑌤𑌿 𑌶𑌰𑌣𑌭𑌾𑌜𑌾𑌂 𑌭𑌾𑌵𑌿𑌨𑍋 𑌜𑌨𑍍𑌮𑌭𑍇𑌦𑌾𑌨𑍍 ॥௩௫॥

அவதரணவிசேஷை ராத்மலீலாபதேசை
ரவமதிமநுகம்பே மந்தசித்தேஷு விந்தந் ।
வ்ருஷபசிகரிநாத ஸ்த்வந்நிதேசேந நூநம்
பஜதி சரணபாஜாம் பாவிநோ ஜந்மபேதாந் ॥ (34)

"தயையே! உன்னுத்தரவிற்குட்பட்டு ஸ்ரீநிவாஸன் லீலை என்னும் வியாஜத்தை வைத்துக்கொண்டு பூமியில் அவதாரங்கள் செய்து மூடர்களால் அவமதிக்கப்பட்டுத் தன் திருவடிகளை ஆச்ரயிப்பவர்கள் அடையவேண்டிய பின் ஜந்மங்களையெல்லாம் அடைகிறான் என்பது நிச்சயம்".

(தா-ம்) தயாதேவி அழகாக எதிர்வாதம் செய்து குற்றங்களை எடுத்துக் காட்டும் வாதிகளின் கக்ஷிகளைத் தள்ளும் வழியை முன் ச்லோகத்தில் காட்டினார். தயாதேவியின் கக்ஷி ஜயித்து கைதிக்கு மோக்ஷம் என்னும் விடுதலை தீர்மானிக்கப்படுகிறது. கைதி செய்த குற்றங்கள் போகும் வழியென்ன? செய்த குற்றங்களுக்காக அநுபவிக்கவேண்டிய பலன் அநேகஜந்மங்கள். கைதியின் குற்றங்களுக்கு ந்யாயமாய் ஏற்படவேண்டிய தண்டனை அவன் பல ஜந்மங்களை எடுத்து செய்த வினைகளை அநுபவித்துக் கழிக்கவேணும். அவனெடுக்கவேண்டிய ஜந்மங்களைத் தயாதேவியின் பேச்சுக்கு இணங்கி ஸ்ரீநிவாஸன் தானே ஆச்ரிதனுை

கைதிக்குப் பதிலாக எடுக்கிறானென்று கூறுகிறார். நாம் பிறக்க வேண்டிய ஜந்மங்களை நீக்குவதற்காக ஸ்ரீநிவாஸன்தானே அவதாரங்களால் பிறக்கிறான். "பகவானுடைய அவதாரரஹஸ்யமஹிமையைத் தெரிந்துகொண்டவர்கள் இந்த தேஹம் முடிந்தபின் மறுபடியும் ஜந்மம் அடைகிறதில்லை. அவர்கள் உடனே பகவானை அடைகிறார்கள்" என்பது கீதையில் பகவானுடைய வார்த்தை. அதற்கு "நானும் பிறந்து நீயும் பிறக்கவேண்டுமோ' என்று ஈட்டில் கருத்துக் கூறப்பட்டது. சரணமடைந்தவனுடைய குற்றங்களுக்காக அவன் பிறக்கவேண்டிய பிறப்புகளுக்குப் பதிலாக அவன் சுமையை ஏற்றுக்கொள்ளும் ஈசுவரன்தானே அந்தப் பிறப்புக்களின் பாரத்தை ஏற்றுக்கொண்டு அவதாரங்கள் செய்கிறான் என்று வேடிக்கையாய்க் கூறுகிறார். லீலையாக அதாவது விளையாட்டுக்காக அவதாரம் செய்வதாகப் பேர் மட்டுமே ஒழிய வாஸ்தவத்தில் தயாதேவியின் உத்தரவிற்கு வசப்பட்டுக் கேவலம் கருணையினால் அவதாரங்கள் செய்யப்படுகிறதென்று கூறுகிறார். மநுஷ்யதேஹத்தைப் பரிக்ரஹித்து நான் அவதரிப்பதை உத்தமமான ஸௌலப்யகுணம் என்று அறிந்துகொள்ளாமல் அறிவுகேடர்கள் என்னை அவமதிக்கிறார்கள் என்று கீதையில் பகவானுடைய வார்த்தையை அநுஸரித்து, மந்தமதிகள் அவமதிப்பையும் பொறுத்துக்கொண்டு பகவான் கருணாவசராய்ப் பிறக்கிறார் என்கிறார். தயாதேவி பிறக்கும்பொழுது தன் ஸபத்நிகளாகிய ஸ்ரீபூமிதேவிகளுடைய நித்யமான பஹுமதியை அடைகிறாள் என்று முன்பு கூறினார். அவள் பேச்சுக்குக் கட்டுப்பட்டுப் பூமியில் அவதாரம் செய்யும் பெருமாள் மூடர்களுடைய அவமதியை அடைகிறார் என்று கீதாவசனத்தைக்கொண்டு வேடிக்கையாய்க் காட்டுகிறார். (35)

பரஹிதமநுகம்பே பாவயந்த்யாம் பவத்யாம்
ஸ்திரமநுபதி ஹார்தம் ஶ்ரீநிவாஸோ ததாந: ।
லலிதருசிஷு லக்ஷ்மீபூமிநீலாஸு நூநம்
ப்ரதயதி பஹுமாநம் த்வத்ப்ரதிச்சந்தபுத்த்யா ॥ ௩௬ ॥

பரஹிதமநுகம்பே பாவயந்த்யாம் பவத்யாம்
ஸ்திரமநுபதி ஹார்தம் ஸ்ரீநிவாஸோ ததாந: ।
லலிதருசிஷு லக்ஷ்மீ பூமி நீளாஸு நூநம்
ப்ரதயதி பஹுமாநம் த்வத்ப்ரதிச்சந்தபுத்யா ॥ (36)

"தயையே! நீ பிறருக்கு ஹிதத்தை ஆலோசித்துக்கொண்டிருக்கும் உன்னிடத்தில் ஸ்திரமும் நிர்வ்யாஜமுமான ஸ்நேஹத்தை வைக்கும் ஸ்ரீநிவாஸன் மனதை அபஹரிக்கும் காந்தியையுடைய லக்ஷ்மீபூமி நீளாதேவிகள் விஷயத்தில் அவர்கள் உன்னுடைய ப்ரதிமைகள் என்கிற பாவனையினால் பஹுமானத்தை விஸ்தாரம் செய்கிறானென்பது திண்ணம்".

(தா-ம்) முன் ச்லோகத்தில் தயாதேவியின் பேச்சுக்கிணங்கி ஸ்ரீநிவாஸன் அவதாரம் செய்வதால் மூட ஜனங்களால் இளப்பத்தை அடைகிறானென்று கூறினார். இதனால் தயாதேவியினிடம் பெருமாளுக்கு சலிப்பு வருகிறதோ என்று சங்கைவர ஒருகாலும் அவளிடத்தில் சலிப்பே கிடையாது. சலிப்பில்லை என்பது மட்டுமல்ல, அவளிடத்தில் எல்லையில்லாத கௌரவத்தையே செய்கிறார். தனக்கு உயிர்க்குயிரான லக்ஷ்மீபூமி நீளாதேவிகளிடத்திலும் அவர்கள் தயையின் ப்ரதிபிம்பங்கள் என்கிற புத்தியினால் மிக்க கௌரவம் செய்கிறார், என்று கூறுகிறார். தயையின் உருவங்கள் என்று நினைப்பினால் அந்த தேவிமார்களிடத்தில் கௌரவம் ஓங்குகிறதென்றால் தயாதேவியினிடத்தில் கௌரவத்திற்கு எல்லையில்லையென்பதில் என்ன ஸந்தேஹம். தேவிமார்களும் தயையின் உருவங்களே, பிம்பமும் ப்ரதி பிம்பமும் எப்படி வேறல்லவோ அப்படியே தயாதேவியும் அந்த தேவிமாரும் வேறல்ல. (36)

[Grantha script verse]

வ்ருஷகிரிஸவிதேஷு வ்யாஜதோ வாஸபாஜாம்
துரிதகலுஷிதாநாம் தூயமாநா தயே த்வம் ।
கரணவிலயகாலே காந்திசீக ஸ்ம்ருதீநாம்
ஸ்மரயஸி பஹுலீலம் மாதவம் ஸாவதாநா ॥

தயையே ? திருமலைக் கருகாமையில் ஏதோ ஒரு காரணத்தை முன்னிட்டு வாஸம் செய்யும் பாவிகளான ஜனங்களிடத்தில் நீ இறக்கங்கொண்டு அவர்கள் இந்திரியங்கள் ஓய்ந்து தேஹம் முடிவடையும் காலத்தில் அவர்கள் நினைப்புகளெல்லாம் பல திக்

குகளில் ஓடிக்கொண்டிருக்கும்போது அனேக விதமான விளை யாட்டுகளையுடைய ஸ்ரீநிவாஸனை நீ கவனமாய் நினைக்கும்படி செய்கிறாய்.

(தா-ம்) நாராயணாலயமாகிய க்ஷேத்ரங்களில் வாசம் செய்து அங்கேயே முடிவடைகிறவர்களுக்கு க்ஷேத்ரப்ரபாவத்தால் ஈச்வர தம்பதிகள் விஷயமாய் அந்திமஸ்மரணபாக்யம் கிடைக்கும். திருமலைக்கு சமீபத்திலுள்ள ப்ரதேசங்களுக்கும் இந்த மஹிமை உண்டு என்கிறார். க்ஷேத்ரவாஸம் செய்யவேண்டுமென்கிற கருத்தைமட்டும் கொண்டு இந்த க்ஷேத்ரத்தின் அருகாமையில் வஸிப்பவர்களுக்குத்தான் இந்த பாக்யம் என்பதில்லை. ஏதேனும் ஒரு காரணத்தையிட்டு வாஸம் செய்தால் போதுமென்கிறார். ஸ்ரீநிவாஸன் லக்ஷ்மியோடு க்ரீடாரஸங்களில் முழுகியிருப்பன். அவனுக்கு இந்த விஷயத்தில் கவனம் இராவிட்டாலும் தயாதேவி இந்த ஆபத்காலத்தில் அந்திமஸ்மரணத்தைக் கொடுத்துக் கவனத்துடன் காப்பாற்றுகிறாளென்கிறார். (37)

𑌦𑌿𑌶𑌿 𑌦𑌿𑌶𑌿 𑌗𑌤𑌿𑌵𑌿𑌦𑍍𑌭𑌿𑌰𑍍𑌦𑍇𑌶𑌿𑌕𑍈𑌰𑍍𑌨𑍀𑌯𑌮𑌾𑌨𑌾
𑌸𑍍𑌥𑌿𑌰𑌸(த)𑌰𑌮𑌨𑍁𑌕𑌮𑍍𑌪𑍇 𑌸𑍍𑌤𑍍𑌯𑌾𑌨𑌲𑌗𑍍𑌨𑌾 𑌗𑍁𑌣𑍈𑌸𑍍𑌤𑍍𑌵𑌮𑍍 ।
𑌪𑌰𑌿𑌗𑌤𑌵𑍃𑌷𑌶𑍈𑌲𑌂 𑌪𑌾𑌰𑌮𑌾𑌰𑍋𑌪𑌯𑌨𑍍𑌤𑍀
𑌭𑌵𑌜𑌲𑌧𑌿𑌗𑌤𑌾𑌨𑌾𑌂 𑌪𑍋𑌤𑌪𑌾𑌤𑍍𑌰𑍀 𑌭𑌵𑌿𑌤𑍍𑌰𑍀 ।

திசி திசி கதிவித்பிர் தேசிகைர் நீயமாநா
ஸ்திரச(த)ரமநுகம்பே ஸ்த்யாநலக்நா குணைஸ்த்வம் |
பரிகதவ்ருஷசைலம் பாரமாரோபயந்தீ
பவஜலதிகதாநாம் போதபாத்ரீ பவித்ரீ || (38)

“தயையே! அந்தந்த திக்குகளில் வழி தெரிந்த மாலுமிகள் என்னும் தேசிகர்களால் ஓட்டப்பட்டுப் பகவானுடைய ஜ்ஞாநம் சக்தி முதலிய குணங்களென்னும் கயிறுகளால் கெட்டியாய்ப் புணைக்கப்பட்ட கப்பலாகிற நீ திருமலை என்கிற மலைத்தடம் என்னும் கரையில் ஸம்ஸாரஸமுத்ரத்தில் அகப்பட்டுக்கொண்ட ஜனங்களைக் கரையேற்றுவிக்கிறாய்”.

(தா-ம்) எந்தத் திக்கிலே போனாலும் இடத்தையும் வழியையும் திக்கையும் காட்டும் கருவிகளைக்கொண்டு வழிகளைக்கண்டு பிடிக்கத் தெரிந்தவர்கள்தான் கப்பலை நடத்தவல்ல மாலுமிகளா

வார். ஸம்ஸாரமென்னும் ஸமுத்ரத்தில் அகப்பட்டுக்கொண்டு கரையேற வழிதெரியாமல் தத்தளிப்பவர்களுக்கு வழிகாட்டிக் கரைசேர்ப்பவர் தேசிகர்கள். கப்பல் சங்கிலிகளாலும கயிறுக ளாலும் மிகவும் த்ருடமாய்ப் புணைக்கப்பட்டிருக்கும். தயாதேவி என்னும் கப்பல் பகவானுடைய அநேக குணங்களால் கெட்டி யாய்ச் சேர்த்துக் கட்டப்பட்டிருக்கும். ஆசார்யர்கள் தயாதேவி என்னும் கப்பலில் தங்களை ஆச்ரயிக்குமவர்களை ஏறச்செய்து கரைசேர்ப்பிவிப்பார்கள். சேரவேண்டிய கரையாகிய மேட்டு நிலம் திருமலையாகும். ஸம்ஸார ஸமுத்ரத்திற்குத் திருமலையே கரையாகும். ஆசார்யர்களால் வழிகாட்டிக்கொண்டு வரப்படும் தயை என்னும் கப்பல் ஆச்ரிதர்களைத் திருமலை யென்னும் கரை யில் சேர்ப்பிக்கும். முகுந்த மாலையில் ஸம்ஸார ஸமுத்ரத்தில் தடுமாறுகிறவர்களுக்கு விஷ்ணுவென்னும் போதமே சரணமா கும் என்று கூறியதை அனுஸரித்து அங்குள்ள பதங்களையே ப்ரயோகித்து அவர்களுக்கு தயை போதமாகும் என்கிறார். போதமென்பது ஓடம். (38)

[illegible]

[illegible]

[illegible]

[illegible] ॥ ௩௯॥

பரிமித பலஸங்காத் ப்ராணிந: கிம்பசாநா:

நிகமவிபணிமத்யே நித்யமுக்தாநு ஷக்தம் ।

ப்ரஸதநமநுகம்பே ப்ராப்தவத்யா பவத்யா

வ்ருஷகிரிஹரிநீலம் வ்யஞ்ஜிதம் நிர்விசந்தி ॥ (39)

"தயையே ? அல்பர்களான ப்ராணிகள் ஸ்வல்ப ப்ரயோ ஜனங்களில் ஆசையால் வேதங்கள் என்னும் கடைத்தெருவு நடு வில் ப்ரவேசிக்கையில் அங்கே அவர்களிடத்தில் அனுக்ரஹ புத் தியுடைய உன்னாலே காட்டப்படும் நித்யமுக்தரோடு கூடிய ஸ்ரீநிவாஸனென்னும் இந்திர நீலமணிக்கல்லை அனுபவிக்கிறார் கள்".

(தா-ம்) அவரவர்களுக்கு வேண்டிய சரக்குகளெல்லாம் வேதங்களென்னும் கடைத்தெருவில் அகப்படும். அங்கே வேண்டியவர்கள் தங்களுக்கு இஷ்டமான ப்ரயோஜனங்களைக் கொள்ளலாம். சில்லரைப் பிரயோஜனங்களில் ஆசைப்படும் அல்ப ஜனங்களும் தங்களுக்கு வேண்டிய ப்ரயோஜனங்களைக்கொள்ள அந்தக் கடைத்தெருவில் புகுகிறார்கள். வேதமென்னும் கடைத்தெருவுக்கு வந்தும் அங்கே உள்ள ஸர்வோத்தமமான மோக்ஷமென்னும் பகவத் பிராப்திப் பிரயோஜனத்தை இவர்கள் விரும்பிக்கொள்ளாமலே இருக்கிறார்களேயென்று தயா தேவியானவள் இவர்களிடத்தில் இறங்கி இவர்கள் மனதை உயர்ந்த மோக்ஷ மார்க்கத்தில் திருப்புவதற்காக வியாபாரிகள் முத்துக்களோடு கலந்து கோர்த்த உயர்ந்த கல்லுகளைக் காட்டுவது போல முக்தர்களோடு கலந்த நீலமணியான பெருமாளைக் காட்டி அவர்கள் மனஸை அவரிடம் ஈடுபடும்படி செய்கிறாள். (39)

த்வயி பஹுமதிஹீந: ஸ்ரீநிவாஸாநுகம்பே
ஜகதி கதிமிஹாந்யாம் தேவி ஸம்மந்யதே ய: ।
ஸ கலு விபுதஸிந்தௌ ஸந்நிகர்ஷே வஹந்த்யாம்
சமயதி ம்ருகத்ருஷ்ணாவீசிகாபி: பிபாஸாம் ॥ ௪௦ ॥

த்வயி பஹுமதிஹீந: ஸ்ரீநிவாஸாநுகம்பே
ஜகதி கதிமிஹாந்யாம் தேவி ஸம்மந்யதேய: ।
ஸ கலு விபுதஸிந்தௌ ஸம்நிகர்ஷே வஹந்த்யாம்
சமயதி ம்ருகத்ருஷ்ணு வீசிகாபி: பிபாஸாம். ॥ (40)

(ப-ரை) தேவி ஸ்ரீநிவாஸாநுகம்பே - ஸ்ரீநிவாஸனுடைய தயையாகிய தேவியே! ய: - எவன், த்வயி - உன்னிடம், பஹுமதிஹீந:-கௌரவபுத்தியில்லாமல், இஹ ஜகதி- இந்த பூமண்டலத்தில், அந்யாம் கதிம் - வேறு உபாயத்தை, ஸம்மந்யதே - நல்லதென்று கைப்பற்றுகிறானோ, ஸ: - அவன், ஸந்நிகர்ஷே- ஸமீபத்தில், விபுதஸிந்தௌ- தேவநதியான கங்கை, வஹந்த்யாம் - ஓடிக்கொண்டிருக்கையில், ம்ருகத்ருஷ்ணாவீசிகாபி: - கானலின் அலைகளால், பிபாஸாம் - தாஹத்தை, சமயதி கலு - தீர்த்துக்கொள்ளுபவனல்லவா!

"ஸ்ரீநிவாஸனுடைய தயையாகிய தேவியே! இவ்வுலகில் எவன் உன்னிடம் வெகுமானமில்லாமல் வேறுகதியைத் தேடுகிறா

ஞே அவன் தேவ நதியாகிய கங்காநதி, அருகில் ப்ரவஹித்துக் கொண்டிருக்கையில் கானலில் தோன்றும் ஜலத்தினுல் தாஹத்தைத் தீர்க்க விரும்புகிறவனைப்போலாவான்".

(தா-ம்) கோடைகாலத்தில் மத்யானவேளையில் தாஹத்தால் பீடிக்கப்படும் மான்கள் மணலில் வெயிலில் தூரத்தில் இருந்து பார்க்கையில் ஜலம் ஓடுவதுபோல் இருப்பதைக் கண்டு ப்ரமித்து, அந்த ஜலத்தைக் குடிக்கலாமென்று அதனருகே ஓடும். வெயிலில் ஓடுவதினுல் தாஹம் அதிகப்படுமேயொழிய அங்கே ஜலமில்லாததினுல், தாஹம் தீராது. ஸ்ரீநிவாஸனுடைய தயை நம்முடைய பாபங்களை எல்லாம் போக்கவல்ல குளிர்ந்த ப்ரவாஹம். அந்த தயாப்ரவாஹம் நம் அருகாமையில் ஜில்லென்று ஓடிக்கொண்டே இருக்கிறது. நாம் நினைத்தமாத்திரத்தாலேயே நாம் அதில் அவகாஹித்துநம்முடைய அநாதிதாபத்ரயங்களைச் சமநம் செய்து கொள்ளலாம். நாம் அபேக்ஷித்தவளவிலே தயாதேவி நம்மைக் காக்க ஸஜ்ஜமாயிருக்கிருள். அவளை விட்டுவிட்டு வேறு கதியைத் தேடுவது அருகிலுள்ள கங்காப்ரவாஹத்தை விட்டுவிட்டுக் கானல் நீரைத் தேடி ஓடுவதுபோலாகும். சாகுந்தளநாடகத்தில் ஆரு வது அங்கத்தில் சகுந்தளையின் விரஹகாலத்தில் பொழுதுபோக் குக்காகவும், விரஹவ்யஸனத்தின் ஆருதலுக்காகவும் அவளைப் போல ஒரு சித்திரமெழுதி அந்தப் படத்தைப் பார்த்துத்தான் அதைப் புகழ்வதைப் பற்றி ராஜா தன்னையே நகைத்துப் பரிஹாஸத்துடன் ஒரு ச்லோகம் சொல்லுகிருர். "என்னுடைய ப்ரியையாகிய சகுந்தளை நேரில் ஸாக்ஷாத்தாக என்னிடம் வந்தபொழுது அவளை வேண்டாமென்று முன்பு திரஸ்கரித்துவிட்டுச் சித்திரத்தில் எழுதப்பட்டிருக்கும் இவளை நான் பஹுமதிசெய்வது என் போலாகுமென்ருல், செல்லும் மார்க்கத்தில் யதேஷ்டமான குளிர்ந்த ஜலமோடும் நதியில் தாஹத்தைத் தீர்த்துக்கொள்ளாமல், அதைத் தாண்டிய பிறகு ம்ருகத்ருஷ்ணிகை என்னும் கானலில் நீரோடுவதாக ப்ரமித்து அதை ஆசையுடன் தேடுபவன்போலாகிகிறேன்" என்பது அவர் வார்த்தை. அந்த ச்லோகத்திலுள்ள பதங்களையும் பாவங்களையும் வைத்து இந்த சுலோகம் அமைக்கப் பட்டிருக்கிறது.

(40)

ஶ்ருதஜநம் வ்யாதிம் ய ந ஓ ந வாநா நாயிராஜ்யாஹிகம் வா
காமெ ஓ்ரஷ்டா ஊவவஸெதாவ வ்யகிஷுதராணி ।

பத்மாகாந்தம் ப்ரணிஹிதவதீம் பாலநேநந்யஸாத்யே
ஸாராபிஜ்ஞா ஜகதி க்ருதிந: ஸம்ச்ரயந்தே தயே த்வாம் ||

ஆஜ்ஞாம் க்யாதிம் தநமநுசராநாதிராஜ்யாதிகம் வா
காலே த்ருஷ்ட்வா கமலவஸதேரப்யகிஞ்சித் கராணி |
பத்மாகாந்தம் ப்ரணிஹிதவதீம் பாலநேநந்யஸாத்யே
ஸாராபிஜ்ஞா ஜகதி க்ருதிந: ஸம்ச்ரயந்தே தயே த்வாம் ||

(பதவுரை) ஹே தயே - ஓ தயையே! ஜகதி - உலகத்தில், ஸாராபிஜ்ஞா: க்ருதிந: - ஸாராம்சத்தை அறிந்த பாக்யவான்கள், கமலவஸதேரபி - ப்ரஹ்மதேவனுக்கும், ஆஜ்ஞாம் - ஆஜ்ஞை என்ன, க்யாதிம் - யசஸ்ஸென்ன, தநம் - பணம் என்ன, அநுசராந் - ஏவியத்தொழில் செய்யுமவர்கள் என்ன, ஆதிராஜ்யாதிகம் வா - ஸார்வபௌமத்வம் முதலியவை என்ன இவைகளை, காலே - ஒரு காலவிசேஷத்தில், அகிஞ்சித்கராணி - கார்யகரங்களாகாதவைகளாக, த்ருஷ்ட்வா - கண்டு, அநந்யஸாத்யே - மற்றொருவராலும் ஸாத்யமல்லாத, பாலநே - ரக்ஷணத்தில், பத்மாகாந்தம் - ஸ்ரிய: பதியை, ப்ரணிஹிதவதீம் - நியமிக்கின்றவளான, த்வாம் - உன்னையே, ஸம்ச்ரயந்தே - ஆச்ரயிக்கிறார்கள்.

"தயையே! உலகத்தில் ஸாரமறிந்த பாக்யசாலிகள் பகவானுடைய நாபீகமலத்தில் உதித்த ப்ரஹ்மாவினுடைய ஆஜ்ஞையும், பெருமையும், செல்வமும், பரிவாரங்களும், ஆளுகை முதலியவைகளும் ஒரு காலவிசேஷத்தில் பயன்படாமற்போகின்றன என்பதைத் தெரிந்துகொண்டு, வேறொருவருக்கு ஸாத்யமல்லாத ரக்ஷணவ்யாபாரத்தில் ஸ்ரீநிவாஸனை அமைத்து வைத்திருக்கும் உன்னையே ஆச்ரயிக்கிறார்கள்."

(ஸா-ம்) குலசேகராழ்வாருடைய முகுந்தமாலா ஸ்தோத்ரத்தில் உள்ள சில ச்லோகங்களை நினைத்துத் தயையை ஸம்ஸார ஸமுத்ரத்தைத் தாண்டுவிக்கும் ஓடம் என்று வர்ணித்தார். குலசேகராழ்வாருடைய முகுந்தமாலையையும், திருமலையைப் பற்றி அவருடைய பாசுரங்களையும், அநுஸரித்து இந்த தசகத்தில் அநுபவம். மலைமேல் ஸஞ்சரிப்பவர்கள் மேடு பள்ளமான இடங்களில் ஏறுவதும் இறங்குவதுமாய் ஸஞ்சரித்து

மூச்சு வாங்கிக்கொண்டு மந்தாக்ராந்தை என்னும் சந்தத்தில் பாடுவார்கள். ராமகிரிமலைமேல் ஸஞ்சரித்த யக்ஷன் மந்தாக்ராந்தா வ்ருத்தத்தில் மேகஸந்தேசத்தைப் பாடினான். இந்த தசகம் திருமலைமேல் மந்தாக்ராந்தாவ்ருத்தத்தில் பாடப்படுகிறது. ப்ரஜைகளுக்கெல்லாம் பதியான ப்ரஜாபதியின் ஐச்வர்யத்தையும், பசுபதியின் ஐச்வர்யத்தையும் நான் விரும்பேன். யமுனைக்கரையில் கதம்பவ்ருக்ஷமாயாவது, குந்தவ்ருக்ஷமாயாவது பிறக்க ஆசைப்படுகிறேன் என்கிற பக்தர் மனோரதத்தை அநுஸரித்து, இந்த சுலோகத்திலும், அடுத்த ச்லோகத்திலும்ப்ரஜாபதியின்ஐச்வர்யத்தில் வைராக்யத்தைக் காட்டி, திருமலையில் ஜங்கமஸ்தாவரங்களில் ஏதேனுமொன்றாய்ப் பிறக்கவேண்டுமென்று ஆசையைக் காட்டுகிறார். ஸ்ரீநிவாஸனுடையை உந்திக்கமலத்தில் அவதரித்த ப்ரஹ்மாவின் ஐச்வர்யமே நிலையற்றது. ஒருகாலத்தில் அது இருந்த இடம் தெரியாமல் போய்விடுகிறது. ஆகையால் அதையும் அஸாரமென்று தள்ளி அழியாத பதத்தைப் பெறுவதற்காக ஸாரம் அறிந்தவர் ஸ்ரீநிவாஸனுடைய தயையே ஆச்ரயிக்கிறார்கள். ஸர்வேச்வரனை ஹரியைத் தவிர வேறு ஒருவருக்கும் பாலனஸாமர்த்யம் இல்லை என்றும், கருணையே வடிவெடுத்த லக்ஷ்மிதேவியோடு கூடிய இருடீகேசன் ஸர்வஸித்தாந்தங்களிலும், வேதாந்தத்திலும் ரக்ஷகனென்று பாடப்படுகிறான் என்றும், ப்ரமாண வசனங்களை அநுஸரித்து இங்கே ஸ்ரீநிவாஸனைத் தவிர வேறு ஒருவராலும் பாலனவ்யாபாரம் ஸாத்யமில்லை என்றும் அந்த வ்யாபாரத்தில் தயாதேவி ஸ்ரீநிவாஸனை நியமித்து வைத்திருப்பதாகவும் கூறுகிறார். (41)

ப்ராஜாபத்யப்ரப்ருதிவிபவம் ப்ரேக்ஷ்ய பர்யாயதுக்கம்
ஜந்மாகாங்க்ஷந் வ்ருஷகிரிவநே ஜக்முஷாம் தஸ்த்துஷாம் வா ।
ஆசாஸாநா: கதிசந விபோஸ் த்வத்பரிஷ்வங்கதந்யை
ரங்கீகாரம் க்ஷணமபி தயே ஹார்ததுங்கைரபாங்கை: ॥

ப்ராஜாபத்யப்ரப்ருதிவிபவம் ப்ரேக்ஷ்ய பர்யாயதுக்கம்
ஜந்மாகாங்க்ஷந் வ்ருஷகிரிவநே ஜக்முஷாம் தஸ்த்துஷாம் வா ।
ஆசாஸாநா: கதிசந விபோஸ் த்வத்பரிஷ்வங்கதந்யை
ரங்கீகாரம் க்ஷணமபி தயே ஹார்ததுங்கைரபாங்கை: ॥ (42)

(ப-ரை) ஹே தயே - ஓ தயையே! கேசித் - சில பகவத்பக்தர்கள், ப்ராஜாபத்யப்ரப்ருதிவிபவம் - ப்ரஹ்மபட்டம் முதலிய ஸம்பத்தையும், பர்யாயது:கம் - துக்கத்தினுடைய நாமாந்தரமாக, ப்ரேக்ஷ்ய - பார்த்து, த்வதாஶ்லேஷதந்யை: - உனது ஆலிங்கனத்தினால் பெருமை பெற்றவைகளாயும், ஹர்ஷோத்துங்கை: - ப்ரீதியை மேற்கொண்டவைகளுமான, விபோ: - ப்ரபுவான ஸ்ரீநிவாஸனுடைய, அபாங்கை: - கடாக்ஷங்களால், க்ஷணமபி ஒரு க்ஷணமாவது, ஸ்வீகாரம் - ஏற்றுக் கொள்ளுவதை, ஆஶாஸாநா: - அபிலஷித்தவர்களாய்க் கொண்டு, வ்ருஷகிரிவநே - திருமலை அரண்யத்தில், ஜங்கமாநாம் - அசையும் பொருள்களுடையவாவது, ஸ்தாவராணாம் வா - அசையாப் பொருள்களுடையவாவது, ஜந்ம - பிறப்பை, ஆகாங்க்ஷந் - இச்சித்தார்கள்.

"தயையே! சில மஹான்கள் ப்ருஹ்மபதம் முதலிய ஐச்வரியத்தையும் வாஸ்தவத்தில் துக்கமென்றே கண்டுகொண்டு உன்னுடைய ஸம்ச்லேஷத்தால் பெருமை பெற்றதும், ப்ரீதியினால் உயர்வு பெற்றதுமான, ஸ்ரீனிவாஸ கடாக்ஷங்களால் ஒரு க்ஷணமாவது அங்கீகாரம் கிடைத்தால் போதுமென்று மனோரதத்துடன் அதை எதிர்பார்த்துக்கொண்டு திருமலையில் அசையும் பொருள்களிலாவது அசையாப் பொருள்களிலாவது, ஏதாவது ஒரு ஜன்மத்தை ஆசைப்பட்டார்கள்."

(தா-ம்) இப்படி ஆசைப்பட்டவர்கள், யமுனா தடத்தில் ஒரு மரமாக ஜன்மம் கோரினவரும், பெருமாள் திருமொழியில் திருவேங்கடமுடையான் விஷயமாக 'ஊனேறு செல்வத்து' என்று தொடங்கி 'கோனேரிவாழும் குருகாய்ப்பிறப்பேனே' என்றும், 'மீனாய்ப்பிறக்கும் விதியுடையேனாவேனே' என்றும், 'வேங்கடக்கோன் தானுமிழும்பொன்வட்டில் பிடித்து உடனே புகப்பெறுவேனே' என்றும், 'தம்பமாய் நிற்கும் தவமுடையேனாவேனே' என்றும், கடைசியில் 'எம்பெருமான் பொன்மலை மேல் ஏதேனுமாவேனே' என்றும், பாடிய குலசேகராழ்வாரும்; அந்த மனோரதத்தை அனுசரித்து இங்கே ஸாதுக்களுடைய ஆசையின் க்ரமத்தைக் காட்டுகிறார். இவர் திருவேங்கடமுடை

யானுடைய கண்டையின் அம்சமானபடியால் இவருக்குத் திரு மலையில் ஜந்மம் முன்பே ஸித்தமாயிற்று. தனக்காக அதைப் புதிதாய் வேண்டுமென்று கோரவேண்டியதில்லை. முதலில் ஜங்க மங்களாக பிறப்பில் ஆசையைக் காட்டிப் பிறகு அந்த ஜந்மம் கிடைக்க பாக்யமில்லாவிடினும் விருக்ஷங்கள் முதலிய ஸ்தாவர ஜந்மம் கிடைத்தாலும் போதுமென்கிருர். வெகுகாலம் ஒரு வ்ருக்ஷமாகத் திருமலைமேல் இருந்தாலும் ஒருக்ஷணமாவது ஸ்ரீநி வாஸனுடைய தயைநிறைந்த ப்ரீதிமயமான கடாக்ஷங்களைப் பெறப்பெற்ருல் அந்த ஜன்மம் உயர்ந்ததாகும். ராமனை எவன் பார்க்கவில்லையோ, எவனை ராமன் கடாக்ஷிக்கவில்லையோ, அவன் உலகத்தார் பழிப்புக்கு இடமாவதன்றி தன்னைத்தானே அவன் பழிப்பான், என்கிற வால்மீகி வசனப்படிக்கே பகவானை நாம் தரிசனம் செய்வதுடன் அவரும் நம்மைக் கடாக்ஷித்தருளும்படி பாக்யம் பெறவேணும் என்பதைக் காட்டுகிருர். (42)

நாபீபத்மஸ்புரணஸுபகா நவ்யநீலோத்பலாபா
க்ரீடாசைலம் கமபி கருணே வ்ருண்வதீ வேங்கடாக்யம் ।
சீதா நித்யம் ப்ரஸதநவதீ ச்ரத்ததாநாவகாஹ்யா
திவ்யா காசிஜ்ஜயதி மஹதீ தீர்க்கிகா தாவகீநா ॥ ॥ சங ॥

நாபீபத்மஸ்புரணஸுபகா நவ்யநீலோத்பலாபா
க்ரீடாசைலம் கமபி கருணே வ்ருண்வதீ வேங்கடாக்யம் ‌।
சீதா நித்யம் ப்ரஸதநவதீ ச்ரத்ததாநாவகாஹ்யா
திவ்யா காசிஜ்ஜயதி மஹதீ தீர்க்கிகா தாவகீநா ॥ (43)

(ப-ரை) ஹே கருணே - ஓ தயையே! நாபீபத்மஸ்புரணஸுபகா - நாபியிலுள்ள தாமரைபுஷ்பத்தால் அழகு வாய்ந்த, நவ்யநீலோத்பலாபா - புதியதான கருநைதற்பூப் போன்ற காந்தியுள்ள, நித்யம் சீதா - எக்காலத்திலும் குளிர்ச்சி உள்ளதாயும், நித்யம் ப்ரஸதநவதீ - எப்பொழுதும் தெளி வுள்ளதாயும், (எக்காலத்திலும் ஸௌம்யதையும் அநுக்ரஹமுள் ளதாயும்) ச்ரத்ததாநாவகாஹ்யா - விசுவாஸமுள்ளவர்களுக்கு ஸ்நாநம் பண்ணத் தகுந்ததாய், திவ்யா - ஸர்வோத்க்ருஷ்ட

மாய், பரமாகாசத்திலுள்ளதாய், ஊஹதீ - பெரியதாய், (த்ரிவிதபரிச்சேதரஹிதமாய்) தாவகீநா - உன்னுடையதாயுமிருக்கிற, காவிச - ஒரு, தீர்கிகா - நடைவாவியானது, வேங்கடாஹ்வம் - திருவேங்கடமென்று பெயரையுடைய, க்ரீடாசைலம் - லீலாபர்வதத்தை, வ்ருணுதே - ஆச்ரயித்துக்கொண்டு, ஜயதி - ஸர்வோத்க்ருஷ்டமாகப் பிரகாசிக்கிறது.

"கருணையே? தாமரைப்பூவின் ப்ரகாசத்தால் அழகாயும் அப்பொழுதலர்ந்த கருநெய்தல் பூவைப்போல் காந்தி உள்ளதாயும் எக்காலத்திலும் ப்ரஸன்னமாயும், சீதமாயும், ச்ரத்தையுள்ளவர்களால் அவகாஹநம் செய்யத்தக்கதாயும், மிகப் பெரிதாயும், உள்ள உன்னுடையதான ஒரு தீர்க்கிகை என்னும் வாபி வேங்கடமென்னும் ஒரு விலக்ஷணமான க்ரீடா பர்வதத்தை ஆச்ரயித்துக்கொண்டு விளங்குகிறது."

(தா-ம்) இங்கே ஸ்ரீநிவாஸனுடைய திருமேனியை ஒரு குளிர்ந்த நடைவாபியாக வர்ணிக்கிறார். அந்தத் திருமேனியில் நாபீகமலம் என்னும் உயர்ந்த தாமரை உளது. புதிய கருநெய்தல் புஷ்பம்போன்ற காந்தி அந்தத் திருமேனியில் ஓடுகிறது. தாபத்ரயங்களையும் அந்தத் திருமேனியின் குளிர்ச்சி சமனம் செய்யவல்லது. ச்ரத்தையுள்ளவரெல்லாம் அந்தத் திருமேனியின் குளிர்ச்சியை அனுபவிக்கலாம். தயாதேவியின் விளையாட்டிற்காக ஸ்ரீநிவாஸன் திருமேனி என்கிற இந்த நடைவாபி ஏற்பட்டிருக்கிறதுபோலும்! என்று இங்கே வர்ணிக்கிறார். இந்தத் திருமேனியின் காந்தி நீரோட்டத்தில் ஈடுபடும்பொழுது கருநிறமான அந்தக் காந்தி ஜலத்தில் நீலோத் பல புஷ்பங்கள் மிதப்பதுபோல் அநுபவம். அந்தத் திருமேனியை அனுபவிப்பதற்கு ச்ரத்தையென்னும் வித்தம் வேண்டும். ச்ரத்தை அதை அனுபவிப்பதற்கு அதிகாரத்தைக் கொடுக்கும். வேறு ஜாதி குலம் வேண்டியதில்லை. (43)

யஸ்மிந்த்ருஷ்டே தத்இதரஸுகைர்கம்யதே போஷவத்வம்
ஸத்வம் ஜ்ஞாநம் த்ரிஸிரவயிஹிதேகதோநந்தவிஸ்ம்ருதெ |
ஸ்வதீகாராத்ததிஹ க்ருதிநஃ ஸம்ஸ்ம்ருந்நாநஸாவஹம்
நித்ராவத்வம் நியதிவ தயே நிவிஸந்த்ஜநாஜ்ந ||

யஸ்மிந் த்ருஷ்டே ததிதரஸுகைர்கம்யதே கோஷ்பதத்வம்
ஸத்யம் ஜ்ஞாநம் த்ரிபிரவதிபிர்முக்தமாநந்தஸிந்தும் ।
த்வத்ஸ்வீகாராத்தமிஹ க்ருதிந: ஸூரிப்ருந்தாநுபாவ்யம்
நித்யாபூர்வம் நிதிமிவ தயே நிர்விசந்த்யஞ்ஜநாத்ரௌ ॥

(ப-ரை) ஹே தயே - ஓ தயையே! யஸ்மிந் - எந்த, பரம புருஷன், த்ருஷ்டே ஸதி - காணப்பட்டிருக்குமளவில், ததிதர ஸுகை: - அவனிற்காட்டில் (அவன் தர்சனத்திற்காட்டில்) வேறுபட்ட ஆநந்தங்களாலே, கோஷ்பதத்வம் - மாட்டுக் குளப்படியாயிருக்குகை, கம்யதே - அடையப்படுகிறதோ, ஸத்யம் - விகாரசூந்யராயும், ஜ்ஞாநம் - ஜ்ஞாநஸ்வரூபனாய், த்ரிபி:, மூன்று, அவதிபி: - அளவுகளால், முக்தம் - விடப்பட்டிருக்கிறதாயும், ஆநந்தஸிந்தும் - ஆநந்தக் கடலாயும், ஸூரிப்ருந்தாநுபாவ்யம் - நித்யமுக்தர்களின் கூட்டங்களாலே அநுபவிக்கத் தகுந்தவனாயும், நித்யாபூர்வம் - ஸர்வகாலத்திலும் புதியதாயுள்ள, தம் - அந்த பரமபுருஷனை, த்வத்ஸ்வீகாராத் - உன்னுடைய அங்கீகாரத்தாலே, இஹ - இந்த ஸம்ஸாரமண்டலத்தில், க்ருதிந: - பாக்யவான்கள், நிதிமிவ - நிதியைப்போல, நிர்விசந்தி - அநுபவிக்கிறார்கள், அஞ்ஜநாத்ரௌ - அஞ்ஜநமலையில்.

"தயையே? யாரைக்கண்டவளவில் வேறு ஸுகங்களெல்லாம் மாட்டுக் குளப்படிபோல் மிக அல்பமாகுமோ, மூன்று எல்லைகளும் நீங்கிய ஸத்யமும், ஜ்ஞானமும், அநந்தமுமான, நித்யஸூரிகள் அனுபவிக்கத்தக்க அந்த ஆநந்த ஸமுத்திரத்தை உன்னுடைய அங்கீகாரத்தால் பாக்யமுள்ளவர்கள் நித்யாபூர்வமான நிதியைப்போல் இந்த அஞ்ஜன மலையில் அனுபவிக்கிறார்கள்."

(தா-ம்) முன் ச்லோகத்தில் ஸ்ரீநிவாஸனுடைய திருமேனியை ஒரு குளிர்ந்த நடைவாபியாக அநுபவித்தார். இங்கே அவருடைய திவ்யாத்ம ஸ்வரூபத்தை ஒரு எல்லையில்லாத ஆநந்த ஸமுத்ரமாக அனுபவிக்கிறார். இந்த ஸமுத்ரத்தை அனுபவிக்கும் கால் உலகத்திலுள்ள உயர்ந்த மற்ற ஸுகங்களெல்லாம் ஒரு குளப்படி நீராகும். பகவானுடைய திவ்யாத்ம ஸ்வரூ

பத்தை தைத்திரீயோபநிஷத்தில் ஸத்யம், ஜ்ஞாநம், அநந்தம் என்று ஸ்வரூபலக்ஷணத்தால் வர்ணிக்கப்பட்டது. அந்த ப்ரஹ்ம ஸ்வரூபத்தையே ஆநந்தமயமென்றும், அந்த ஆநந்தம் வாக்குக்கும் மனதிற்கும் எட்டாததென்றும், அங்கே கூறப்பட்டது. அந்த உபநிஷத்திலுள்ள ஸத்யம், ஜ்ஞானம், என்கிற பதங்களை இந்த ச்லோகத்தில் அப்படியே அமைத்துவிட்டு அநந்தமென்கிற பதத்தின் அர்த்தத்தை இங்கே 'மூன்று எல்லைகளும் நீங்கியது' என்று விளக்குகிறார். ப்ரஹ்மத்தைத்தவிர மற்றப்பொருள்களுக்கெல்லாம் தேசபரிச்சேதமென்றும், காலபரிச்சேதமென்றும், வஸ்துபரிச்சேதமென்றும், மூன்று எல்லைகள் உண்டு. ஒரு தேசத்தில் உள்ளது மற்றொரு தேசத்தில் இல்லாததென்று சொல்லக்கூடிய பொருள் தேசபரிச்சேதமுள்ளதாகும். ப்ரஹ்மம் இன்ன இடத்தில் மட்டும் உள்ளது இன்ன இடத்தில் இல்லாதது என்று சொல்லமுடியாது. ஒரு காலத்திலுள்ளது, மற்றொரு காலத்தில் இல்லாதது என்று சொல்லக் கூடிய பொருள்கள் கால பரிச்சேதமுள்ளவை. ப்ரஹ்மம் இன்ன காலத்தில் மட்டும் உள்ளது, இன்ன காலத்தில் இல்லாதது என்று சொல்லக்கூடியதல்ல. ஒவ்வொரு பொருளும் அந்தந்தப் பொருளாகுமே ஒழிய வேறு பொருளாகாது. மண் மண்ணேயொழிய ஜலமாகாது. ப்ரஹ்மமோ உன்றால் எல்லா வஸ்துவுமாகும். எப்பொருள்களும் ப்ரஹ்மத்தின் உருவமேயாகும். ப்ரஹ்மமல்லாத பொருளில்லை. இன்ன பொருள் தான் ப்ரஹ்மம் இன்னது ப்ரஹ்மமன்று என்று சொல்வது கூடாது. ப்ரஹ்மம் தவிர மற்றப் பொருள்களுக்கெல்லாம் வஸ்து பரிச்சேதம் உண்டு. ப்ரஹ்மத்துக்கு மட்டும் அந்த எல்லை கிடையாது. உபநிஷத்தில் 'ஆநந்தமயன்' என்று சொல்லப்பட்டதை இங்கே ஆநந்தஸிந்து என்கிறார். குஹையில் நிதியைப்போல் ப்ரஹ்மம் மறைந்துளது என்று அந்த உபநிஷத்தில் கூறப்பட்டது. அஞ்ஜனமென்னும் மையைக்கொண்டு நிதியைக் கண்டுபிடிக்கலாமென்பர். இந்த அஞ்ஜனமலையில் ஸ்ரீநிவாஸனென்னும் நிதி எல்லோரும் காண விளங்குகிறது. இந்த நிதி அநுபவிக்க அநுபவிக்க எப்பொழுதும் புதியதாகவே இருக்கும். இது ஆராத அமுதம். அபர்யாப்தமான அமிர்தம் திகட்டாத இன்பம். இந்த அம்ருதத்தை நித்யஸூரிகளும் பரமபதத்திலிருந்து அநுபவிக்க வருகிறார்கள். 'தண்ணார் வேங்கட விண்ணோர் வெற்பு' என்கிற பாசுரத்தை நினைக்கிறார்.

முன் ச்லோகங்களில் பெருமாளுடைய திருமேனியாகிய நீண்ட வாபியில் வேங்கடமலை ஓர் விளையாட்டு மலையைப்போல் காண்கிறதென்றார். இங்கே அஞ்ஜநமலையில் பெருமாளுடைய எல்லையில்லாத ஆநந்தஸ்வரூபமாகிய நிரதிசயப்ருஹத்தான திவ்யாத்மஸ்வரூபம் விளங்குகிறது என்கிறார். ப்ரஹ்மஸ்வரூபம் மூன்று விதமான எல்லைகளில்லாத பெரியதாயிருந்தாலும், ஹ்ருதயமென்னும் குஹைக்குள் ஓர் நிதியைப்போல அநந்தமான ப்ரஹ்மம் மறைந்து கிடக்கிறதென்றும், அங்கே அன்போடு தேடினால் அந்த நிதி பெருமாளுடைய க்ருபை என்றும், அஞ்ஜநத்தால் ஜ்ஞாநக்கண்ணுக்கு அநுபவகோசரமாவதாக தைத்திரீய ச்ருதி ஓதுகிறது. 'நிஹிதம்' என்ற ச்ருதி சப்தத்திற்கு 'நிதிபோல் வைக்கப்பட்டுளது' என்று பொருள். அல்பமான ஹ்ருதயத்திற்குள் ஹிரண்யநிதியாக ப்ரஹ்மம் உள்ளே ஸுகரூபமாக இருப்பதாக தஹரவித்யை ஓதுகிறது. அதற்கு அநுகுணமாக 'நிஹிதம்' என்பதற்கும் 'நிதிபோலுள்ளது' என்று பொருள் கொள்ளுவது உசிதமே. பூமிக்குள் மறைந்து கிடக்கும் நிதியை அஞ்ஜநமென்னும் மையைக் கண்ணில் தடவிக்கொண்டு ஸுலபமாய்க் காணலாமென்பர். இங்கே ஒருமலை ப்ரவாஹமாக அஞ்ஜநமுளது. மலையே அஞ்ஜநமலை. அது தயையின் மூர்த்தி என்று முதல் ச்லோகத்திலேயே ஸாதித்தார். இந்த அஞ்ஜநமலையை நாம் ஸேவித்துக்கொண்டு அதை நெருங்கி அதில் ஸஞ்சரிக்கையில், அது எல்லையில்லாத இன்பமான ஆநந்தமயப்ரஹ்மஸ்வரூபத்தை நமக்குத் தெரியச் செய்கிறது. இந்த ஆநந்தநிதியைக் கூட்டம் கூட்டமாகக் கூடிச் சேர்ந்து அநுபவிக்கவேணும். இந்த நிதியை அடைவதற்கு யாதொரு பொருள் செலவும் இல்லை. எத்தனைக்கெத்தனை பாகவதர்கள் கூட்டம் அதிகமாகிறதோ அவ்வளவுக்கவ்வளவு எல்லோருக்கும் ஆநந்தாதிக்யம். அவரவர்கள் முதலுக்குத் தக்கபடி ஏற்றத் தாழ்ச்சியாக ஆநந்தத்தில் பாகமென்பது இல்லை. ஆநந்தம் எல்லாருக்கும் ஸமம். (44)

𑌸𑌾𑌰𑌂 𑌲𑌬𑍍𑌧𑍍𑌵𑌾 𑌕𑌮𑌪𑌿 𑌮𑌹𑌤𑌃 𑌶𑍍𑌰𑍀𑌨𑌿𑌵𑌾𑌸𑌾𑌮𑍍𑌬𑍁𑌰𑌾𑌶𑍇𑌃
𑌕𑌾𑌲𑍇 𑌕𑌾𑌲𑍇 𑌘𑌨𑌰𑌸𑌵𑌤𑍀 𑌕𑌾𑌲𑌿𑌕𑍇𑌵𑌾𑌨𑍁𑌕𑌮𑍍𑌪𑍇 ।
𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑍋𑌨𑍍𑌮𑍇𑌷𑌾 𑌮𑍃𑌗𑌪𑌤𑌿𑌗𑌿𑌰𑍌 𑌵𑌿𑌶𑍍𑌵𑌮𑌾𑌪𑍍𑌯𑌾𑌯𑌯𑌨𑍍𑌤𑍀
𑌶𑍀𑌲𑍋𑌪𑌜𑍍𑌞𑌂 𑌕𑍍𑌷𑌰𑌤𑌿 𑌭𑌵𑌤𑍀 𑌶𑍀𑌤𑌲𑌂 𑌸𑌦𑍍𑌗𑍁𑌣𑍌𑌘𑌮𑍍 ॥

ஸாரம் லப்த்வா கமபி மஹத: ஸ்ரீநிவாஸாம்புராசே:
காலே காலே கநரஸவதீ காளிகேவாநுகம்பே ।
வ்யக்தோந்மேஷா ம்ருகபதிகிரௌ விச்வமாப்யாயந்தீ
சீலோபஜ்ஞம் க்ஷரதி பவதீ சீதலம் ஸத்குணௌகம் ॥

(ப-ரை) ஹே அநுகம்பே - ஓ தயையே! கநரஸவதீ - ஆச்ரிதர் பக்கல் த்ருடமான ஸ்நேஹமுள்ளவளாய், (உச்சதரமான கர்ஜநமுள்ளவளாய், ஸாதாரணமாய் ஜலமுள்ளவளாய்) ஸ்ரீநிவாஸாம்புராசே: - ஸமுத்ரம்போன்ற ஸ்ரீநிவாஸனிடத்திலிருந்து, (ஸ்ரீநிவாஸன்போன்ற ஸமுத்ரத்தினிடத்திலிருந்து) கமபி - விலக்ஷணமான, ஸாரம் - ஜலத்தை, (ஸாராம்சத்தை) லப்த்வா - அடைந்து, ம்ருகபதிகிரௌ - ஸிம்ஹாசலம் என்று பெயருடைய திருமலையில், (ஸிம்ஹங்கள் வஸிக்கும் மலையில்) வ்யக்தோந்மேஷா - ப்ரகாசமான ஆவிர்ப்பாவத்தை உடைய, பவதீ - நீ, காளிகேவ - மேகபங்க்திபோல், விச்வம் - ப்ரபஞ்சத்தை, ஆப்யாயந்தீ - ஸந்தோஷிப்பிக்கவேணும் என்ற அபிப்ராயமுள்ளவாய்க்கொண்டு, காலே காலே - அந்த அந்தக் காலங்கள்தோறும், சீலோபஜ்ஞம் - ஸௌசீல்யத்தை முதலாக உடைய, சீதலம் - குளிர்ந்த, ஸத்குணௌகம் - ப்ரவாஹம்போன்ற பகவத் கல்யாணகுணத்தை, (கல்யாணகுணங்கள்போன்ற ப்ரவாஹத்தை) க்ஷரதி - வர்ஷிக்கிறாய். (அல்லது சீலோபஜ்ஞம் - ஸ்வபாவஸித்தமாக, க்ஷரதி - வர்ஷிக்கிறாய்.

"அநுகம்பையே! மிகப் பெரியதான ஸ்ரீநிவாஸஸமுத்ரத்திலிருந்து விலக்ஷணமான ஸாரத்தை க்ரஹணம் செய்து அந்த அந்தக் காலங்களில் கனரஸத்தோடுகூடிய மேகமாலையைப்போல் ஸிம்ஹாசலத்தில் ஆவிர்ப்பவித்து ஜகத்தை எல்லாம் குளிர்ச்சி அடைவிக்க ஸௌசீல்யம் முதலிய குளிர்ந்த வாத்ஸல்யகுணங்களை வர்ஷிக்கிறாய்."

(தா-ம்) மேகங்கள் ஸமுத்ரத்திலிருந்து ஜலத்தை ஆவிரூபமாக க்ரஹணம் செய்து உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்கிற பேதமில்லாமல் எல்லோருக்கும் ஸமமாகக் குளிர்ந்த ஜலமாக வர்ஷிக்கும். இங்கே தயைக்கும் மேகமாலைக்கும் ஒக்கும்படியாக சில

விசேஷணங்களில் ச்லேஷையால் இரண்டர்த்தம் கொள்ளவேண்டும். கனரஸவதீ என்பதற்குக் கனமான ரஸமென்னும் ப்ரீதி உடையவள் என்று தயாவிஷயத்திலும், மேகத்தின் கர்ஜனத்தை உடையது என்று மேகமாலைவிஷயத்திலும் அர்த்தம். தயையை முன்பு நதியாகவும், ஸமுத்ரமாகவும், வ்ருக்ஷமாகவும் வர்ணித்திருக்கிறார். இங்கே தயையை மலையினுச்சியிலுள்ள மேகமாலையாக வர்ணிக்கிறார். மேகம் பக்ஷபாதமில்லாமலும், உயர்வு தாழ்வு கவனியாமலும் ஸமமாக எல்லா ஸ்தலங்களிலும் வர்ஷிப்பதுபோல தயையின் ஸ்வபாவம். விச்வம் என்பது உயர்ந்தது தாழ்ந்தது ஆகிய எல்லாவற்றையும் காட்டுகிறது. இங்கே சீலமென்பது ஸௌசீல்யத்தைச் சொல்லுகிறது. உயர்ந்தவன் தாழ்ந்தவரோடு நெருங்கி பேதமில்லாமல் அணைந்து வர்த்திப்பது ஸௌசீல்ய குணமென்பர். இது தயையால் ஏற்படும் குணங்களில் முதன்மையானதாகும். ஸௌசீல்யம், ஸௌலப்யம், வாத்ஸல்யம் முதலிய கல்யாணகுணங்கள் தயையினுடைய பரிவாஹங்கள். அதனால் தயையென்னும் மேகமாலை அந்தக் குணங்களை வர்ஷிக்கிறதாக வர்ணிக்கிறார். (45)

> ஸீமெ நித்யம் ஹவஜலநியௌ ஒஜ்ஜதாம் ஒாநவாநா
> ஒாலஸாயும் வ்ருஷமிரிவதிஸ்வந்திஜெஶாத் யுஜெ ।
> வ்ரஜ்ஞாஸாரம் வ்ரக்ருதிஒஹதா ஒூலஹாமெந ஜுஷ்டம்
> ஶாவாஹெஜெஸ்ஸுஹமஒநவம் ஶாஶ்வதம் ஶாஸ்த்ரவாணிஂ॥

> பீமே நித்யம் பவஜலநிதௌ மஜ்ஜதாம் மாநவாநாம்
> ஆலம்பார்த்தம் வ்ருஷகிரிபதிஸ்த்வந்நிதேசாத் ப்ரயுங்க்தே ।
> ப்ரஜ்ஞாஸாரம் ப்ரக்ருதிமஹதா மூலபாகேந ஜுஷ்டம்
> சாகாபேதைஸ்ஸுபகமநகம் சாச்வதம் சாஸ்த்ரபாணிம் ॥

(ப-ரை) வ்ருஷகிரிபதி: - ஸ்ரீநிவாஸன், த்வந்நிதேசாத் - உனது நியமனத்தினால், பீமே - பயங்கரமான, பவஜலநிதௌ - ஸம்ஸாரஸாகரத்தில், நித்யம் - எக்காலத்திலும், மஜ்ஜதாம் - முழுகாநிற்கிற, மாநவாநாம் - மனுஷ்யர்களுடைய, ஆலம்பார்த்தம் - கைப்பிடிக்காக, ப்ரஜ்ஞாஸாரம் - ஜ்ஞானத்தையேஸாராம்சமாகவுடையதாய், ப்ரக்ருதிமஹதா - தனக்குப் பிரக்ருதியான அகாரத்தாலே பெருமை பெற்றதான, மூலபாகேந - வேதக்

திற்கு மூலபூதமான ப்ரணவத்தால், ஜுஷ்டம் - அடையப்பட்டதாய, ப்ரக்ருதிமஹதா - ஸ்வபாவத்தாலே பருமனுள்ளதான பூஜமஹாமூலேந - தோள் முதலிய அவயவபாகத்தால், ஶாகாவிஶேஷை: - வேதசாகாவிசேஷங்களாலே, ஸுஹம் - மனோஹரமாய், ஶாகாவிஶேஷை:- பலவிதமான விரல்களாலே, ஸுஹம் - ஸுந்தரமாய், அநவம் - நிர்தோஷமாய், ஶாஶ்வதம் - அழிவற்றதாய் இருக்கும், ஶாஸ்த்ரபாணிம் - சாஸ்த்ரமாகிற கையை, ப்ரயுங்க்தே - ப்ரயோகிக்கிறாய். (அதாவது கொடுக்கிறாய்)

"உன்னுடைய நியமநத்தால் வேங்கடபதியானவர் பயங்கரமான ஸம்ஸாரஸமுத்ரத்தில் எப்பொழுதும் முழுகிக்கொண்டே இருக்கும் மானிடர்களுக்குக் கரையேறக் கைப் பிடிப்புக்காக ஜ்ஞாநஸாரமாயும், தனக்கு வேரான ப்ரணவமென்னும் மூலத்தோடு கூடியதாயும், விரல்களென்னும் சாகைகளால் அழகாயும் நிர்தோஷமாயுமுள்ள சாச்வதமான சாஸ்த்ரமாகிற கையை அளிக்கிறான்."

(தா-ம்) முன் ச்லோகங்களில் ஸாரமான குணங்கள் தயையால் வர்ஷிக்கப்படுகிறதையும், பகவத்ஸ்வரூபமான ஆனந்தஸமுத்ரத்தில் ச்ரத்தையுள்ளவர்கள் முழுகி ஆநந்திக்கலாமென்பதையும் கூறினர். பயங்கரமான ஸம்ஸாரஸமுத்ரத்தில் முழுகியிருப்பவர்கள் யாராவது காருணிகர்கள் கைகொடுத்து அதிலிருந்து கரையேற்றிவிட்டாலல்லவோமுற்கூறியஆநந்தக்கடலில்முழுகலாம் ஸம்ஸாரஸமுத்ரத்திலிருந்து நம்மை உத்தரணம் செய்ய பகவான் காருண்யத்தால் சாஸ்த்ரமென்னும் கையை நீட்டுகிறான். சாஸ்த்ரத்தை ப்ரவர்த்திப்பது கருணையின் கார்யம். இங்கே சாஸ்த்ரத்தை திருக்கையாக ரூபணம் செய்கிறார். இங்கே கூறும் விசேஷணங்கள் ச்லேஷையால் சாஸ்த்ரத்திற்கும் கைக்கும் பொருந்தும். வேதசாஸ்த்ரத்திற்கு மூலம் ப்ரணவம். ப்ரணவத்திற்கு ப்ரக்ருதி, அதாவது- மூலம், அகாரமென்னும் முதலெழுத்து. அது ஸமஸ்தமான சப்தராசிகளுக்கும் காரணமானது. ப்ரணவத்திற்கும் அகாரத்தால் ஏற்றம். கைக்கு மூலபாகம் திருத்தோள்கள் முதலிய அவயவமாகும்: மஹாபுருஷனாகிய பகவானுக்கு ஸாமுத்

ரிகாலக்ஷணசாஸ்த்ரப்படிக்கு ஸ்வபாவமாய்ப் பருத்திருக்கும். வேதவ்ருக்ஷத்திற்குப் பல சாகைகள் இருப்பதுபோல் கையில் அழகான விரல்கள் உள்ளன. விரல்களுக்கும் சாகை என்று பெயர். பாஞ்சராத்ரசாஸ்த்ரத்திற்கு மூலம் மூலவேதம் என்கிற ஏகாயந ச்ருதி. இங்கே மூலபாகமென்பதால் அடுத்த ச்லோகத்தால் சொல்லப்போகிற பாஞ்சராத்ரசாஸ்த்ரத்திற்கு ஆதாரமான மூலவேதத்தையும் ஸூசிக்கிறார். (46)

வித்³வத்ஸேவாகதகநிகஷைர்வீதபங்காஶயாநாம்
பத்³மாகாந்த: ப்ரணயதி த³யே த³ர்பணம் தே ஸ்வஶாஸ்த்ரம் ।
லீலாத³க்ஷாம் த்வத³நவஸரே லாலயந் விப்ரலிப்ஸாம்
மாயாஶாஸ்த்ராண்யபி த³மயிதும் த்வத்ப்ரபந்நப்ரதீபாந் ॥

வித்வத்ஸேவாகதகநிகஷைர்வீதபங்காசயாநாம்
பத்மாகாந்த: ப்ரணயதி தயே தர்ப்பணம் தே ஸ்வசாஸ்த்ரம் ।
லீலாதக்ஷாம் த்வதநவஸரே லாளயந் விப்ரலிப்ஸாம்
மாயா சாஸ்த்ராண்யபி தமயிதும் த்வத்ப்ரபந்நப்ரதீபாந் ॥

(ப-ரை) ஹே த³யே - ஓ தயையே! பத்³மாகாந்த: - ஸ்ரீநிவாஸன், வித்³வத்ஸேவாகதகநிகஷை: - வித்வான்களுடைய பரிசரணங்களாகிற தேத்தாங்கொட்டையின் உரைத்தல்களாலே, வீதபங்காஶயாநாம் - பாபமொழிந்த சித்தமுள்ளவர்களுக்காக, (சேறு போயிருக்கும் ஜலாதாரபாத்ரத்தை உடையவர்க்காக) தே - உனக்கு, த³ர்பணம் - கண்ணாடியான, ஸ்வஶாஸ்த்ரம் - தன்னுடைய சாஸ்த்ரத்தை, ப்ரணயதி - பண்ணுகிறான். த்வத³நவஸரே - நீ இல்லாத ஸமயத்தில், லீலாத³க்ஷாம் - லீலையில் ஸமர்த்தையான, விப்ரலிப்ஸாம் - வஞ்சந இச்சையை, லாலயந் - கொண்டாடாநின்றுகொண்டு, த்வத்ப்ரபந்நப்ரதீபாந் - உன் ஆச்ரிதவிரோதிகளை, த³மயிதும் - சிக்ஷிப்பதற்கு, மாயாஶாஸ்த்ராண்யபி - மோஹநசாஸ்த்ரங்களையும், ப்ரணயதி - செய்கிறான்.

“மஹான்களான தத்வஜ்ஞானிகளுடைய ஸேவை என்கிற தேத்தாங்கொட்டையின் ப்ரபாவத்தால் பாபமென்னும் சேறு முழுவதும் நீங்கி சுத்தியடைந்த மனமுடையவர்களின் ப்ரயோ

ஜனத்திற்காக உனக்குக் கண்ணாடிபோன்ற பகவத் சாஸ்த்ரத்தை ஸ்ரீநிவாஸன் ஏற்படுத்துகிறான். நீ அருகே இல்லாத ஸமயத்தில் லீலையில் ஸமர்த்தையான ஏமாற்றும் இச்சையை லாலநம் செய்து கொண்டு உன்னைச் சரணமடைந்தவர்களுக்கு விரோதிகளான ஆஸுரப்ரக்ருதிகளை நிக்ரஹிப்பதற்காக மோஹசாஸ்த்ரங்களையும் செய்கிறான்."

(தா-ம்) வேதசாஸ்த்ரமென்னும் கையைக்கொடுத்து ஸம்ஸாரஸமுத்ரத்திலிருந்து நம்மை உத்தாரணம் செய்வதாகக் கூறினார். வேதசாஸ்த்ரங்களில் இந்த்ரன் முதலிய அநேகதேவதைகளையும் அவர்கள் தயையும் ஸ்தோத்ரம் செய்யப்படுகிறது. ஸ்ரீநிவாஸனுடைய தயைதான் ஸத்யமென்றும், மற்றவர்களுடைய தயை கானல் ஜலம்போல் வெறும் தோற்றமென்றும் முன்தசகத்தில் இறுதியில் கூறினார். வேதசாஸ்த்ரத்தில் எல்லா தேவதைகளையும் ஸ்தோத்ரம் செய்வதால் ஸ்ரீநிவாஸனுடைய தயையைத் தான் அவலம்பிப்பது என்பது எப்படி ஏற்படும்? சாஸ்த்ரம் என்பதில் சேர்ந்த சில புராணங்கள் ப்ரஹ்மாதிதேவதைகளையும் உத்தமதேவதைகளாகச் சொல்லுகின்றனவே! அந்தப் புராண சாஸ்த்ரங்கள் கருணையால் ஏற்பட்டதாகுமோ? இப்படி வரும் ஆக்ஷேபங்களை இந்த ச்லோகத்தில் பரிஹரிக்கிறார். பாஞ்சராத்ராகமங்களை பகவத் சாஸ்த்ரமென்று சொல்லுவர். இந்த சாஸ்த்ரத்தில் பகவானுடைய பெருமையை மட்டும் கண்ணாடியிற்போல தெளிவாகக் காட்டப்படுகிறது. வேறு தேவதைகளை அந்த சாஸ்த்ரத்தில் ப்ரசம்ஸிப்பதில்லை. அந்த சாஸ்த்ரம் தயாதேவிக்குக் கண்ணாடிபோலாகும். தயாதேவி அந்த சாஸ்த்ரக் கண்ணாடியில் நன்றாய் ப்ரதிபலிக்கிறாள். பெரியோர்களை நீடித்த காலம் ஆச்ரயித்து அவர்கள் ஸேவை என்னும் தேத்தாங்கொட்டையால் மனதிலுள்ள சேற்றைப்போக்கி நன்றாய்த் தெளியச் செய்து நிர்மலமான மனதுடையவர்களுக்குப் பகவானுடைய பெருமையையும், தத்வத்தையும் உள்ளபடி தெளியக்காட்ட இந்த பாகவதசாஸ்த்ரம் தயாதேவியின் முகோல்லாஸத்திற்கு ஒரு முகக் கண்ணாடிபோல் ஸ்ரீநிவாஸனால் ஏற்படுத்தப்பட்டது. மற்ற மாயாசாஸ்த்ரங்கள் ஆஸுரப்ரக்ருதிகளுக்கு மோஹத்தை அவர்கள் பாபங்களுக்குப் பலமாக வ்ருத்தி செய்வதற்காக லீலாதேவியின் லாலனமாக ஏற்படுத்தப்படுவது. ஸாத்விகப்ருக்ருதியுள்ளவர் அந்த மாயாசாஸ்த்ரங்களினால் ஏமாரமாட்டார்கள். (47)

𑌦𑍈𑌵𑌾𑌤𑍍 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑍇 𑌵𑍃𑌷𑌗𑌿𑌰𑌿𑌤𑌟𑌂 𑌦𑍇𑌹𑌿𑌨𑌿 𑌤𑍍𑌵𑌨𑍍𑌨𑌿𑌦𑌾𑌨𑌾𑌤𑍍
𑌸𑍍𑌵𑌾𑌮𑌿𑌨𑍍 𑌪𑌾𑌹𑍀𑌤𑍍𑌯𑌵𑌶𑌵𑌚𑌨𑍇 𑌵𑌿𑌨𑍍𑌦𑌤𑌿 𑌸𑍍𑌵𑌾𑌪𑌮𑌨𑍍𑌤𑍍𑌯𑌮𑍍 ।
𑌦𑍇𑌵𑌃 𑌶𑍍𑌰𑍀𑌮𑌾𑌨𑍍 𑌦𑌿𑌶𑌤𑌿 𑌕𑌰𑍁𑌣𑍇 𑌦𑍃𑌷𑍍𑌟𑌿𑌮𑌿𑌚𑍍𑌛𑌨𑍍 𑌤𑍍𑌵𑌦𑍀𑌯𑌾𑌂
𑌉𑌦𑍍𑌘𑌾𑌤𑍇𑌨 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌪𑌰𑌿𑌷𑌦𑌾𑌮𑍁𑌤𑍍𑌤𑌰𑍇𑌣𑌾𑌭𑌿𑌮𑍁𑌖𑍍𑌯𑌮𑍍 ॥

தைவாத் ப்ராப்தே வ்ருஷகிரிதடம் தேஹிநி த்வந்நிதாநாத்
ஸ்வாமிந் பாஹீத்யவசவசனே விந்ததி ஸ்வாபமந்த்யம் ।
தேவ: ஶ்ரீமாந் திசதி கருணே த்ருஷ்டிமிச்சம் ஸ்த்வதீயாம்
உத்காதேந ச்ருதிபரிஷதாமுத்தரேணாபிமுக்யம் ॥ (48)

(ப-ரை) 𑌹𑍇 𑌕𑌰𑍁𑌣𑍇 - ஓ தயையே! 𑌤𑍍𑌵𑌨𑍍𑌨𑌿𑌦𑌾𑌨𑌾𑌤𑍍 - உன்னைக் காரணமாக உடையதாய், (அதாவது— ஒருகாலவிசேஷத்தில் உன்னாலே ப்ரவர்த்திதமாயிருக்கும் யாத்ருச்சிகஸுக்ருதா திரூபமாயிருக்கும் பாக்யவிசேஷத்தாலென்னபடி) 𑌵𑍃𑌷𑌗𑌿𑌰𑌿𑌤𑌟𑌂 - திருமலையின் தாழ்வரையை, 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑍇 - அடைந்திருக்கும், 𑌦𑍇𑌹𑌿𑌨𑌿 - ப்ராணியானவன், 𑌤𑍍𑌵𑌨𑍍𑌨𑌿𑌦𑌾𑌨𑌾𑌤𑍍 - நீயாகிற காரணத்தினால், 𑌹𑍇 𑌸𑍍𑌵𑌾𑌮𑌿𑌨𑍍 - ஸ்வாமியே! 𑌪𑌾𑌹𑌿 - ரக்ஷிக்கக்கடவாய், 𑌇𑌤𑌿 - என்று, 𑌅𑌵𑌶𑌵𑌚𑌨𑍇 - தனக்கு ஸ்வாதீநமில்லாத வார்த்தையை உடையவனாய்க்கொண்டு, 𑌅𑌨𑍍𑌤𑍍𑌯𑌂 𑌸𑍍𑌵𑌾𑌪𑌂 - கடைசி தூக்கத்தை, (மரணத்தை) 𑌵𑌿𑌨𑍍𑌦𑌤𑌿 𑌸𑌤𑌿 - அடையாநிற்குமளவில், 𑌦𑍇𑌵𑌃 - ஸர்வலோகநாதனை, 𑌶𑍍𑌰𑍀𑌮𑌾𑌨𑍍 - ஸ்ரீநிவாஸன், 𑌤𑍍𑌵𑌦𑍀𑌯𑌾𑌂 - உன்னுடையதான, 𑌦𑍃𑌷𑍍𑌟𑌿𑌂 - கடாக்ஷத்தை, 𑌇𑌚𑍍𑌛𑌨𑍍 - ஆசைப்படாநின்றுகொண்டு, 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌪𑌰𑌿𑌷𑌦𑌾𑌂 - வேதஸமூஹங்களுக்கு, 𑌉𑌦𑍍𑌘𑌾𑌤𑍇𑌨 - ஆரம்பமாயிருக்கிற, 𑌉𑌤𑍍𑌤𑌰𑍇𑌣 - பதில் வார்த்தையினால், (அதாவது — வேதங்களுக்கு நியமேந ப்ரதமத்தில் படிக்கப்படுகிற ஓங்காரத்தால் என்றபடி) 𑌆𑌭𑌿𑌮𑍁𑌖𑍍𑌯𑌂 - முன் வந்து நிற்கும் தன்மையை, 𑌦𑌿𑌶𑌤𑌿 - கொடுக்கிறான்.

“கருணையே! ஸுக்ருதவிசேஷத்தால் உன்னுடைய அநுக்ரஹத்தால் திருமலையின் தாழ்வரையை அடையப் பாக்யம்பெற்ற ப்ராணியானவன் உன்னுடைய ப்ரேரணையால் தன்னை அறியாமல் ‘ஸ்வாமி என்னை ரக்ஷிக்கவேண்டு’மென்று சொல்லிக் கண்மூடுங்கால், ஸ்ரீநிவாஸன் உன்னுடைய கடாக்ஷத்தைப் பெற ஆசைப்பட்டு ‘ஓம்’ என்று ஒப்பித் தலைக்காட்டும் ஓங்காரம் என்னும் வேதங்களின் முதலெழுத்தால் ஆபிமுக்யத்தைக் கொடுக்கிறான்.”

(தா-ம்) வேதசாஸ்த்ரங்களைக் கொடுத்து அதிலுள்ள ஸம்சயங்களையும் தீர்ப்பதற்காகப் பகவானுடைய தத்வத்தை ஐயந்திரிபறத் தெளியக்காட்டும், பாகவதசாஸ்த்ரத்தைக் கொடுத்தால் மட்டும்போதாதே! கடைசியில் தேஹத்தை விடும் காலத்தில் பகவான்விஷயமாக அந்திமஸ்மரணம் வேண்டுமே, "எதை ஸ்மரித்துக்கொண்டு முடிவில் தேஹத்தை விடுகிறானோ, அதை அடைகிறான்" என்றல்லவோ கீதையில் பகவானுடைய வார்த்தை. திருமலையின் தாழ்வரையை அடைந்தவர்களுக்கு ஸ்ரீநிவாஸன் விஷயமான அந்திம ஸ்மரணத்தையும் தயையே செய்விக்கிறாள் என்கிறார். வேங்கடமலைக்குச் செல்லும்படியான பாக்யமும் தயையின் புருஷகாரத்தால் பாக்யவசத்தால் கிடைக்கிறது. வேங்கடமலைக்கு அருகிலுள்ள நாட்டில் தேஹவியோகம் அடைகிறவர்கள் காரணகளேபரங்கள் ஸ்வாதீனமில்லாவிடினும், அவசமாகவாவது தயையின் கடாக்ஷத்தால் ஸ்வாமி காப்பாற்றவேணுமென்று சொல்லுவார்கள். இதைக் கேட்ட ஸ்ரீநிவாஸன் தயையின் கடாக்ஷத்தைப் பெறுவதற்காகத் தயை சொல்லிவைத்துக் கேட்கும்படி செய்த ரக்ஷணப்ரார்த்தனைக்கு 'ஓம்' என்று அங்கிகாரத்திற்கு அடையாளமாய் பதில் வார்த்தை சொல்லிக்கொண்டு, அவன் முன்னிலையில் வந்து ஸேவை ஸாதிப்பார். 'ஓம்' என்கிற பதத்திற்கு வடமொழியில் 'ஆம்' என்றும், ஒப்புக்கொள்ளுகிறேன் என்றும் பொருளுண்டு. வேதங்களுக்கெல்லாம் ப்ரதிபாத்யனான பரமபுருஷன் வேதங்களில் முதலெழுத்தாகிய ப்ரணவமென்னும் ஓங்காரத்தைச் சொல்லி அப்படியே ஆகட்டும் என்று பதில் சொல்லுகிறான். கடைசிக்காலத்தில் பகவானுடைய திருவாக்கிலிருந்து ப்ரணவம் கர்ணமந்த்ரமாக இவன் காதில் விழுகிறது. இங்கே உத்தரத்தினால் என்கிற பதம் பதிலைச் சொல்வதுமன்னியில் பகவானை அடைவதற்கு மார்க்கமென்று ச்ருதிபரிஷத்துக்களால் உத்கோஷிக்கப்படும் உத்தரமார்க்கமான அர்ச்சிராதி கதியையும் சொல்லும். உபநிஷத்துக்களில் ப்ரஸித்தமான உத்தரமார்க்கத்தால் பகவானுடைய ஆபிமுக்யத்தை அடையும்படி செய்கிறாரென்றும் பொருள் கிடைக்கிறது. உத்காதம் என்பது முதலுக்குப் பெயர். வேதங்களின் முதல் ப்ரணவமாகும். (48)

ஶ்ரேயஃஸூதிம் ஸக்ருதபி தயே ஸம்மதாம் யஃ ஸகீம் தே ஶீதோதாராமலபத ஜநஃ ஸ்ரீநிவாஸஸ்ய த்ருஷ்டிம் । தேவாதீநாமயமந்ருணதாம் தேஹவத்வேऽபி விந்தந் பந்தாந்முக்தோ பலிபிரநகைஃ பூர்யதே தத்ப்ரயுக்தைஃ ॥ ॥ சசு ॥

ச்ரேயஸ்ஸூதிம் ஸக்ருதபி தயே ஸம்மதாம் ய: ஸகீம் தே
சீதோதாராமலபத ஜந: ஸ்ரீநிவாஸஸ்ய த்ருஷ்டிம் I
தேவாதீநாமயமந்ருணதாம் தேஹவத்வேZபி விந்தந்
பந்தாந்முக்தோ பலிபிரநகை: பூர்யதே தத்ப்ரயுக்தை: II

(ப-ரை) ஹே தயே - ஓ தயையே! யஃ ஜநஃ - யாதொரு ப்ராணியானவன், ஶ்ரேயஸ்ஸூதிம் - நிருபாதிகச்ரேயோரூபமான மோக்ஷத்தை உண்டுபண்ணுகிறதாயும், ஶீதோதாராம் - குளிர்ச்சி ஔதார்யம் இவைகள் பொருந்தியதாயிருக்கும், தே - உன்னுடைய, ஸம்மதாம் - அபிமதமான, ஸகீம் - தோழியான ஸ்ரீநிவாஸஸ்ய - ஸ்ரீநிவாஸனுடைய, த்ருஷ்டிம் - கடாக்ஷத்தை, (அதாவது - ஜாயமாந கடாக்ஷத்தை) ஸக்ருதபி - ஒரு தரமாவது, (ஒரு ஜந்மத்திலாவது) அலபத - அடைந்தானோ, அயம் - இவன், (சரீரமுள்ளவனாயிருக்கச் செய்தேயும்) தேவாதீநாம் - தேவர்கள் முதலானவர்களிடத்தில் அந்ருணதாம் - கடனில்லாமையை, விந்தந் - அடையா நின்றுகொண்டு, பந்தாத் - இத்தேஹபந்தத்தினின்று, முக்தஃ - விடுபட்டவனாய், தத்ப்ரயுக்தைஃ - அந்த தேவர்களாலே ஸமர்ப்பிக்கப்பட்டிருக்கிற, அநகைஃ - நிர்தோஷங்களான, பலிபிஃ - உபஹாரங்களாலே, பூர்யதே - பூரிக்கப்படுகிறான்.

“தயையே! எந்த மனுஷ்யன் ஸர்வோத்க்ருஷ்டமாகிய ச்ரேயஸ்ஸாகிய மோக்ஷத்தை அளிக்கக்கூடியதும், குளிர்ச்சியும் ஔதார்யமுமுடையதும், உன்னுடைய ப்ரியஸகியுமான ஸ்ரீநிவாஸ த்ருஷ்டியை அதாவது- கடாக்ஷத்தை, ஒருதரமாவது பெறுகிறானோ அவன் சரீரத்தோடு கூடியிருக்கையிலேயே தேவதைகளுக்குக் கொடுக்கவேண்டிய கடன்களிலிருந்து விடுபட்டவனாகி

தேஹமென்னும் கட்டிலிருந்து விமோசனம் பெற்று அந்த தேவர்களாலே ஸமர்ப்பிக்கப்படும் உபஹாரங்களால் பூர்த்தி செய்யப்படுகிறான்".

(தா-ம்) ஸ்ரீநிவாஸனுடைய த்ருஷ்டி தயாதேவிக்கு ப்ரியமான தோழி. தயையின் கடாக்ஷங்கள் யாரிடத்தில் விழுகிறதோ அந்த இடத்தில் அவருடைய தோழியாகிய ஸ்ரீநிவாஸனுடைய த்ருஷ்டியும் கூடச்செல்லுகிறாள். தயையை அனுஸரித்துப் பெருமாள் கடாக்ஷம் கூடவிழுகிறது. ஒருதரம் அந்தக் கடாக்ஷம் பிறக்குங்காலத்தில் விழப்பெற்றால் ஸாத்விகனாகி மோக்ஷத்தில் கருத்துள்ளவனாவான் என்கிற சாஸ்த்ரவசனத்தை இங்கே நினைக்கிறார். பித்ருக்களுக்கும், தேவர்களுக்கும், ரிஷிகளுக்கும் கொடுக்கவேண்டிய கடன்களை முக்கடனென்பர். தயாதேவியைச் சரணமடைந்து ஸ்ரீநிவாஸகடாக்ஷம் பெற்றவர்கள் இந்தக் கடன்களிலிருந்து விடுபடுவார். இவர்கள் மோக்ஷமடையுங்கால் இவர்களுக்குத் தேவர்கள் மிகுந்த வணக்கத்துடனும் ஆதரவுடனும் இவர்களுக்குப் பலிகள் கொண்டுவந்து ஸமர்ப்பிப்பார்கள் என்று சாஸ்த்ரம். இதனால் இவர்கள் தேவர்களுக்குக் கடன் கொடுக்க வேண்டியிருந்தது போய் இவர்களுக்குத் தேவர்கள் கடன்கொடுக்க வேண்டியவர்களாகிறார்கள் என்பது கருத்து. (49)

𑌦𑌿𑌵𑍍𑌯𑌾𑌪𑌾𑌙𑍍𑌗𑌂 𑌦𑌿𑌶𑌸𑌿 𑌕𑌰𑍁𑌣𑍇 𑌯𑍇𑌷𑍁 𑌸𑌦𑍍𑌦𑍇𑌶𑌿
𑌕𑌾𑌤𑍍𑌮𑌾 𑌕𑍍𑌷𑌿𑌪𑍍𑌰𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌾 𑌵𑍃𑌷𑌗𑌿𑌰𑌿𑌪𑌤𑌿𑌂 𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌬𑌨𑍍𑌧𑍍𑌵𑌾
𑌦𑌯𑌸𑍍𑌤𑍇 । 𑌵𑌿𑌶𑍍𑌵𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌾 𑌵𑌿𑌧𑌿𑌶𑌿𑌵𑌮𑍁𑌖𑌾𑌃 𑌸𑍍𑌵𑌾𑌧𑌿𑌕𑌾𑌰𑍋
𑌪𑌰𑍁𑌦𑍍𑌧𑌾 𑌮𑌨𑍍𑌯𑍇 𑌮𑌾𑌤𑌾 𑌜𑌡 𑌇𑌵 𑌸𑍁𑌤𑍇 𑌵𑌤𑍍𑌸𑌲𑌾
𑌮𑌾𑌦𑍃𑌶𑍇 𑌤𑍍𑌵𑌂 ॥ ॥ ௫௦ ॥

திவ்யாபாங்கம் திசஸி கருணே யேஷு ஸத்தேசிகாத்மா
க்ஷிப்ரம் ப்ராப்தா வ்ருஷகிரிபதிம் க்ஷத்ரபந்த்வாதயஸ்தே ।
விச்வாசார்யா விதிசிவமுகா: ஸ்வாதிகாரோபருத்தா
மந்யே மாதா ஜட இவ ஸுதே வத்ஸலா மாத்ருசே த்வம் ॥

(ப-ரை) 𑌹𑍇 𑌕𑌰𑍁𑌣𑍇 - ஓ தயையே! 𑌤𑍍𑌵𑌂 - நீ, 𑌯𑍇𑌷𑍁 - எவர்களிடத்தில், 𑌸𑌦𑍍𑌦𑍇𑌶𑌿𑌕𑌾𑌤𑍍𑌮𑌾 𑌸𑌤𑍀 - ஸதாசார்யரூபியாய்க் கொண்டு, 𑌦𑌿𑌵𑍍𑌯𑌾𑌪𑌾𑌙𑍍𑌗𑌂 - ஶ்லாக்யமான கடாக்ஷத்தை, 𑌦𑌿𑌶𑌸𑌿 - கொடுக்கிறாயோ, 𑌤𑍇 - அப்படிப்பட்ட, 𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌬𑌨𑍍𑌧𑍍𑌵𑌾𑌦𑌯𑌃

க்ஷத்ரபந்து முதலியவர்கள், வ்ருஷகிரிபதிம் - திருவேங்கட முடையானை, க்ஷிப்ரம் - சீக்ரத்தில், ப்ராப்தா: - அடைந்தவர் களாகிறார்கள். விச்வாசார்யா: - ஸர்வலோகங்களுக்கும் ஆசார் யர்களான, விதிசிவாதய:-பிரமன் சிவன் தொடக்கமானவர் கள், ஸ்வாதிகாரோபரோதாத் - தங்கள் அதிகாரங்களாலே தடைபட்டிருக்கிறார்கள். அத: - ஆகையால், மாதா - தாயா னவள், ஜடே - மூடனான, ஸ்தநந்தயே - பிள்ளையினிடத்தில் போல, த்வம் - நீ, மாத்ருசே - என்போலியான சேதனர் விஷ யத்தில், வத்ஸலா - வாத்ஸல்யமுடையவளாகிறாய் என்று, மந்யே - நிச்சயிக்கிறேன்.

“கருணையே! யார்விஷயத்தில் ஸதாசார்யரூபத்தைக் கொண்டு நீ உன்னுடைய திவ்யமான கடைக்கண் பார்வையை வைக்கி றாயோ, அவர்கள் பாபிஷ்டனான க்ஷத்ரபந்துவைப் போன்றவரா யிருந்தாலும் சீக்ரத்தில் ஸ்ரீநிவாஸனை அடைவார்கள். ஜகதா சார்யர்களான ப்ரஹ்மேசாதிகள் தங்களுடைய அதிகாரங்களால் மோக்ஷத்தில் விளம்பத்தை அடைந்து அவர்களுக்கு மோக்ஷம் தாமஸிக்கிறது. இதனால் ஸாமர்த்யமில்லாத அசட்டுப் பிள்ளைக ளிடத்தில் தாய்க்கு அதிகவாத்ஸல்யம் இருப்பதுபோல் என் போன்றவர் விஷயத்தில் தாயான உனக்கு அதிகவாத்ஸல்யமிருப் பதாக நான் நினைக்கிறேன்”.

(தா-ம்) தயைக்குத் தோழியான ஸ்ரீநிவாஸத்ருஷ்டியை முன் ச்லோகத்தில் வர்ணித்தார். இங்கே தயையின் திவ்யமான த்ருஷ்டியை வர்ணிக்கிறார். ஆசார்யர்கள் தயையின் மூர்த்திக ளாவார். அவர்கள் கடாக்ஷங்கள் தயையின் கடாக்ஷங்கள். இந்த தசகம் இங்கே முடிகிறது. அடுத்த தசகத்தில் சரணாகதியைச் செய்யப்போகிறார். பாபிஷ்டனான க்ஷத்ரபந்துவுக்கும் ஆசார்யனை ஆச்ரயித்ததால் மோக்ஷம் கிடைத்ததாகையால் ஆசார்யவானாக இருக்கவேண்டும் என்று சாஸ்த்ரவசனம். ஆசார்யனுடைய க்ரு பையால் பாபிஷ்டர்களான க்ஷத்ரபந்துபோன்றவர்களும் ஸ்ரீநி வாஸன் திருவடியை அடைந்து முக்தரானார்கள். ஜகத்துக்கெல் லாம் ஆசார்யர்களான ப்ரஹ்மேசாதிகள் முக்திக்கு யோக்யராய் இருந்தாலும், தங்கள் தங்கள் அதிகாரங்களைச் செலுத்தி, அந்த அதிகாரம் முடிந்த பின்புதான் முக்தி அடைவர். அவர்களுக்கு

மோக்ஷம் கிடைக்கத் தாமதிக்கிறது. என்போன்ற பாபிகளுக்கு ஆசார்யகடாக்ஷப்ரபாவத்தால் சீக்ரத்தில் மோக்ஷம் கிடைத்துவிடு கிறது. இது எப்படி ந்யாயமாகும்? என்கிற ஆக்ஷேபத்திற்கு அழகாக ஒரு லோகத்ருஷ்டாந்தத்தைக் கொண்டு ஸமாதானம் கூறுகிறார். யோக்யதையும், ஸாமர்த்யமும், எந்தக் குழந்தைக் குக் குறைவாயிருக்குமோ அந்தக் குழந்தையினிடத்தில் யோக்ய ரும் ஸமர்த்தருமான மற்றக் குழந்தைகளைவிட தாயாருக்கு அதிக வாத்ஸல்யம் இருப்பது ஸஹஜம். அதைப்போல எல்லாருக்கும் தாயான தயாதேவி அசட்டுப் பிள்ளையாகிய என்னிடத்தில் அதி கமான வாத்ஸல்யத்தை வஹிக்கிறாள். (50)

ஊதிகூ௱வ்ணொாzவி ஜஹ௱ரயிமஉ௵ ஓயெ ஹவதீ
ஊஶியிஶியஊபுஷெதா௱வஓவீ௦ ௱௱விரா ஊவிராக ॥
ஊஜிதஊஹொஜிபுஜாஶ்ஊதிஜஉ௵ ஹவா ஊ௱நியி௦
ஹவதி வ௱ஷாவஶெஶவஓவத்தநிதூ௵யநீ ॥௫௧॥

அதிக்ருபணோZபி ஜந்துரதிகம்ய தயே பவதீ
மசிதிலதர்மஸேதுபதவீம் ருசிராமசிராத் ।
அமிதமஹோர்மிஜாலமதிலங்க்ய பவாம்புநிதிம்
பவதி வ்ருஷாசலேசபதபத்தந நித்யதநீ ॥ (51)

(ப-ரை) ஓயெ - தயாதேவியே! ஊதிகூ௱வணொாzவி ஜஹ௱: - மிகவும் அகிஞ்சனனான ஜந்துவாயிருப்பவனும், ௱௱வி ௱ா௦ - அழகியதான, (அனுயாஸமான) ஊஶியிஶியஊபுஷெதா௱ வஓவீ௦ - உடையாத (கெட்டியான, நழுவாத) சரணாகதி என் னும் (ஸம்ஸாரஸமுத்ரம் தாண்டும்) பாலமாகிய மார்க்கமான, ஹவதீ௦ - உம்மை, ஊயிமஉ௵ - அடைந்து, (நிச்சயித்து), ஊவி ௱ாக - தாமதமன்னியில், (உடனே) ஊஜிதஊஹொஜிபுஜாஶ௦ - அளவிடக்கூடாத பெரும் அலைகள் கூட்டமாய் அலைக்கும், ஹவா௦வ௱நியி௦- ஸம்ஸாரஸமுத்ரத்தை, ஊதிஜஉ௵ - தாண்டி, வ௱ஷாவஶெஶவஓவத்தநிதூ௵யநீ - வேங்கடமலை அரசன் திருவடியாகிய பத்தனமென்னும் நித்யமான செல்வத்தை உடையவனாக, ஹவதி - ஆகிறான்.

"தயையே! மிகவும் அகிஞ்சனனான ஜந்துகூட த்ருடமான தர்மஸேதுவான பகவானை அடைவதற்கு, அழகானமார்க்கமாகிய

உன்னை அடைந்து அதிவேகமாய்ப் பசி தாஹம் ஆசை முதலிய அபரிமிதமான அலைகளின் கூட்டங்களால் மிகவும் கோரமான ஸம்ஸார ஸமுத்ரத்தைக் கடந்து வ்ருஷாசலபதியின் திருவடி என்கிற பத்தனத்தில் நித்யதனவானாகிறான். (பதபத்தநத்தைத் தனக்கு நித்யதனமாக உடையவனாகிறான்)".

இந்த ஆறாவது தசகத்தில் திருவேங்கடமுடையான் தயையினிடத்தில் சரணாகதி செய்கிறார். ஆழ்வாரும் திருவாய்மொழியில் ஆறும்பத்தில் 'அகலகில்லேனிறையும்' என்கிற பாசுரத்தில் 'உன்னடிக்கீழமர்ந்தேனே' என்று திருவேங்கடமுடையான் திருவடிகளில் சரணம் புகுந்தார். இந்த தசகத்தில் முதல் ச்லோகத்தில் தயையைச் சரணம் பற்றும் மார்க்கத்தைக் காட்டிவிட்டு, ஒன்பதாவது ச்லோகத்தில் இந்த மார்க்கத்தைக் காட்டிய பரமாசிரியர்களாகிய யதிபதி யாமுனர் முதலியவர்களை ஸ்துதித்து அதனடுத்த ச்லோகமாகிய பத்தாவது ச்லோகத்தில் தயையினிடத்தில் சரணம் புகுகிறார். மத்தியிலுள்ள மற்ற ச்லோகங்களில் கங்கை முதலிய நதிகளைப்போல பாபத்தைப் போக்குவது முதலிய தயாப்ரவாஹங்களைக் கூறுகிறார். இதற்கு முன் ச்லோகத்தில் பாபிஷ்டன் என்று வர்ணிக்கப்படும் க்ஷத்ரபந்து முதலியவர்களுக்கும் ஆசார்யனை ஆச்ரயித்த ப்ரபாவத்தால் மோக்ஷம் கிடைத்ததைக் காட்டினார். சரணாகதிக்கு வேறு கதி இல்லாமை என்கிற ஆகிஞ்சந்யம் இன்றிமையாதது. அதைக் கார்ப்பண் என்றும் சொல்லுவர். அத்யந்தம் க்ருபணனாயிருப்பவன் கூட மோக்ஷத்திற்கு மிகவும் ஸமீபமான மார்க்கமாகிய தயையை ஆச்ரயித்தால் அதிசீக்ரத்தில் அவன் ஸம்ஸாரஸமுத்ரத்தைத் தாண்டி பகவானுடைய திருவடி என்கிற நித்யதனத்தையடைந்து நீங்காச் செல்வம் பெறுவான். ச்லோகத்தின் ஆரம்பத்திலேயே 'அதிக்ருபணன்கூட' என்று கூறுவதால் சரணாகதிக்கு முக்யமாக வேண்டிய ஆகிஞ்சன்யத்தையும், அநந்யகதித்வத்தையும் காட்டுகிறார். பேதையினும் பேதையாயிருப்பவன்கூட எல்லோருக்கும் மேல்பட்ட தனவானாவான் என்கிறார். 'ஜந்து' என்று சொல்வதால் இந்த உபாயத்தில் எல்லோருக்கும் அதிகாரம் உண்டென்று காட்டுகிறார். 'ஸேது' என்பது பாலத்தைச் சொல்லும். ஸம்ஸாரமென்னும் பயங்கரமான ஸமுத்ரத்தைத் தாண்டுவதற்குத் தயை ஓர் அழகிய பாலமாவாள். தயை மோக்ஷத்திற்கு

மிகவும் நெருங்கிய வழியுமாவாள். இந்த தசகம் பாகவதத்தில் ச்ருதி கீதை பாடப்பட்ட சந்தத்தில் ஏற்பட்டது. இந்த வ்ருத்தம் மிகவும் உருக்கத்தையுடையது. சரணாகதி செய்பவனுடைய பேதைமையைக் காட்ட இது மிகவும் அநுரூபமானது.(51)

𑌅𑌭𑌿𑌮𑍁𑌖𑌭𑌾𑌵𑌸𑌂𑌪𑌦𑌭𑌿𑌸𑌂𑌭𑌵𑌿𑌨𑌾𑌂 𑌭𑌵𑌿𑌨𑌾𑌂
𑌕𑍍𑌵𑌚𑌿𑌦𑍁𑌪𑌲𑌕𑍍𑌷𑌿𑌤𑌾 𑌕𑍍𑌵𑌚𑌿𑌦𑌲𑌕𑍍𑌷𑌿𑌤𑌗𑍂𑌢𑌗𑌤𑌿𑌃 ।
𑌵𑌿𑌮𑌲𑌰𑌸𑌾𑌵𑌹𑌾 𑌵𑍃𑌷𑌗𑌿𑌰𑍀𑌶𑌦𑌯𑍇 𑌭𑌵𑌤𑍀
𑌸𑌪𑌦𑌿 𑌸𑌰𑌸𑍍𑌵𑌤𑍀𑌵 𑌶𑌮𑌯𑌤𑍍𑌯𑌘𑌮𑌪𑍍𑌰𑌤𑌿𑌘𑌮𑍍 ॥ ௫௨ ॥

அபிமுகபாவஸம்பதபிஸம்பவிநாம் பவிநாம்
க்வசிதுபலக்ஷிதா க்வ:சிதபங்குரகூடகதி: ।
விமலரஸாவஹா வ்ருஷகிரீசதயே பவதீ
ஸபதி ஸரஸ்வதீவ சமயத்யகமப்ரதிகம் ॥ (52)

(ப-ரை) 𑌵𑍃𑌷𑌗𑌿𑌰𑍀𑌶𑌦𑌯𑍇 - *வேங்கடமலையரசன் தயையே!* 𑌭𑌵𑌤𑍀 - *நீர்,* 𑌕𑍍𑌵𑌚𑌿𑌦𑍁𑌪𑌲𑌕𑍍𑌷𑌿𑌤𑌾 - *சிலவிடங்களில் (சில ஸமயங்களில்) கண்ணுக்குத் தெரிகிறவளாயும்,* 𑌕𑍍𑌵𑌚𑌿𑌦𑌲𑌕𑍍𑌷𑌿𑌤𑌗𑍂𑌢𑌗𑌤𑌿𑌃- **சிலவிடங்களில் (சில ஸமயங்களில்)** *மறைந்ததும் தடைபட்டதுமான ஓட்டத்தை உடையவளாயும்,* 𑌵𑌿𑌮𑌲𑌰𑌸𑌾𑌵𑌹𑌾 - *கலக்கமில்லாத தெளிவான ரஸத்தை (ஜலத்தை)ப் பெருக்கிக்கொண்டுவருகிறவளுமான,* 𑌸𑌰𑌸𑍍𑌵𑌤𑍀𑌵 - *ஸரஸ்வதி நதியென்னும் அந்தர்வாஹி நதியைப்போல,* 𑌅𑌭𑌿𑌮𑍁𑌖𑌭𑌾𑌵𑌸𑌂𑌪𑌦𑌭𑌿𑌸𑌂𑌭𑌵𑌿𑌨𑌾𑌂 - *உன் விஷயத்தில் ஆநுகூல்யத்தை வஹிக்கிறதென்கிற ஸம்பத்தென்னும் பாக்யத்தைக் கைப்பற்றும்,* 𑌭𑌵𑌿𑌨𑌾𑌂 - *ஸம்ஸாரிகளுடைய,* 𑌅𑌪𑍍𑌰𑌤𑌿𑌘𑌂 - *தீர்ப்பதற்கு அரிய, கோபலேசமும் மீறாமல், (நிஶ்ஶேஷமாக)* 𑌅𑌘𑌂 - *பாபத்தை,* 𑌸𑌪𑌦𑌿 - *உடனே,* 𑌶𑌮𑌯𑌤𑌿 - *போக்குகிறது.*

"வ்ருஷகிரீச்வரனுடைய தயையே! ஸரஸ்வதி நதியைப்போல சிலவிடங்களில் வெளிப்படையாய்த் தெரிந்தும், சிலவிடங்களில் மறைந்து சென்றும், நிர்மலமான ஜலத்தையும், ஸ்நேஹத்தையும் ப்ரவஹித்துக்கொண்டு கிட்டே நெருங்கும் பாக்யத்தைப் பெறுகிற ஸம்ஸாரிகளின் தீராத வினைகளையெல்லாம் அதிவேகமாய்த் தீர்த்துவிடுகிறாய்."

(தா-ம்) தாய் போன்ற தயைக்கு நாம் அபிமுகமாக நோக்கி நெருங்கினல் அதினலேயே தயைக்கு ஸந்தோஷம் பிறந்து நாம் ஆசைப்படும் மோக்ஷம் கைகூடும். ‘அபிஸம்பவம்’ என்பது மோக்ஷத்தைச் சொல்லும். நமக்குக் கஷ்டங்கள் ஏற்படுவது நம்மைத் திருத்தி நல்வழிக்குக் கொண்டுவருவதற்காக ஈச்வரன் கருணையால் செய்விப்பதே யொழிய வேறல்ல. நம்முடைய ஹிதத்துக்காகத் தான் கஷ்டங்கள் நமக்கு வருவது. இந்த ஹிதத்தை தயாதேவி மறைவாக நமக்குச் செய்கிருள். நமக்கு ப்ரியமான சுகங்களை மட்டும் அவள் பஹிரங்கமாக நமக்கே தெரியும்படி செய்கிருள். கஷ்டம் வரும்பொழுது நம்முடைய ஹிதத்துக்காக ஈச்வரன் தயவினுல் அதைச் செய்கிருனென்று நாம் தெரிந்துகொள்ளுகிற தில்லை. ஆயினும் வாஸ்தவத்தில் அந்தக் கஷ்டமும் தயவினுல் தான் செய்விக்கப்படுகிறது. கஷ்டம், சுகம், இரண்டும் தயா கார்யம். ஸரஸ்வதிநதி சில இடங்களில் பூமி மட்டத்தில் வெளிப் படையாக ஓடும். வேறு சில இடங்களில் பூமிக்குள்ளே மறைவாக அந்தர்வாஹினியாகப் போகும். அந்த இடங்களிலும் அந்த நதியின் ஓட்டத்திற்குக் குறைவில்லை. நமக்குக் கஷ்டங்கள் ஏற்படுவதிலும் தயையின் ப்ரவாஹத்தின் ஓட்டத்திற்குக் குறைவில்லை. ஆனுல், அதுவும் தயையென்று நமக்கு வெளிப்படையாய் தெரியாமல் மறைவாக ஓடும். ஸரஸ்வதியின் நிர்மலமான ஜலங்கள் தீராத வினைகளெல்லாம் தீர்ப்பதுபோல் தயையின் சுத்தமான ப்ரவாஹங்கள் வேறு ஒரு வழியாலும் தீர்க்கமுடியாத பாபங்களை ஒரு நொடிப்பொழுதில் போக்கிவிடும்.

𑌅𑌪𑌿 𑌕𑌰𑍁𑌣𑍇 𑌜𑌨𑌸𑍍𑌯 𑌤𑌰𑍁𑌣𑍇𑌨𑍍𑌦𑍁𑌵𑌿𑌭𑍂𑌷𑌣𑌤𑌾
𑌮𑌪𑌿 𑌕𑌮𑌲𑌾𑌸𑌨𑌤𑍍𑌵𑌮𑌪𑌿 𑌧𑌾𑌮 𑌵𑍃𑌷𑌾𑌦𑍍𑌰𑌿𑌪𑌤𑍇𑌃 ।
𑌤𑌰𑌤𑌮𑌤𑌾𑌵𑌶𑍇𑌨 𑌤𑌨𑍁𑌤𑍇 𑌨𑌨𑍁 𑌤𑍇 𑌵𑌿𑌤𑌤𑌿𑌃
𑌪𑌰𑌹𑌰𑌿𑌵𑌰𑍍𑌷𑍍𑌮𑌣𑌾 𑌪𑌰𑌿𑌪𑌚𑍇𑌲𑌿𑌮𑌕𑍇𑌲𑌿𑌮𑌤𑍀 ॥ ௫௩

அபி கருணே ஜநஸ்ய தருணேந்துவிபூஷணதா
மபி கமலாஸநத்வமபி தாம வ்ருஷாத்ரிபதே: ।
தரதமதாவசேந தநுதே நநு தே விததி:
பரஹரிவர்ஷ்மணா பரிபசேளிமகேளிமதீ ॥ (53)

(ப-ரை) கருணே - தயையே! பரஹிதவபுஷா - பிறர் ஹிதத்தை நினைக்கும் ரூபத்தாலேயே, பரிணதகேளிமதீ - பரிபாகமடைந்த விளையாட்டுடைய, தே ததி:- உன் அலை மோதும் ப்ரவாஹம், ஜநஸ்ய - ஜனங்களுக்கு, தருணஹிமாம்ஶுபூஷணபதவீம் - இளம் சந்த்ரனை முடிசூடிய சிவபதத்தையும், கமலாஸநபதவீம் - ப்ராஹ்மபதத்தையும், வ்ருஷகிரிபதே: - வேங்கடமலை அரசனுடைய, யாம் பதவீம் - வாஸஸ்தலத்தையும், தரதமதாவஶேந - தாரதம்யவசத்தால், ததாதி நநு - அளிக்கவில்லையா ? (அளிக்குமென்பது திண்ணம்)

"ஏ கருணையே? பிறருக்கு ஹிதத்தைச்செய்கிறதென்கிற உருவத்தை எடுத்துக்கொண்டு விளையாடும் உன்னுடைய பரப்பானது உன்னை ஆச்ரயித்தவர்களுடைய தாரதம்யத்துக்குத் தக்கபடி இளம் சந்திரனை முடியிலணிந்த ஈச்வரன் பதத்தையும் கமலாஸநனப்ரஹ்மாவின் பதத்தையும்,வ்ருஷாசலபதியின் பதமாகிய பரமபதத்தையும் கொடுக்கிறதல்லவா ?"

(தா-ம்) பிறர்களுக்கு ஹிதத்தைச் செய்வதென்பதே தயையின் ஸ்வரூபமாகும். அது தான் தயாதேவிக்கு லீலையாகும். 'ஜநம்' என்கிற பதம் ஸாமான்யமான எல்லா ஜனங்களையும் சொல்லும். இந்தப்பதத்தாலும் ப்ரபத்தி என்பது ஸர்வாதிகாரமென்பதை ஸூசிக்கிறார். (53)

த்ருதபுவநா தயே த்ரிவிதகத்யநுகூலதரா
வ்ருஷகிரிநாதபாதபரிரம்பவதீ பவதீ ।
அவிதிதவைபவாபி ஸுரஸிந்துரிவாதநுதே
ஸக்ருதவகாஹமாநமபதாபமபாபமபி ॥ ௫௪

த்ருதபுவனா தயே த்ரிவிதகத்யநுகூலதரா
வ்ருஷகிரி நாதபாத பரிரம்பவதீ பவதீ ||
அவிதிதவைபவாபி ஸுரஸிந்துரிவாதநுதே
ஸக்ருதவகாஹமாந மபதாப மபாபமபி |

(ப-ரை) தயே - தயையே ! பவதீ - நீர், ஸுரஸிந்துரிவ - தேவநதியாகிய கங்கையைப்போல, த்ருதபுவநா-

உலகத்தைத்தாங்குகிறவளாயும், த்ரிவிதமார்க்கானுகுணா - மூன்று விதமான மார்க்கங்களுக்கும் மிக்க அநுகூலமாயும், வ்ருஷகிரிநாதபாதஸம்ச்லேஷவதீ - வேங்கடமலைநாதன் திருவடியின் அணைதலையுடையவளாயும், அவிதித வைபவாபி - அறியப்படாத மஹிமையையுடையவளாயிருந்தும், ஸக்ருதவகாஹமானம் (அபி) - ஒருதரம் ஸ்நானம் செய்பவனைக்கூட (ஆச்ரயிக்கிறவனைக்கூட), அபதாபம் - தாபம் நீங்கினவனையும், அபாபம் அபி - பாபம் நீங்கினவனையும், கரோஷி - செய்கிறீர்.

"தயையே? உலகத்தையெல்லாம் போஷிப்பவளாயும், மூன்று விதமான கதிகளுக்கும் மிகவும் அநுகூலமாயும், திருவேங்கடமுடையானுடைய திருவடியை அணைந்தவளாயும் உள்ள நீ உன்னுடைய ப்ரபாவத்தைத் தெரிந்துகொள்ளாதவர்களுக்கும் ஒருகால் உன்னிடம் இறங்கி ஸ்நாநம் செய்தவரையும், தேவ நதியாகிய கங்கையைப்போல் தாபம் நீங்கினவராயும் பாபம் நீங்கினவராயும் செய்கிறாய்."

(தா-ம்) இந்த சுலோகத்தில் பல விசேஷணங்களால் தயைக்கும் கங்கைக்கும் ஒற்றுமையைக் காட்டுகிறார். கங்கை உலகத்தை போஷித்துத் தாங்குவதுபோல் தயையும் போஷணம் செய்து தாங்குகிறாள். கங்கைக்கு மூன்று கதிகள் உண்டு. கங்கைக்கு 'த்ரிபதகா' 'த்ரிமார்க்ககா' என்று பெயர். தயை ஐச்வர்யம், கைவல்யம், மோக்ஷம் என்கிற மூன்றுவிதமான புருஷார்த்தங்களுக்கும் காரணமாகிறாள். கங்கை பகவானுடைய திருவடியை அணைந்ததுபோல் தயையும் அவன் திருவடியை அணைந்தவள். கங்கையின் வைபவத்தைத் தெரிந்துகொள்ளாமலிருந்தாலும் ஒருதரம் கங்கையில் ஸ்நானம் செய்தால் அதனாலேயே தாபமும், பாபமும் தொலையும். தயையில் ஸ்நானம் செய்வதாவது தய்யினிடத்தில் பாரத்தை ஸமர்ப்பணம் செய்தல். (54)

நிகமஸௌதசிகா நிகாமமேக்ஷ்யா
ஹதி வஹன்த்யஹ்ய (அஹ்) தி: பரிதவஹிதா ।
ப்ரகடிதஹம்ஸகுரு ஸம்ஹிதா ரகசதா
ப்ரபத்யஸம்ப்ரியம் வ்ருஷகிரீசதயே வஹஸி ॥ ॥ருரு॥

நிகமஸமாச்ரிதா நிகிலலோக ஸம்ருத்திகரீ
பஜதககூலமுத்ருஜ கதி: பரிதப்தஹிதா ।
ப்ரகடித ஹம்ஸமத்ஸ்ய கமடாத்ய வதாரசதா
விபுதஸரித் ச்ரியம் வ்ருஷகிரீசதயே வஹஸி ॥

(ப-ரை) வ்ருஷகிரீசதயே - வேங்கடமலையரசன் தயையே ! நிகமஸமாச்ரிதா - வேதத்தை ஆச்ரயித்தவளாயும் (வேதப்ரதிபாத்யமாயும்), நிகிலலோகஸம்ருத்திகரீ - எல்லா லோகத்திற்கும் (ஜனத்திற்கும்) ஸம்ருத்தியைச் செய்பவளாயும், பஜதககூலமுத்ருஜகதி: - பஜனம் செய்கிறவர்களுடைய பாபங்களை கரைபுரண்ட வெள்ளங்களால் போக்கிவிடுகிறவளாயும், பரிதப்தஹிதா - மிகவும் தபிக்கப்பட்டவர்களுக்கு ஹிதமாயும், ப்ரகடிதஹம்ஸமத்ஸ்யகமடாத்யவதாரசதா - ஹம்ஸம், மீன் முதலிய நூற்றுக்கணக்கான அவதாரங்கள் மிதப்பதாயும் (உள்ள நீ), விபுதஸரிச்ச்ரியம் - கங்கையின் சீரை, வஹஸி - வஹிக்கிறாய்.

"வ்ருஷாசலபதியின் தயையே ! வேதங்களால் ஸமாச்ரயிக்கப்பட்டவளாயும், ஸர்வலோகங்களுக்கும் ஸம்ருத்தியை உண்டு பண்ணுகிறவளாயும், ஆச்ரிதர்களுடைய பாபமென்னும் கரையைத் தன்னுடைய வெள்ளத்தால் உடைப்பவளாயும், மிகவும் தாபத்தால் வருந்துகின்றவர்களுக்கு ஹிதத்தைச் செய்கிறவளாயும், ஹம்ஸம், மத்ஸ்யம், கூர்மம் முதலிய அநேக அவதாரங்களை வெளியில் காட்டுபவளாயும் இருப்பதால் நீ தேவநதியின் சிறப்பை வஹிக்கிறாய்."

(தா-ம்) தயைக்குச் சொன்ன விசேஷணங்களெல்லாம் கங்காநதிக்கும் ஒட்டும், வேதங்கள் கங்கையைத் துதிப்பதுபோல் தயையையும் துதிக்கின்றன. இரண்டும் வேதங்களால் ஆச்ரயிக்கப்பட்டன. இரண்டும் சகல லோகத்திற்கும் ஸம்ருத்தியைச் செய்யும், ஆச்ரிதர்களுடைய பாபத்தைத் தன்கரை புரண்ட ப்ரவாஹங்களால் போக்கடிக்கும்; தாபத்ரயங்களால் தஹிக்கப்படுபவர்களைக் காப்பாற்றும். கங்காநதியில் ஹம்ஸம், மத்ஸ்யம், யானை முதலியவை மிதப்பதுபோல் தயாவெள்ளத்தில் ஹம்ஸம் மத்ஸ்

யம், கூர்மம் முதலிய அவதாரங்கள் மிதப்பர். கங்கைக்கும் தயைக்கும் உள்ள ஸாம்யத்தை இரண்டு ச்லோகங்களால் கூறுகிறார். (55)

ஜமதி மிதம்பவா கூவதிதரா தூ ஊயெ தரஊா
ஹலநியமொஜ்ஜிதா ஹவதி ஸஹுவநாய வுநஃ ।
கூவமிஹ நிரஜூ௱ஶவூஶகநாதிவிஹுதிமதீ
விதரஸி ஜெஹிநாம நிரவயிம வூஷஶெஹநியிம் ॥

ஜகதி மிதம்பசா த்வதிதரா து தயே தரளா
பலநியமோஜ்ஜிதா பவதி ஸந்தபநாய புந: ।
த்வமிஹ நிரங்குசப்ரசகநாதி விபூதிமதீ
விதரஸி தேஹி நாம் நிரவதிம் வ்ருஷசைலநிதிம் ॥

(பதவுரை) ஊயெ - (ஸ்ரீநிவாஸனுடைய) தயையே! ஜமதி - உலகத்தில், கூவதிதரா தூ - உன்னைத்தவிர (மற்றவர் தயை) மிதம்பவா - அல்பமேயுடையவராய் (அல்பமே கொடுப்பவராய்), தரஊா - சஞ்சலமாயும், ஹலநியமொஜ்ஜிதா - பலன் கொடுப்பது உறுதியில்லாமலும், வுநஃ ஸஹுவநாய - மறுபடியும் ஸந்தாபத்தைக் கொடுக்கத்தக்கதாக, ஹவதி - ஆகிறது, கூவம் - நீ, ஊஹ - இங்கே (இது விஷயத்தில்) நிரஜூ௱ஶவூஶகநாதிவிஹுதிமதீ - தட்டுத்தடங்கலில்லாத சக்தி முதலிய பெருமையையுடையவளாய், ஜெஹிநாம - ப்ராணிகளுக்கு, நிரவயிம - எல்லையற்றதான, வூஷஶெஹநியிம - வேங்கடமலைநிதியை, விதரஸி - கொடுக்கிறாய்.

"ஸ்ரீநிவாஸனுடைய தயையே! உலகத்தில் உன்னைத்தவிர மற்றவர்களுடைய தயை அல்ப பலத்தைக் கொடுக்கக்கூடியதாயும், சஞ்சலமாயும், பலம் கொடுப்பது நிச்சயமில்லாததாயும், பின்னும் ஸந்தாபத்தைக் கொடுக்கக்கூடியதாயும் இருக்கும். நீ தடுக்கக்கூடாத சக்தி முதலிய ப்ரபாவத்தை உடையவளாய் இந்த லோகத்திலுள்ள தேஹவான்களுக்குத் திருமலையிலுள்ள எல்லையில்லாத நிதியை அளிக்கிறாய்."

(தா-ம்) சரணாகதிக்கு இன்றியமையாத கார்ப்பண்யத்திற்கு வேறு கதியில்லாமை என்கிற அநந்ய கதித்வம் வேண்டும். ஸ்ரீநிவாஸனுடைய தயையைத்தவிர வேறு கதிதான் பிழைக்கக்கிடை

யாதென்கிற நிச்சய புத்தி வேண்டும். அந்த அம்சத்தை இந்த ச்லோகத்தால் விளக்குகிறார். மற்றவருடைய தயை அல்ப பலத்தைத்தான் கொடுக்கும். மோக்ஷத்தை அளிக்க வேறொருவருக்கும் ஸாமர்த்தியமில்லை. மற்றவர் தயை ஸ்திரமாயிராது. பலம் கொடுக்கும் நிச்சயமுமிராது. அவை கொடுக்கும் பலம் கழிந்ததும், அந்த அனுபவத்தாலேயே முன்னிருந்ததைவிட அதிக ஸந்தாபம் உண்டாகும். உன்னுடைய சக்தி முதலியதற்கு அளவில்லை. உன்னை ஆச்ரயிப்பவர்க்கு அவர்கள் தேஹத்தோடு இருக்கும்பொழுதே எல்லையில்லாத பேரின்பமாகிய திருமலையிலுள்ள நிதியாகிய ஸ்ரீநிவாஸனுடைய பூர்ணானுபவ சுகத்தை அளிக்கிறார். ‘பகவானை நன்றாய் அறிந்து உபாஸிப்பவர் இங்கேயே அம்ருதராவர்; பகவானை அடைவதாகிய அயனத்திற்கு நாராயணனைத்தவிர வேறு மார்க்கம் கிடையாது.’ என்று சொல்லுகிற ச்ருதியின் அர்த்தத்தை இங்கே விளக்குகிறார். (56)

𑌸𑌕𑌰𑍁𑌣𑌲𑍌𑌕𑌿𑌕𑌪𑍍𑌰𑌭𑍁𑌪𑌰𑌿𑌗𑍍𑌰𑌹𑌨𑌿𑌗𑍍𑌰𑌹𑌯𑍋
𑌨𑌿𑌯𑌤𑌿𑌮𑍁𑌪𑌾𑌧𑌿𑌚𑌕𑍍𑌰𑌪𑌰𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌪𑌰𑌮𑍍𑌪𑌰𑌯𑌾 ।
𑌵𑍃𑌷𑌭𑌮𑌹𑍀𑌧𑌰𑍇𑌶𑌕𑌰𑍁𑌣𑍇 𑌵𑌿𑌤𑌰𑍍𑌕𑌯𑌤𑌾𑌂
𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌮𑌿𑌤 𑌸𑌂𑌪𑌤𑌿 𑌤𑍍𑌵𑌯𑌿 𑌕𑌥𑌂 𑌭𑌵𑌿𑌤𑌾 𑌵𑌿𑌶𑌯𑌃 ॥ ॥௫௭॥

ஸகருண லௌகிக ப்ரபு பரிக்ரஹநிக்ரஹயோர்
நியதி முபாதிசக்ர பரிவ்ருத்தி பரம்பரயா ।
வ்ருஷபமஹீதரேச கருணே விதரங்கயதாம்
ச்ருதிமித ஸம்பதி த்வயி கதம் பவிதா விசய: ॥

(ப-ரை) 𑌵𑍃𑌷𑌭𑌮𑌹𑍀𑌧𑌰𑍇𑌶𑌕𑌰𑍁𑌣𑍇 - வேங்கடத்தரசன் தயையே! 𑌸𑌕𑌰𑍁𑌣𑌲𑍌𑌕𑌿𑌕𑌪𑍍𑌰𑌭𑍁𑌪𑌰𑌿𑌗𑍍𑌰𑌹𑌨𑌿𑌗𑍍𑌰𑌹𑌯𑍋𑌃- தயையுள்ள லௌகிக ப்ரபுக்களுடைய தயையும் (அன்பும்) கோபமும் ஆகிய இவ்விரண்டின், 𑌨𑌿𑌯𑌤𑌿𑌂 - பலன் கொடுக்கும் நிச்சயத்தை (உறுதியை), 𑌉𑌪𑌾𑌧𑌿𑌚𑌕𑍍𑌰𑌪𑌰𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌪𑌰𑌮𑍍𑌪𑌰𑌯𑌾- ஆநுகூல்யம் ப்ராதிகூல்யம் முதலிய உபாதிகள் மாறிமாறிச் சுழன்றுவந்து பலன்கள் கொடுக்கும் க்ரமத்தினல், 𑌵𑌿𑌤𑌰𑍍𑌕𑌯𑌤𑌾𑌂 - ஸம்சயமற ஆராய்ந்து தெளிகிறவர்களுக்கு, 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿

ஶ்ருதஶாவஹி ஞபி - வேதங்களால் தெளியச்செய்துள்ள பெருமையையுடைய உன் விஷயத்தில், விமர்: - ஸம்சயமானது, கஶம் ஹவிதா - எப்படி உண்டாகும் ?

"வ்ருஷப பர்வத நாதனுடைய கருணையே ? தயையுள்ள லௌகிக ப்ரபுக்கள் அவர்களுக்கு அனுகூலமானவர்களை அனுக்ரஹித்தும், ப்ரதிகூலமானவர்களை நிக்ரஹித்தும், இப்படி அவர்களிடத்தில் ஆநுகூல்ய ப்ராப்திகூல்யங்களால் அனுக்ரஹ நிக்ரஹங்கள் மேலும் மேலும், சக்ரம்போல் சுழன்றுவருவதைக் கவனித்துப் பார்த்து வேதத்தினால் தெரிவிக்கப்படும் உன்னுடைய வைபவத்தில் ஏன் ஸம்சயம் நீங்கி அசஞ்சலமான மஹாவிச்வாஸம் பிறக்காது."

(தா-ம்) யாரைச் சரணமடையவேண்டுமோ அவர்களுக்கு அநுகூலத்தையே செய்யவேண்டுமென்கிற தீர்மானமாகிய ஆநுகூல்யஸங்கல்பமும், அவர்களுக்கு ப்ரதிகூலத்தை எப்பொழுதும் விலக்கவேண்டும் என்கிற ப்ராதிகூல்யவர்ஜனமும் அவச்யம் வேண்டும். இது உலகத்திலுள்ள ப்ரபுக்களுடைய தயை விஷயத்தில் நாம் நன்றாய்க் காண்கிறோம். உலகந்யாயப்படிக்கு அத்ருஷ்டமான வேதம் காண்பிக்கும் விஷயத்திலும், நாம் ஊஹித்துக்கொண்டு கருணாநிதியான ஈச்வரனை ஆநுகூல்யஸங்கல்பத்தோடும் ப்ராதிகூல்யத்தைத் தவிர்ப்பதென்கிற நிச்சயத்தோடும், நாம் அவனே கதியென்று ஆர்த்தியுடன் சரணம் புகுந்தால் அவன் நிச்சயமாய்க் காப்பாற்றுவான் என்பதை நன்றாய்த் தெரிந்துகொள்வதற்குத் தயவோடு கூடிய லௌகிகப்ரபுக்கள் விஷயத்தில் இந்த விஷயத்தை ப்ரத்யக்ஷமாகக் காண்கிறபடியால், இந்த உலகந்யாயத்தைக்கொண்டு ஸுலபமாய் நம்முடைய நம்பிக்கையை த்ருடமாகச் செய்துகொள்ளலாம் என்பதைக் காட்டுகிறார். மஹாவிச்வாஸம் என்பது அவச்யம் வேண்டும். ஈச்வரன் ரக்ஷிப்பான் என்பதில் என்றும் தளராத விச்வாஸம் வேண்டும் சரணாகதிக்கு வேண்டிய மூன்று அங்கங்களை இந்த ச்லோகத்தில் விளக்குகிறார். தயாவான்களான லௌகிகப்ரபுக்கள் இந்த விஷயத்தைக் காணலாம். நிஷ்கருணர்களான ப்ரபுக்கள் விஷயத்தில் இந்த அம்சங்கள் இருக்கமாட்டாவாகையால் 'ஸகருண லௌகிகப்ரபு' என்று கூறுகிறார்.

வ்ருஷகிரிக்ருஷ்ணமேகஜநிதாம் ஜநிதாபஹராம்
த்வதபிமதிம் ஸத்³வ்ருஷ்டிமுபஜீவ்ய நிவ்ருத்ததர்ஷ: ।
பஹுஷு ஜலாசயேஷு பஹுமாநமபோஹ்ய தயே
ந ஜஹதி ஸத்பதம் ஜகதி சாதகவத் க்ருதிந: ॥ ॥௫௮॥

வ்ருஷகிரிக்ருஷ்ணமேகஜநிதாம் ஜநிதாபஹராம்
த்வதபிமதிம் ஸ ட்வ்ருஷ்டிமுமஜீவ்ய நிவ்ருத்தத்ருஷ: ।
பஹுஷு ஜலாசயேஷு பஹுமாநமபோஹ்ய தயே
ந ஜஹதி ஸத்பதம் ஜகதி சாதகவத் க்ருதிந: ॥ (58)

(ப-ரை) தயே - தயையே! வ்ருஷகிரிக்ருஷ்ணமேகஜநிதாம் - வேங்கடமலை (யுச்சியிலுள்ள) கருமேகத்தால் வர்ஷிக்கப்படுவதும், ஜநிதாபஹராம் - பிறவியென்னும் தாபத்தை அபஹரிப்பதுமான, த்வதபிமதிம் - உன்னுடைய அபிமானமென்கிற, ஸத்³வ்ருஷ்டிம் - குளிர்ந்த (கருணை) மழையை, உபஜீவ்ய - ஆச்ரயித்து, நிவ்ருத்ததர்ஷ: க்ருதிந:-கொடுத்து வைத்த பாக்யவான்கள், சாதகவத் - சாதகபக்ஷியைப்போல, ஜகதி - உலகத்தில், பஹுஷு ஜலாசயேஷு - அநேக தடாகங்களில், பஹுமாநம் - கௌரவத்தை, அபோஹ்ய - நீக்கிவிட்டு, ஸத்பதம்-நன்மார்க்கமாகிய உன்னை (ஆகாசத்தை), ந ஜஹதி - விடமாட்டார்கள்.

"தயையே! பாக்யவான்கள் வ்ருஷகிரியிலிருக்கும் க்ருஷ்ண மேகமாகிய ஸ்ரீநிவாஸனால் உண்டுபண்ணப்படும் ஜந்மதாபஹரமான உன்னுடைய அபிமதி என்கிற சிறந்த மழையைச் சாதக பக்ஷியைப்போல உபஜீவித்துத் தங்கள் தாஹத்தைத் தீர்த்துக் கொண்டு வேறுள்ள அநேக ஜலாசயங்களில் பஹுமதியை விட்டு நல்ல மார்க்கத்தை விடாமலிருக்கிறார்கள்."

(த்ரா-ம்) அநந்யகதித்வம் என்னும் குணத்தை சாதகபக்ஷியின் த்ருஷ்டாந்தத்தைக்கொண்டு காட்டுகிறார். சாதக பக்ஷியை க்ருஷ்ணமேகை காந்தி என்பர். நீருண்ட கார்மேகமாகிய க்ருஷ்ண மேகத்திலிருந்து நேரில் தன் வாயில் விழும் ஜலத்திவலைகளால் சாதகபக்ஷி தன் தாகத்தைத் தீர்த்துக்கொள்ளுமேயல்லாது கீழேவிழுந்த மழை ஜலம் நிறம்பிய குளங்களிலாவது, ஆறுகளிலாவது தண்ணீரை அருந்தாது. ஆகாசத்தை விஷ்ணுபதம் என்பர். விஷ்ணுபதத்திலிருந்து கிருஷ்ணமேகத்தினிடமிருந்து

வரும் வ்ருஷ்டி ஜலத்தையே எதிர்பார்த்து அதுவே கதியென்று இருப்பது சாதக பக்ஷியின் ஸ்வபாவம். இப்படியே காருண்யை காந்திகளும் ஸ்ரீநிவாஸனென்னும் திருமலையிலுள்ள க்ருஷ்ண மேகத்தின் தயாவ்ருஷ்டியே கதியென்றும், ஸம்ஸாரத்தில் உள்ள சகலவிதமான தாபங்களையும் அதைக்கொண்டேபோக்கிக்கொள்ள வேண்டுமென்றும், த்ருடமான நிச்சயத்துடன் இருக்கவேணும். 'ஜலாசயம்' என்கிற பதம் வடமொழியில் 'ஜடா சயம்' என்று மாகும். ஜடாசயரென்றால் ஜடமதிகளென்று பொருள். சரணா கதி செய்பவர் சாதக பக்ஷியைப்போல் இருக்கவேண்டுமென்றும், சரணமடையப்படுகிறவர் கபோதபக்ஷியைப்போல் இருக்கவேண்டு மென்றும் ப்ரமாண வசநம். கபோத பக்ஷியின் த்ருஷ்டாந்தத் தை விபீஷணனுக்குச் சரணமளிக்கும் அவஸரத்தில் ஸுக்ரீவ னுக்கு பகவான் எடுத்துக்காட்டினார். (58)

த்வதுதயதூலிகாபிரமுநா வ்ருஷசைலஜுஷா
ஸ்திரசரசில்பிநைவ பரிகல்பிதசித்ரதிய: ।
யதிபதியாமுநப்ரப்ருதய: ப்ரதயந்தி தயே
ஜகதி ஹிதம் ந நஸ்த்வயி பரந்யஸநாததிகம் ॥ ॥௫௯॥

த்வதுதயதூலிகாபிரமுநா வ்ருஷசைலஜுஷா
ஸ்திரசரசில்பிநைவ பரிகல்பிதசித்ரதிய: ।
யதிபதியாமுநப்ரப்ருதய: ப்ரதயந்தி தயே
ஜகதி ஹிதம் ந நஸ்த்வயி பரந்யஸநாததிகம் ॥ (59)

(ப-ரை) தயே - தயையே! ஸ்திரசரசில்பிநா - அவ்யாக்ருதங்களான ஸ்திரப்பொருள்களையும், அழிவதான வ்யாக்ருதப்பொருள்களையும் படைக்கும் சில்பியான, அமுநா - இந்த, வ்ருஷசைலஜுஷா ஏவ - திருவேங்கடத்தானாலேயே, த்வதுதயதூலிகாபி: - உன்னுடைய உதயமென்னும் ப்ராரப்பங்களென்னும் பூச்சுக்குச்சிகளால், பரிகல்பிதசித்ரதிய:- அமைக்கப்பட்ட ஆச்சர்யமான புத்திசித்திரங்களையுடைய, யதிபதியாமுநப்ரப்ருதய: - எம்பெருமானார், ஆளவந்தார் முதலிய ஸித்தாந்தஸ்தாபனாசார்யர்கள், த்வயி - உன்னிடத்தில், பரந்யஸநாத் - ஆத்மாவின் பரத்தை ஒப்புவிப்பதைக் காட்டிலும், அதிகம் - பெரிதான, ஹிதம் - க்ஷேமம், ஜகதி - உலகத்தில், ந: - எங்களுக்கு, ந - இல்லை என்று, ப்ரதயந்தி - ப்ரகாசப்படுத்துகிறார்கள்.

“தயையே ! சராசரங்களையெல்லாம் ஸ்ருஷ்டித்த சில்பியாகிய வேங்கடகிரிவாஸியாகிய ஸ்ரீநிவாஸனுலேயே உன்னுடைய உதயங்களென்கிற சித்திரமெழுதும் சலாகைகளாலே நன்ருய்க் கற்பிக்கப்பட்ட புத்திசித்ரங்களை உடையவரான உடையவர், ஆளவந்தார் முதலியவர்கள் “உன்னிடத்தில் பரந்யாஸம் செய்வதைக் காட்டில் மேலான ஹிதமில்லை” என்னும் விஷயத்தை ப்ரசாரம் செய்கிருர்கள்”.

(தா-ம்) அடுத்த ச்லோகத்தில் சரணுகதியை அனுஷ்டிக்கப் போகிருர். அதற்கு முன்பு இந்த சரணுகதி உபாயத்தை வெளிப்படுத்திய முக்யமான ஸமயாசார்யர்களான ஸ்ரீபாஷ்யகாரரையும், ஆளவந்தாரையும், இந்த ச்லோகத்தில் ஸ்மரிக்கிருர். அவர்கள் காட்டியிருக்கும் மோக்ஷோபாயம் மிகவும் லகுவானது, அது எல்லோராலும் அனுஷ்டிக்கத்தக்கது. இந்த உபாயத்தை வெளிப்படுத்திய ஆசார்யர்களுடைய புத்திகளை திருவேங்கடமுடையானே தன் கையினுல் தயோதய மயமான சலாகைகளால் எழுதப்பட்ட சித்திரங்கள் என்று வர்ணிக்கப்படுகிறது. எல்லையில்லாத கருணையினுல் அவ்வாசிரியர்கள் மிகவும் லகுவான இந்த உபாயத்தை உபதேசித்தார்கள். அவர்கள் புத்தி உதயமாகும் தயையினுலேயே எழுதப்பட்ட சித்திரமாகும். உதிக்கும் தயவை என்பதால் தயவு முதலில் உண்டாகையில் நிரம்பவும் பலமாயிருக்குமாதலாலும், சிலகாலம் கழிந்துவிட்டால் தயை குறையக்கூடுமாதலாலும், ஆசார்யர்களுடைய புத்தி உதய தசையில் உள்ள தயையைக்கொண்டே எழுதப்பட்டதென்கிருர். ஆசார்யர்களுடைய திருமேனியை ப்ரஹ்மதேவன் ஸ்ருஷ்டித்தாலும், அவர்களுடைய பரமமங்களமும், கருணமயமுமான புத்திகளை மட்டும் ஸ்ரீனிவாஸனே நேரில் தயாமயமான சலாகைகளைக் கொண்டு சித்ரம்போல் எழுதினுனென்று வர்ணிக்கிருர். (59)

[illegible]

[illegible] ।

[illegible]

[illegible] ॥௬௰॥

ம்ருது ஹ்ருதயே தயே ம்ருதித காமஹிதே மஹிதே
த்ருத விபுதே புதேஷு விததாத்மதுரே மதுரே |
வ்ருஷகிரி ஸார்வபௌமதயிதே மயி தே மஹதீம்
பவுகநிதே நிதேஹி பவமூலஹராம் லஹரீம் ||

(ப-ரை) ம்ருதுஹ்ருதயே - மிருதுவான நெஞ்சுடையவளும், ம்ருதிதகாமஹிதே - ஆசைகளையொடுக்கினவர்விஷயத்தில் விசேஷமான ஹிதபுத்தியையுடையவளும், மஹிதே - (மற்ற மார்க்கங்களைக் காட்டிலும் சிறந்த வழியென்று) கொண்டாடப்பட்டவளும், த்ருதவிபுதே-(நீயே சரணமென்னும்) உத்தமஜ்ஞானிகளைத் தாங்குகிறவளும், புதேஷு விததாத்மதுரே - ஜ்ஞானிகளான ஆசார்யர்களிடம் சேதனர்களை ரக்ஷிக்கும் உன் பாரத்தை விஸ்தாரமாய் ஒப்புவித்திருக்கிறவளும், மதுரே - இனிமையானவளும், வ்ருஷகிரிஸார்வபௌமதயிதே - வேங்கடமலை அரசனுடைய ப்ரியகாந்தையும், மங்களநிதே - மங்களங்களுக்கு நிதியுமான, தயே - தயையே, பவமூலஹராம் - (விஷவ்ருக்ஷமென்னும், அச்வத்தவ்ருக்ஷமென்னும் சொல்லப்படும்) ஸம்ஸாரவ்ருக்ஷத்தின் வேரை அறுத்துத் தள்ளும், தே - உன்னுடைய, மஹதீம் - பெரிதான, லஹரீம் - வெள்ளத்தை, மயி - என்னிடத்தில், நிதேஹி - வைப்பாயாக (பெருக்குவாயாக).

"ம்ருதுவான ஹ்ருதயத்தையுடையவளும், ஆசையை அடக்கியவர்களுக்கு ஹிதமானவளும், பூஜிக்கப்பட்டவளும், ஜ்ஞானிகளைப் போஷித்துத் தாங்குபவளும், சேதனர்களை ரக்ஷிக்கும் பாரத்தை ஞானிகளிடத்தில் வைப்பவளும், வேங்கடமலை யரசனுக்கு பிரியமான பத்நியும், மதுரமான ஸ்வபாவமுமுடையவளும், மங்களங்களுக்கு நிதியுமான தயையே! ஸம்ஸாரத்தின் மூலத்தை ஹரணம் செய்யும் உன்னுடைய ப்ரவாஹத்தை என்மீது மோதச்செய்யவேணும்."

(தா—ம்) இந்த ச்லோகத்தின் சொற்சுவை மிகவும் மதுரமும், உருக்கமுமானது. தயையின் ஹ்ருதயம் மிகவும் ம்ருதுவாயிருக்கும். ஞானிகளுடைய ஸகல பாரங்களையும் தயை தாங்கு

கிறாள். சேதநர்களை ரக்ஷிக்கிறபாரம் தயைக்குச் சொந்தமானது. தன்னுடைய அந்த பாரத்தை தயை வித்வான்களிடத்தில் வைக்கிறாள். ஞானிகளைக்கொண்டு சேதநர்களை ரக்ஷணம் செய் விக்கிறாள். 'அடியார்க்கு என்னையாட்படுத்த விமலன்' என்பது போல் நம்மை ரக்ஷிக்கும் பாரத்தை ஜ்ஞானிகளிடத்தில் வைப் பது மதுரமான தன்மையென்கிறார். தயையின் பெரிய ப்ரவா ஹங்கள் ஸம்ஸாரத்தை வேரோடு பிடுங்கிவிடும். ஸம்ஸாரமென் பது ஒரு பெரிய அச்வத்த விருக்ஷமென்று கீதையில் வர்ணிக்கப் பட்டது. அந்த வ்ருக்ஷத்தை தயாப்ரவாஹங்கள் வேரோடு தள்ளிவிடும். தயை மோக்ஷம் வரையில் சகல மங்களங்களுக்கும் நிதியாவாள். காருண்யகுண விசிஷ்டனான பகவானிடத்தில் சர ணாகதி செய்யவேணும். சரண்யனுக்கு தயாகுணம்தான் ப்ரதான மாகும்' தயாவிசிஷ்டனான பகவானிடத்தில் சரணமடைவதை பகவானுடையதயையினிடத்தில் சரணமடைவதாகக் கூறுகிறார்.

𑌅𑌕𑍂𑌪𑌾𑌰𑍈𑌰𑍇𑌕𑍋𑌦𑌕𑌸𑌮𑌯𑌵𑍈𑌤𑌣𑍍𑌡𑌿𑌕𑌜𑌵𑍈
𑌰𑌨𑌿𑌰𑍍𑌵𑌾𑌪𑍍𑌯𑌾𑌂 𑌕𑍍𑌷𑌿𑌪𑍍𑌰𑌂𑌕𑍍𑌷𑌪𑌯𑌿𑌤𑍁𑌮𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌖𑍍𑌯𑌬𑌡𑌬𑌾𑌮𑍍।
𑌕𑍃𑌪𑍇 𑌤𑍍𑌵𑌂 𑌤𑌤𑍍𑌤𑌾𑌦𑍃𑌕𑍍𑌪𑍍𑌰𑌥𑌿𑌮𑌵𑍃𑌷𑌪𑍃𑌥𑍍𑌵𑍀𑌧𑌰𑌪𑌤𑌿
𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌦𑍍𑌵𑍈𑌗𑍁𑌣𑍍𑌯𑌦𑍍𑌵𑌿𑌗𑍁𑌣𑌨𑌿𑌜𑌬𑌿𑌨𑍍𑌦𑍁𑌃𑌪𑍍𑌰𑌭𑌵𑌸𑌿॥

அகூபாரை ரேகோதக ஸமய வைதண்டிகஜவை
ரநிர்வப்யாம் க்ஷிப்ரம் க்ஷபயிது மவித்யாக்ய படபாம் ।
க்ருபே த்வம் தத்தாத்ருச் ப்ரதிம வ்ருஷ ப்ருத்வீதரபதி
ஸ்வரூபத்வைகுண்ய த்விகுணநிஜபிந்து: ப்ரவஹஸி ॥

(ப-ரை) 𑌕𑍃𑌪𑍇 - தயையே ! 𑌏𑌕𑍋𑌦𑌕𑌸𑌮𑌯𑌵𑍈𑌤𑌣𑍍𑌡𑌿𑌕𑌜𑌵𑍈𑌃 - ஒரே ஜலமயமாகவிருக்கும் பிரளயகாலத்தில் விதண்டாவாதம்பேசும் வாதியின் கடகடப்பேச்சினும் வேகத் தையுடைய, 𑌅𑌕𑍂𑌪𑌾𑌰𑍈𑌃 - ஸமுத்ரங்களாலும், 𑌅𑌨𑌿𑌰𑍍𑌵𑌾𑌪𑍍𑌯𑌾𑌂 - அணைக்கக்கூடாத, 𑌅𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌖𑍍𑌯𑌬𑌡𑌬𑌾𑌮𑍍 - அக்ஞான மென்கிற படபாமுகமான (குதிரை முகமான) ப்ரளயகாலாக்நி யைப்போன்ற நெருப்பை, 𑌕𑍍𑌷𑌿𑌪𑍍𑌰𑌂 - வேகமாக, 𑌕𑍍𑌷𑌪𑌯𑌿𑌤𑍁𑌂 - அணைப்பதற்கு, 𑌤𑍍𑌵𑌂 - நீ, 𑌤𑌤𑍍𑌤𑌾𑌦𑍃𑌕𑍍𑌪𑍍𑌰𑌥𑌿𑌮𑌵𑍃𑌷𑌪𑍃𑌥𑍍𑌵𑍀𑌧𑌰𑌪𑌤𑌿𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌦𑍍𑌵𑍈𑌗𑍁𑌣𑍍𑌯𑌦𑍍𑌵𑌿𑌗𑍁𑌣𑌨𑌿𑌜𑌬𑌿𑌨𑍍𑌦𑍁𑌃-குறிப்பிட்டு வர்ணிப்பதற்கு சக்யமில்லாமல் அப்படியப்படியென்று பொது

வாய்ப் பிதற்றவேண்டியபடி மிகப்பெரிதான வேங்கடமலை அரசன் (ப்ரஹ்ம) ஸ்வரூபத்திலும் இருதரம் இரட்டித்தும் (நான்கு பங்கு ப்ரமாணமுள்ள) உன்னுடைய ஒரு சொட்டை உடையவளாய், வ்யவஹரஸி - வெள்ளமிட்டோடுகிறாய்.

"க்ருபையே! அத்தனை பெரிதான ஸ்ரீநிவாஸனுடைய ஸ்வரூபத்தைக்காட்டிலும் ஈரிரண்டு (நான்கு) பங்கு பெரிதான ஒவ்வொரு திவலையையுடைய நீ எங்கும் ஏகோதகமாயிருக்கும் ப்ரளயகாலத்தில் விதண்டாவாதம் செய்யும் வாதிகளின் பேச்சின் வேகத்திற்கு ஒப்பான வேகத்தையுடைய ஸமுத்திரங்களாலும் அணைக்கக்கூடாத அவித்யையென்னும் வடவாமுகாக்நியை சீக்ரமாக அணைக்க ஸாமர்த்யமுடையவளாகிறாய்."

(தா—ம்) முன் தசகத்தில் கடைசிச்லோகத்தில் திருவேங்கடமுடையானுடைய தயையினிடத்தில் சரணாகதியை அனுஷ்டித்தார். சரணாகதியை அனுஷ்டிப்பதால் முக்தர்களைப் போல் மாசற்றவராகவேணும். அவித்யையென்னும் அஜ்ஞானம் நிவ்ருத்திப்பது சரணாகதியின் பலமாகிய மோக்ஷமாகும். அவித்யை என்பது கர்மத்திற்கும் பெயர். கர்மம் ப்ரளயகாலத்தில்கூட தொலைகிறதில்லை. ப்ரளய காலத்தில் ஸமுத்ரத்திலிருந்து கிளம்பும் வடவாமுகாக்நி உலகத்தை தஹிக்கும் என்பர். அந்த அக்நியை அதிக வேகத்தோடு பொங்கும் ஸமுத்ரங்கள் அணைத்து உலகத்தை ஒரே ஜலமாகச் செய்யும் என்பர். வடவாக்நியை அணைக்க வல்லமையுடைய ப்ரளய ஸமுத்ரங்கள்கூட கர்மம் என்னும் அக்நியை அணைக்க சக்தியுடையதல்ல. கர்மம் என்பதுதான் அக்நியைவிட உக்கிரமாய் ப்ராணிகளைக் கொளுத்துவது. ப்ரளயகாலத்தில் ஸமுத்ரங்களுடைய வேகம் விதண்டாவாதிகளுடைய விதண்டப் பேச்சின் வேகத்தை ஒக்கும் என்று வேடிக்கையாகக் கூறுகிறார். விதண்டாவாதிகள் எதிர் கக்ஷியை த்வம்ஸம் செய்வதில் நோக்குடையவர்களே யொழிய தங்கள் பக்ஷத்தை நிலைநிறுத்துவதில் கருத்துடையவரல்லர். ப்ரளய ஸமுத்ரங்கள்அழிக்கும் ஸ்வபாவமே உடையது. அவைகள் ஒன்றையும் மிச்சம் வைக்கிறதில்லை. காட்டாறுகள் கல்லையும்,மண்ணையும் உருட்டி அடித்துக்கொண்டு அதிவேகமாய் வருவதுபோல் விதண்டாவாதிகள் அதிவேகமாய் தடபுடலாய் இரைச்சல் போட்டு வாதம் செய்வர். அவித்யை

யென்னும் நெருப்பை தயையின் தடங்கலில்லாத ப்ரவாகம்தான் அணைக்க வலிமையுடையது. அதின் ஒவ்வொரு திவலையும் மிகப்பெரிய ப்ரஹ்ம ஸ்வரூபத்துக்கும் நான்கு பங்கு பெரியதாகும் என்கிறார். தயையின் திவலையே அவ்வளவு பெரிதானால் தயையின் ப்ரவாகத்தின் ப்ரபாவம் எப்படி இருக்கும்? (61)

விவித்ஸா வேதாளீவிகமபரிசுத்தேபி ஹ்ருதயே
படுப்ரத்யாஹாரப்ரப்ருதி புடபாக ப்ரசகிதா: ।
நமந்தஸ்த்வாம் நாராயணசிகரிகூடஸ்த கருணே
நிருத்த த்வத்த்ரோஹா ந்ருபதிஸுதநீதிம் ந ஜஹதி ॥

விவித்ஸா வேதாளீவிகமபரிசுத்தேபி ஹ்ருதயே
படுப்ரத்யாஹாரப்ரப்ருதி புடபாக ப்ரசகிதா: ॥
நமந்தஸ்த்வாம் நாராயணசிகரிகூடஸ்த கருணே
நிருத்த த்வத்த்ரோஹா ந்ருபதிஸுதநீதிம் ந ஜஹதி ॥

(பதவுரை) நாராயணசிகரிகூடஸ்த கருணே - வேங்கடமலையுச்சிப்ரபுவின் தயையே, ஹ்ருதயே - மனதானது, விவித்ஸா வேதாளீவிகமபரிசுத்தேபி - பொன்னாசையென்னும் பெண்வேதாளத்தைத் துரத்திவிட்டதால் பரிசுத்தமாக்கப்பட்டிருந்தும், படுப்ரத்யாஹாரப்ரப்ருதி புடபாக ப்ரசகிதா: - (பக்தியென்னும் உபாயத்திற்கு வேண்டிய அஷ்டாங்கயோகத்தில் சேர்ந்த) கடுமையான ப்ரத்யாஹாரம் (இந்திரியங்களை விஷயங்களிற்போகாமல் இழுத்துப்பிடித்தல்) முதலிய புடபாகம் போன்ற உள் தாபமான உக்ரதபஸிலிருந்து நடுங்கினவர்களாய், த்வாம் - உன்னை, நமந்த: - சரணமடைந்து, நிருத்த த்வத்த்ரோஹா: - உன் ஆக்ஞையை மீறுகிறதென்கிற த்ரோஹத்தைத் தகைந்தவராய், ந்ருபதிஸுதநீதிம் - ராஜபுத்ரர்கள் எப்பொழுதாவது அபராதிகளானால் அவர்களுக்கு தண்டனை லகுவாயிருப்பதுபோல ப்ரபந்நர் அபராதங்களுக்கும் தண்டம் வருமென்கிற நியாயத்தை, ந ஜஹதி - விடுகிறதில்லை.

“தனதான்யம் முதலிய ஸம்ருத்திகளை அடையவேண்டுமென்கிற ஆசாபிசாசத்தைத் தொலைத்து ஹ்ருதயத்தை சுத்தம் செய்தாலும் ப்ரத்யாஹாரம் முதலிய யோகாங்கங்களால் ஹ்ருதயத்தைப் புடம்போடும் கடினமான வ்யாபாரத்தினின்று நடுங்

கினவர்களாய் நாராயணகிரியென்னும் மலேயினுச்சியில் இருக்கும் ஸ்ரீநிவாஸனுடைய தயையே உன்னை வணங்கி உன்னுடைய த்ரோஹத்தினின்றும் நீங்கி ராஜகுமார ந்யாயத்தை விடாமல் கைப்பற்றுகிறார்கள்.''

(தா—ம்) மேலும் மேலும் வேண்டுமென்று வளர்ந்தோங்கும் ஆசையை வேதாளீயென்கிற பெண் பேய்க்கு உவமையாகக் கூறுகிறார். பேய்க்குக் கேட்டதையெல்லாம் கொடுத்துக்கொண்டே இருக்கவேணும். முன்பு எத்தனை கொடுத்திருந்தாலும் புதிதாய்க் கேட்பதொன்றை உடனே சம்பாதித்துக்கொடாவிட்டால் வேதாளம் ஆளை முழுங்கிவிடும். அப்படியே ஆசை புதிதுபுதிதாய் கேட்பதையெல்லாம் உடனுக்குடன் சம்பாதித்துக் கொடுத்துக் கொண்டே இராவிட்டால் அதனாலுண்டாகும் ஆசாபங்கம் நெஞ்சை உடையச்செய்து உயிரைக்கூட மாய்த்துவிடும். இந்த ஆசா பிசாசத்தைத் தொலைத்து வைராக்யத்தை ஸம்பாதித்தாலும் பக்தி யோகத்திற்கு அஷ்டாங்கயோகம் இன்றியமையாதது. ப்ரத்யாஹாரம் என்பது இந்திரியங்களை வெளி விஷயங்களில் செல்லாமல் உள்ளே இழுத்து அடக்குவதாகும். ப்ரத்யாஹாரம், ப்ராணயாமம், தாரணை, த்யானம் முதலிய அங்கங்களால் ஹ்ருதயத்தை புடத்தில் வைக்கவேணும். அந்தக் கஷ்டமான வ்யாபாரத்தைக் கண்டு பயந்து பக்தி யோகத்தில் இறங்காமல் ஸ்ரீநிவாஸனுடைய தயையின் காலில் விழுந்து அங்கே அடைக்கலம் புகுந்து அபராதங்களைச் செய்வதினின்றும் நடுங்கி அவைகளை விலக்கி ராஜபுத்ர ந்யாயத்தை அனுஸரிக்கிறார்கள். ராஜபுத்ரர்கள் தாங்கள் ராஜாவின் குமாரர்களாயிருந்தாலும், சக்கரவர்த்தியின் ஆக்ஞையை மீறப் பயந்து நடப்பார்கள். ஒருகால் அவர்கள் கொஞ்சம் தவறினாலும் அவர்களுக்கு ராஜா லகுவான சிக்ஷையை விதிப்பார். இதை ராஜபுத்ரந்யாயமென்று சொல்வர். ப்ரபந்நர்கள் ராஜபுத்ரர் போலாவார். (62)

அநந்யாதீநஸ்ஸந் பவதி பரதந்த்ர: ப்ரணமதாம்
க்ருபே ஸர்வத்ரஷ்டா ந கணயதி தேஷாமபக்ருதிம் ।
பதிஸ்வாதந்த்ர்யம் ப்ரதயதி வ்யாக்ஷேபாரபதி
பஹுஸ்வஸ்வாம் வேபாதந்தீதி விபடயஞ் விஹரஸி ॥

அநந்யாதீநஸ்ஸந் பவதி பரதந்த்ர: ப்ரணமதாம்
க்ருபே ஸர்வத்ரஷ்டா ந கணயதி தேஷா மபக்ருதிம்]

பதிஸ் த்வத்பாரார்த்யம் ப்ரதயதி வ்ருஷக்ஷ்மாதர பதிர்
வ்யவஸ்தாம் வையாத்யாதிதி விகடயந்தீ விஹரஸி ॥

(ப-ரை) தயே - தயையே! வ்ருஷக்ஷ்மாதர பதி: வேங்கடத்தரசன், அநந்யாதீநோ(அ)பி - பிறரொருவருக்கும் வசப்பட்டவனல்லனாயினும், ப்ரணதாம்-(தன்னை) வணங்குமவர்களுக்கு, பராதீந: - இட்டது சட்டமாக, பவதி-ஆகிறான், ஸர்வத்ரஷ்டா (ஸந்) - எல்லாவற்றையும் பார்க்கிறவனாயிருந்தும், தேஷாம் (ப்ரணதாம்) - அவர்களுடைய, அவக்ருதிம் - குற்றத்தை, ந கணயதி-கணக்கிடுகிறதில்லை, பதி:- (உன்) கணவன், த்வத்பாரார்த்யம் - உன் சொன்னபடி கேழ்ப்பதை, ப்ரதயதி - ப்ரகாசப்படுத்துகிறார், வையாத்யாத் - உன்னுடைய உத்தண்டமான மனப்போக்கினால் (சலுகைமதத்தால்), வ்யவஸ்தாம் - (தர்ம) வரம்பை, இதி - இப்படி, விகடயந்தீ - மீறிக்கொண்டு (இல்லாமற் செய்துகொண்டு), விஹரஸி - விளையாடுகிறாய்.

"தயையே! ஒருவருக்கும் அதீநமல்லாத ஸ்வதந்த்ரனான உன்னுடைய பர்த்தா வ்ருஷகிரிநாதன் வணங்குகிறவர்களுக்கு பரதந்த்ரனாகிறான். உலகத்தில் எல்லாவற்றையும் கண்ணுக்கு நேராயிருப்பதுபோல் ப்ரத்யக்ஷீகரிக்கும் அவன் அவர்களுடைய அபகாரத்தை எண்ணுகிறதில்லை. அவன் ஸர்வசேஷியான பதியாயிருந்தாலும் உனக்கு சேஷமாயிருப்பதையே ப்ரகாசப்படுத்துகிறான். அதனால் நீ இவ்விதமாக ஈச்வரனுடைய சட்ட நியமங்களை உன் இஷ்டம்போல் உல்லங்கனம் செய்து விளையாடுகிறாய்."

(தா—ம்) ஈச்வரன் ஒருவனுக்கும் சேஷனல்லனென்றும் அவன் ஸ்வதந்த்ரன் என்றும், அவனுக்கு லக்ஷணம். ஸர்வசேஷித்வமும்;ஸ்வாதந்திரியமும்அவனுக்கு லக்ஷணமாகும். அவனை நன்றாய் வணங்கி அவன்காலைப்பிடித்துக்கொண்டவர்களுக்குப்பாரதந்த்ரனாக நீ அவனைச் செய்துவிடுகிறாய். இதனால் ஈச்வரத்வம் என்கிற வரம்பே குலைந்துபோகிறது. எல்லாவற்றையும் ஒருமிக்க தானாகவே ப்ரத்யக்ஷமாக ஸர்வகாலத்திலும் அறிகிறவன் ஈச்வரனென்று யோகிஸார்வபௌமரான நாதமுனிகள் அருளிச்செய்த லக்ஷணம். ஆச்ரிதர்களுடைய குற்றங்களைப் பார்த்தாலும் கண்ணை மூடிக்

கொண்டு பார்க்காததுபோலிருக்கிறான். அவர்கள் குற்றங்களை அவன் கணக்கில் வைக்கிறதில்லை. 'ஸஹஸ்ராம்சு' என்று அவனை ஸஹஸ்ரநாமத்தில் சொல்லுமிடத்திலேயே அவனுக்கு 'அவிஜ்ஞாதா' என்ற பெயரை நீ வாங்கிக்கொடுக்கிறாய். 'அவிஜ்ஞாதா' என்பதற்கு அறியாதவனென்று பொருள். ஸர்வஜ்ஞனை அஜ்ஞன் போலாக்குகிறாய். இதெல்லாம் நிந்தைபோல மேலுக்குத் தோன்றினாலும், வாஸ்தவத்தில் குணகீர்த்தனமாகவும், ஸ்துதியாகவும் இருக்கிறது. ஆச்ரிதர்களின் இஷ்டத்தை அனுவர்த்திப்பதும், அவர்களுக்கு விதேயனாவதும், அவர்கள் அறியாக் குற்றங்களைக் கவனியாமையும் ப்ரபுவுக்குக் குணமேயாகும். (63)

𑌅𑌪𑌾𑌂 𑌪𑌤𑍍𑌯𑍁𑌃 𑌶𑌤𑍍𑌰𑍂𑌨𑌸𑌹𑌨𑌮𑍁𑌨𑍇𑌰𑍍𑌧𑌰𑍍𑌮𑌨𑌿𑌗𑌳𑌂
𑌕𑍃𑌪𑍇 𑌕𑌾𑌕𑌸𑍍𑌯𑍈𑌕𑌂 𑌹𑌿𑌤𑌮𑌿𑌤𑌿 𑌹𑌿𑌨𑌸𑍍𑌤𑌿 𑌸𑍍𑌮 𑌨𑌯𑌨𑌂 ।
𑌵𑌿𑌲𑍀𑌨𑌸𑍍𑌵𑌾𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑍍𑌯𑍋 𑌵𑍃𑌷𑌗𑌿𑌰𑌿𑌪𑌤𑌿𑌸𑍍𑌤𑍍𑌵𑌦𑍍𑌵𑌿𑌹𑍃𑌤𑌿𑌭𑌿𑌃
𑌦𑌿𑌶𑌤𑍍𑌯𑍇𑌵𑌂 𑌦𑍇𑌵𑍋 𑌜𑌨𑌿𑌤𑌸𑍁𑌗𑌤𑌿𑌂 𑌦𑌣𑍍𑌡𑌨𑌵𑌿𑌧𑌿𑌂 ॥

அபாம் பத்யு: சத்ருநஸஹநமுநேர் தர்மநிகளம்
க்ருபே காகஸ்யைகம் ஹிதமிதி ஹிநஸ்தி ஸ்ம நயநம் |
விலீநஸ்வாதந்த்ர்யோ வ்ருஷகிரிபதிஸ்த்வத்விஹ்ருதிபிர்
திசத்யேவம் தேவோ ஜநிதஸுகதிம் தண்டநவிதிம் ||

(ப-ரை) 𑌕𑍃𑌪𑍇 - தயையே! 𑌅𑌪𑌾𑌂𑌪𑌤𑍍𑌯𑍁𑌃 - ஜலங்களுக்கரசனான ஸமுத்ரராஜனுடைய, 𑌶𑌤𑍍𑌰𑍂𑌨𑍍 - சத்ருக்களையும், 𑌅𑌸𑌹𑌨𑌮𑍁𑌨𑍇𑌃 - பெருமையை ஸஹிக்கமாட்டாமல் பொறாமைக்காய்ச்சல்கொண்ட பரசுராமருடைய, 𑌧𑌰𑍍𑌮𑌨𑌿𑌗𑌳𑌂 - புண்யமென்னும் விலங்கையும், 𑌕𑌾𑌕𑌸𑍍𑌯 - காக்கையினுடைய (காகாஸுரனுடைய), 𑌏𑌕𑌂 𑌨𑌯𑌨𑌂 - ஒரு கண்ணையும், 𑌹𑌿𑌤𑌮𑌿𑌤𑌿 - (அவர்களுக்கு) நல்லதென்று நினைத்து, 𑌵𑍃𑌷𑌗𑌿𑌰𑌿𑌪𑌤𑌿𑌃 - வேங்கடத்தரசன், 𑌹𑌿𑌨𑌸𑍍𑌤𑌿 𑌸𑍍𑌮 - போக்கினான், 𑌤𑍍𑌵𑌦𑍍𑌵𑌿𑌹𑍃𑌤𑌿𑌭𑌿𑌃 - உன்னுடைய விளையாட்டுகளால், 𑌦𑍇𑌵𑌃 - அந்த தேவன், 𑌵𑌿𑌲𑍀𑌨𑌸𑍍𑌵𑌾𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑍍𑌯𑌃 - தன் ஸ்வாதந்த்ரியத்தை இழந்தவராய், 𑌏𑌵𑌂 - இப்படி, 𑌦𑌣𑍍𑌡𑌨𑌵𑌿𑌧𑌿𑌂 - தண்டிக்கிற கட்டளையை, 𑌜𑌨𑌿𑌤𑌸𑍁𑌗𑌤𑌿𑌂 - நல்ல கதியை விளைவிப்பதாக, 𑌦𑌿𑌶𑌤𑌿 - (பலன்) கொடுக்கிறார்.

"க்ருபையே! உன்னுடைய விளையாட்டுகளாலே ஸ்வாதந்த்ரியத்தை முற்றுமிழந்த ஸ்ரீநிவாஸன் ஸமுத்ரராஜனுக்கு ஹிதமென்று நினைத்து அவன் சத்ருக்களைத் தொலைத்தான். ராமன் பெருமையை ஸஹிக்கமாட்டாமல் கோடாலியை யேந்தி வந்த பரசுராமனுடைய புண்யமென்னும், விலங்கைத்தொலைத்தான். காகாஸுரனுடைய ஒரு கண்ணை மட்டும் தொலைப்பது அவனுக்கு ஹிதமென்று அவனுடைய ஒரு கண்ணை நீக்கினான். இப்படித் தண்டன மார்க்கத்தைக்கூட அபராதிகளான சத்ருக்களுக்கு நல்ல கதியை உண்டுபண்ணுவதாக உன்னுடைய வசமாயிருப்பதால் அவன் செய்கிறான்."

(தா—ம்) முன் ச்லோகத்தில் குற்றம் செய்தவர்களுடைய குற்றங்களைத் தயையின் ப்ரபாவத்தால் ஸ்ரீநிவாஸன் பாராட்டுவதில்லை என்றார். இங்கே குற்றங்களுக்காக ஹிதத்தையே விளைவிக்கிறானென்றும், குற்றங்களுக்கு விதிக்கும் தண்டனையின் க்ரமம்கூட குற்றம் செய்தவருக்கு அனுகூலமாக முடிகிறதென்றும், தயையின் ப்ரபாவத்தைக் காட்டுகிறார். முதலில் பெருமாள் வந்தபோது அவரைத் திரஸ்கரித்து மேலும் மேலும் பொங்கி அலைமோதிய ஸமுத்ரராஜனுடைய த்ருஷ்டாந்தத்தைக் காட்டுகிறார். ஸமுத்திரத்தைப் புண்யதீர்த்தங்களுக்கெல்லாம் கணவனென்று பொருள்படும் 'அபாம்பதி:' என்கிற பெயரினால் குறிப்பிடுவது மிகவும் அழகு. ஸமுத்ரத்தையே வற்றச்செய்து தரையாக்குகிறேன்; ஜலத்தையே என்னுடைய பாணத்தின் அக்நியினால் எண்ணெயைப்போல் எறியச்செய்து சோஷணம் செய்கிறேன். வானரர்கள் காலாலே நடந்து லங்கைக்குப் போகட்டும்" என்று ப்ரபு அதிகோபத்தோடு சீறியபோது, ஸமுத்ரராஜன் நடுங்கி கங்கை யமுனை முதலிய தன்னுடைய பத்நிகளான ஸகல புண்ய நதிகளையும் தன்னைச் சூழ்ந்துவரும்படி செய்து அத்தனை ஸ்திரீகளின் நடுவிலேதானிருந்துகொண்டு ப்ரபுவின் ஸமீபத்திற்கு வந்ததாக ராமாயணத்தில் கூறப்பட்டிருக்கிறது. ப்ரபுவின் கோபத்தை மாற்றுவதற்காக அவன் அப்படிச்செய்தான். அவனை ஹிம்ஸித்தால் உலகத்துக்கெல்லாம் பாபத்தைப் போக்கும் எல்லா புண்யநதிகளுக்கும் வைதவ்யம் வருமே என்று ஸ்வாமி அஞ்சமாட்டாரா என்பது கருத்து. இந்த அபிப்ராயத்தை இங்கே கவி வியஞ்ஜனம் செய்கிறார்.

ஸமுத்ரராஜன்மேல் வந்த அத்யுக்ரமான கோபத்தை தயவி ஞல் ஒரு க்ஷணத்தில் மாற்றி அவனுடைய சத்ருக்களின்மேல் அந்தக் கோபத்தைத் திருப்பி அவர்களைத் தொலைப்பதனுல் ஸமுத்ரராஜனுக்கு அனுகூலமே ஏற்பட்டது. அப்படியே, அப்பொழுதுதான் தநுர்பங்கம் செய்து சீதையைப் பாணிக் ரஹணம் செய்துகொண்டு மிக்க வ்ருத்தரான தகப்பனுரோடு மிதிலையிலிருந்து அயோத்யைக்குச் செல்லுகையில், ராமனுடைய யசஸ்ஸைக் கேட்கப்பெருமல் கையும் கோடாலியுமாய் எதிர் கொண்டு எதிர்த்துவந்த ஸர்வ க்ஷத்ரிய ஹந்தாவான பரசுராம ரெனனும் பராஹ்மணரை ஜயித்து அவர்மீது தொடுத்த தன் பாணத்தினின்று அவரை விட்டுவிட்டு அவருடைய புண்யங் களை எய்து அவற்றை அழித்தார். மோக்ஷத்தை அடைய வேண்டியவனுக்கு புண்யங்களும் விலங்கென்பர். காராக்ருஹ மாகிய ஸம்ஸாரத்தில் சிறைப்பட்டவருக்கு ஸம்ஸாரஸுகங் களைக் கொடுக்கும் புண்யமும் பொன்விலங்காகும். பொன்விலங் காயினும் விலங்குதானே. புண்யத்தை நாசம் செய்தது அவ ருக்கு அனுகூலமாயிற்று. லோகமாதாவான ஸீதாபிராட்டியின் ஸ்தனங்களை நோக்கின காகாஸுரனுடைய கண்களில் ஒன்றை மட்டும் வாங்குவது அவனுக்கு ஹிதமென்று அதைமட்டும் வாங்கினர். ஒற்றைக்கண்ணினுல் பார்க்கக்கூடாத விஷயங்களை நன்ருய் பார்ப்பது கஷ்டமானபடியால் பார்வையினுல் தோஷத் தை ஸம்பாதிப்பதற்கு இடங்குறையுமாதலால் ஒரு கண் போனதும் அவனுக்கு ஹிதமாயிற்று. உலக ரீதியை இப்படி மாற்றுவது தயாதேவியின் விளையாட்டு. தண்டன கதியை துர்கதியென்பர். அதையும் தயாதேவி ஸுகதியாகச் செய் கிருளென்று ஆச்சர்யம். (64)

𑌨𑌿𑌷𑌾𑌦𑌾𑌨𑌾𑌂 𑌨𑍇𑌤𑌾 𑌕𑌪𑌿𑌕𑍁𑌲𑌪𑌤𑌿𑌃 𑌕𑌾𑌪𑌿 𑌶𑌬𑌰𑍀
𑌕𑍁𑌚𑍇𑌲𑌃 𑌕𑍁𑌬𑍍𑌜𑌾 𑌸𑌾 𑌵𑍍𑌰𑌜𑌯𑍁𑌵𑌤𑌯𑍋 𑌮𑌾𑌲𑍍𑌯𑌕𑍃𑌦𑌿𑌤𑌿 ।
𑌅𑌮𑍀𑌷𑌾𑌂 𑌨𑌿𑌮𑍍𑌨𑌤𑍍𑌵𑌂 𑌵𑍃𑌷𑌗𑌿𑌰𑌿𑌪𑌤𑍇𑌰𑍁𑌨𑍍𑌨𑌤𑌿𑌮𑌪𑌿
𑌪𑍍𑌰𑌭𑍂𑌤𑍈𑌃 𑌸𑍍𑌰𑍋𑌤𑍋𑌭𑌿𑌃 𑌪𑍍𑌰𑌸𑌭𑌮𑌨𑍁𑌕𑌮𑍍𑌪𑍇 𑌶𑌮𑌯𑌸𑌿 ॥

நிஷாதாநாம் நேதா கபிகுலபதி: காபி சபரீ
குசேல: குப்ஜா ஸா வ்ரஜயுவதயோ மால்யக்ருதிதி ।
அமீஷாம் நிம்நத்வம் வ்ருஷகிரிபதேருந்நதிமபி
ப்ரபூதை: ஸ்ரோதபி: ப்ரஸபமநுகம்பே ஶமயஸி ॥ (65)

(ப-ரை) தயே - தயையே! நிஷாதாநாம் நேதா - வேடர்களுக்குத் தலைவன் (குஹன்), கபிகுலபதிஃ - குரங்குஜாதிக்கரசன் (ஸுக்ரீவர்), காபி ஶபரீ - யாரோ ஒரு காட்டுமனுஷியான சபரீ, குசேலஃ - கந்தைத்துணிக் குசேலர், குப்ஜா ஸா - (கம்ஸன் சேடியான) அந்தக்கூனி, வ்ரஜயுவதயஃ - இடைப்பெண்கள், மாலாக்ருத் - மாலாகாரர், இதி - ஆகிய இப்படிக்கொத்த, அமீஷாம் - இவர்களுடைய, நிகர்ஷம் - தாழ்மையையும், வ்ருஷகிரிபதேஃ - வேங்கடமலை அரசனுடைய, உந்நதிம் - உயர்த்தியையும், ப்ரஸ்ருமரைஃ - (கரைபுரண்டுவரும்) ப்ரவஹிக்கும், ஸ்ரோதோபிஃ - ஜலங்களால், ப்ரஸஹ்ய - பலாத்காரமாக, ஸமயஸி - ஸமானமாகச் செய்கிறாய் (ஒரு ஸமனாக்குகிறாய்).

தயையே! வேடர்களுக்கு நாயகனான குஹன், வானரகுலத்துக்கு அதிபனான ஸுக்ரீவன், யாரோ ஒரு வேடப்பெண், குசேலர், அந்தக்கூனி, இடைப்பெண்கள், மாலாகாரர் என்கிற இவர்களுடைய தாழ்வையும் வேங்கடமலையரசனுடைய மேன்மையையும் உன்னுடைய அபரிமிதமான ப்ரவாஹங்களாலே நிரப்பி பலாத்காரமாய் ஸமனாக்குகிறாய்.

(தா—ம்) முன் ச்லோகத்தில் அபராதம் செய்தவர்களுக்கு விதிக்கும் தண்டனையும் அனுகூலமாக முடிகிறதென்று காட்டினார். இங்கே அதிநீசமான குஹன் முதலியவர்களோடும் அத்யுச்சரான மலைப்பெருமாள் தயாதேவியின் ப்ரபாவத்தால் ஸமமாகக் கலந்து பரிமாறுவதைக்காட்டுகிறார். உயரத்திலிருப்பவரையும், தாழ்ந்த இடத்திலிருப்பவரையும் ஸமப்படுத்துவதற்காக தயாதேவி தன்னுடைய ப்ரவாஹங்களை வெள்ளமிடச் செய்து இருவரையும் சமமாகச் சேர்த்துவிடுகிறாள். வெள்ளம் மேலிருப்பவனையும் கீழே கொண்டுவரும்; கீழிருப்பவனையும் மேலே கொண்டுவரும். இப்படி இரண்டு விதத்தாலும் இருவரையும் ஸமநிலையாக்கலாம். இங்கே கூனியென்பது கம்ஸனுக்கு சந்தனச்சாந்து அரைத்துக்கொண்டுபோகும் மூன்று கோணலையுடைய த்ரிவக்ரையான குப்ஜையைச் சொல்லுகிறது. அவள் விஷயத்தில் அவள் உடம்பு கோணல்களையெல்லாம் ஸமப்படுத்தினதையும் கொள்ளவேணும். (65)

𑌤𑍍𑌵𑌯𑌾 𑌦𑍃𑌷𑍍𑌟𑌸𑍍𑌤𑍁𑌷𑍍𑌟𑌿𑌂 𑌭𑌜𑌤𑌿 𑌪𑌰𑌮𑍇𑌷𑍍𑌠𑍀 𑌨𑌿𑌜𑌪𑌦𑍇
𑌵𑌹𑌨𑍍𑌮𑍂𑌰𑍍𑌤𑍀𑌰𑌷𑍍𑌟𑍌 𑌵𑌿𑌹𑌰𑌤𑌿 𑌮𑍃𑌡𑌾𑌨𑍀𑌪𑌰𑌿𑌬𑍃𑌢𑌃 ।
𑌬𑌿𑌭𑌰𑍍𑌤𑌿 𑌸𑍍𑌵𑌾𑌰𑌾𑌜𑍍𑌯𑌂 𑌵𑍃𑌷𑌶𑌿𑌖𑌰𑌿𑌶𑍃𑌙𑍍𑌗𑌾𑌰𑌿𑌕𑌰𑍁𑌣𑍇
𑌶𑍁𑌨𑌾𑌸𑍀𑌰𑍋 𑌦𑍇𑌵𑌾𑌸𑍁𑌰𑌸𑌮𑌰𑌨𑌾𑌸𑍀𑌰𑌸𑍁𑌭𑌟𑌃 ॥

த்வயா த்ருஷ்டஸ்துஷ்டிம் பஜதி பரமேஷ்டீ நிஜபதே
வஹந்மூர்த்தீரஷ்டௌ விஹரதி ம்ருடாநீபரிப்ருட: ।
பிபர்த்தி ஸ்வாராஜ்யம் வ்ருஷசிகரிச்ருங்காரிகருணே
சுநாஸீரோ தேவாஸுரஸமரநாஸீரஸுபட: ॥ (66)

(ப-ரை) 𑌵𑍃𑌷𑌶𑌿𑌖𑌰𑌿𑌶𑍃𑌙𑍍𑌗𑌾𑌰𑌿𑌕𑌰𑍁𑌣𑍇 - வேங்கடமலையின் அழகான பெருமாள் தயையே! 𑌪𑌰𑌮𑍇𑌷𑍍𑌠𑍀 - உயர்ந்த பதத்திலுள்ள ப்ரஹ்மாவானவர், 𑌤𑍍𑌵𑌯𑌾-உன்னாலே, 𑌦𑍃𑌷𑍍𑌟𑌃 - கடாக்ஷிக்கப்பட்டு, 𑌨𑌿𑌜𑌪𑌦𑍇 - தன் ஸ்தானத்தில், 𑌤𑍁𑌷𑍍𑌟𑌿𑌂 - ஆநந்தத்தை, 𑌭𑌜𑌤𑌿 - எப்பொழுதும் அடைந்து கொண்டிருக்கிறார், 𑌮𑍃𑌡𑌾𑌨𑍀𑌪𑌰𑌿𑌬𑍃𑌢𑌃 - பார்வதீபதியானவர், 𑌅𑌷𑍍𑌟𑍌 - எட்டு, 𑌮𑍂𑌰𑍍𑌤𑍀𑌃 - சரீரங்களை (ஐந்து பூதங்கள், ஸூர்யன், சந்திரன், யாகம் செய்யும் எஜமாநன் ஆக எட்டு), 𑌵𑌹𑌨𑍍 - தாங்கிக்கொண்டு, 𑌵𑌿𑌹𑌰𑌤𑌿 - விளையாடுகிறார், 𑌶𑍁𑌨𑌾𑌸𑍀𑌰𑌃-இந்திரன், 𑌦𑍇𑌵𑌾𑌸𑍁𑌰𑌸𑌮𑌰𑌨𑌾𑌸𑍀𑌰𑌸𑍁𑌭𑌟𑌃 - தேவாஸுரர்கள் யுத்தத்தில் சேனை முனையில் சிறந்த போர் வீரனாக இருந்துகொண்டு, 𑌸𑍍𑌵𑌾𑌰𑌾𑌜𑍍𑌯𑌂 - ஸ்வர்க்கத்தரசை, 𑌬𑌿𑌭𑌰𑍍𑌤𑌿 - பரிபாலிக்கிறான்.

வ்ருஷகிரிக்கு அலங்காரமான ஸ்ரீநிவாஸனுடைய கருணையே! உன்னால் கடாக்ஷிக்கப்பட்டு ப்ரஹ்மாவானவர் தன்னுடைய ஸ்தானத்தில் ஸந்தோஷத்தை அடைகிறார். (உன்னாலே கடாக்ஷிக்கப்பட்டு) பார்வதீபதியானவர் எட்டு மூர்த்திகளைத் தரித்துக்கொண்டு ஸுகமாக விளையாடுகிறார். இந்த்ரனும் தேவாசுரர்கள் ஒருவரையொருவர் எதிர்க்கும் யுத்தமுகத்தில் உன் கடாக்ஷத்தால் உத்தமவீரனாகி தன் ராஜ்யத்தைத் தரிக்கிறான்.

(தா—ம்) முன் ச்லோகத்தில் மந்தர்களோடு மஹான்கள் சிறிதேனும் வேற்றுமையின்றி கலக்கும் ஸௌசீல்ய குணத்தின் ஆவிஷ்கரணம் தயையினுடைய ப்ரபாவமென்றார். இங்கே ஜக

தீச்வரர்களான ப்ருஹ்மருத்ரேந்திரர்கள் தங்கள் அரும் பெரும் ஐச்வர்யங்களைப் பெற்று ஸுகப்படுகிறார்கள் என்பதைக் காட்டுகிறார். (66)

𑌦𑌯𑍇 𑌦𑍁𑌗𑍍𑌧𑍋𑌦𑌨𑍍𑌵𑌦𑍍𑌵𑍍𑌯𑌤𑌿𑌯𑍁𑌤𑌸𑍁𑌧𑌾𑌸𑌿𑌨𑍍𑌧𑍁𑌨𑌯𑌤𑌃
𑌤𑍍𑌵𑌦𑌾𑌶𑍍𑌲𑍇𑌷𑌾𑌨𑍍𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌜𑌨𑌿𑌤𑌮𑍃𑌤𑌸𑌂𑌜𑍀𑌵𑌨𑌦𑌶𑌾𑌃 ।
𑌸𑍍𑌵𑌦𑌨𑍍𑌤𑍇 𑌦𑌾𑌨𑍍𑌤𑍇𑌭𑍍𑌯𑌃 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌵𑌦𑌨𑌕𑌰𑍍𑌪𑍂𑌰𑌗𑍁𑌳𑌿𑌕𑌾
𑌵𑌿𑌷𑌾𑌣𑍍𑌵𑌨𑍍𑌤𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌂 𑌵𑍃𑌷𑌶𑌿𑌖𑌰𑌿𑌵𑌿𑌶𑍍𑌵𑌂𑌭𑌰𑌗𑍁𑌣𑌾𑌃 ॥

தயே துக்தோதந்வத் வ்யதியுத ஸுதாஸிந்துநயத:
த்வதாச்லேஷாந்நித்யம் ஜநிதம்ருதஸம்ஜீவநதசா: I
ஸ்வதந்தே தாந்தேப்ய: ச்ருதிவதநகர்பூரகுளிகா
விஷாண்வந்தச்சித்தம் வ்ருஷசிகரிவிச்வம்பரகுணா: II

(ப-ரை) 𑌦𑌯𑍇 - தயையே! 𑌵𑍃𑌷𑌶𑌿𑌖𑌰𑌿𑌵𑌿𑌶𑍍𑌵𑌂𑌭𑌰𑌗𑍁𑌣𑌾𑌃 - வேங்கடமலையினுச்சியில் உலகத்தைத் தாங்கிக் கொண்டு நிற்கும் பெருமாளுடைய குணங்கள், 𑌦𑍁𑌗𑍍𑌧𑍋𑌦𑌨𑍍𑌵𑌦𑍍𑌵𑍍𑌯𑌤𑌿𑌯𑍁𑌤𑌸𑍁𑌧𑌾𑌸𑌿𑌨𑍍𑌧𑍁𑌨𑌯𑌤𑌃 - பாற்கடலும் அமிர்தக்கடலும் கலக்குமழகுபோல், 𑌤𑍍𑌵𑌦𑌾𑌶𑍍𑌲𑍇𑌷𑌾𑌤𑍍 - உன்னோடு கலப்பதிநாலே, 𑌜𑌨𑌿𑌤𑌮𑍃𑌤𑌸𑌂𑌜𑍀𑌵𑌨𑌦𑌶𑌾𑌃-ம்ருதப்ராயரையும் உயிர்ப்பித்து உஜ்ஜீவிக்கும் தசையை அடைந்தவைகளாயும், 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌵𑌦𑌨𑌕𑌰𑍍𑌪𑍂𑌰𑌗𑍁𑌳𑌿𑌕𑌾𑌃 - ச்ருதிதேவிகளின் நாக்குகளில் பச்சைக்கற்பூரகுளிகைகளாயும், 𑌚𑌿𑌤𑍍𑌤𑌂 𑌵𑌿𑌷𑌾𑌣𑍍𑌵𑌨𑍍𑌤𑌃-மனதை (ஆநந்தத்தால்) பிழிவதாயும் (மற்றொன்றை நினையாமல் ஒரே நிலையில் நிறுத்துவதாயும்), 𑌦𑌾𑌨𑍍𑌤𑍇𑌭𑍍𑌯𑌃 - இந்திரியங்களை வசப்படுத்தினவர்களுக்கு, 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 - ஸர்வ காலமும், 𑌸𑍍𑌵𑌦𑌨𑍍𑌤𑍇 - ருசியாயிருக்கின்றன.

தயையே! பாற்கடலோடு நன்றாய்க் கலந்த அமிர்தக்கடல் போல் உன்னுடைய நெருக்கமான ஸம்பந்தத்தால் இறந்தவர்களைப் பிழைப்பிக்கும் சக்தியுடையவைகளாயும், வேதங்களுடைய வாய்களில் கற்பூர குளிகைகளாயும், மனதைப் பிழியச் செய்வதாயும் உள்ள வ்ருஷாசலேச்வர குணங்கள் இந்திரியத்தை ஜயித்தவர்களுக்கு எக்காலத்திலும் ரஸிக்கின்றன.

(தா—ம்) அமிர்தம் மரணத்தைத் தடுத்து அதினின்று காப்பாற்றி ப்ராணிகளை உயிர்ப்பிக்கும். அதுபோல தயை

என்னும் அம்ருத குணம் ஸ்ரீநிவாஸனுடைய மற்ற குணங்களோடு கலந்து பாபச்சுமையால் ம்ருதப்ராயராயிருக்கும் ஆத்மாக்களை ஸஞ்ஜீவனம் செய்து அம்ருதர்களாக்கும். கற்பூர குளிகைகளை நாக்கில் வைத்தால் ரஸம் ஊறுவதுபோல் தயையோடு கலந்த பகவத் குணங்களை ச்ருதி தன் நாக்கில் வைத்து உச்சரிக்கும்பொழுது ச்ருதியின் நாக்கில் ரஸம் ஊறும். அந்த அம்ருத குணங்களைக் கேட்ட மனஸு தேனடையிலிருந்து தேனைப் பிழிவதுபோல் ரஸத்தைப் பிழியும். (67)

ஜகஜ்ஜந்மஸ்தேமப்ரளயரசநாகேளிரஸிகோ
விமுக்த்யேகத்வாரம் விகடிதகவாடம் ப்ரணயிநாம் ।
இதி த்வய்யாயத்தம் த்விதயமுபதீக்ருத்ய கருணே
விசுத்தாநாம் வாசாம் வ்ருஷசிகரிநாத: ஸ்துதிபதம் ॥

(பதவுரை) கருணே - தயையே! வ்ருஷசிகரிநாத:- வேங்கடமலையரசன், ஜகஜ்ஜந்மஸ்தேமப்ரளயரசநாகேளிரஸிக: - ஜகத்தின் ஸ்ருஷ்டி ஸ்திதி ப்ரளயங்களை உண்டுபண்ணுவதென்கிற விளையாட்டில் ரஸிகனும், ப்ரணயிநாம் - தன்னிடத்தில் ப்ரணயமென்னும் ப்ரீதியையுடையவர்களுக்கு, விகடிதகவாடம் - திறக்கப்பட்ட கதவையுடைய, விமுக்த்யேகத்வாரம் - பரமபதமென்னும் மோக்ஷத்துக்கு ஒரே வாசலாயும், த்வய்யாயத்தம் - உன்னாலாகவேண்டியதான, இதி த்விதயம் - இந்த இரண்டு பெருமைகளையும், உபதீக்ருத்ய - காரணமாகக் கொண்டு, விசுத்தாநாம் வாசாம் - (புருஷகர்த்ருகமல்லாததால்) தோஷமற்றதும் பரிசுத்தமுமான வேதவாக்குகளுக்கு, ஸ்துதிபதம் - துதிக்கப் பாத்ரமாக (ஆகிறான்).

கருணையே! வ்ருஷகிரிக்கு அதிபதியானவன் ஜகத்தில் உத்பத்தி ஸ்திதி நாசங்களைச் செய்விக்கும் விளையாட்டில் ரஸிகனையும், ப்ரீதியையும், நம்பிக்கையையும் உடையவருக்கு மோ

க்ஷத்திற்குக் கதவு திறந்துவைத்திருக்கும் ஓரே த்வாரம் ஆகை யும், ஆக இவ்விரண்டு ஆகாரத்தையும் உன்வசமாயிருப்பதால் அடைவதைக் காரணமாகக்கொண்டு மாசற்ற வேதவாக்குகளு டைய ஸ்தோத்ரத்திற்கு அவன் விஷயமாகிறான்.

(தா—ம்) முன்பு இரண்டாவது தசகத்திலேயே உலகத் தைப் படைப்பதும், காப்பதும் அழிப்பதும், கருணையின் கார்யமென்று நிரூபித்திருக்கிறார். ஸ்ருஷ்டி முதலியது ஸம்ஸா ரத்தினுடைய வ்ருத்தியாகும். மோக்ஷமென்பது ஸம்ஸாரத்தை அடியோடு தொலைப்பதாகும். ஸம்ஸாரத்தை வ்ருத்தி செய் யும் ஸ்ருஷ்டி முதலிய வ்யாபாரங்களைத் தனக்கு விளையாட்டாக உடைய ஈச்வரன் உன் வசமாயிருப்பதால் தன்னிடத்தில் ப்ரணயத்தைக்காட்டுகிறவர்களுக்கு மோக்ஷத்வாரத்தின் கதவைத் திறந்துகொண்டு வாருங்களென்று அழைக்கிறான். இதையிட்டுத் தான் ப்ராணிகளிடத்தில் ஆயிரம் தாய் தந்தையரைக்காட்டி லும் அதிகமான வாத்ஸல்யத்தையுடைய வேதம் ஸ்ரீநிவாஸனை ஸ்தோத்ரம் செய்கிறது. ப்ராணிகளுக்கு ஸுலபமாய் மோக்ஷம் கொடுப்பதென்கிற தயா குணமிருப்பதாலேதான் சுத்தமான வேதவாக்குகள் ஈச்வரனை ஸ்துதிக்கின்றன. (68)

கலிக்ஷோபோந்மீலத்க்ஷிதிகலுஷகூலங்கஷஜவை
ரநுச்சேதைரேதைரவடதடவைஷம்யரஹிதை: ।
ப்ரவாஹைஸ்தே பத்மாஸஹசரபரிஷ்காரிணி க்ருபே
விகல்ப(ல்ப்ய)ந்தேऽநல்பா வ்ருஷசிகரிணோ நிர்ஜரகுணா:(ஹ்ருணா:) ॥௬௯॥

கலிக்ஷோபோந்மீலத்க்ஷிதிகலுஷகூலங்கஷஜவை
ரநுச்சேதைரேதைரவடதடவைஷம்யரஹிதை: 1
ப்ரவாஹைஸ்தே பத்மாஸஹசரபரிஷ்காரிணி க்ருபே
விகல்ப(ல்ப்ய)ந்தேऽநல்பா வ்ருஷசிகரிணோ நிர்ஜரகுணா:(கணு:)11

(ப-ரை) பத்மாஸஹசரபரிஷ்காரிணி - லக்ஷ்மியோடு ஸஞ்சரிக்கும் ஸ்ரீநிவாஸனுக்கு அலங்காரத்தைச் செய்யும், க்ருபே - தயையே, கலிக்ஷோபோந்மீலத்க்ஷிதிகலுஷகூலங் கஷஜவை: - கலியின் கலக்கத்தால் வளரும் உலகபாபங்களைப் போக்கக்கூடிய வேகத்தை உடையதும், அநுச்சேதை: - ஒய்வதென்பதில்லாததும், அவடதடவைஷம்யரஹிதை: -

பள்ளம் மேடு என்கிற வ்யத்யாஸம் பாராததுமான, தெவ்ரூவாஹெஹ: - உன்னுடைய ப்ரவாஹங்களோடு, க்ஷுண்ணா: - சிறுமையேயில்லாமல் மிகப்பெரிதான, வ்ருஷசிகரிண: - வடமாமலைப் பெருமாளுடைய, நிஸ்ஸரணா:-அருவிகளின் குணங்கள், விக்ஷு ஞெ - ஒக்கின்றன.

தாமரையாளோடு ஸஹசரனான ஸ்ரீநிவாஸனை அலங்காரம் செய்யும் க்ருபையே! கலியின் கலகத்தினால் உண்டாகும் மனக் கசடுகளை கரையை உடைத்து வெள்ளமிட்டு ஓடுவதாயும், விச்சேதமற்றதாயும், மேடு பள்ளம் என்னும் தாரதம்யத்தை நீக்குவதாயும் உள்ள உன்னுடைய அனேக ப்ரவாஹங்கள் அதே குணங்களையுடைய திருமலையின் அருவி ப்ரவாஹங்களுக்கு உவமையாகக் கூறப்படுகின்றன.

(தா—ம்) திருமலையின் அருவிகளின் ப்ரவாஹங்கள் பூமியிலுள்ள அசுத்திகளை அடியோடு போக்கிவிடும். கரைபுரண்டு ஓடும் அந்த ப்ரவாஹங்களுக்குத் தட்டுத்தடங்கல் இராது. மேடு பள்ளம் என்கிற பேதத்தைப் பாராமல் எல்லாவற்றின்மேலும் ஓடும். இப்படியே தயையின் கரை புரண்ட ப்ரவாகங்களும், உலகத்தின் கலி கலுஷங்களைப் போக்கும். உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்கிற பேதத்தைப் பாராமல் யாவர்பேரிலும் மோதி ஓடும். இந்த தசகத்தின் ஆரம்பத்தில் ப்ரளயகால ஸமுத்ரங்களும் வேகமான வெள்ளங்களும் அவிக்கமாட்டாத அவித்யை என்னும் நெருப்பை ப்ருஹ்மஸ்வரூபத்தைவிட பெரிதான ஓரோர் திவலையையுடைய தயையின் ப்ரவாஹம் அவிக்க வலிமையுடையது என்று கூறினார். சரணாகதியை அனுஷ்டித்த உத்தரக்ஷணத்திலேயே ஸ்ரீநிவாஸனுடைய தயை முன்பு அணைபோட்டிருந்தது. வெள்ளமிட்டு அணையை உடைத்து கரைபுரண்டு ஓடி கச்மலங்களையெல்லாம் துலைத்து மண்டியெறியும் காமமென்னும் அக்நியை அவித்து ப்ரஹ்மமென்னும் அம்ருதாநந்தஸமுத்ரத்தில் கொண்டுபோய்ச் சேர்த்துவிடுகிறதென்பதை அங்கே அனுபவிக்க ஆரம்பித்தார். அந்த அனுபவம் இவர் மனதில் வெள்ளமிட்டோடிக்கொண்டிருக்கிறது. இந்த தசகம் முடியுமுன் அதே அனுபவத்தை வேறொரு ப்ரகாரமாக இந்த ச்லோகத்திலும் காட்டுகிறார். (69)

𑌕𑌿𑌲𑌂 𑌚𑍇𑌤𑍋𑌵𑍃𑌤𑍍𑌤𑍇𑌃 𑌕𑌿𑌮𑌿𑌦𑌮𑌿𑌤𑌿 𑌵𑌿𑌸𑍍𑌮𑍇𑌰𑌭𑍁𑌵𑌨𑌂
𑌕𑍃𑌪𑍇 𑌸𑌿𑌂𑌹𑌕𑍍𑌷𑍍𑌮𑌾𑌭𑍃𑌤𑍍𑌕𑍃𑌤𑌮𑍁𑌖𑌚𑌮𑌤𑍍𑌕𑌾𑌰𑌕𑌰𑌣𑌮𑍍 ।
𑌪𑌰𑌨𑍍𑌯𑌾𑌸𑌚𑍍𑌛𑌨𑍍𑌨𑌪𑍍𑌰𑌬𑌲𑌵𑍃𑌜𑌿𑌨𑌪𑍍𑌰𑌾𑌭𑍃𑌤𑌭𑍃𑌤𑌾𑌂
𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑍍𑌰𑌸𑍍𑌥𑌾𑌨𑌂 𑌤𑍇 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌨𑌗𑌰𑌶𑍃𑌙𑍍𑌗𑌾𑌟𑌕𑌜𑍁𑌷𑌃 ॥

கிலம் சேதோவ்ருத்தே: கிமிதமிதி விஸ்மேரபுவநம்
க்ருபே ஸிம்ஹக்ஷ்மாப்ருத் க்ருதமுகசமத்காரகரணம் ।
பரந்யாஸச்சந்நப்ரபலவ்ருஜிநப்ராப்ருதப்ருதாம்
ப்ரதிப்ரஸ்தாநம் தே ச்ருதிநகரச்ருங்காடகஜுஷ: ॥

(ப-ரை) 𑌕𑍃𑌪𑍇 - தயையே, 𑌪𑌰𑌨𑍍𑌯𑌾𑌸𑌚𑍍𑌛𑌨𑍍𑌨𑌪𑍍𑌰𑌬𑌲𑌵𑍃𑌜𑌿𑌨𑌪𑍍𑌰𑌾𑌭𑍃𑌤𑌭𑍃𑌤𑌾𑌂 - சரணாகதி (பாரத்தை ஒப்புவிக்கிறது) என்கிற ஓர் ஆவரணத்தால் மேலே மூடப்பட்ட ப்ரபலமான பாபங்கள் என்னும் உபஹாரத்தைக் கொணருகிறவர்களை உத்தேசித்து, 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌨𑌗𑌰𑌶𑍃𑌙𑍍𑌗𑌾𑌟𑌕𑌜𑍁𑌷𑌃 - வேதமென்னும் பட்டணத்தில் நாச்சந்தியில் நிற்கும், 𑌤𑍇 - உன்னுடைய, 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑍍𑌰𑌸𑍍𑌥𑌾𑌨𑌂 - எதிர்கொண்டு வரவேற்பது, 𑌚𑍇𑌤𑍋𑌵𑍃𑌤𑍍𑌤𑍇𑌃 - புத்திவ்ருத்தியினுடைய, 𑌕𑌿𑌮𑌿𑌦𑌂 𑌕𑌿𑌲𑌂 - இது என்ன ஓட்டை, (மறதி) 𑌇𑌤𑌿 - என்று, 𑌵𑌿𑌸𑍍𑌮𑍇𑌰𑌭𑍁𑌵𑌨𑌂 - ஆச்சர்யப்படும் உலகத்தை உடையதாயும், 𑌸𑌿𑌂𑌹𑌕𑍍𑌷𑍍𑌮𑌾𑌭𑍃𑌤𑍍𑌕𑍃𑌤𑌮𑍁𑌖𑌚𑌮𑌤𑍍𑌕𑌾𑌰𑌕𑌰𑌣𑌮𑍍 - வேங்கடமலை வித்வானாகிய ஸ்ரீநிவாஸனுக்கு ஆச்சர்யத்தை உண்டாக்குவதாயும் (இருக்கிறது).

"சரணாகதி (சுமையை அங்கீகரிக்கப் பிரார்த்திப்பது) என்ற ஆவரணத்தால் (மூடியால்) கொடுமையான ஏராளமான பாபம் என்கிற உபஹாரத்தை மூடிவந்து நிற்பவரை உத்தேசித்து அதைப் பெற்றுக்கொள்ள நீ அவர்களை நோக்கிச் செல்வதானது "இது என்ன மனோவ்யாபாரத்திற்குச் சூன்யதை! இது என்ன மறதி!" என்று உலகத்திற்கும் ஸ்ரீநிவாஸனுக்கும் ஆச்சர்யத்தை உண்டுபண்ணுகிறது".

(தா-ம்) சரணாகதியின் பலம் நாம் செய்த கோடிக்கணக்கான பெருங் குற்றங்களை ஸர்வஜ்ஞனும் ஒருகாலும் மறதி என்பதே இல்லாதவனுமான ஈச்வரன் அடியோடு அனாதரிக்கவேண்டும். நம்முடைய கோடிக்கணக்கான பாபங்களின் நினைப்பினால் நிறைந்

திருக்குமவன் மனது அதையெல்லாம் அடியோடுமன்னித்து சூந்ய மாகவேணும். தயையினிடத்தில் சரணாகதி செய்த உடன் காலில் ஈச்வரனுடைய மனது சரணாகதனுடைய அபரிமிதமான பாபங்கள் விஷயத்தில் கிலமாகிறது. நன்றாய் நினைத்துக்கொண் டிருந்த எத்தனையோ கணக்கற்ற பாபங்கள் ஒரு க்ஷணத்தில் நம்மை அறியாமல் கழிந்துபோய் மறைந்து ஓடிவிட்டன என்று ஈச்வரனுக்கு ஆச்சர்யம் உண்டாகிறது. இது என்ன! கிலமா யிற்றே மனது என்று அவனும் ஆச்சர்யப்படுகிறான். எல்லா வற்றையும் பார்த்துக்கொண்டிருக்கும் நித்யஸூரிகளும், முக் தர்களும் இப்படி ஈச்வரன் மனதுக்கு சூந்யதை ஏற்படுவதைக் கண்டு, இதென்ன ஆச்சர்யமென்று விஸ்மிதராகிறார்கள். வேதம் என்னும் பட்டணத்தில் நான்கு மார்க்கங்கள் உண்டு. அவரவர் கள் ருசிக்குத் தகுந்தபடி தர்மார்த்தகாமமோக்ஷங்கள் என்கிற சதுர்விதபுருஷார்த்தங்களையும் ஸம்பாதிக்கும் வழியை வேதம் காட்டுகிறது. இந்த நான்கு புருஷார்த்தங்களும் வேதம் காட்டின உபாயத்தை அநுஷ்டிப்பதால் ஈச்வரனுடைய தயையினால் பெற வேண்டும். அவரவர்களுக்கு வேண்டிய புருஷார்த்தங்களை அளிப் பதற்காக தயாதேவி நான்கு புருஷார்த்தமார்க்கங்களும் சேரும் நாச்சந்தியில் எந்தப் புருஷார்த்தத்தைக் கோறி யார் வருபோ கிறார்களென்று ஸஜ்ஜமாயிருக்கிறாள். மோக்ஷத்தை அபேக்ஷிக்கி றவன் சரணாகதியென்னும் வ்யாஜத்தை வைத்துக்கொண்டு அத னால் தன் பாபங்களை எல்லாம் மறைத்து சரணாகதி என்னும் தர்மத்தை மேலே வைத்து அதை உபஹாரமாகக்கொண்டு தயாதேவியின் ஸந்நிதிக்கு வந்து அதை ஸமர்ப்பிக்க ஆரம்பிக் கிறான், அந்த உபஹாரத்தைப் பெற்றுக்கொள்ள தயாதேவி அவனை நோக்கி முன் செல்கிறாள். இதென்ன ஆச்சர்யம்! கணக் கற்ற பாபங்களைச் சரணாகதி என்னும் ஒரு தர்மலேசத்தால் மூடிக் கொண்டு வந்தால் மூடப்பட்டிருக்கிற அபரிமித அதர்மங்கள் தெரியாமல் போய்விடுமா? முழுப்பூஷணிக்காயைச் சோத்தில் மறைக்கக்கூடுமா? தயாதேவி, சரணமடைகிறேன் என்னும் வார்த்தையைக் கேட்டு மகிழ்ந்து, பர்வதக்கணக்கான பாபங்களை அடியோடு பார்க்காமல் மறந்து விடுகிறாளே! ஸர்வஜ்ஞனான ஈச் வரனும் உடனே ஒரு க்ஷணத்தில் அத்தனையும் கழித்து விடுகி றானே! இப்படி ஆச்சர்யங்களைக் காட்டி இந்தத் தசகத்தை முடிக்கிறார்.

(70)

𑌤𑍍𑌰𑌿𑌵𑌿𑌧𑌚𑌿𑌦𑌚𑌿𑌤𑍍𑌸𑌤𑍍𑌤𑌾𑌸𑍍𑌥𑍇𑌮𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌨𑌿𑌯𑌾𑌮𑌿𑌕𑌾
𑌵𑍃𑌷𑌗𑌿𑌰𑌿𑌵𑌿𑌧𑍋𑌰𑌿𑌚𑍍𑌛𑌾 𑌸𑌾 𑌤𑍍𑌵𑌂 𑌪𑌰𑍈𑌰𑌪𑌰𑌾𑌹𑌤𑌾 ।
𑌕𑍃𑌪𑌣 𑌭𑌰𑌭𑍃𑌤𑍍𑌕𑌿𑌂𑌕𑍁𑌰𑍍𑌵𑌾𑌣𑌪𑍍𑌰𑌭𑍂𑌤𑌗𑍁𑌣𑌾𑌨𑍍𑌤𑌰𑌾
𑌵𑌹𑌸𑌿 𑌕𑌰𑍁𑌣𑍇 𑌵𑍈𑌚𑌕𑍍𑌷𑌣𑍍𑌯𑌂 𑌮𑌦𑍀𑌕𑍍𑌷𑌣𑌸𑌾𑌹𑌸𑍇 ॥

த்ரிவிதசிதசித்ஸத்தாஸ்தேம ப்ரவ்ருத்திநியாமிகா
வ்ருஷகிரிவிபோரிச்சா ஸா த்வம் பரைரபராஹதா I
க்ருபணபரப்ருத் கிம்குர்வாணப்ரபூதகுணாந்தரா
வஹஸி கருணே வைசக்ஷண்யம் மதீக்ஷணஸாஹஸே II

(ப-ரை) 𑌕𑌰𑍁𑌣𑍇 - தயையே! 𑌤𑍍𑌰𑌿𑌵𑌿𑌧𑌚𑌿𑌦𑌚𑌿𑌤𑍍𑌸𑌤𑍍𑌤𑌾𑌸𑍍𑌥𑍇𑌮𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌨𑌿𑌯𑌾𑌮𑌿𑌕𑌾 - நித்யர், முக்தர், ஸம்ஸாரிகள் என்ற மூவகை சேதனரின் ஸத்தை, ஸ்திதி, ப்ரவ்ருத்திகளை நியமிப்பவளும், 𑌪𑌰𑍈𑌰𑌪𑌰𑌾𑌹𑌤𑌾 - பிறரால் தடுக்கமுடியாதவளும், 𑌕𑍃𑌪𑌣𑌭𑌰𑌭𑍃𑌤𑍍𑌕𑌿𑌂𑌕𑍁𑌰𑍍𑌵𑌾𑌣𑌪𑍍𑌰𑌭𑍂𑌤𑌗𑍁𑌣𑌾𑌨𑍍𑌤𑌰𑌾 - பேதையான ப்ரபந்நனுடைய பாரத்தைச் சுமக்கும் உனக்கு ஊழியம் செய்யும் அரும்பெரும் மற்ற பகவத் குணங்களோடு கூடியவளாயும், (உள்ள) 𑌵𑍃𑌷𑌗𑌿𑌰𑌿𑌵𑌿𑌧𑍋𑌃 - வேங்கடேசனுடைய, 𑌇𑌚𑍍𑌛𑌾 - இச்சையே ஸ்வரூபமான, 𑌸𑌾 அந்த, 𑌤𑍍𑌵𑌂 - நீ, 𑌮𑌦𑍀𑌕𑍍𑌷𑌣𑌸𑌾𑌹𑌸𑍇 - என்னைப் பார்க்கிறது என்கிற ஸாஹஸக்ருத்யத்தில், 𑌵𑍈𑌚𑌕𑍍𑌷𑌣𑍍𑌯𑌂 - ஸாமர்த்யத்தை, 𑌵𑌹𑌸𑌿 - வஹிக்கிறாய்.

"கருணையே! மூன்றுவிதமான சேதனு சேதனங்களுடைய ஸ்வரூப ஸ்திதி ப்ரவ்ருத்திகளை நியமனம் செய்பவளாயும், வேங்கடாசலபதியினுடைய திருவுள்ள ஸ்வரூபமாயும், பிறரால் தடுக்கக் கூடாதவளாயும், ஸர்வலோகப்ரஸித்தமாயும், அநாதஜனங்களுடைய யோக க்ஷேமபாரத்தை ஹரிக்கிறவளாயும், பகவானுடைய மிகச்சிறந்த மற்ற குணங்கள் உனக்கு ஊழியம்செய்யப்பெற்றவளாயும், இருக்கும் நீ (மிகக் கொடிய) என்னையும் பார்க்கிறதென்கிற ஸாஹஸ வ்யாபாரத்தில் திறமையை வஹிக்கிறாய்".

(தா—ம்) இந்த எட்டாவது தசகத்தில் தயையின் ஸ்வரூபத்தையும் தன்மையையும் உபகார பரம்பரைகளையும் கூறுகிறார். தயை யென்பது ஸ்ரீநிவாஸனுடைய இச்சையென்கிற ஒரு

ஞானமாகும். அந்த இச்சையாவது பிறர் துக்கத்தைத் தீர்க்க வேண்டுமென்கிற ஆசை. இதுதான் தயையின் ஸ்வரூபம். ஸகல சேதநா சேதனங்களுடைய ஸ்வரூபம் ஸ்திதி ப்ருவ்ருத்தி இம் மூன்றும் பகவானுடைய இச்சாரூபமான தயையினால் நியமனம் செய்யப்படுகின்றன. ஸ்ரீநிவாஸனுடைய தயையெனும் இச்சை யைப்பிறரொருவரும் தடுக்கவொண்ணாது. அகிஞ்சனர்களுடைய ஸகல பாரங்களையும் தயை சுமந்து நிர்வஹிக்கிறாள். அநந்யர்களாய் என்னை ஸர்வவிதத்தாலும் உபாஸனம்செய்பவர்களுடைய யோக க்ஷேமங்களை நான் சுமக்கிறேனென்று கீதையில் கண்ணன் வார்த்தை. தயை நம்முடைய பாரங்களைச் சுமப்பதற்கு கார்ப்பண் யம் இருந்தால் போதும்; ஸ்ரீநிவாஸனுடைய ஞான சக்தி பல ஐச்வர்யாதி குணங்கள் தயை யென்னும் குணத்திற்கு ஊழியக் காரராகி ஆச்ரிதரை ரக்ஷிக்கும்விஷயத்தில் தயையின் கட்டளைகளை நிறைவேற்றுகின்றன. இதெல்லாம் பெரிதல்ல. கொடியனிலும் கொடியனான என்னைநோக்கி என்மீது உன்கடாக்ஷங்களைச்செலுத் துவதென்கிற ஸாஹஸமான வ்யாபாரத்தை நீசெய்கிறாயே என்று ஆச்சர்யப்படுகிறார். (71)

வ்ருஷகிரிபதேர் ஹ்ருத்யா விச்வாவதாரஸஹாயிநீ
க்ஷபிதநிகிலாவத்யா தேவி க்ஷமாதிநிஷேவிதா ।
புவநஜநநீ பும்ஸாம் போகாபவர்கவிதாயிநீ
விதமஸி பதே வ்யக்திம் நித்யாம் பிபர்ஷி தயே ஸ்வயம் ॥

வ்ருஷகிரிபதேர் ஹ்ருத்யா விச்வாவதாரஸஹாயிநீ
க்ஷபிதநிகிலாவத்யா தேவி க்ஷமாதிநிஷேவிதா ।
புவநஜநநீ பும்ஸாம் போகாபவர்கவிதாயிநீ
விதமஸி பதே வ்யக்திம் நித்யாம் பிபர்ஷி தயே ஸ்வயம் ॥

(ப-ரை) தயே - தயையே - தேவி- தேவியே, வ்ருஷகிரி பதேர்ஹ்ருத்யா - வேங்கடமலையரசன் மார்பில் வஸிப்பவளா யும், (ஹ்ருதயத்திலுள்ளவளாயும்) விச்வாவதாரஸஹாயிநீ - எல்லா அவதாரங்களிலும் துணையாயிருப்பவளாயும், (ஸஹாயம் செய்பவளாயும்), க்ஷபிதநிகிலாவத்யா - ஸமஸ்தபாபங்களை யும் போக்குபவளாயும், க்ஷமாதிநிஷேவிதா - பூமிப் பிராட்டி முதலியவர்களால் ஸேவிக்கப்பட்டவளாயும், (பொறுமை முத

லிய குணங்களோடு கூடியவளாயும்) புவநஜநநீ - உலகத்திற்குத் தாயாராயும், (உலகத்தை ஸ்ருஷ்டிப்பவளாயும்) தேஹபாஜாம் - ஜீவர்களுக்கு, போகமோக்ஷப்ரதாயிநீ - போகத்தையும் மோக்ஷத்தையும் கொடுப்பவளாயும், விதமஸி பதே - ரஜோகுணம் தமோகுணமில்லாத பரமபதத்தில், ஸ்வயம் - நீயாகவே, நித்யம் - நித்யமான, வ்யக்திம் - ஆவிர்ப்பாவத்தை, பிபர்ஷி - வைத்துக்கொண்டிருக்கிறாய். (இங்கே தயை லக்ஷ்மீ ஸ்வரூபம்போல அநுஸந்தானம்).

"விளையாடும் சீலத்தையுடைய தயாதேவியே! வேங்கடபதியினுடைய மனோஹரமானப்ரியையாயும்(அவன் திருமார்பில்வசிப்வளாயும்) அவனுடைய எல்லா அவதாரங்களுக்கும் காரணமாயும், (அவனவதரிக்கும் போதெல்லாம் அவனோடு ஸஹசரிப்பவளாயும்) ஸகல தோஷங்களையும் போக்குபவளாயும் க்ஷமை முதலிய குணங்களாலே ஸேவிக்கப்பட்டவளாயும்,(க்ஷமையென்னும் பூமிமுதலிய பிராட்டிகளாலே உபசரிக்கப்பட்டவளாயும்) உலகத்துக்கெல்லாம் தாயாயும், ஜனங்களுக்கு போகமோக்ஷங்களைக் கொடுப்பவளாயும் தமோகுணலேசமில்லாத பரமபதத்தில் நித்யமான விக்ரஹத்தை உன்னுடைய ஸ்வேச்சையினால் தரிப்பவளாயும் இருக்கிறாய்".

(தா-ம்) இந்த சுலோகத்தில் தயாதேவிக்கும் லக்ஷ்மீப்பிராட்டிக்கும் பொருந்தும்படியான விசேஷணங்களை அமைத்துத் தயையை வர்ணிப்பதால் லக்ஷ்மீப் பிராட்டிதான் தயையின் ஸ்வரூபம் என்பதைக் காட்டுகிறார். தயை என்னும் குணத்தை ஸ்தோத்ரம் செய்வதும், ஒவ்வொரு சுலோகத்திலும் தயையை ஸம்போதனம் செய்து ஸம்பாஷணம் செய்வதும் தகுமோ? சேதனர்களை அல்லவோ கூப்பிட்டுப் பேசுவது உசிதமாகும். தயையை இப்படி ஸ்தோத்ரம் செய்வது விவேகக்ருத்யமாகாது என்று இப்படி ஆக்ஷேபங்கள் வரக்கூடியதை தயை என்பது லக்ஷ்மீப்பிராட்டியே யொழிய வேறன்று என்றும், லக்ஷ்மீப்பிராட்டி தயையின் மூர்த்தி என்றும் கூறுவதினால் பரிஹரிக்கிறார். தயா ஸ்தோத்ரமென்பது தயையே வடிவெடுத்ததுபோன்ற லக்ஷ்மீதேவியின் ஸ்தோத்ரமானதால் தயையை இப்படி ஸ்தோத்ரம் செய்து அவளைக் கூப்பிட்டுப் பேசுவது அநுசிதமன்று. பகவானுடைய எல்லா அவதாரங்களிலும் பிராட்டியும் அந்தந்த அவ

தாரத்திற்குத் தக்கபடி வடிவுகளைப் பரிக்ரஹித்துக் கூட அவதரிக்கிருள். எல்லா அவதாரங்களிலும் விஷ்ணுவோடு ஸ்ரீயானவள் நழுவாமல் அநபாயிநியாயிருக்கிருள் என்கிற ஸ்ரீவிஷ்ணுபுராண வசனத்தை இங்கே நினைக்கிருர். பரமபதத்தில் இவளுடைய ஆத்யவிக்ரஹம் நித்யமானது. (72)

ஸ்வயமுதயிந: ஸித்தாத்யாவிஷ்க்ருதாஶ்ச ஸுபாலயா
விவிதவிபவவ்யூஹாவாஸா: பரம் ச பதம் விபோ: |
வ்ருஷகிரிமுகேஷ்வேதேஷ்விச்சாவதிப்ரதிலப்தயே
த்ருடவிநிஹிதா நிஶ்ரேணிஸ்த்வம் தயே நிஜபர்வபி: ||௭௩||

ஸ்வயமுதயிந: ஸித்தாத்யாவிஷ்க்ருதாஶ்ச ஸுபாலயா
விவிதவிபவவ்யூஹாவாஸா: பரம் ச பதம் விபோ: |
வ்ருஷகிரிமுகேஷ்வேதேஷ்விச்சாவதிப்ரதிலப்தயே
த்ருடவிநிஹிதா நிச்ரேணிஸ்த்வம் தயே நிஜபர்வபி: ||

(ப-ரை) தயே - தயையே! ஸ்வயமுதயிந:-ஸ்வயம்வ்யக்தரும், ஸித்தாத்யாவிஷ்க்ருதாஶ்ச - ஸித்தரான தமர்க்கு ஸேவை ஸாதித்து ப்ரகாசமானவைகளுமான, ஸுபாலயா: - திவ்ய தேசார்ச்சைகளும், விவிதவிபவவ்யூஹாவாஸா: - பலவிதமான அவதாரவிக்ரஹங்கள், வ்யூஹவிக்ரஹங்கள், ஹ்ருதயத்தில் வஸிக்கும் அந்தர்யாமிவிக்ரஹங்களும், பரம் ச பதம் விபோ: - ப்ரபுவின் பரமப்ராப்யமான விக்ரஹமும், வ்ருஷகிரிமுகேஷ் வேதேஷு - வேங்கடமலை முதலிய இந்த திவ்யங்களில், இச்சாவதிப்ரதிலப்தயே- மனோரதகாஷ்டையை அடைவதற்கு, த்வம் - நீ, நிஜபர்வபி: - உன் சொந்த கணுக்களால், த்ருடவிநிஹிதா - கெட்டியாயமைக்கப்பட்ட, நிஶ்ரேணி: - ஏணி, (ஆகிருய்).

"தயையே! ஸ்வயம் வ்யக்தரான விக்ரஹங்களுடன் கூடியதும், ஸித்தர் முதலியவர்களால் ப்ரகாசிக்கப்பட்டதாயும் உள்ள திவ்யக்ஷேத்ரங்களிலும், அநேகவிதமான விபவாவதாரங்களுடையவும், வ்யூஹாவதாரங்களுடையவும் வாஸஸ்தானங்களிலும், உலகத்துக்கெல்லாம் ப்ரபுவாகிய பரவாஸுதேவனுடைய பரம

பதத்திலும், திருமலை முதலிய இடங்களிலும் அபிமதமான புருஷார்த்தங்களை எல்லாம் அடைவதற்காக உன்னுடைய பர்வங்களாலே கெட்டியாய்க் கட்டப்பட்ட ஏணியாகிறாய்".

(தா-ம்) ஸ்வயம் வ்யக்த க்ஷேத்ரங்களிலும் ஸித்தர்கள் உவப்பை ஆதரித்துப் பகவான் அர்ச்சாரூபியாய் ஸேவை ஸாதிக்கும் க்ஷேத்ரங்களிலும், பகவான் ஸௌலப்யகாஷ்டையை அவலம்பித்து நம்மை யநுக்ரஹித்தருளுவது தயையின் ப்ரபாவம். இப்படியே விபவாவதாரங்களும் வ்யூஹாவதாரங்களும் தயையின் பெருமை. பரமபதத்தில்பகவான் ஸேவைஸாதிப்பதும் தயையின்பெருமை. வேங்கடமலையில் ஸ்ரீநிவாஸன் ஸேவை ஸாதிப்பதும் தயையின் மஹிமை. பரமபதத்திற்குப் பிறகு வேங்கடமலையைக் கூறுவதால் திருமலை பரமபதத்திற்கும் மேற்பட்டதென்கிற அபிப்பிராயத்தை ஸூசனம் செய்கிறார். ஆச்ரிதர்கள் அவரவர்கள் ஆசைப்படும் புருஷார்த்தங்களை எல்லாம் அடைவிப்பதற்குத் தயையே தயாமயமான கெட்டியான படிகளால் அமைக்கப்பட்ட த்ருடமான ஏணியாகிறாள். (73)

𑌹𑌿𑌤𑌮𑌿𑌤𑌿 𑌜𑌗𑌦𑍍𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌯𑌾 𑌕𑍢𑌪𑍍𑌤𑍈𑌰𑌕𑍢𑌪𑍍𑌤𑌫𑌲𑌾𑌨𑍍𑌤𑌰𑍈
𑌰𑌮𑌤𑌿𑌵𑌿𑌹𑌿𑌤𑍈𑌰𑌨𑍍𑌯𑍈𑌰𑍍𑌧𑌰𑍍𑌮𑌾𑌯𑌿𑌤𑍈𑌶𑍍𑌚 𑌯𑌦𑍃𑌚𑍍𑌛𑌯𑌾 ।
𑌪𑌰𑌿𑌣𑌤𑌬𑌹𑍁𑌚𑍍𑌛𑌦𑍍𑌮𑌾 𑌪𑌦𑍍𑌮𑌾𑌸𑌹𑌾𑌯 𑌦𑌯𑍇 𑌸𑍍𑌵𑌯𑌂
𑌪𑍍𑌰𑌤𑌿𑌶𑌸𑌿 𑌨𑌿𑌜𑌾𑌭𑌿𑌪𑍍𑌰𑍇𑌤𑌂 𑌨𑌃 𑌪𑍍𑌰𑌶𑌾𑌮𑍍𑌯𑌦𑌪𑌤𑍍𑌰𑌪𑌾 ॥

ஹிதமிதி ஜகத்த்ருஷ்ட்யா க்லுப்தைரக்லுப்தபலாந்தரை
ரமதிவிஹிதைரந்யைர்தர்மாயிதைஶ்ச யத்ருச்சயா ।
பரிணதபஹுச்சத்மா பத்மாஸஹாய தயே ஸ்வயம்
ப்ரதிசஸி நிஜாபிப்ரேதம் ந: ப்ரசாம்யதபத்ரபா ॥ (74)

(ப-ரை) 𑌪𑌦𑍍𑌮𑌾𑌸𑌹𑌾𑌯 𑌦𑌯𑍇 - லக்ஷ்மீஸஹாயனான ஸ்ரீநிவாஸன் தயையே! 𑌹𑌿𑌤𑌮𑌿𑌤𑌿 - ஹிதமென்று, 𑌜𑌗𑌦𑍍𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌯𑌾 - உலகத்ருஷ்டிக்கு, 𑌕𑍢𑌪𑍍𑌤𑍈𑌃 - கல்பித்துக்கொள்ளப்பட்ட ப்ராஸங்கிகஸுக்ருதங்களைக்கொண்டும், 𑌅𑌕𑍢𑌪𑍍𑌤𑌫𑌲𑌾𑌨𑍍𑌤𑌰𑍈𑌃 - ஆநுஷங்கிகஸுக்ருதங்களைக் கொண்டும், 𑌰𑌮𑌤𑌿𑌵𑌿𑌹𑌿𑌤𑍈𑌃 - புத்திபூர்வமல்லாத அஜ்ஞாதஸுக்ருதங்களைக் கொண்டும், 𑌯𑌦𑍃𑌚𑍍𑌛𑌯𑌾 𑌧𑌰𑍍𑌮𑌾𑌯𑌿𑌤𑍈𑌃 - யாத்ருச்சிகஸுக்ருதங்களைக் கொண்டும், 𑌅𑌨𑍍𑌯𑍈𑌃 - ஸாமாந்யபுத்திமூலமான மற்ற ஸுக்ருதங்களைக்

கொண்டும், வரிணதவஹாவஹா - அநேக சாக்குகளை வைத்துக்கொண்டு, ஸ்யம் - நீயாகவே, நிஜாஹிதெம் - உன்னாலேயே எண்ணப்பட்டதை, நஃ - எங்களுக்கு, திஶஸி - கொடுக்கிறாய்.

'பத்மாஸஹாய தயையே! உலகத்தார் நினைப்பதுபோல் ப்ரயோஜநத்தைக் கொடுக்குமென்று உத்தேசித்துச் செய்யப்பட்டதும், அந்தந்த புண்யகர்மத்துக்கு ஏற்பட்டிருக்கும் ப்ரயோஜனத்தைத் தவிர ப்ரயோஜனத்தைத் துறப்பதனாலேயே மோக்ஷமார்க்கத்திற்கு உபயோகப்படக்கூடிய நிவ்ருத்தி கர்மம் என்னும் ஆகாரத்தை எண்ணாமல் செய்யப்பட்டதும், புத்தி பூர்வகமல்லாமல் ஒரு புண்யம் செய்யவேண்டுமென்கிற உத்தேசமில்லாமல் செய்யப்பட்டதும், செய்கிறவன் எண்ணாமலே யத்ருச்சையாய் தர்மமாக பர்யவஸிப்பதுமான தர்மங்களை வ்யாஜங்களாக நீ கல்பித்துக்கொண்டு ரக்ஷணத்திற்கு யோக்யமே யல்லாத என் போன்றவர்களை ரக்ஷிப்பதில் உண்டாகக்கூடிய வெட்கத்தைத் தவிர்த்து நீயாகவே உன்மனதில் எங்களுக்கு ஹிதமென்று படும் புருஷார்த்தத்தைக் கொடுக்கிறாய்".

(தா—ம்) மோக்ஷோபாயங்களில் இறங்குவதற்கு நாம் புத்தி பூர்வகமாயும் ப்ரயோஜனங்களை உத்தேசியாமலும் ஸுக்ருதங்களைச் செய்யாமலிருந்தாலும் அக்ஞாதமாகவும், ப்ராஸங்கிகமாகவும் செய்யும் ஸுக்ருதங்களை வ்யாஜங்களாகக்கல்பித்துக்கொண்டு தயாதேவி நமக்கு மோக்ஷமார்க்கத்தில் ருசியை உண்டாக்கி மோக்ஷோபாயங்களில் நம்மை மூட்டுகிறாள். கொஞ்சமேனும் நம்மிடம் யாதொரு மோக்ஷயோக்யதையும் இல்லாமல் நம்மைக் காப்பாற்ற முயற்சி செய்வது வெட்கத்தைக் கொடுக்கக்கூடியது. அந்த வெட்கத்திற்குப்பரிகாரமாக நாம் அறியாமற் செய்த ஸுக்ருதங்களையும் ஒரு பொருட்டாக எண்ணி அதை நம்மைக் காப்பாற்றுவதற்கு வியாஜமாக ஏற்படுத்திக்கொள்ளுகிறாள். (74)

க்ஷிதிவிபிஶிவெவெரெஸ்யதாந்தாநுஹேதிரவெஸஜநா
நஹ்யகயஜிஹொவஹெஜெந்ஷாஜஸஜக்ஷஶாயிநீ ।
த்ரஷிதஜநதாதீர்யஸாநகூக்ஷவிதெநவஸாம்
விதரஸி கயெ வீதாதங்கா வ்ருஷாதிவதெஃ வஷி ॥ எரு ॥

அதிவிதி சிவைரைச்வர்யாத்மாநுபூதிரஸைர்ஜநாந்
அஹ்ருதயமிஹோபச்சந்த்யைஷாமஸங்கதசார்த்திநீ I
த்ருஷிதஜநதாதீர்த்தஸ்நாநக்ரமக்ஷபிதைநஸாம்
விதரஸி தயே வீதாதங்கா வ்ருஷாத்ரிபதே: பதம் II (75)

(பதவுரை) தயே - தயையே! அதிவிதிசிவைஃ - (விதி) ப்ரஹ்மா சிவர் இவர்களுக்கு மேற்பட்ட, ஐச்வர்யாத்மாநுபூதிரஸைஃ - ஐச்வர்யம் கைவல்ய ரஸாநுபவங்களால், ஏஷாம் - இவர்களுடைய, அஸங்கதசார்த்திநீ - பற்றில்லாத அவஸ்தை வரவேண்டுமென்று கோரி, ஜநாந் - ஜநங்களை, அஹ்ருதயம் - தெரியாமல், இஹ - இங்கே (பெருமாளிடம்), உபச்சந்த்ய - ஆசைகாட்டி இழுத்துவந்து, த்ருஷிதஜநதாதீர்த்தஸ்நாநக்ரமக்ஷபிதைநஸாம் - விடாய்ப்பட்டவர் (புண்ய தீர்த்தத்தில்) விடாய்தீர ஸ்நாநம்செய்வதால் (அறியாமலேயே) பாபம் கழிவதுபோல் அவர்கள் பாபம் நீங்கச்செய்து, வீதாதங்கா - நீ வெட்கப்படாமல் (கொடுப்பதற்கு) இடத்தைச் செய்துகொண்டு ஸங்கோசமில்லாமல், வ்ருஷாத்ரிபதேஃ - திருமலையரசனுடைய, பதம் - திருவடியை, ஸ்தானத்தை, விதரஸி - அளிக்கிறாய்.

"தயையே! ப்ரும்ம ருத்ராதிகளுக்கும் மேல்பட்டதான ஐச்வர்ய கைவல்ய அனுபவங்களை ப்ராணிகளுடைய ஸந்தோஷத்திற்காகக் கொடுப்பதுபோல் காட்டி அவர்களை ஆவர்ஜனம் செய்து பாபத்தைத் தீர்த்துக்கொள்வதற்காக புண்யநதியில் ஸ்நாநம் செய்வதால் பாபம் கழிவதுபோல் அவர்கள் எண்ணமலிருந்தும் அவர்களுக்கு ஐச்வர்ய கைவல்யாதி போகங்களிலும் வைராக்யத்தை மூட்டிவிட்டு, நிர்பயமாய் ஸ்ரீநிவாஸனுடைய திருவடியென்னும் உத்தமபதத்தை அளிக்கிறாய்."

(தாத்பர்யம்) ஸ்ரீநிவாஸனுடைய திருவடிலாபம் ஸர்வோத்தமமான புருஷார்த்தம், ப்ரயோஜநாந்தரங்களைத் துச்சமென்று அடியோடு தள்ளி ஸம்பூர்ணமான வைராக்யம் நிஷ்பந்நமானாலொழிய அவன் திருவடியை அடைய அதிகாரமில்லை. யோக்யதை இல்லாதவர்களுக்கு அவன் திருவடியை அடைவிக்கக் கூசுவது ஸகஜம். இந்த சங்கையை தீர்த்துக்கொள்வதற்காக மெள்ள

மெள்ளநம்மைத்தயாதேவி வைராக்ய மார்க்கத்தில் திருப்புகிருள். கங்கை முதலிய புண்யநதிகளில் நம்முடைய தாபம் தீர்வதற்கென்று மட்டும் நாம் அவகாஹனம் செய்தாலும் புண்யதீர்த்தத்திற்குள்ள மஹிமையின் பலத்தால் நாம் எண்ணுமலே நம்முடைய பாபம் கழிகிறது. அப்படியே நமக்கு உயர்ந்த பலன்களைக் கொடுத்து நம்மை ஆவர்ஜனம் செய்து மெள்ள மெள்ள அந்தப் பலங்களிலும் பற்று அறும்படி தயாதேவி செய்விக்கிருள். (75)

𑌵𑍃𑌷𑌗𑌿𑌰𑌿𑌸𑍁𑌧𑌾𑌸𑌿𑌨𑍍𑌧𑍌 𑌜𑌨𑍍𑌤𑍁𑌰𑍍𑌦𑌯𑌏 𑌨𑌿𑌹𑌿𑌤𑌸𑍍𑌤𑍍𑌵𑌯𑌾
𑌭𑌵𑌭𑌯𑌪𑌰𑍀𑌤𑌾𑌪𑌚𑍍𑌛𑌿𑌤𑍍𑌤𑍍𑌯𑍈 𑌭𑌜𑌨𑍍𑌨𑌘𑌮𑌰𑍍𑌷𑌣𑌮𑍍 ।
𑌮𑍁𑌷𑌿𑌤𑌕𑌲𑍁𑌷𑍋 𑌮𑍁𑌕𑍍𑌤𑍇𑌰𑌗𑍍𑌰𑍇𑌸𑌰𑍈𑌰𑌪𑌿 𑌪𑍂𑌰𑍍𑌯𑌤𑍇
𑌸𑍍𑌵𑌯𑌮𑍁𑌪𑌨𑌤𑍈𑌃 𑌸𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌨𑍍𑌦𑌪𑍍𑌰𑌭𑍃𑌤𑍍𑌯𑌨𑍁𑌬𑌨𑍍𑌧𑌿𑌭𑌿𑌃 ॥

வ்ருஷகிரிஸுதாஸிந்தௌ ஜந்துர்தயே நிஹிதஸ்த்வயா
பவபயபரீதாபச்சித்யை பஜந்நகமர்ஷணம் ।
முஷிதகலுஷோ முக்தைரக்ரேஸரைரபிபூர்யதே
ஸ்வயமுபநதை: ஸ்வாத்மாநந்தப்ரப்ருத்யநுபந்திபி: ॥ (76)

(ப-ரை) 𑌦𑌯𑌏 - தயையே! 𑌵𑍃𑌷𑌗𑌿𑌰𑌿𑌸𑍁𑌧𑌾𑌸𑌿𑌨𑍍𑌧𑍌 - வேங்கடமலையிலுள்ள அம்ருதஸமுத்ரத்தில், 𑌤𑍍𑌵𑌯𑌾 - உன்னாலே, 𑌨𑌿𑌹𑌿𑌤𑌃 - சேர்க்கப்பட்ட, 𑌜𑌨𑍍𑌤𑍁𑌃 - ப்ராணியானவன், 𑌭𑌵𑌭𑌯𑌪𑌰𑍀𑌤𑌾𑌪𑌚𑍍𑌛𑌿𑌤𑍍𑌤𑍍𑌯𑍈 - ஸம்ஸாரபயம், தாபம் இவை நீங்கும்படி, 𑌅𑌘𑌮𑌰𑍍𑌷𑌣𑌂 - பாபம் தொலையும் ஸாதநத்தை அடைந்து, 𑌮𑍁𑌷𑌿𑌤𑌕𑌲𑍁𑌷𑌃 - பாபம் நீங்கினவனாய், 𑌸𑍍𑌵𑌯𑌮𑍁𑌪𑌨𑌤𑍈𑌃 - தானே வரும், 𑌮𑍁𑌕𑍍𑌤𑍇𑌃 - மோக்ஷத்திற்கு, 𑌅𑌗𑍍𑌰𑍇𑌸𑌰𑍈𑌃 - முன்புள்ளதான, 𑌸𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌨𑍍𑌦𑌪𑍍𑌰𑌭𑍃𑌤𑍍𑌯𑌨𑍁𑌬𑌨𑍍𑌧𑌿𑌭𑌿𑌃 - ஸ்வஸ்வரூபாநந்தம் முதலிய (போகங்களால்), 𑌅𑌪𑌿 𑌪𑍂𑌰𑍍𑌯𑌤𑍇 - பூரிக்கப்படுகிறான்.

"தயையே! ஸம்ஸாரபயமென்னும் தாபத்ரயங்களைத் தீர்ப்பதற்காகத் திருமலையிலிருக்கும் ஸ்ரீனிவாஸனென்னும் அம்ருதஸமுத்ரத்தில் சேர்க்கப்பட்டு ஸர்வ பாபங்களையும் போக்கக்கூடிய சரணகதியென்னும் அகமர்ஷண ஸ்நானத்தை அடையப்பெற்றுக் கலுஷங்களெல்லாம் நீங்கி மோக்ஷத்திற்கு முன்னடியாக வலியவரும் ஆத்மாநுபவம் முதலிய பரிகாரங்களாலே பூரிக்கப்படுகிறன்".

(தா-ம்) தயாதேவி நம்மை முக்தி யோக்யர்களாகச் செய் விக்கத் தானே வலிய நமக்குச் செய்யும் உபகார பரம்பரைகளை வர்ணித்துக்கொண்டு வருகிறார். சரணாகதி யென்பது நம்முடைய அநந்தகோடி பாபங்களுக்கும் ப்ராயச்சித்தமாகும். மோக்ஷத்தை யும் அளிக்கும். திருமலையிலெழுந்தருளி இருக்கும் ஸ்ரீனிவாஸன் ஓர் அம்ருதஸ்முத்ரமாவார். வெயிற்காலத்தில் ப்ரசண்ட ஸூர்ய தாபத்தினால் நிதாந்த தப்தரானவர் குளிர்ந்தமடுவிலே இறங்கி ஆழ்ந்து தாபம் தீர்ந்து குளிர்ச்சி அடைவதுபோல் ப்ரஹ்மமென் னும் குளிர்ந்த ஜலா சயத்தில் ப்ரவேசித்து ஆழ்ந்து மகிழ்கிறேன் என்கிற ப்ரமாணவசனத்தை அனுஸரித்து இங்கேவர்ணிக்கிறார். ப்ரஹ்மத்தில் ஒடுங்குவதென்னும் சரணாகதி உபாயத்திலும் முன் ச்லோகங்களில் வர்ணித்த க்ரமமாக தயை தானாகவே சிற்சில வ்யாஜங்களைக் கல்பித்துக்கொண்டு மோக்ஷமார்க்கத்தில் நம்மைத் திருப்பி மோக்ஷத்திற்கு உபாயமான சரணாகதியில் நாம் இழியும் படி செய்விக்கிறாள். மோக்ஷத்தில் ருசியுண்டாகி அந்த வழியில் இறங்கிமோக்ஷோபாயமான சரணாகதியின் அனுஷ்டானத்திற்குப் பிறகு இந்த லீலா விபூதியில் உள்ள காலத்தில் தன்னுடைய ஸ்வ ரூபத்தின்ஸ்வாபாவிகமான ஆனந்தம் பகவதநுபவ பரிவாஹமான பகவத் கைங்கர்யங்களின் ஆனந்தம் முதலிய ஸுகங்கள் மோக்ஷா னந்தம் வருவதற்கு முன்பு இவனுடைய அநுபவத்திற்குக் கிடைக்கின்றன. (76)

அநிதரஜுஷாமந்தர்மூலேZப்யபாயபரிப்லவே
க்ருதவிதநவா விச்சித்யைஷாம் க்ருபே யமவச்யதாம் ।
ப்ரபதநபலப்ரத்யாதேச ப்ரஸங்கவிவர்ஜிதம்
ப்ரதிவிதிமுபாதத்ஸே ஸார்த்தம் வ்ருஷாத்ரிஹிதைஷிணா ॥

அநிதரஜுஷாமந்தர்மூலேZப்யபாயபரிப்லவே
க்ருதவிதநகா விச்சித்யைஷாம் க்ருபே யமவச்யதாம் ।
ப்ரபதநபலப்ரத்யாதேச ப்ரஸங்கவிவர்ஜிதம்
ப்ரதிவிதிமுபாதத்ஸே ஸார்த்தம் வ்ருஷாத்ரிஹிதைஷிணா ॥

(ப-ரை) க்ருபே - தயையே! அநிதரஜுஷாம்-இதர ப்ரயோஜனத்தையும் இதர ஸத்வத்தையும் பற்றாத ப்ரபந்ந ருக்கு, அந்தர்மூலே - புத்திமூலமான (தெரிந்து செய்யும்)

ஊவாயவுஙிவூவெ ஊவி - குற்றமென்னும் கெடுதி நேரிடும் பொழுதும், கூ஛தவிஸ - செய்த ப்ரபத்தியை ஓர் பேருதவி யென்று நினைத்து க்ருதஜ்ஞையாய், ஊநவா - குற்றத்திற்கு, சிக்ஷிப்பதென்பதைக் கைப்பற்ருமல், வஹஷாං-அவர்களுக்கு, யஃவஶ்ய஛தாං விஹூஷ்ய - (நிர்யாணகாலத்தில்) யமனுக்கு வச்யமாகுமாபத்தைத் தொலைத்து, வூஷாதி஛ ஹிதெஷிணா - வேங்கடமலையிலுள்ள ஹிதைஷியான (ஹிதத்தை விரும்பும்) பெருமாளோடு, ஸாயஂ - கூட(ச்சேர்ந்து), வூவதநஃஒவூதூ௱ ஜெஶவூஸஜூவிஜி஛தං - ப்ரபத்திக்கு பலமாக ஸங்கல்பிக்கப் பட்ட மோக்ஷத்திற்குத் தடைக்கு இடமே இல்லாதபடி, வூதிவிபிං - ப்ராயச்சித்தத்தை (மறுபடியும் சரணமடைவது முதலியதை), உவாயஸெ - ஏற்படுத்துகிருய்.

"இதரதெய்வங்களையும் ப்ரயோஜனந்தரங்களையும் பற்ருமல் உன்னையே சரணம் பற்றியவருக்கு ப்ராரப்த கர்மவசத்தால் புத்திபூர்வகமான பாபங்கள் நேர்ந்தாலும், இவர்கள் பண்ணின சரணுகதியை நீ மறவாமல் கோபலேசமில்லாமல் அவர்கள் அபராதத்திற்காக வரக்கூடிய யமவச்யதையைத் தடுத்து, அவர்கள் சரணுகதிக்குப்பலமான மோக்ஷத்திற்கு யாதொருவிக்நமும்வாராமல் இருக்கும்படி திருமலையில் எழுந்தருளியிருக்கும் ஹிதைஷியான ஸ்ரீநிவாஸனுடன் கலந்துகொண்டு அந்தப் பாபங்கள் கழிவதற்கு வேண்டிய மறுபடியும் ப்ரபதநம் செய்தல் முதலிய ப்ராயச்சித்தத்தைச் செய்விக்கிருய்".

(தா-ம்) பகவானுக்கு ப்ராதிகூல்யத்தை ஒருகாலும் ஆசரிப்பதில்லை என்று உறுதியாக ஸங்கல்பித்துக்கொண்டு சரணுகதி அனுஷ்டானம் செய்தவர்கள், பிறகு பகவதாஜ்ஞைக்கு விரோதமாகத் தெரிந்து பாபம் செய்ய ஞாயமே இல்லை. தெரியாமற் செய்யும் பாபங்கள் ஒட்டமாட்டா. தெரிந்து ஒருகால் பாபங்கள்செய்ய நேரிட்டால் அந்த பாபத்திற்குப் பலமாக யமதர்மராஜருடைய நாட்டில் சிறைப்படுவதற்கு ஹேதுவாகக் கூடுமாதலால், அந்தப்பாபங்களை ப்ராயச்சித்தம்முதலியதால் தொலைத்து விடுவதற்கு வேண்டிய உபாயத்தை ஸ்ரீனிவாஸனும் தயாதேவியும் கலந்து ஏற்பாடு செய்கிருர்கள். புத்தி பூர்வமாகச் செய்த

பாபங்களுக்கு மறுபடியும் ப்ரபதநம் செய்வது ப்ராயச்சித்தமாகும். லகுவான தண்டனையினாலும் அந்தப் பாபங்கள் கழியும். சரணாகதனுடைய ரக்ஷணத்தின் பாரத்தை ஸ்ரீனிவாஸனும் தயாதேவியும் ஏற்றுக்கொண்டு விட்டபடியால் ப்ரபந்நர் கோறினபடி இந்த தேஹத்தின் முடிவிலேயே மோக்ஷத்தை அளிப்பது அவர்கள் பொறுப்பாய் விடுகிறது. அதனால் அதற்கு விக்நமாகக்கூடிய பாபங்களெல்லாம் கழியும்படியான வழியை அவர்களே தேடுகிறார்கள். (77)

𑌕𑍍𑌷𑌣𑌵𑌿𑌲𑌯𑌿𑌨𑌾𑌂 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌰𑍍𑌥𑌾𑌨𑌾𑌂 𑌫𑌲𑌾𑌯 𑌨𑌿𑌵𑍇𑌶𑌿𑌤𑍇
𑌸𑍁𑌰𑌪𑌿𑌤𑍃𑌗𑌣𑍇 𑌨𑌿𑌰𑍍𑌵𑍇𑌶𑌾𑌤𑍍𑌪𑍍𑌰𑌾𑌗𑌪𑌿 𑌪𑍍𑌰𑌲𑌯𑌂 𑌗𑌤𑍇 ।
𑌅𑌧𑌿𑌗𑌤𑌵𑍃𑌷𑌕𑍍𑌷𑍍𑌮𑌾𑌭𑍃𑌨𑍍𑌨𑌾𑌥𑌾𑌮𑌕𑌾𑌲𑌵𑌶𑌂𑌵𑌦𑌾𑌂
𑌪𑍍𑌰𑌤𑌿𑌭𑍁𑌵𑌮𑌿𑌹 𑌵𑍍𑌯𑌾𑌚𑌖𑍍𑌯𑍁𑌸𑍍𑌤𑍍𑌵𑌾𑌂 𑌕𑍃𑌪𑍇 𑌨𑌿𑌰𑍁𑌪𑌪𑍍𑌲𑌵𑌾𑌂 ॥

க்ஷணவிலயிநாம் சாஸ்த்ரார்த்தாநாம் பலாய நிவேசிதே
ஸுரபித்ருகணே நிர்வேசிதாத் ப்ராகபி ப்ரளயம் கதே ।
அதிகதவ்ருஷக்ஷ்மாப்ருந்நாதாமகாலவசம்வதாம்
ப்ரதிபுவமிஹ வ்யாசக்யுஸ்த்வாம் க்ருபே நிருபப்லவாம் ॥

(ப-ரை) 𑌕𑍃𑌪𑍇 - தயையே! 𑌕𑍍𑌷𑌣𑌵𑌿𑌲𑌯𑌿𑌨𑌾𑌂 - ஸ்வல்ப க்ஷணத்திற்குள் நின்றுபோகிற, 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌰𑍍𑌥𑌾𑌨𑌾𑌂 - புண்யகர்மங்களுடைய, 𑌫𑌲𑌾𑌯 - பலன்களை(க்கொடுப்பதற்காக), 𑌨𑌿𑌵𑍇𑌶𑌿𑌤𑍇 - ஏற்படுத்தப்பட்டிருக்கிற, 𑌸𑍁𑌰𑌪𑌿𑌤𑍃𑌗𑌣𑍇 - தேவதைகள் பித்ருக்களின் கணங்கள், 𑌨𑌿𑌰𑍍𑌵𑍇𑌶𑌾𑌤𑍍𑌪𑍍𑌰𑌾𑌗𑌪𑌿 - புண்யகர்மங்களின் அநுபவத்திற்கு முன்பே, 𑌪𑍍𑌰𑌲𑌯𑌂 𑌗𑌤𑍇 - ப்ரளயத்தில் அழிந்துபோன பிறகும், 𑌅𑌕𑌾𑌲𑌵𑌶𑌂𑌵𑌦𑌾𑌂 - காலத்திற்கு உட்படாதவளும்(காலத்தால் அழிவடையாதவளும்), 𑌨𑌿𑌰𑍁𑌪𑌪𑍍𑌲𑌵𑌾𑌂 - யாதொருஉபத்ரவமடையாதவளும், 𑌅𑌧𑌿𑌗𑌤 𑌵𑍃𑌷𑌕𑍍𑌷𑍍𑌮𑌾𑌭𑍃𑌨𑍍𑌨𑌾𑌥𑌾𑌂 — வேங்கடமலை அரசனை ஆச்ரயித்துக் கொண்டிருக்கும், 𑌤𑍍𑌵𑌾𑌂 - உன்னை, 𑌇𑌹 - இந்த விஷயத்தில் (தேவபித்ருகணத்திற்குப் பதிலாக முன் செய்த புண்யங்களுக் குப்பலன் கொடுக்கும் விஷயத்தில்), 𑌪𑍍𑌰𑌤𑌿𑌭𑍁𑌵𑌂 - பதிலதிகாரியாக, 𑌵𑍍𑌯𑌾𑌚𑌖𑍍𑌯𑍁𑌃 - (பூர்வர்கள்) பணித்தார்கள்.

"க்ருபையே! க்ஷணகாலத்தில் நாசமடையக்கூடிய யாகம் முதலான ஸுக்ருத கர்மங்களின் பலத்தைக் கொடுப்பதற்காக ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் பித்ருக்கள் தேவர்கள் முதலியவர்களின் கூட்டம் அந்தக் கர்மங்களினுடைய பலத்தின் அனுபவத்திற்கு முன்னமே ப்ரளயமடைந்தபோதிலும், காலத்திற்கு வசப்படாதவளாயும் ஸ்ரீநிவாஸனை ஆச்ரயித்தவளாயும் ஒருகாலும் அழிவில்லாதவளாயும் மாறுதலில்லாதவளாயும் உள்ள உன்னை அவர்களுடைய ஸ்தானத்தில் பதிலாய் இருப்பவளாக சாஸ்திரமறிந்தவர்கள் கூறுகிறார்கள்."

(தா-ம்) யாகம், தானம், ஹோமம், அர்ச்சனை முதலிய புண்ய கர்மங்களுக்கு ஸ்வர்க்காதி பலன்கள் உண்டு. அந்தப் பலங்கள் சிலகாலம் கழித்து கிடைக்கக்கூடியன. பலம் கிடைக்கிற வரையில் நாம் செய்யும் புண்ய கர்மங்கள் நிற்கமாட்டா. அந்தக் கர்மங்களை அனுஷ்டித்த உடனேயே அவைகள் ஒழிந்து போம். அவைகள் க்ஷணகாலத்தில் ஓடிப்போவதால் யார் ஸ்திரமாக இருந்து அந்தந்த புண்ய கர்மங்களின் பலங்களைக் கொடுப்பவர். பகவானால் ஏற்படுத்தப்பட்ட தேவ பித்ருகணங்கள் அந்தப் புண்யங்களினால் ப்ரஸன்னராகி அந்தந்த பலங்களைக் கொடுப்பர். புண்யபலம் கைகூடுவதற்கு முன் இந்த தேவபித்ருகணங்களும் ப்ரளயமடைந்து இல்லாமற்போனால் அவர்கள் ஸ்தானத்தில் தயாதேவி இருந்துகொண்டு அந்தந்தப்பலங்களைச்சேர்ப்பிப்பாள்.

𑌤𑍍𑌵𑌦𑍁𑌪𑌸𑌦𑌨𑌾𑌦𑌦𑍍𑌯 𑌶𑍍𑌵𑍋 𑌵𑌾 𑌮𑌹𑌾𑌪𑍍𑌰𑌲𑌯𑍇𑌽𑌪𑌿 𑌵𑌾
𑌵𑌿𑌤𑌰𑌤𑌿 𑌨𑌿𑌜𑌂 𑌪𑌾𑌦𑌾𑌮𑍍𑌭𑍋𑌜𑌂 𑌵𑍃𑌷𑌾𑌚𑌲𑌶𑍇𑌖𑌰𑌃 ।
𑌤𑌦𑌿𑌹 𑌕𑌰𑍁𑌣𑍇 𑌤𑌤𑍍𑌤𑌤𑍍𑌕𑍍𑌰𑍀𑌡𑌾𑌤𑌰𑌙𑍍𑌗𑌪𑌰𑌮𑍍𑌪𑌰𑌾-
𑌤𑌰𑌤𑌮𑌤𑌯𑌾 𑌜𑍁𑌷𑍍𑌟𑌾𑌯𑌾𑌸𑍍𑌤𑍇 𑌦𑍁𑌰𑌤𑍍𑌯𑌯𑌤𑌾𑌂 𑌵𑌿𑌦𑍁𑌃 ॥ ௭௯ ॥

த்வதுபஸதநாதத்ய ச்வோ வா மஹாப்ரளயேZபி வா
விதரதி நிஜம் பாதாம்போஜம் வ்ருஷாசலசேகர: ।
ததிஹ கருணே தத்தத்க்ரீடாதரங்கபரம்பரா
தரதமதயா ஜுஷ்டாயாஸ்தே துரத்யதாம் விது: ॥ (79)

(ப-ரை) க்ருபே - தயையே! த்வதுபஸதநாத் - உன்னைச் சரணமாகப் பணிந்தால், அத்ய வா - இன்றேயாவது, ச்வோ வா - நாளேயாவது, மஹாப்ரலயதிவஸே வா - மஹாப்ரளயமானாலும், வ்ருஷகிரிசேகர: - வேங்கடமலைக்கு சிரோபூஷணமான (பெருமாள்), நிஜம் - தன்னுடைய, பதாம்புஜம் - திருவடிக்கமலத்தை, விதரதி - அளிக்கிறார். தத: - ஆகையால், இஹ - இந்த விஷயத்தில், தத்தல்லீலாதரங்க ஸங்கர தாரதம்யதயா - அந்தந்த பற்பல விளையாட்டுகளின் தாரதம்யங்களோடு, ஜுஷ்டாயா: - கூடிய, தே - உன்னுடைய (உன்னை), துரத்யயதாம் - தாண்டக்கூடாமையை, விது: அறிந்தார்கள் (பெரியோர்கள்).

"கருணையே! உன்னை நாங்கள் ஆச்ரயிப்பதாலே ஸ்ரீனிவாஸன் இன்றைக்கோ நாளைக்கோ மஹா ப்ரளயத்திலோ தன் திருவடித்தாமரையை அளிக்கவே அளிப்பான். ஆகையால் பெரியோர்கள் இந்த ரக்ஷண விஷயத்தில் அலைகளுடைய வரிசைகள்போன்ற முன் பின் விளையாட்டுகளை உடைய உன்னை ஒருவரும் தடுக்க முடியாதென்று நிச்சயம் செய்கிறார்கள்."

(தா-ம்) தயையினிடத்தில் சரணாகதி செய்தவர்களுக்கு பகவானுடைய சரணகமலங்கள் கிடைப்பதென்கிற பலம் ஒரு காலும் தவிராதென்கிற நிச்சயமான விச்வாஸத்தை வெளிப்படுத்துகிறார். இன்றோ அல்லது நூறு வருஷம் கழித்தோ ப்ராணிகளுக்கு ம்ருத்யு வருவது நிச்சயம் என்றார் வஸுதேவர் கம்ஸனிடத்தில். பிறந்தவனுக்கு ம்ருத்யு நிச்சயம் என்றார் கீதையில் கண்ணன். இங்கே ஸ்ரீனிவாஸனுடைய தயையை ஆச்ரயித்தவர்களுக்கு ம்ருத்யு வென்னும் ஸம்ஸாரம் நாசமடைவது நிச்சயமென்று வேடிக்கையாகக் காட்டுகிறார். தன்னுடைய மாயை துரத்யயையானது என்று கீதையில் கண்ணன் கூறினார். அந்த மாயையையும் தயாதேவி அடியோடு துலைப்பதால் தயையை துரத்யயை என்று இங்கே வேடிக்கையாய் வர்ணிக்கிறார். மாயையைத் தாண்டுவது நமக்குக் கஷ்டம். பகவானை சரணமடைந்தாலல்லது மாயையைத் தாண்ட வொண்ணாது. பகவானுடைய தயையைப் பகவான்கூட உல்லங்கனம் செய்யமுடியாது. (79)

𑌪𑍍𑌰𑌣𑌿𑌹𑌿𑌤𑌧𑌿𑌯𑌾𑌂 𑌤𑍍𑌵𑌤𑍍𑌸𑌂𑌪𑍃𑌕𑍍𑌤𑍇 𑌵𑍃𑌷𑌾𑌦𑍍𑌰𑌿𑌶𑌿𑌖𑌾𑌮𑌣𑍌
𑌪𑍍𑌰𑌸𑍃𑌮𑌰𑌸𑍁𑌧𑌾𑌧𑌾𑌰𑌾𑌕𑌾𑌰𑌾 𑌪𑍍𑌰𑌸𑍀𑌦𑌤𑌿 𑌭𑌾𑌵𑌨𑌾 ।
𑌦𑍃𑌢𑌮𑌿𑌤𑌿 𑌦𑌯𑍇 𑌦𑌤𑍍𑌤𑌾𑌸𑍍𑌵𑌾𑌦𑌂 𑌵𑌿𑌮𑍁𑌕𑍍𑌤𑌿𑌵𑌲𑌾𑌹𑌕𑌂
𑌨𑌿𑌭𑍃𑌤𑌗𑌰𑍁𑌤𑍋 𑌨𑌿𑌧𑍍𑌯𑌾𑌯𑌨𑍍𑌤𑌿 𑌸𑍍𑌥𑌿𑌰𑌾𑌶𑌯𑌚𑌾𑌤𑌕𑌾𑌃 ॥

ப்ரணிஹிததியாம் த்வத்ஸம்ப்ருக்தே வ்ருஷாத்ரிசிகாமணௌ
ப்ரஸ்ருமரஸுதாதாராகாரா ப்ரஸீததி பாவநா ।
த்ருடமிதி தயே தத்தாஸ்வாதம் விமுக்திவலாஹகம்
நிப்ருதகருதோ நித்யாயந்தி ஸ்திராசயசாதகா: ॥ (80)

(ப-ரை) 𑌦𑌯𑍇 - தயையே! 𑌤𑍍𑌵𑌤𑍍𑌸𑌂𑌪𑍃𑌕𑍍𑌤𑍇 - உன்னோடு த்ருடமாக ஸம்சில்ஷ்டரான, 𑌵𑍃𑌷𑌾𑌦𑍍𑌰𑌿𑌶𑌿𑌖𑌾𑌮𑌣𑍌 - திருவேங்கடவனென்னும் சூடாமணியினிடத்தில், 𑌪𑍍𑌰𑌣𑌿𑌹𑌿𑌤𑌧𑌿𑌯𑌾𑌂 - சித்தத்தை த்யானத்தில் நிலை நிறுத்துபவர்களுக்கு, 𑌪𑍍𑌰𑌸𑍃𑌮𑌰𑌸𑍁𑌧𑌾𑌧𑌾𑌰𑌾𑌕𑌾𑌰𑌾 - பெருகும் அம்ருததாரைக்கு ஒப்பாக, 𑌭𑌾𑌵𑌨𑌾 - த்யாநமானது, 𑌪𑍍𑌰𑌸𑍀𑌦𑌤𑌿 - தெளிவாயிருக்கும். 𑌇𑌤𑌿 - இப்படி, 𑌦𑌤𑍍𑌤𑌾𑌸𑍍𑌵𑌾𑌦𑌂 - இன்பரஸச் சுவையைத் தரும், 𑌵𑌿𑌮𑍁𑌕𑍍𑌤𑌿𑌵𑌲𑌾𑌹𑌕𑌂 - மோக்ஷத்தை வர்ஷிக்கும் மேகத்தை (பெருமாளை) 𑌨𑌿𑌭𑍃𑌤𑌗𑌰𑍁𑌤𑌃 - பரந்து ஓடாமல் (இறகுகளை அசங்காமலொடுக்கிக்கொண்டு), 𑌸𑍍𑌥𑌿𑌰𑌾𑌶𑌯𑌚𑌾𑌤𑌕𑌾𑌃 - ஐகாந்த்யத்தை உடையசாதகப்பக்ஷிகள், 𑌦𑍃𑌢𑌂 - த்ருடமாக, 𑌨𑌿𑌧𑍍𑌯𑌾𑌯𑌨𑍍𑌤𑌿 - தர்சநஸமாநாகாரத்யானத்தில் பார்க்கிறார்கள்.

"தயையே! உன்னோடு ஸம்ச்லிஷ்டரான ஸ்ரீனிவாஸனிடம் மனதை நிறுத்தி இடைவிடாமல் த்யானம் செய்பவர்க்கு பெருகும் அமுர்த தாரைபோன்ற த்யானதாரை தெளிவாக ப்ரவஹிக்குமென்பது திண்ணம். இப்படி த்யானம் செய்கிறவருக்கு மேலும் மேலும் த்யானச்சுவையைப் பொழியும் மோக்ஷ வர்ஷகமான பகவானென்னும் திருமலை மேகத்தை ஸ்திரமான சித்தமுடைய சாதக பக்ஷிகள் போன்ற பரமைகாந்திகள் தங்கள் பக்ஷங்களை சலிக்காமல் வைத்துக்கொண்டு த்யானம் பண்ணுகிறார்கள்"

(தா-ம்) தயை செய்யும் உபகாரங்களை தேன் மழை பொழிவதோடு முடிக்கிறார். 'தேனும் பாலும் கன்னலும் அமுதுமொத்தே' என்று இனிப்பேயாயிருக்கும் பகவதனுபவம். அதில் ஆழ்வார்களுக்கு உள்ள நாளளவும் மதுர மதுரமான பகவதனுபவமும் அதினினிப்பை ஆஸ்வாதனம் செய்வதுமே பாகவதர்களுக்கு ஆத்ம யாத்திரையாயிருக்கும். அவ்வனுபவத்தின் இனிமையை அம்ருத தாராரூபமென்றும் சுவையைத்தருவதென்றும் இங்கே தம்மனுபவத்தால் பேசுகிறார். முதலில் லக்ஷ்மீப் பிராட்டியையே தயை என்று கூறியதை இங்கே நினைக்கவேணும். தயையோடுகூடிய திருவேங்கடமுடையானை த்யானம்-செய்வது என்றால் தயா மூர்த்தியான லக்ஷ்மியோடு கூடிய ஸ்ரீனிவாஸனுடைய த்யானமேயாகும். ரகுவம்சத்தில் முதல் ச்லோகத்தில் பார்வதி பரமேச்வரர்களுடைய சேர்த்தியை 'ஸம்ப்ருக்தௌ' என்கிற பதப்ரயோகத்தால் மஹாகவி நிரூபணம் செய்ததை அனுசரித்து இங்கேயும் தயையோடு ஸம்ப்ருக்தனை வேங்கடபதி என்று வர்ணிக்கிறார். பரமைகாந்திகளைச் சாதகபக்ஷிகளுக்கு ஒப்பிடுவது வழக்கம். சாதகத்திற்கு இரண்டு பக்ஷங்கள் இருப்பது போல பரமைகாந்திகளுக்கும் ஞானம் கர்மம் என்கிறஇரண்டு பக்ஷங்கள் உண்டு. தன்னுடைய இரண்டு பக்ஷங்களையும் நிச்சலமாய் வைத்துக்கொண்டு விஷ்ணு பதம் என்னும் ஆகாசத்தில் மேகத்தை அண்ணாந்து பார்த்திருப்பதுபோல் பரமைகாந்திகளும் சலிக்காத ஜ்ஞானகர்மங்களென்கிற இரண்டு இரக்கைகளுடன் ஸ்ரீநிவாஸனென்னும் திருமலைமேலுள்ள காளமேகத்தையே அண்ணாந்து பார்த்திருப்பார். (80)

𑌕𑍃𑌪𑍇 𑌵𑌿𑌗𑌤𑌵𑍇𑌲𑌯𑌾 𑌕𑍃𑌤𑌸𑌮𑌗𑍍𑌰𑌪𑍋𑌷𑍈𑌸𑍍𑌤𑍍𑌵𑌯𑌾
𑌕𑌲𑌿𑌜𑍍𑌵𑌲𑌨𑌦𑍁𑌰𑍍𑌗𑌤𑍇 𑌜𑌗𑌤𑌿 𑌕𑌾𑌲𑌮𑍇𑌘𑌾𑌯𑌿𑌤𑌮𑍍 ।
𑌵𑍃𑌷𑌕𑍍𑌷𑌿𑌤𑌿𑌧𑌰𑌾𑌦𑌿𑌷𑍁 𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌪𑌦𑍇𑌷𑍁 𑌸𑌾𑌨𑍁𑌪𑍍𑌲𑌵𑍈𑌃
𑌵𑍃𑌷𑌾𑌦𑍍𑌰𑌿𑌪𑌤𑌿𑌵𑌿𑌗𑍍𑌰𑌹𑍈𑌰𑍍𑌵𑍍𑌯𑌪𑌗𑌤𑌾𑌖𑌿𑌲𑌾𑌵𑌗𑍍𑌰𑌹𑍈𑌃 ॥

க்ருபே விகதவேலயா க்ருதஸமக்ரபோஷைஸ்த்வயா
கலிஜ்வலநதுர்கதே ஜகதி காளமேகாயிதம் ।
வ்ருஷக்ஷிதிதராதிஷு ஸ்திதிபதேஷு ஸாநுப்லவை:
வ்ருஷாத்ரிபதிவிக்ரஹைர்வ்யபகதாகிலாவக்ரஹை: ॥ (81)

(ப-ரை) க்ருபே - தயையே! கலிஜ்வலநதந்தஹ்யமாநே - கலியென்னும் நெருப்பால் ஸங்கடப்படும், ஜகதி - உலகத்தில், விததவேகயா - கரைபுரண்ட, த்வயா, உன்னாலே, க்ருதஸம்ருத்தபோஷை:- பரிபூர்ணமாகப் போஷிக்கப்பட்டதும், ப்ரசமிதாவக்ரஹை: - அனாவ்ருஷ்டி (மழையில்லாமை) என்னும் துர்பிக்ஷத்தையெல்லாம் போக்குவதும், வ்ருஷகிரிசிகராத்ரிஷு - வேங்கடமலை முதலிய, ஸ்தாநவிசேஷு - ஸ்தான விசேஷங்களில், ஸாநுபந்தை: - தொடர்ச்சிகளோடுகூடிய, வ்ருஷாத்ரிபதிவிக்ரஹை: - வேங்கடமலை அரசன் திவ்யதிரு மேனிகளால் த்வயா காலமேகாயிதம் - உன்னுடைய காள மேகம்போன்ற இருப்பு.

"க்ருபையே! உலகத்தைத் தாங்கும் உன்னால் மழையில்லாமை என்கிற அநாவ்ருஷ்டியைப் போக்குவதும், திருமலை முதலிய இருப்பிடங்களில் இருப்பதும், மேகத்திற்குத் துணையான காற்று மின்னல் முதலிய ஸஹகாரிகள் போல் அனந்த கருடர்கள் முதலிய அர்ச்சா விக்ரஹங்களோடு கூடியதும், ஸமஸ்த லோகத்தையும் போஷிப்பதுமான ஸ்ரீனிவாஸனுடைய அர்ச்சா விக்ரஹங்களாகிய கார்மேகங்களாலே கலி என்னும் நெருப்பினால் எரிக்கப்படும் இவ்வுலகத்தில் காளமேகங்களாலே போல ரக்ஷணம் ஏற்படுகிறது."

(தா-ம்) இந்த தசகத்தில் பகவானுடைய தசாவதாரங்களும் வர்ணிக்கப்படுகின்றது. அவதாரங்கள் உலகத்தைக் காக்க தயையினால் செய்யப்படுகின்றன. பூமியில் அவதாரம் செய்வதற்கு முன்பு மத்தியில் திருமலைக்கு எழுந்தருளி அங்கிருந்து பூமியில் இறங்கி அவதாரங்கள் செய்வதாக இங்கே அனுபவம். இந்த பத்து ச்லோகங்களும் 'ப்ருத்வீ' என்கிற வ்ருத்தத்தில் அமைக்கப்பட்டன. 'ப்ருத்வீ' என்னும் பூமியில் தான் அவதாரங்கள் செய்யப்படுவதால் அந்த வ்ருத்தத்தினால் அவதார விஷயமான ச்லோகங்களை அமைப்பது உசிதம். மேகங்கள் நீர்ச்சுமை தாங்க மாட்டாமல் பூமியில் இறங்குவது போல் கருணை யென்னும் நீரின் பாரம் அதிகமாகி பகவானென்னும் காளமேகம் பூமியில் இறங்குவதுதான் அவதாரங்கள் என்று ஸ்ரீசங்கராசார்யர் கூறியிருப்பதை இங்கே நினைக்கவேணும். இந்தக் கலி காலத்தில் பாப

மென்னும் அக்நி மண்டி எரிகிறது. திருவேங்கடமுடையானு டைய திருமேனி போன்ற அர்ச்சா விக்ரஹங்களான காளமேகங் கள் கலி யென்னும் நெருப்பு நம்மைச்சுடாமல் குளிர்ச்செய்யும்.

ப்ரஸூய விவிதம் ஜகத் ததபிவ்ருத்தயே த்வம் தயே
ஸமீக்ஷணவிசிந்தநப்ரப்ருதிபி: ஸ்வயம் தாத்ருசை: ।
விசித்ரகுணசித்ரிதாம் விவிததோஷவைதேசிகீம்
வ்ருஷாசலபதேஸ்தநும் விசஸி மத்ஸ்யகூர்மாதிகாம் ॥

ப்ரஸூய விவிதம் ஜகத் ததபிவ்ருத்தயே த்வம் தயே
ஸமீக்ஷணவிசிந்தநப்ரப்ருதிபி: ஸ்வயம் தாத்ருசை: ।
விசித்ரகுணசித்ரிதாம் விவிததோஷவைதேசிகீம்
வ்ருஷாசலபதேஸ்தநும் விசஸி மத்ஸ்யகூர்மாதிகாம் ॥ (82)

(பதவுரை) தயே-தயையே! த்வம் - நீ, விவிதம் ஜகத் - வை சித்ர்யங்களோடு கூடிய ஜகத்தை, ப்ரஸூய - பெற்று (உண்டு பண்ணி) ததபிவ்ருத்தயே- அதன் முன்னேற்றத்திற்காக, ஸ்வயம்- நீயாகவே, தாத்ருசை: - அப்படிச் சிறந்த, ஸமீக்ஷணவிசி ந்தநப்ரப்ருதிபி: -கண்ணால் பார்ப்பது, த்யானம் செய்வது முத லான வ்யாபாரங்களால், விவிததோஷவைதேசிகீம் - ஒருவித மான பழுதுமில்லாததும், (தோஷமிருக்கிற ஊரிலே இல்லாத தாயும்) விசித்ரகுணசித்ரிதாம் - அநேக குணங்களால் ஆச் சர்யப்படத் தக்கதாயுமுள்ள, வ்ருஷாசலபதே:-வேங்கடமலை அதிபருடைய, மத்ஸ்யகூர்மாதிகாம் - மீன் ஆமை முதலிய, தநும் - வடிவிற்குள், விசஸி - புகுகிறாய்.

“ தயையே! அநேக ப்ரகாரமாயிருக்கும் ஜகத்தை ஸ்ருஷ் டித்து விசித்ரமான வீக்ஷணங்கள் த்யானங்கள் முதலியவைகளால் அதன் அபிவ்ருத்தியைச் செய்வதற்காக ஒருவிததோஷமும் அணுகக்கூடாததும், ஆச்சரியமான குணங்களால் நிறைந்தது மான மத்ஸ்ய கூர்மம் முதலிய ஸ்ரீநிவாஸனுடைய திருமேனி யில் நீ ஸ்வயமாக ப்ரவேசிக்கிறாய்.

(தா-ம்) இந்த ச்லோகத்தில் மத்ஸ்யம், கூர்மம் என்றும், இரண்டவதாரங்கள் வர்ணிக்கப்படுகின்றன. ஜகத்தும் ஜகத்தில்

உள்ள ப்ராணிகளும் ஈச்வரனுக்கு ப்ரஜைகள். மீன்கள் பெற்ற குழந்தைகளைக் கண்களால் குளிரப் பார்த்து அந்த த்ருஷ்டிகளால் அவைகளை வளர்க்கும் என்றும், கூர்மங்கள் தங்கள் ப்ரஜைகளை த்யானத்தால் வளர்க்குமென்றும், ஹம்ஸம் முதலிய பக்ஷிகள் ப்ரஜைகளை ஸம்ஸ்பர்சத்தால் (அடைகாத்தலால்) வளர்க்குமென்றும் சொல்லுவர். மத்ஸ்யாவதாரத்தில் தன் தாமரைக் கண்களின் கடாக்ஷங்களால் ஸமுத்ரஜலத்தில் தாமரைக் காடுகளை ஸ்ருஷ்டிப்பதுபோல், வேதங்களைத் தேடுவதற்காகக் கடாக்ஷங்களை இங்குமங்கும் சொரிந்துகொண்டு டோலோத்ஸவம் கண்டருளுவதுபோல் ஊஞ்சலாடியதாக தசாவதாரஸ்தோத்ரத்தில் வர்ணித்திருக்கிறார். மத்ஸ்யாவதாரத்தில் தயை திருக்கண்களில் புகுந்துகொண்டு கடாக்ஷங்களில் விளங்குகிறாள். கூர்மமானது தன்னுடைய பரவியிருக்கும் அங்கங்களை உள்ளே யிழுத்துக்கொண்டு கண்ணை மூடிக்கொண்டு த்யானம் செய்வதுபோலிருப்பதுபோல பாஹ்யவிஷயங்களைத் தேடி வெளியே பரவும் இந்திரியங்களை உள்ளே அடக்குவது யோகியின் லக்ஷணம் என்று கீதாவசனம். ஸமுத்திரத்தின் அலைகள் கோஷம் பேரிரைச்சலாகும். முப்பத்து முக்கோடி தேவர்கள் ஒருபுறமும், கணக்கில்லாத அசுரர்கள் இன்னொரு புறமுமாக கூர்ம ரூபியான பகவானுடைய முதுகின் பேரில் மந்தர பர்வதத்தை மத்தாக வைத்து வாசுகியென்னும் கயிற்றைக்கட்டி கற கறவென்று ஓயாக் கூக்குரலுடன் சுற்றிச் சுழற்றி இழுக்கும்பொழுது கூர்ம ரூபியான பகவான் குறட்டை விட்டுக்கொண்டு யோக நித்ரை செய்வதாக ஸங்கல்ப ஸூர்யோதயத்தில் வர்ணித்ததை இங்கே நினைக்கவேணும். முதலியது என்பதால் ஹம்ஸாவதாரத்தை நினைப்பது. (82)

𑌯𑍁𑌗𑌾𑌨𑍍𑌤𑌸𑌮𑌯𑍋𑌚𑌿𑌤𑌂 𑌭𑌜𑌤𑌿 𑌯𑍋𑌗𑌨𑌿𑌦𑍍𑌰𑌾𑌰𑌸𑌂
𑌵𑍃𑌷𑌕𑍍𑌷𑌿𑌤𑌿𑌭𑍃𑌦𑍀𑌶𑍍𑌵𑌰𑍇 𑌵𑌿𑌹𑌰𑌣𑌕𑍍𑌰𑌮𑌾𑌜𑍍𑌜𑌾𑌗𑍍𑌰𑌤𑌿 ।
𑌉𑌦𑍀𑌰𑍍𑌣𑌚𑌤𑍁𑌰𑌰𑍍𑌣𑌵𑍀𑌕𑌦𑌨𑌵𑍇𑌦𑌿𑌨𑍀𑌂 𑌮𑍇𑌦𑌿𑌨𑍀𑌂
𑌸𑌮𑍁𑌦𑍍𑌧𑍃𑌤𑌵𑌤𑍀 𑌦𑌯𑍇 𑌤𑍍𑌵𑌦𑌭𑌿𑌜𑍁𑌷𑍍𑌟𑌯𑌾 𑌦𑌂𑌷𑍍𑌟𑍍𑌰𑌯𑌾 ॥

யுகாந்தஸமயோசிதம் பஜதி யோகநித்ராரஸம்
வ்ருஷக்ஷிதிப்ருதீச்வரே விஹரணக்ரமாஜ்ஜாக்ரதி ।
உதீர்ணசதுரர்ணவீகதநவேதிநீம் மேதிநீம்
ஸமுத்ருதவதீ தயே த்வதபிஜுஷ்டயா தம்ஷ்ட்ரயா ॥

(ப-ரை) தயே - தயையே! வ்ருஷகிரிஹ்ருதீஶ்வரே - வேங்கடமலையரசன், யாமாந்தஸத்யோசிதம்-யுகத்தின் முடிவு காலத்திற்குத் தக்கதான, நித்ராரஸம் - நித்ராரஸத்தை, பஜதி - அடைந்தவராய், விஹாரணக்ரமேண - லீலாக்ரமத்தால், ஜாக்ரதி - விழிக்கும்போது, க்ஷீணசதுரர்ணவக்ஷோபநவேஶ தீர்க - நான்கு ஸமுத்ரங்களும் சேர்ந்து பெருகிப் பொங்கி ப்ர ளயம் செய்கையால் ஹிம்ஸையை அடைந்த, க்ஷோணீம் - பூமியை, க்ஷமிஜாஷ்யா - உன்னோடு கலந்த, தம்ஷ்ட்ரயா - பல்லினால், (வராஹப் பெருமாளின் கடைவாய்ப்பல்லால்) ஸமுத்த்ருதவதீ - உத்தரணம் செய்தாய் (மேலே தூக்கினாய்).

"தயையே! ப்ரளயகாலத்திற்குத் தக்கபடி நேத்ரங்களை மூடிக்கொண்டு யோக நித்ரா ரஸத்தை அனுபவித்துக்கொண்டிருக்கும் ஸ்ரீனிவாஸன் லீலையின் அவசரத்தில் கண் வளரும் பொழுது வெள்ளமிட்டுப் பொங்கி ஓங்கும் ஸமுத்ரங்களால் பீடையை அடைந்தும், இருக்குமிடம் தெரியாமல் முழுகிப் போன பூமியை உன்னோடுகூடிய (வராஹ மூர்த்தியின்) கோரைப் பல்லினால் மேலே தூக்கிக் காப்பாற்றினாய்."

(தா-ம்) வராஹாவதாரத்தில் தயை கோரைப்பல்லின் இடுக்கில் புகுந்தது. வராஹாவதாரத்தில் பகவானுடைய திருமேனியின் உருவம் எவ்வளவு பெரிதென்றால் நான்கு ஸமுத்ரங்களும் அவருக்கு குளப்படியாய் இருந்தது என்பதைக்கொண்டு தெரிந்து கொள்ளலாம். வராஹங்கள் முழங்காலுக்குக் கீழுள்ள ஜலத்தில் விளையாடி கோரைக் கிழங்கைப் பல்லிடுக்கில் அடக்கிக்கொள்வது போல வராஹப் பெருமாள் நான்கு ஸமுத்ரங்களிலும் விளையாடி, தன் பற்களினால் பூமியைத்தூக்கி பற்களினிடுக்கில் கோரைக் கிழங்கைப்போல் அடக்கிக்கொண்டார். (83)

ஸடாபடலபீஷணே ஸமயஸாரஹாஸோத்படே
ஸ்பாரத்க்ருதிபரிஸ்படஸ்புடஹுங்காரகோரவிக்ஷேபிதே க்ருதே।
தயே வ்ருஷகிரீசிதுர்தநுஜடிம்பதத்த ஸ்தநா
ஸரோஜஸத்ருசா த்ருசா ஸமுதிதாக்ருதிர்த்ருச்யஸே ॥

ஸடாபடலபீஷணே ஸரபஸாட்டஹாஸோத்படே
ஸ்புரத்க்ருதி பரிஸ்புடத்ப்ருகுடிகேZபி வக்த்ரே க்ருதே ।
தயே வ்ருஷகிரீசிதுர்தநுஜடிம்பதத்தஸ்தநா
ஸரோஜஸத்ருசா த்ருசா ஸமுதிதாக்ருதிர்த்ருச்யஸே ॥

(ப-ரை) வ்ருஷகிரீசிதுः தயே- வேங்கடமலையரசன் தயையே! ஸடாபடலபீஷணே-பிடரிமயிர்களின் கற்றைகளால் பயங்கரமாகவும், ஸரபஸாட்டஹாஸோத்படே- அதிஸம்பிரமத்தோடு கூடிய அட்டஹாஸத்தால் பயங்கரமாயும், ஸ்புரத் க்ருதி-துடிக்கும் கோபத்தையுடையதாயும், பரிஸ்புடத் ப்ருகுடிகே - நொடிக்கும் புருவங்களை யுடையதாயும், வக்த்ரே-திருமுகமானது, க்ருதேZபி - செய்யப்பட்டபோதிலும், தநுஜடிம்பதத்தஸ்தநா- அஸுரசிசு ப்ரஹ்லாதனுக்குப் பால்கொடுக்கிறவளாக(போல), ஸரோஜஸத்ருசா - தாமரையையொத்த, த்ருசா - திருக்கண்களோடே, ஸமுதிதாக்ருதிः- சேர்ந்த ஆகாரத்தை உடையவளாய், த்ருச்யஸே - காணப்படுகிறாய்.

“திருமலையரசனுடைய தயையே! அடர்ந்த பிடரிமயிர்களால் பயங்கரமாயும் ஸம்ப்ரமத்தோடுகூடிய அட்டஹாஸத்தாலே நடுக்கத்தைத் தருவதாயும், நெரித்த புருவங்களோடு முகம் கோபத்தால் ஜ்வலிப்பதுபோல் செய்யப்பட்டிருந்தும், அதே முகத்தில் தாமரைப் புஷ்பம்போன்ற கண்ணாலே அசுரக்குழந்தையான ப்ரஹ்லாதனுக்கு முலைப்பால் சொரிந்துகொண்டு நீ வாத்ஸல்யத்தோடு சேர்ந்து ப்ரகாசித்து விளங்குகிறாய்”

(தா-ம்) இங்கே நரஸிம்மாவதாரம் வர்ணிக்கப்படுகிறது. திருமலைக்கு ஸிம்மாசலம் என்று பெயர். ஸிம்மாசலத்திலிருந்து ஸிம்ஹம் அவதரிப்பது உசிதம். சேரக்கூடாத விரோதங்களையெல்லாம் சேர்த்து அகடிதங்களையெல்லாம் கடனம் செய்வதற்கு இந்த அவதாரம் பேர் போனது என்பது ப்ரஸித்தம். பகலில்லாமலும், இரவில்லாமலும், இரண்டிற்கும் நடுவில் அகப்பட்ட சந்தியாகாலம் அவதார காலமாயிற்று. உயிருள்ளது என்றும் உயிரில்லாதது என்றும் சொல்லுவதற்கு அரிதான நகங்கள் ஆயுதங்கள் ஆயின. இப்படி அநேகம் சேராச் சேர்க்கைகளைச் சேர்த்தது பெரிதன்று. ஓரே திருமுக மண்டலத்தில் ப்ர

பலமான சத்ருவோடு யுத்தம் செய்யும் அவசரத்தில் சிவந்த பிடரிமயிர்கள் திருக்கண்களின் பேரிலும், சுற்றியும், ரத்த வர்ணமாய் பயங்கரமாய் ஆடிக்கொண்டும், கண்களுக்கு அடுத்து மேலிருக்கும் புருவங்கள் துடித்துக்கொண்டும், கண்ணுக்குக்கீழிருக்கும் வாய் மூவுலகும் நடுங்க திக்கஜங்கள் ஹேரா என்று அலர பயங்கரமாய் அட்டகாசம் செய்துகொண்டிருந்தும், இப்படி திருமுகத்தில் பயங்கர சின்னங்களே வ்யாபித்திருந்தும், அதே காலத்தில் அந்த முகத்திலேயே நடுவிலுள்ள திருக்கண்களால் அசுர சிசுவான ப்ரஹ்லாதனுக்கு முலைப்பால் கொடுப்பதுபோல் ஸ்நேகத்தை சொரிந்துகொண்டேயிருந்ததைக் காட்டிலும் ஆச்சர்யமான விரோதச் சேர்க்கை உண்டோ என்கிருர். சத்துருவோடு போர் புரியும் பொழுது 'கண்ணினுலே எரிப்பதுபோல்' என்று வர்ணித்திருக்கிறபடி முகம் முழுவதும் கோபத்தால் ஜ்வலிக்கும். இந்தஅவதாரம் ஸ்வல்ப க்ஷணங்கள்தான் பூமியில் ஸேவை ஸாதித்தது. 'பரித்ராணுய ஸாதூநாம்'என்கிறபடி பக்தர்களிடத்தில் ப்ரேமையைக் காட்டிக் குளிரக் கடாக்ஷித்து அனுக்ரஹத்தைச் சொரிவதல்லவோ அவதாரத்தின் முக்கிய கார்யம். ப்ரஹ்லாதனைக் குளிர்ந்த கடாக்ஷங்களால் அனுக்ரஹிப்பதல்லவா முக்யகார்யம். அநுக்ரஹிப்பதற்கு ப்ரேமவசம்வதமான திருக்கண்கள் வேண்டும். எந்த முகத்தில் முன் சொன்ன பயங்கரமான ஹேதுக்கள் உண்டோ அந்த முகத்தில் பயங்கர அடையாளங்களால் சூழப்பட்டு நடுவேயுள்ள கண்களில் இருந்து சிசுவுக்குப் பால் கொடுப்பதைப்போல் ப்ரஹ்லாதனுக்கு ப்ரீதியைச்சொரிந்து கொண்டு அவனுக்குக் கிஞ்சித்தேனும் நெஞ்சில் பயமுண்டாகாமல் ப்ரீதிரஸமே மேலிடும்படி செய்ததிலும் வியப்புண்டோ? (84)

𑌪𑍍𑌰𑌸𑌕𑍍𑌤𑌮𑌧𑍁𑌨𑌾 𑌵𑌿𑌧𑌿𑌪𑍍𑌰𑌣𑌿𑌹𑌿𑌤𑍈𑌃 𑌸𑌪𑌰𑍍𑌯𑍋𑌦𑌕𑍈𑌃
𑌸𑌮𑌸𑍍𑌤𑌦𑍁𑌰𑌿𑌤𑌚𑍍𑌛𑌿𑌦𑌾 𑌨𑌿𑌗𑌮𑌗𑌨𑍍𑌧𑌿𑌨𑌾 𑌤𑍍𑌵𑌂 𑌦𑌯𑍇 ।
𑌅𑌶𑍇𑌷𑌮𑌵𑌿𑌶𑍇𑌷𑌤𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌜𑌗𑌦𑌞𑍍𑌜𑌨𑌾𑌦𑍍𑌰𑍀𑌶𑌿𑌤𑍁𑌃
𑌚𑌰𑌾𑌚𑌰𑌮𑌶𑍀𑌕𑌰𑌶𑍍𑌚𑌰𑌣𑌪𑌙𑍍𑌕𑌜𑍇𑌨𑌾𑌙𑍍𑌕𑌿𑌤𑌮𑍍 ॥ ॥ ௮௫ ॥

ப்ரஸக்தமதுநா விதிப்ரணிஹிதை: ஸபர்யோதகை:
ஸமஸ்ததுரிதச்சிதா நிகமகந்திநா த்வம் தயே ।
அசேஷமவிசேஷதஸ்த்ரிஜகதஞ்ஜநாத்ரீசிது:
சராசரமசீகரஶ்சரணபங்கஜேநாங்கிதம் ॥ (85)

(ப-ரை) தயே - தயையே! த்வம் - நீ, விதிப்ரணிஹிதை: - ப்ரஹ்மாவினால் ஸமர்ப்பிக்கப்பட்ட, ஸவநீயார்க்யை: - பூஜையான பாத்யதீர்த்தங்களோடு, (கூடி) ப்ரஸ்நுதமதுநா - பெருகும் தேனையுடையதும், ஸமஸ்ததுரிதச்சிதா - எல்லாப் பாபங்களையும் போக்குவதாயும், நிகமகந்தினா - வேதவாஸனையடையதும், அஞ்ஜநக்ஷிதிப்ருத: - அஞ்ஜனமலையரசனுடைய, சரண பங்கஜேந - திருவடித்தாமரையாலே, அவிசேஷத: - தாரதம்மியமேயில்லாமல், அசேஷம் - நிச்சேஷமாக, (பாக்கி ஒன்று கூட விடாமல்) த்ரிஜகத் - மூவுலகத்தையும், அங்கிதம் - முத்திரை போட்டதாக, அவீகர: - செய்வித்தாய்.

"தயையே! ப்ரஹ்மாவினால் ஸமர்ப்பிவிக்கப்பட்ட பாத்யங்களினால் நனைக்கப்பட்டதாயும், தேன் சொறிவதாயும், பாபங்களையெல்லாம் போக்குவதாயும், வேதங்கள் மணப்பதாயும், உள்ள அஜ்ஞன மலையரசனாகிய ஸ்ரீனிவாஸனுடைய திருவடித் தாமரையால் சராசரமான ஜகத்து முழுவதும் முத்திரை போடப்பட்டதாக நீ ஆக்கினாய்."

(தா-ம்) இங்கே த்ரிவிக்ரமாவதாரத்தை வர்ணிக்கிறார். உலகத்தைத் தன் திருவடியால் அளந்தபொழுது ஸகல சராசரங்களின் சிரஸிலும் அவன் திருவடித்தாமரையின் முத்திரை விழுந்தது. முத்திரை போடுவதற்கு மை என்னும் அஞ்சனம்வேண்டும். உலகம் முழுவதும் முத்திரைபோட பர்வதப்ரமாணமான அஞ்சனம் வேண்டும். அஞ்சனமலை யரசன் இப்படி உலகம் முழுவதும் முத்திரைபோடுவது எளிதாகும். திருவடியில் தேன் பெருகுவதால் மையை இளகச்செய்வது எளிதாகும். தயாப்ரபாவத்தினால் இது ஒரு விசித்ரமான வைஷ்ணவ முத்ராங்கனம் என்கிறார்.

பரச்வத தபோதந ப்ரதந ஸத்க்ரதூபாக்ருத
க்ஷிதீச்வர பசு க்ஷரத் க்ஷதஜ குங்கும ஸ்தாஸகை: |
வ்ருஷாசல தயாளுநா நநு விஹர்த்துமாலிப்யதா
நிதாய ஹ்ருதயே தயே நிஹதரக்ஷிதாநாம் ஹிதம் ||

பரச்வத தபோதந ப்ரதந ஸத்க்ரதூபாக்ருத
க்ஷிதீச்வர பசு க்ஷரத் க்ஷதஜ குங்கும ஸ்தாஸகை: ।
வ்ருஷாசல தயாளுநா நநு விஹர்த்துமாலிப்யதா
நிதாய ஹ்ருதயே தயே நிஹதரக்ஷிதாநாம் ஹிதம் ॥ (86)

(ப-ரை) ஓயெ - தயாதேவியே! நிஹதாக்ஷிதாநாம் - கொல்வதால் ரக்ஷிக்கப்பட்டவர்களுடைய, ஹிதம்-க்ஷேமத்தை, ஹ்ருதி - மனதிற்குள், நிதாய - வைத்துக்கொண்டு, வரஸுய தவொயநெ - கோடாலி பிடித்த பரசுராமருடைய, ஆயநெ - யுத்தமென்னும், ஸத்ரெ - சிறந்த யஜ்ஞத்தில், உபாக்ருத - (பசுவைப்போல) முடிக்கப்பட்ட, க்ஷிதீஸ்வரபஸு - ராஜாக்களான (யாக) பசுக்களுடம்பிலிருந்து, க்ஷரக- ஒழுகும், க்ஷதஜ- ரக்தமாகிற, கஸ்ஹீரஸாஸெகை: - குங்குமப்பூச்சுக்களால், வ்ருஷாவஉயாலுநா - வேங்கடமலையிலுள்ள தயாளுவால், விஹதுமு - விளையாட்டாக (விளையாடுவதற்கு), ஆஸிவ்யாஃ நநு - பூசப்பட்டாய்போலும்.

"தயாதேவியே! கொல்லப்படுவதால் உண்மையில் ரக்ஷிக்கப் பட்ட (க்ஷத்ரியர்களுடைய) க்ஷேமத்தைக்கோறிகையும் கோடாலியுமான பரசுராமருடைய யுத்த மென்னும் யக்ஞத்தில் (யாகப் பசுக்களைப்போல்) பலியாக்கப்பட்ட க்ஷத்திரிய அரசர்களுடைய சரீரத்திலிருந்து ஒழுகும் ரக்தமென்னும் குங்குமச்சாந்துகளால் வேங்கடமலையிலுள்ள தயாளுவால் விளையாட்டிற்காக நீ பூசப்பட் டாய் போலும்".

(தா-ம்) எல்லா அவதாரங்களும் தயாமூலமென்கிறார். 21 தலைமுறை க்ஷத்திரியப்பூண்டேயில்லாமல் கோடாலியால் வெட்டி யெறிந்த பரசுராமாவதாரம் எப்படி தயாகார்யமாகும்? மிகவும் அருவருப்பையும் பயத்தையுமுண்டுபண்ணும் ஓயாதகொலை ரக்த வெள்ளத்தில் முழுகுவது முதலிய கோர வ்யாபாரங்களையே செய்துவந்த பரசுராமாவதாரமும் ஹிதத்தைக்கோறின தயா கார்யமென்று நிரூபிக்காவிட்டால், தயையின் ஆதிராஜ்யம் ஸித் திக்காது. அந்த அவதாரத்தையும் தயையாக நிரூபிக்கிறார். யுத்தமென்பதை யக்ஞமென்று வர்ணிப்பார். யக்ஞத்தில் பசுக் களை வதம்செய்வது வதமன்றென்று ச்ருதி. யக்ஞத்தில் வதம் செய்யப்படுவது பசுவுக்கு ஸ்வர்க்கத்தையளித்து ஹிதமாகும் என்றும் ச்ருதி. கொடியபாபங்களுக்கு வதமென்னும் தண்டனை யால் சேதநத்துக்கு சுத்தியேற்படு மென்பார். குற்றத்திற்கு ராஜதண்டனையால் சுத்தியேற்படும். குற்றம் செய்தவர் தம் குற்றம் கழிந்து சுத்தியடைய அரசனிடம் சென்று "என் குற்

றத்திற்கு தண்டனே விதிக்கும்படி என்மீது தயவுபுரியவேணும்" என்று ப்ரார்த்திப்பர். வாலியின் குற்றங்கள் அவனுக்குப் பெருமாள் விதித்த வதத்தால் கழிந்து அவன் ஆத்மா சுத்தமானதால் அவன் வதம் அவனுக்கு ஹிதமேயென்று பெருமாள் அவனுக்கு உபதேசித்தார். அகிஞ்சனரான தபஸ்விகளேக் காப்பாற்றுவது க்ஷத்திரியர்களுக்கு தர்மம். கார்த்தவீர்யாதிகள் தபஸ்வியான ஜமதக்நியைக் கொன்ருர்கள். அதையிட்டு வந்தகோபம் 21 தலைமுறைகள் சென்றது. அத்தனேயும் ஸர்வக்ஞனுடைய திருவுள்ளத்தால் அவர்களுக்கு ஹிதமாகவே யிருக்கவேண்டுமென்று ஊஹிக்கிருர். என்ன தண்டம் யாருக்கு விதிக்கப்பட்டாலும், அதைச் செய்துவைக்கும் தயாளுவான ஈச்வரன் அவர்களுக்கு ஹிதபுத்தியால் அவர்களேத் திருத்துவதற்காகச் செய்கிருன் என்பது திருவுள்ளம். மலேக்காட்டிலிருப்பவர் காடு வெட்டக் கோடாலி பிடித்திருப்பர். மலேயரசன் கோடாலி பிடித்த பரசுராமனுக்குள்ளாவேசித்து அவதரித்தது உசிதம். (86)

க்ருபே க்ருதஜகத்தி⁴தே க்ருபணஜந்து சிந்தாமணே
ரமாஸஹசரம் ததா³ ரகு⁴து⁴ரீணயந்த்யா த்வயா ।
வ்யபஜ்யத ஸரித்பதி: ஸக்ருத³வேக்ஷணாத் தத்க்ஷணாத்
ப்ரக்ருஷ்டப³ஹுபாதகப்ரஶமஹேதுநா ஸேதுநா ॥

க்ருபே க்ருதஜகத்ஹிதே க்ருபணஜந்துசிந்தாமணே
ரமாஸஹசரம் ததா ரகுதுரீணயந்த்யா த்வயா ।
வ்யபஜ்யத ஸரித்பதி: ஸக்ருதவேக்ஷணாத் தத்க்ஷணாத்
ப்ரக்ருஷ்டபஹுபாதகப்ரசமஹேதுநா ஸேதுநா ॥ (86)

(ப-ரை) க்ருதஜகத்தி⁴தே - உலகத்திற்கு ஹிதம் செய்பவளும், க்ருபணஜந்துசிந்தாமணே - வேறு கதியற்ற பேதை ப்ராணிகளுக்கு நினேத்ததை அளிக்கும் சிந்தாரத்நமாயுமுள்ள, க்ருபே - தயையே! ததா³ - அக்காலத்தில், ரமாஸஹசரம் - லக்ஷ்மியோடு கூடிய ஸ்ரீநிவாஸனே, ரகு⁴து⁴ரீணயந்த்யா - ரகுவம்சநிர்வாஹகராய்ச் செய்து வைத்த, த்வயா - உன்னலே, ஸக்ருத³வேக்ஷணாத் - ஒருதரம் கடாக்ஷித்ததால், தத்க்ஷணாத் - அந்த நிமிஷத்திலேயே, ஸரித்பதி: - நதிகளுக்குப் பதியான ஸமுத்ரம், ப்ரக்ருஷ்டப³ஹுபாதகப்ரஶமஹேதுநா - மிகக்

கொடிய அநேகபாபங்களைப் போக்கும் காரணமான, ஸேது – நா - திருவணையால், வ்யூஹ்ய - இரண்டாகப் பிரிக்கப்பட்டான்.

"உலகத்திற்கு ஹிதத்தையே செய்பவளாயும், மற்றோர் கதியில்லாத பேதைகளுக்குக்கோறினதை எல்லாம் அளிக்கும் சிந்தாமணி (ரத்நமா) யாயுமிருக்கும் தயாதேவியே! அக்காலத்தில் லக்ஷ்மியின் தோழனை (ஸ்ரீநிவாஸனை) ரகுவம்சத்திற் சிறந்தவனாக அவதாரம் பண்ணும்படி செய்வித்த உன்னுடைய ஒரே கடாக்ஷத்தால் அந்த க்ஷணத்திலேயே (தர்சனமாத்ரத்திலேயே) கொடியதான அநேகபாதகங்கள் கழியச் செய்யும் மஹிமையை உடைய திருவணையால் நதிகளின் பதியான ஸமுத்ரராஜன் இரண்டாகப் பிளக்கப்பட்டான்".

(தா-ம்) ஸ்ரீநிவாஸனை ஸீதாராமனாக அவதாரம் செய்யும்படி தயை செய்வித்தாள். ஸீதாராமாவதாரத்திலும் மிக்க உபகாரம் உலகத்திற்குண்டோ. அவர்கள் சரித்திரமான ராமாயணத்திலும் ஹிதமும் இனியதுமான க்ரந்தம் உலகிலுண்டோ. பேதைகள் பிழைக்க ஸுலபமான மார்க்கமான சரணாகதியை ராமாயண கதாநாயகர்தானே உலகத்தில் நாட்டிவைத்தார். அவர்கள் சரித்ரமான ராமாயணம்தானே அந்த உபாயத்தை ஸம்பூர்ணமாக விளக்கும் ப்ரமாணம். ரமாஸஹசரம்- பிராட்டியோடு கூடச்செல்பவனாக. பிராட்டி முன்னே செல்ல, ஸ்ரீநிவாஸன் பின்னே செல்கிறார். சரணாகதிமார்க்கத்தில் பெருமாளிலும் அதிக ஊக்கம் உடைய பிராட்டி முன் சென்று வழிகாட்டுகிறாளென்பது ரஸம். சரணாகதிக்கு யோக்யதைஸம்பாதித்துக்கொள்ளபுராதனமாபாதகங்கள் கழிந்து சுத்தியேற்படுவதற்காகத் திருவணைக்குச் சென்று ஸேதுதர்சனத்தால் சுத்திசெய்துகொண்டு, பிறகு சரணாகதியை அநுஷ்டிப்பர். ரகுவீரனுடைய திருவடித் தூளியின் ஸ்பர்சத்தால் நீண்ட காலம் கல்லாய்க் கிடந்த கொடிய பாபம் ஒரு க்ஷணத்தில் கழிந்து, அஹல்யை கௌதமதர்மபத்நியானாள். ரகுவீரனுடைய திருவடிகளே ஸஞ்சரிக்கும் பாக்யம் பெற்ற ஸேதுவை நிர்மாணம் செய்தது ராமாவதாரத்தாலேற்பட்ட ஓர் நிகரற்ற தயாகார்யம். ஜனங்களுடைய பாபங்களைப் போக்குவதுதானே தயையின் கார்யம். நம்முடைய பாபங்களுக்குத் தயை ப்ராயச்

சித்தம்போல இருப்பவள். தயை பாபங்களை மன்னித்துவிட்டால் வேறு ப்ராயச்சித்தம் வேண்டியதில்லை. பெருமாளுடைய தயை ஒரே கடாக்ஷத்தால் ஸமுத்ரத்தைப் பிளக்கச்செய்து ஸேதுவை உலகத்தின் உஜ்ஜீவனத்திற்காக நிர்மாணம் செய்வித்தது. ஸமுத்ரராஜன் பேரில் கோபமென்பதும், லங்கை சேரவேண்டுவ தற்காக என்பதும் மேலுக்கு வ்யாஜமாத்ரம். உலகம் பிழைக்கச் செய்யக் கேவலம் தயையின் வ்யாபாரம்தான். தாம் வானரஸே னையுடன் ஸமுத்ரத்தைத் தாண்டுவதற்காக என்பது வ்யாஜ மாத்ரம். பாபஸமுத்ரமான ஸம்ஸாரத்தை உலகம் கடப்பதற்கு ஓர் சாச்வதமும், கண்ணால் பார்ப்பது மட்டும் போதுமென்கிற அதிஸுலபமுமான ஓர் ஸாதனத்தை ஸ்தாபித்து வைப்பதில் தான் முக்யக்கருத்து. ஸ்ரீநிவாஸனை ரகுதுரீணரென்றும், ரமாஸ ஹசரரென்றும் பேசுவது ரஸம். ரகுகுலத்திற்குத் தலைவராயி னும் ஸீதையைப் பின் செல்லும் தோழரே. விபீஷணாழ்வார் எந்த இடத்தில் ஸர்வலோகசரண்யனைச் சரணம்பற்றி உஜ்ஜீவித் தாரோ, அந்த இடத்திலேயே தர்சனமாத்ரத்தால் ஸர்வபாதக ஹரமான திருவணையை ஸேவித்துக்கொண்டே நீராடி சுத்தி பெற்றுப் பிறகு சரண்யன் திருவடிகளைப் பற்றும் பாக்யம் உல கத்திற்கேற்பட்டது. பெருமாளுடைய ஒரே தயாகடாக்ஷத்தால் ஸமுத்ரம் ஸேதுவினால் இரண்டாகப் பிளக்கப்பட்டது. பாபஸ முத்ரம் தாண்ட ஒரே கடாக்ஷத்தால் திருவணையேற்பட்டது. இந்த ச்லோகத்தில் 'ஸக்ருத்' (ஒரே தரம்) என்று ப்ரயோகித்தி ருப்பது மிக்க ரஸம். சரணாகதி உபாயமும் ஒருதரம்தான். ஓர் க்ஷணம்தான். அது பலிப்பது தத்க்ஷணமே. ஸேது பாபங்க ளைப்போக்குவதும் தத்க்ஷணமே. நம்முடைய ஒரு தர்சனம் போதும். (87)

𑌕𑍃𑌪𑍇 𑌪𑌰𑌵𑌶𑌸𑍍𑌤𑍍𑌵𑌯𑌾 𑌵𑍃𑌷𑌗𑌿𑌰𑍀𑌶𑌿𑌤𑍁𑌃 𑌕𑍍𑌰𑍀𑌡𑌿𑌤𑌂
𑌜𑌗𑌦𑍍𑌧𑌿𑌤𑌮𑌶𑍇𑌷𑌤𑌸𑍍𑌤𑌦𑌿𑌦𑌮𑌿𑌤𑍍𑌥𑌮𑌰𑍍𑌥𑌾𑌪𑍍𑌯𑌤𑍇 ।
𑌮𑌤𑌚𑍍𑌛𑌲𑌪𑌰𑌿𑌚𑍍𑌯𑍁𑌤𑌪𑍍𑌰𑌣𑌤𑌦𑍁𑌷𑍍𑌕𑍃𑌤𑌪𑍍𑌰𑍇𑌕𑍍𑌷𑌿𑌤𑍈𑌃
𑌹𑌤𑌪𑍍𑌰𑌬𑌲𑌦𑌾𑌨𑌵𑍈𑌰𑍍𑌹𑌲𑌧𑌰𑌸𑍍𑌯 𑌹𑍇𑌲𑌾𑌶𑌤𑍈𑌃 ॥

க்ருபே பரவஶஸ்த்வயா வ்ருஷகிரீசிது: க்ரீடிதம்
ஜகத்ஹிதமசேஷதஸ்ததிதமித்தமர்த்தாப்யதே ।
மதச்சலபரிச்யுதப்ரணததுஷ்க்ருதப்ரேக்ஷிதை:
ஹதப்ரபலதாநவைர்ஹலதரஸ்ய ஹேலாசதை: ॥ (88)

(ப-ரை) க்ருபே - தயாதேவியே! க்ருபயா வ்ருதவத: - உன்னை யஜமானியாகக்கொண்டு உன் வசமான, வ்ருஷகிரீஶி துஃ - வேங்கடத்தரசனுடைய, க்ரீடிதம் - விளையாட்டு, அஶேஷத: - முழுவதும், ஜகத்திதம் - உலகத்திற்கு ஹிதமே. (நல்லதே), ததிதம் - அப்படிக்கொத்த இந்த (உண்மை), மது மத - மத்யபானமயக்கமென்கிற சாக்கைக் கொண்டு, வஶி வ்ருத்த - (நினைப்பிலிருந்து) நழுவிய, ப்ரணததுஷ்க்ருதவ்ருக்ஷிதை:- ஆஶ்ரிதர் குற்றக் கவனிப்புக்களையுடையதும், மஹத் ப்ரபலதானவைர்க - மிக்க பலமுடைய அஸுரரைக் கொல்லுவதுமான, ஹலப்ருத: - கலப்பையை உடைய பரசுராமனுடைய,. ஹலாஶதை: - நூற்றுக்கணக்கான லீலைகளால், ஸமர்த்யதே - உண்மையென்று நிரூபிக்கப்படுகிறது.

" அம்மா தயையே! உன்னை யஜமானியாகக்கொண்டு வேங்கடமலையரசனுடைய விளையாட்டெல்லாம் (லீலையான உலகவ்யாபாரம்) ஒன்று தவருமல் முழுவதும் நன்மையேயாகும். மத்யமயக்கமென்கிற வ்யாஜத்தை வைத்துக்கொண்டு ஆச்ரிதர்களுடைய குற்றங்களைக் கவனியாமல் நினைப்பிலிருந்து நழுவவிடுவதும் பொல்லாவஸுரர்களை மாய்ப்பதுமான பலராமருடைய நூற்றுக் கணக்கான விளையாட்டுகளால் இந்த உண்மை உறுதி செய்யப்படுகிறது".

(தா-ம்) எந்த அவதாரத்தில் தயை என்பதே இல்லை என்று நாம் நினைக்கக்கூடுமோ, அந்த அவதாரத்தில் வ்யாபாரங்களும் தயாமயங்களென்று நிரூபித்தால்தான் தயையின் சக்தி எங்கும் ப்ரஸரிக்கும் என்பது தெளிவாகும். கொடுமையையே வ்ரதமாகக் கைப்பற்றி க்ஷத்திரியப் பூண்டே யில்லாமல் கொலை செய்து வந்த பரசுராமருடைய கோரமான கொலைச்செயல்கள் கூட கொல்லப் பட்டவர்களுடைய ஆத்மாவிற்கு ஹிதமானதாலவரையும் தயா ப்ரவாஹமென்று நிரூபித்தார். முன்ராமர் (முதல் ராமர்) விஷயத்தில் அப்படி நிரூபிக்கப்பட்டது. முன் ராமர் கோபத்தால் மத்தர். அவர் கோபமதத்திற்கு ஒய்வில்லை. இந்தப் பின்ராமர் மதத்தால் ஸதாகாலமும் மத்தர். மத்யத்திற்கு 'ஹாலா' என்று பெயர். இவர் ஹாலையை விடாதவர், அதை அவர் ஓர் ஓயாத

வ்யஸநமாக உடையவர். ‘ஹித்வா ஹாலாம்’ என்கிற மேகதூத சுலோகத்தில் ஹாலையை விட்டுவிட்டு (பாரதப்போரில் இருதிறத்தாரும் பந்துக்களாக இருந்ததையிட்டு) பந்துப்ரீதியினால் தீர்த்த யாத்திரை போய் தர்மத்தைச் சரித்துக்கொண்டு சுத்தராய் புண்யத்துறைகளாடினார் என்று வர்ணித்தார். இவர் மத்யபானத்தை விட்டு தீர்த்தயாத்திரை செய்தது ஓர் பெரிய ஆச்சர்யமென்று அங்கே மஹாகவி வேடிக்கையாகக் காட்டினார். இவர் மத்தர்போல நடித்ததெல்லாம் பிறர் குற்றங்களைக் கவனியாமல் இருப்பதற்கு ஓர் சாக்காயிற்று என்று இங்கே வர்ணநம். துர்யோதநனுடைய கோடி தோஷங்களையும் இவரைக் கவனியாமலிருக்கச் செய்தது தயை. (89)

ப்ரபூதவிபுதவிஷத்பரணகிந்நவிச்வம்பரா
பராபநயநச்சலாத் த்வமவதார்ய லக்ஷ்மீதரம் ।
நிராக்ருதவதீ தயே நிகமஸௌததீபச்ரியா
விபச்சிதவிகீதயா ஜகதி கீதயாந்தம் தம: ॥ அகூ ॥

ப்ரபூதவிபுதத்விஷத்பரண கிந்நவிச்வம்பரா
பராபநயநச்சலாத் த்வமவதார்ய லக்ஷ்மீதரம் ।
நிராக்ருதவதீ தயே நிகமஸௌததீபச்ரியா
விபஶ்சிதவிகீதயா ஜகதி கீதயாந்தம் தம: ॥ (89)

(ப-ரை) தயே - தயையே! ப்ரபூதவிபுதத்விஷத் - ஏராளமான (அநேக) தேவசத்ருக்களான அஸுரர்களை, பரண - சுமப்பதால், கிந்ந - வருந்தின, விச்வம்பரா - பூமிதேவியினுடைய பர - பாரத்தை, அபநயந - நீக்குவதென்கிற, ச்சலாத் - வ்யாஜத்தினாலே, (சாக்கை வைத்துக்கொண்டு), த்வம் - நீ, லக்ஷ்மீதரம் - லக்ஷ்மியைத் தரிக்கும் பெருமானை, அவதார்ய - அவதாரம் பண்ணும்படி செய்து, நிகம - வேதங்களுடைய, ஸௌத - மேலுப்பரிகையான உபநிஷத்துச்சியை ஏறியடைய, தீபச்ரியா - வழிகாட்டும் திருவிளக்கு நாச்சியார் போன்றதும், ஜகதி - பூமண்டலம் முழுவதிலும், விபச்சித் - வித்வான்களொருவராலும், அவிகீதயா - தப்பென்று சொல்லப்படாததும், (எல்லாத்தேசங்களிலும், எல்லா வித்வான்களாலும் ஏகமதியாகப் புகழப்படுவதுமான) கீதயா - கீதையால் (கீதை பாடியதால்), ஆந்தம் தம: - கள் இருட்டை, நிராக்ருதவதீ - போக்கினாய்.

“ அம்மா தயையே ! தேவர்களை (ஸாத்துவிகரான ஸாதுக்களை) தீவ்ரமாக த்வேஷிப்பதையே விரதமாகக்கொண்ட கணக்கில்லாத அஸுரர்களை (அஸுர ஸ்வபாவமுடைய கொடியவர்களை)ச் சுமப்பதினால் பாரம் பொறுக்க முடியாமல் வருந்தின பூமிப்பிராட்டியின் பாபச்சுமையை நீக்கி, பாரத்தை லகுவாக்குவதென்று மேலுக்கு ஒரு சாக்கை வைத்துக்கொண்டு, நீ லக்ஷ்மியோடுகூடிய பெருமாளை உலகத்தில் அவதரிக்கும்படி செய்து, வேதங்களின் மேல்மாடி(உச்சி)யை அபாயமில்லாமல் ஏறுவதற்கு திருவிளக்கு வெளிச்சம்போன்ற உலகம் முழுவதிலும் எல்லார்க்கும் அவிகீதமான (நன்று நன்றென்று மதியுடையோரெல்லோராலும் ஏககண்டாய்க் கொண்டாடப்படும்) கீதை கானத்தால் மதியைஇருளச்செய்யும் தமஸை(அக்ஞான இருளை)ப்போக்கினாய்.

ரஹஸ்யத்ரயங்களிலும் சரணாகதியென்றும் ஏழைக்கெளிய உபாயத்தை விதித்து, அஞ்சலஞ்சல், துயரப்படாதே, உன் சுமையை நான் சுமக்கிறேன், உன் க்ஷேமம் என் பாரம், உன் பாரத்தை நான் அபநயனம்செய்கிறேன் என்று அபயப்ரதானம் செய்வதை விளக்கும் சரமச்லோகத்தையும், அதை முடிவாகக் கொண்ட எல்லாக் காலங்களிலும் எல்லாத் தேசங்களிலும் ஒருவர் பாக்கியன்னியில் எல்லா ப்ராக்ஞர்களாலும் ஒருமிக்க அழகு அழகு என்று கொண்டாடப்பட்டுவரும் கீதையையும் பாடி சாச்வதகாலமும் சப்தஜ்யோதியாக (ஞானவிளக்காக) பிரகாசிக்கும்படி அகண்ட தீபமேற்றிவைத்ததிலும் உயர்ந்த கருணை உண்டோ ? கிருஷ்ணாவதாரத்தின் ப்ரயோஜனமிதுவே. கருணா காஷ்டை இதுவே. பூமிப்பிராட்டி பாபிகளின் பாபச்சுமையைத் தாங்கமாட்டாமல் அழுதாள்; அவள் பாரத்தைப்போக்க, அவள் அழுகையைத் தீர்க்க உலகத்தில் கண்ணனாக அவதரித்ததென்று சொல்லுவதெல்லாம் மேலுக்கு ஓர் சாக்கான பேச்சு. அவளுடைய ப்ரபூதமான (தாங்கமாட்டாத) பாபச்சுமையைப் போக்க அவதரித்ததாக மேலுக்குச் சொல்லிக்கொண்டு, உண்மையில் குழந்தைகளாகிய நம்முடைய தூக்கமாட்டாத பாபச்சுமையை நீக்கவும், நம் அழுகையைத் தீர்க்கவும் தான். ப்ரபு லக்ஷ்மியையும் கூட்டிக்கொண்டு அவளை மார்பில் சுமந்து அவதரித்தது. ‘ஜனங்களின் சோகத்தைத் தெறிக்கச்செய்யும் ச்லோகம் (அமிர்தம்) எந்தக் கருணைக்கடலிலிருந்து ஸ்வயம் அவதரித்ததோ’ என்று

சரமச்லோகத்தின் அவதாரத்தை வர்ணித்துளர். வால்மீகியின் சோகம் ச்லோகமாயிற்று என்பர். கண்ணன் ச்லோகம் சோகத்தைத் தொலைப்பது. கீதையென்பது ஓர் சாச்வத அகண்ட ஞான தீபம். எம்மதத்தரையும் ரஞ்சனம் செய்வது. சப்தம் என்னும் வெளிச்சமில்லாவிடில் உலகமெல்லாம் அக்ஞானவிருளாகவேயிருக்கும் என்பர். அக்ஞானவிருட்டை அகற்ற சப்தமென்றும் ஜ்யோதிஸதான ஸமர்த்தமாகும். மனமெனும் குஹையிலல்லவோ அக்ஞானவிருள் நிரம்பியிருக்கிறது. எந்த விளக்கு அதனுள்ளேபோய் வெளிச்சம்காட்ட திறமையுடையது. ஜகத்குருவும், ஆதிகுருவும் பரமகுருவுமான ஸ்ரீமானுனாராயணனே தானே மதுராபுரியிலவதரித்து குருக்ஷேத்ரமெனும் தர்மக்ஷேத்திரத்தில் இந்தகீதையைப்பாடி என்றுமணையாத ஞானதீபத்தை சாச்வதமாக ஏற்றிவைத்தான். உப்பரிகைமேல் விளக்கேற்றிவைக்கையில் மங்களமாகப்பாடுவர். பாடிக்கொண்டே கீதை விளக்கை ஏற்றிவைத்தான். நந்தா விளக்கு. உப்பரிகைமேல் அபாயமில்லாமல் தடுக்கிவிழாமல் ஏறுவதற்கு தீபமில்லாமல் முடியுமோ? உபநிஷத்துக்கள் வேதங்களின் உச்சி, சிகரம். வேதங்கள் கிரிரூபங்கள். உபநிஷத்து வேதபர்வதசிகரம். உபநிஷத்தின் உச்சியிலுள்ளது தத்துவஜ்ஞாநம், அதை ஏறிப்பிடிக்க கீதையே படிக்கட்டாயும் படியேற வழிகாட்டும் தீபமுமாகும். உப்பரிகை உச்சியில் உச்சிமலையில் உலகத்திற்கு ஏற்றிவைத்த விளக்கு. நாராயணனால் நரனை வ்யாஜமாகக்கொண்டு நரலோகத்திற்கு ஏற்றிவைத்த விளக்கு. பரஞ்சுடரேற்றிய விளக்கு. எங்கே பாடியது கீதை ? 'ஜகதி' உலகம் முழுவதிலும் உலகப்பரப்பெல்லாம் பரவப்பாடியது. ஓரிடத்தில் ஒருவர் பேசுவதை உலகமெல்லாம் கேட்கும்படி ஈச்வரன் கொடுத்த சக்தியால் ஸுலபமாய்ப் பரவச்செய்வதை நாம் நேரில் இப்பொழுது காண்கிறோம். ஈச்வரன் திருவாக்கிலிருந்து வெளிவந்த பாட்டு நாம் ஒரு ப்ரயத்நப்படாமலும், அது முதல் உலகமெங்கும் பரவி ஆநந்தித்து வருகிறது. 'விகீதா' என்றால் பிறர் ஒவ்வாமல் ஸரியன்று என்று ஆக்ஷேபிப்பது. விகீதை என்றால் கீதையாகாது. காநத்திற்கு விரோதி விகாநம். பின்பு எக்காலத்திலும் எத்தேசத்திலும் எம்மதத்திலும் விபச்சித்தாயுள்ளவர் (புத்திமான்கள்) ஒருவரேனும் கீதையின் அழகை ஆக்ஷேபிக்கமாட்டார் என்னும் தத்துவத்தை

ஸ்வாமி அநேக நூற்றாண்டுகளுக்கு முன்பே அறிந்து இப்படி அழகாக ஸாதிப்பதை ரஸிகலோகம் ரஸிக்கவேண்டும். புத்திமானாக இருந்தால் கீதையை ஆக்ஷேபிக்கமாட்டான். ஆக்ஷேபிப்பவன் புகழாதவன், புத்திமானல்ல. பாபிகள் தாங்காச் சுமையாவது அவர்கள் பாபபாரத்தாலே மலைகளைச் சுமப்பது பூமிக்குச் சுமையன்று. பாபச்சுமையுடைய பாபிகளைச் சுமப்பதுதான் பூமிக்குப் பொறுக்காச் சுமை. பூமிப்பிராட்டியின் பாபச்சுமையை லகுவாக்குவது என்பது பேர்மட்டும். உண்மையில் கீதையையும் அதிலும் அந்தமான சரமச்லோகத்தையும் பாடி, நம்மை லக்ஷ்மீதரனை தன்னைச் சரணம்பற்றச் செய்து, நம் பாபச்சுமைகளை நீக்குவதுதான் உண்மையான நோக்கம். பூமிச்சுமையையும் நம் சுமையையும் நீக்க லக்ஷ்மியைச் சுமந்துகொண்டு வந்தான். திருமார்பில் லக்ஷ்மியைச் சுமந்துகொண்டு வந்தானென்பதைக் காட்ட 'லக்ஷ்மீதரமவதார்ய' என்றார். திருச்சுமையைச் சுமந்துவராமல், திருஸஹாயமில்லாமல் இந்த க்ருபாவ்யாபாரங்கள் ஸாத்தியமல்ல. பாரத்தைப் போக்குவது என்று முன் பாதத்தில் பூமிவிஷயத்தில் பேசியுள்ளது. சரமச்லோகத்தோடும் முடியும் கீதை பாடுவதைப் பற்றிய பின்பாதியிலும் நம் பாபச்சுமையைப் போக்குவதுதானுண்மைக் கருத்து என்று த்வநியினால் காட்டும். பூமிச் சுமையைக் கழிப்பது மேலுக்கு வேஷமென்றபோது, மற்றவர் சுமையைக் கழிப்பது உண்மை என்று முடிந்தால்தானே அழகு. 'ஆச்ரிதயோக க்ஷேமங்களை நான் சுமக்கிறேன்' என்று பட்டைப் பகல் வெளிச்சம்போல வ்யக்தமாய் கீதை நடுவில் பாடினான். (89)

𑌵𑍃𑌷𑌾𑌦𑍍𑌰𑌿𑌹𑌯𑌸𑌾𑌦𑌿𑌨𑌃 𑌪𑍍𑌰𑌬𑌲𑌦𑍋𑌰𑍍𑌮𑌰𑍁𑌤𑍍𑌪𑍍𑌰𑍇𑌙𑍍𑌖𑌿𑌤
𑌸𑍍𑌤𑍍𑌵𑌿𑌷𑌾 𑌸𑍍𑌫𑍁𑌟𑌤𑌟𑌿𑌦𑍍𑌗𑍁𑌣𑌸𑍍𑌤𑍍𑌵𑌦𑌵𑌸𑍇𑌕𑌸𑌂𑌸𑍍𑌕𑌾𑌰𑌵𑌾𑌨𑍍 ।
𑌕𑌰𑌿𑌷𑍍𑌯𑌤𑌿 𑌦𑌯𑍇 𑌕𑌲𑌿𑌪𑍍𑌰𑌬𑌲𑌕𑌰𑍍𑌮𑌨𑌿𑌰𑍍𑌮𑍂𑌲𑌨𑌃
𑌪𑍁𑌨𑌃 𑌕𑍃𑌤𑌯𑍁𑌗𑌾𑌙𑍍𑌕𑍁𑌰𑌂 𑌭𑍁𑌵𑌿 𑌕𑍃𑌪𑌾𑌣𑌧𑌾𑌰𑌾𑌧𑌰𑌃 ॥

வ்ருஷாத்ரிஹயஸாதிந: ப்ரபலதோர்மருத்ப்ரேங்கித
ஸ்த்விஷா ஸ்புடதடித்குணஸ்த்வதவஸேகஸம்ஸ்காரவாந் |
கரிஷ்யதி தயே கலிப்ரபலகர்மநிர்மூலந:
புந: க்ருதயுகாங்குரம் புவி க்ருபாணதாராதர: || (90)

(ப-ரை) தயே - தயையே! வ்ருஷாத்ரிஹயஸாதிந: - வேங்கடமலையிலுள்ள 'குதிரை ஸவாரி செய்யவல்ல பெருமானு

டைய, [illegible] - ரொம்பவும் வேகமான கைவீச்சினுலுண்டாகும் காற்றினுல் அசைக்கப்படுவதும், (ஆட்டப்படுவதும்), [illegible] - பளபளவென்று மின்னுங்காந்தியால், [illegible] - மின்னல் என்னும் குணத்தை (கொடியை) நன்ருகவுடையதும், [illegible] - உன்னுல் நனைத்துத்தோய்ச்சலினுல், [illegible] - சுத்திசெய்யப்பட்டதும், [illegible] - கலியுகத்திற்கு உரிய ப்ரபலதாபங்களைப் போக்குவதுமான, [illegible] - கத்தியென்னும் மேகமானது, [illegible] - பூமியில், [illegible] - மறுபடியும், [illegible] - க்ருதயுகாரம்பத்திற்கு முளைகளை, [illegible] - ஏற்படுத்தும்.

"தயையே! வேங்கடமலையின்மேல் குதிரை ஸவாரியில் நிபுணனுன ஸ்ரீநிவாஸனுடைய பலமான கைவீச்சினுல் அடிக்கும் காற்றினுல் சலிக்கப்பட்டதும், பளபளவென்று மின்னும் காந்திகளால் மின்னற்கொடிகளை உடையதாயும், உன்னுடைய தோய்ப்பினுல் நல்ல சுத்தியை அடைந்ததுமான, கத்தியென்னும் மின்னும் கருமேகமானது பூமியில் கலியுகத்தில் ப்ரபலமான தாபங்களை வேரோடு பிடுங்கி எறிந்து க்ருதயுகம் ஆரம்பிக்க அதற்கு வேண்டிய முளைகளை மறுபடியும் உற்பத்தி செய்யும்.

(தா-ம்) கலி முடிவில் அவதரிக்கும் வெள்ளைக் குதிரைமேல் ஏறிக்கொண்டு பளபளவென்று மின்னும் தம் கத்தியை வீசிக்கொண்டு கலியில் மிகவும் கொடியவர்களாகவே மிஞ்சியிருக்கும் பாபிகளை நிர்மூலனம் செய்து, காட்டை அழித்துவிட்டுப் புதுப் பயிரிடுவாரைப்போல க்ருதயுகதர்மத்துடன் க்ருதயுகத்தின் ஆரம்பத்தை அவதரிப்பிப்பாரென்று சொல்லப்பட்டுளது. கல்கியவதாரத்திற்கும் தர்மஸ்தாபனம்தானே முக்கியப்பிரயோஜனம். ரொம்பவும் பாபிகளாய்விட்டால் அவர்களை அப்படியே விட்டுவிட்டால், பாபபுத்தி எல்லையில்லாமல் ஏறிப்போய் நன்மார்க்கத்திற்கு மீள வழியில்லாமற்போம். அவர்கள் சரீரங்களை அழித்துவிட்டு, யுகாந்தரமான முதல் யுகாரம்பம் ஆரம்பிக்கும்படி செய்வது தயாகார்யமாகும். பளபளவென்று மின்னிக்கொண்டிருக்கும் நீரோட்டக்கத்தியை மின்னும் மின்னற்கொடிகளையுடைய கார் மேகமாகவும், பாபிகளை வெட்டியெறியும் அக்கத்தியே மேகம்

போல தயையை வர்ஷித்துக்கொண்டு க்ருதயுகமுளைகளைக் கிளம்பச்செய்வதாகவும் வர்ணிக்கிறார். பாபிகளைக் கத்தியால் வெட்டிக்க்ழிப்பதும் தயாகார்யம். அதே கத்தி மேகம்போல வர்ஷித்துக் கிருதயுகத்தையும் க்ருதயுக தர்மத்தையும் முளைக்கச்செய்யும். மேகங்களைப் பரவச்செய்யக் காற்று வேண்டும். கல்கியான பகவான் மஹாவேகத்தோடும் பலத்தோடும் கத்தியை வீசுகையில், பெருங்காற்றடித்து எங்கும் பரவும். மலையாசன் குதிரை ஏறுவதில் நிபுணராயிருப்பார். மலைமேல் குதிரை ஏறிக்கொண்டு மஹா பலிஷ்டரான பெருமாள் கத்திவீச்சினால் காற்றடித்து மேகம் பரவ ஸௌகர்யமாயிருக்கும். கத்தி கருமையினால் மேகம்போலும், வீசுகையில் பளபளவென்று மின்னற்கொடிகள் மின்னுவதுபோலும், கத்தி தன் கூர்மையான தாரைகளால் நீரோட்டமுடையதுபோலும், காட்டையழிக்க உதவும் கத்தியே மேகரூபமாக நீர் தாரைகளை வர்ஷித்துப் புது முளைகள் கிளம்பும்படி செய்வது போலவும், கத்தியும் தயாஜலத்தால் தோய்ப்புண்டு, தயையின் ப்ரபாவத்தால் மேகமாகி வர்ஷிப்பதுபோலவும் உல்லேகம். மலையாசனான ஸ்ரீநிவாஸன் இப்படி கல்கியவதாரம் செய்யத்தக்கவர். 'கலௌ வேங்கடநாயக:' என்று கலியில் பூர்ணாதிகாரம் செலுத்துமவர் திருவேங்கடமுடையான். கலியுகமுடிவில் அவரே கல்கியாக அவதரிப்பது உசிதம். கொல்லும் கத்தியே தயாமேகமாவதால் பாபம் முற்றின தசையில் கொல்லுவதும் தயாகார்யமாகும். தயையினால் கலியுகத்தை க்ருதயுகமாக மாற்றிவிடுகிறார். கலியுகம் தொலைவதும் தயாகார்யம். க்ருதயுகம் வருவதும் தயாகார்யம். கத்தியைக் காளமேகமாகவும், அதை வேகமாய் வீசுவதால் மேகங்கள் கூடுவதுபோலிருப்பதையும் மஹாகவிகள் வர்ணிப்பதுண்டு. வெட்டத்தூக்கின கத்தியும் தயையின்ப்ரபாவத்தால் வர்ஷிக்கும் மேகங்களாகிறது. (90)

𑌵𑌿𑌶𑍍𑌵𑍋𑌪𑌕𑌾𑌰𑌮𑌿𑌤𑌿 𑌨𑌾𑌮 𑌸𑌦𑌾 𑌦𑍁𑌹𑌾𑌨𑌾𑌂
𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾𑌪𑌿 𑌦𑍇𑌵𑌿 𑌭𑌵𑌤𑍀𑌮𑌵𑌧𑍀𑌰𑌯𑌨𑍍𑌤𑌮𑍍 ।
𑌨𑌾𑌥𑍇 𑌨𑌿𑌵𑍇𑌶𑍍𑌯 𑌵𑍃𑌷𑌶𑍈𑌲𑌪𑌤𑍇𑌦𑌯𑍇 𑌤𑍍𑌵𑌂
𑌨𑍍𑌯𑌸𑍍𑌤𑌸𑍍𑌵𑌰𑌕𑍍𑌷𑌣𑌭𑌰𑌂 𑌤𑍍𑌵𑌯𑌿 𑌮𑌾𑌂 𑌕𑍍𑌷𑌮𑍇𑌥𑌾𑌃 ॥ ॥ ௯௧ ॥

விச்வோபகாரமிதி நாம ஸதா துஹாநா
மத்யாபி தேவி பவதீமவதீரயந்தம் I
நாதே நிவேசய வ்ருஷாத்ரிபதேர் தயே த்வம்
ந்யஸ்தஸ்வரக்ஷணபரம் த்வயி மாம் த்வயைவ II (91)

(ப-ரை) தேவி வ்ருஷாத்ரிபதிதயே - வேங்கடமலையரசன் தயாதேவியே! இதி நாம - இவ்வாறாக, (முன்பு 90-ச்லோகங்களால் நிரூபித்திருக்கிறபடி) விச்வோபகாரம் - ஸகல விதமான உபகாரங்களையும், (உலகத்திற்கு உபகாரத்தை) ஸதா - எக்காலத்திலும், துஹாநாம் - கறந்துகொண்டிருக்கும் (அளித்துக்கொண்டிருக்கும்), பவதீம் அபி - உன்னைக்கூட, அத்ய அபி - இன்றைக்கும், அவதீரயந்தம் - அலக்ஷ்யம் செய்பவனும், த்வயைவ - உன்னாலேயே, த்வயி - உன்னிடத்தில், ந்யஸ்தஸ்வரக்ஷணபரம் - ஒப்புவிக்கப்பட்ட ரக்ஷணப்பொறுப்பையுடைய, மாம் - என்னை, த்வம் (ஸ்வயம்) - நீயே, நாதே - வேங்கடநாதனிடத்தில், (லோகநாதனிடம், உன் நாதனிடம்) நிவேசய - அகலாமல் புணைத்து வைக்கவேண்டும்.

"இப்படி ஒன்பது சதகங்களால் வர்ணித்திருக்கிறபடி ஸகல விதமான உபகாரங்களையும் எனக்கு நீ அளித்துக் கொண்டிருந்தும், உன்னை அலக்ஷ்யம் செய்பவனும் உன்னாலேயே உன்னிடத்திலேயே என் ரக்ஷணபரம் முழுவதையும் வைக்கப்பட்டு உள்ளவனுமான என்னை நீயே உன் நாதனிடத்தில் (அகலாமல்) நிறுத்தி வைப்பாயாக".

(தா-ம்) ஒன்பது பத்துப் பாட்டுக்களால் தயை செய்யுமுபகாரங்களையெல்லாம் பாடினார். "இப்படிக்கு எல்லா உபகாரங்களையும் எல்லா உலகத்திற்கும் எல்லாக் காலமும் பால் கறப்பது போல் கறந்துகொண்டேயிருக்கும் என்று முன் விஸ்தரித்துப் பேசிய எல்லா உபகாரங்களையும் சேர்த்து அநுவாதம் செய்கிறார். 'கறக்கிறாய்' என்பதால் 'கறக்கப்படுவது ஸ்ரீநிவாஸனென்னும் பசு' என்பது வ்யஞ்ஜநம். ஸ்ரீநிவாஸனைப் பசுபோல் கறந்து கொடுக்கிறாள். புருஷோத்தமனைக் காராம் பசுவாக்கிக் கறக்கிறாள். குழந்தைகளாகிய நமக்கு அவனிடம் கறந்து பால்போல் கொடுக்கிறாள். இப்படித் தாய்போல ஸ்நேஹித்து ஸர்வோபகாரமும் செய்யுமுன்னை நான் இன்னங்கூட அவமதிக்கிறேன். நான்

அவமதித்தாலும் நீ என்னை ஸ்ரீநிவாஸனிடத்திலேயே பிரியாமல் தங்கியிருக்கும்படி செய்யவேணும். அவமதிப்பவனைக் கைவிட்டாலென்ன என்று நீ உபேக்ஷிக்கக்கூடாது. நானாக உன்னைச் சரணம் பற்றியிருந்தால், நான் அதற்கு விரோதமாக உன்னை அவமதித்தால் நீ என்னைக் கைவிடலாம். நீ ஸ்வயமாகவன்றோ என் பரத்தை உன்னிடமே ஏற்றுக்கொண்டு என்னை ரக்ஷிப்பதாகக்கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறாய். நீயாக வலுவில் என்னை ரக்ஷிப்பதாக என் பாரத்தை ஏற்றுக்கொண்ட பின் நான் தவறி நடக்கத் துணிந்தாலும், நீ அதற்காக என்னைக் கைவிட்டாலும், உன் வ்ரதத்திற்கும் நீ என்னை ஸரியாக வலுவில் அடைக்கலம் கொண்டதற்குமன்றோ விரோதம் வரும். ஆகையால் ஸ்ரீநிவாஸனைவிட்டு அகலாமலிருக்கும்படி செய். இப்படியாக 10- சுலோகங்களால் 'உத்ஹர்ஷிணீ' என்றும், 'ஸிம்ஹோந்நதா' என்றும் பெயரையுடைய சந்தத்தில் மலையுச்சியில் கவலையற்று ஸந்தோஷமாகப்பாடுகிறார். (91)

ெநஸகிேகண தரஸா கருேண நியுக்தா
நிம்ேநதேரzபி மயி ேத விததிர்பதி ஸ்யாத் ।
விஸ்மாபேயத் வ்ருஷகிரீச்வரமப்யவார்யா
ேவலாதிலங்கநதேசவ மஹாம்புராேச: ॥ ௯௨ ॥

நைஸர்கிகேண தரஸா கருணே நியுக்தா
நிம்நேதரேZபி மயி தே விததிர்பதி ஸ்யாத் ।
விஸ்மாபயேத் வ்ருஷகிரீச்வரமப்யவார்யா
வேலாதிலங்கனதசேவ மஹாம்புராசே: ॥ (92)

(ப-ரை) கருணே - தயையே! (தே) நைஸர்கிகேண - (உன்னுடைய) ஸ்வாபாவிகமான, தரஸா - ஸம்ப்ரம வேகத்தால், நியுக்தா - ஏவப்பட்ட, தே விததி: - உன்னுடைய வெள்ளப்பரப்பு, நிம்நேதரே - தாழ்மையில்லாத (கர்வத்தால் மிக்க உயர்த்தியை அபிமானிக்கும்), மயி அபி - என்னிடத்தில் கூட (என்பேரில் கூட), பதி ஸ்யாத் - மோதும்பொழுது (மோதினால், மோதுவதால்) (அது), அவார்யா - தடுக்க ஸாத்தியமல்லாத, மஹாம்புராசே: - மஹாஸமுத்ரத்தினுடைய, வேலாதிலங்கநதசா இவ - கரைதாண்டி மோதும் அவஸ்தையோவென்று, வ்ருஷகிரீச்வரம் - வேங்கடமலையரசனை, விஸ்மாபயேத் - ஆச்சர்யப்படச்செய்யும்.

“ தயையே ! உன்னுடைய ஸ்வபாவமான ரக்ஷிக்கும் வேகப் பரப்பில் அசைக்கப்படும் உன்னுடைய வெள்ளப்பரப்பு தாழ் மையேயில்லாமல் அஹங்காரத்தால் மலைஉச்சிக்குமேல் உயரமாக அபிமானித்திருக்கும் என்பேரிலும் அடித்து மோதுகிறது. உன் அலை அதற்குமேல் உயரமாக மோதுகிறது. மலை ப்ரபு ஸ்ரீநிவாஸன் இதைப்பார்க்கும்பொழுது ‘இதென்ன மஹாஸமுத் ரம் கரைதாண்டி தடுக்கமாட்டாமல் மோதும் தசையோ’வென்று இந்த உன் வேகமான அலைமோதல் அவரை ஆச்சர்யப்படும்படி செய்யும்.

(தா-ம்) பெருமாள் மலைஉச்சியிலெழுந்தருளியிருக்கிறார். நான் அவருக்கும்மேல்பட்டவனென்று அஹங்காரங்கொண்டு அவருக்கு மேல் உயரத்தில் தாவுகிறேன். உனக்கோ எம்மையெல்லாம் ரக்ஷிக்கவேண்டுமென்று ஆசையால் மிக்கவேக ஸம்ப்ரமமிருக் கிறது. என் உயரத்தையும் எட்டிப்பிடித்து என்னை ரக்ஷிக்க வேண்டுமென்று எனக்கும்மேல் அதிவேகமாய் உன்வெள்ளத்தை அலைத்து மோதி என்னையும் உனக்கு விஷயமாக்குகிறாய். வேங் கடமலையுச்சியிலுள்ள பெருமாள் தம் தலைக்கும் மேல் உன் ஸமுத்ர வெள்ளமலைத்து ஓடுவதைப்பார்க்கிறார். தடுக்கமுடியா மல்கரையையுடைத்துமஹாஸமுத்ரம்வெள்ளமிட்டு மலையெல்லாம் முழுகும்படி அலைக்கும் காலம் வந்துவிட்டதோ என்று உன் அலை வேகத்தைப் பார்த்து ஆச்சர்யப்படுகிறார். பெருமாளுக்கு மேலே என் அஹங்காரம் என்னைத் தூக்கிக்கொண்டுபோயிருக் கிறது. என்னைப்பிடிக்க அவருக்கும்மேல் நீ மோதவேண்டி யிருக்கிறது. நம் தலைக்கு மேலும் வெள்ளம் அலைத்து மோது கிறது, இதென்ன மஹாஸமுத்திரத்திற்கு மஹாப்ரளய ஸமயமோ வென்று ஆச்சர்யப்படுகிறார். (92)

𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌤𑌶𑌾𑌸𑌨𑌗𑌤𑌿𑌰𑍍𑌵𑌿𑌟𑌪𑍀𑌤𑌵𑍃𑌤𑍍𑌤𑍍𑌯𑌾
𑌵𑍃𑌤𑍍𑌰𑌾𑌦𑌿𑌭𑌿𑌃 𑌪𑌰𑌿𑌚𑌿𑌤𑌾𑌂 𑌪𑌦𑌵𑍀𑌂 𑌭𑌜𑌾𑌮𑌿 ।
𑌏𑌵𑌂𑌵𑌿𑌧𑍇 𑌵𑍃𑌷𑌗𑌿𑌰𑍀𑌶𑌦𑌯𑍇 𑌮𑌯𑌿 𑌤𑍍𑌵𑌂
𑌧𑍀𑌨𑍇 𑌵𑌿𑌭𑍋𑌃 𑌸𑌮𑌯 𑌦𑌣𑍍𑌡𑌧𑌰𑌤𑍍𑌵𑌲𑍀𑌲𑌾𑌮𑍍 ॥ ॥ ௯௩ ॥

விஜ்ஞாதசாஸநகதிர்விடபீதவ்ருத்யா
வ்ருத்ராதிபி: பரிசிதாம் பதவீம் பஜாமி ।
ஏவம் விதே வ்ருஷகிரீச தயே மயி த்வம்
தீநே விபோ: சமய தண்டதரத்வலீலாம் ॥ (93)

(ப-ரை) வூஷமிரீமஷயெ - வேங்கடமலேயரசன் தயையே! விஜ்ஞாதமாஸநமதி: - சாஸ்திரவிதிகளின் முறைகளையும் சாஸ்திரத்தில் விதித்திருக்கும் தண்டனைகளையும் தெரிந்திருந்தும், விவரீதவூத்ர - விரோதமான ஆசாரத்தோடு கூடியவனுக, வூதாஷிஸி: - வ்ருத்ராஸுரன் முதலியவர்களாலே, வஸிவிதாம் - நடக்கப்பட்ட (ஆசரிக்கப்பட்ட), வஷவீம் - மார்க்கத்தை, ஹஜாமி - ப்ரீதியோடுகூட ஸேவிக்கிறேன், வஸவம்வியெ - இப்படிக் கொடியவனுன, ஐயி - என் விஷயத்தில், ஷீநெ - பேதையாக (காலில் விழுந்த) என் விஷயத்தில், விஸொ: - ப்ரபுவினுடைய, உணயுாக்ஷவீரம் - தண்டிப்பது என்னும் லீலாவ்யாபாரத்தை,மயெ-ஷீ சாந்தப்படுத்தவேணும்.

"தயையே! சாஸ்திரங்கள் தடுப்பதையும் தண்டனை விதிப்பதையும் நான் அறிந்தவனே. அறிந்தும் வ்ருத்ராஸுரன், ஹிரண்யன், ராவணன் முதலியவர்கள் ஆசரித்த மார்க்கத்தையே நானும் இடைவிடாமல் ஆசரித்து வருகிறேன். இப்படிக்கொடிய துஷ்டனுன என் விஷயத்திலும் நான் பேதையாய் அகதியாய் உன் அடைக்கலத்திற்கு பாத்திரமானதைக்கொண்டு பெருமாள் என்னைத் தண்டிக்கும் வ்யாபாரமாகிய லீலையைச் சாந்தப்படுத்த வேணும்.

(தா-ம்)சாஸநகதியை நான் தெரிந்தவன்,தெரியாதவனல்ல.தெரிந்தவன்(வித்வானுயிருப்பவன்) சாஸ்திரவிதியை அதிக்ரமித்தால் தண்டனை அதிகமென்றும், தெரியாதவன் தப்புச்செய்தால் தண்டம் குறைவென்றும் சாஸ்த்ரம். 'சாஸந' மென்பது சாஸ்த்ரத்தையும் சொல்லும். தண்டனை (சிக்ஷை) என்பதையும் சொல்லும். நான் பண்ணும் சாஸ்திரத்தின் அதிக்ரமம் ஸாமாந்யமானதல்ல. வ்ருத்ராஸுரன், ஹிரண்யன், ராவணன் முதலியவர்கள் பகவானுக்கு சத்துருக்களாகவேயிருந்து ஆக்ஞையை மீறியே நடந்து எதிரம்பு கோத்துவந்ததுபோல், நானும் நடந்துவந்திருக்கிறேன். வித்வானுன நான் இப்படிக்கொடிய அதிக்ரமங்கள் செய்து வந்ததற்கு எத்தனையோ கடுமையான தண்டனைகளும் ந்யாயமானதே. ஆயினும் பேதையாய் உன்னடைக்கலமான என் விஷயத்தில் ப்ரபுவின் தண்டிக்கும் லீலாவ்யாபாரத்தை சமனம் செய்து உன்னுடைய தயாவ்யாபாரமே மேலிடும்படி செய்ய வேணும். (93)

𑌮𑌾 𑌸𑌾𑌹𑌸𑍋𑌕𑍍𑌤𑌿𑌕𑌨𑌕𑌕𑌞𑍍𑌚𑍁𑌕𑌵𑌞𑍍𑌚𑌿𑌤𑌾𑌨𑍍𑌯𑌃
𑌪𑌶𑍍𑌯𑌤𑍍𑌸𑍁 𑌤𑍇𑌷𑍁 𑌵𑌿𑌤𑌤𑌾𑌮𑍍𑌯𑌤𑌿𑌸𑌾𑌹𑌸𑌾𑌨𑌿 ।
𑌪𑌦𑍍𑌮𑌾𑌸𑌹𑌾𑌯𑌕𑌰𑍁𑌣𑍇 𑌨 𑌰𑍁𑌣𑌤𑍍𑌸𑌿 𑌕𑌿𑌂 𑌤𑍍𑌵𑌂
𑌘𑍋𑌰𑌂 𑌕𑍁𑌲𑌿𑌙𑍍𑌗𑌶𑌕𑍁𑌨𑍇𑌰𑌿𑌵 𑌚𑍇𑌷𑍍𑌟𑌿𑌤𑌂 𑌮𑍇 ॥௯௪॥

மா ஸாஹஸோக்திகனகஞ்சுக வஞ்சிதாந்ய:
பச்யத்ஸு தேஷு விததாம்யதிஸாஹஸாநி ।
பத்மாஸஹாயகருணே ந ருணத்ஸி கிம் த்வம்
கோரம் குலிங்கசகுநேரிவ சேஷ்டிதம் மே ॥ (94)

(ப-ரை) 𑌮𑌾 𑌸𑌾𑌹𑌸𑍋𑌕𑍍𑌤𑌿𑌕𑌨𑌕𑌕𑌞𑍍𑌚𑍁𑌕𑌵𑌞𑍍𑌚𑌿𑌤𑌾𑌨𑍍𑌯𑌃 - ஸாஹஸம் செய்யாதே என்ற பேச்சாகிய கெட்டிக்கவசத்தை (ஸாதுவேஷத்தை)ப் போட்டுக்கொண்டு பிறரை வஞ்சித்துக் கொண்டு, 𑌪𑌶𑍍𑌯𑌤𑍍𑌸𑍁 𑌤𑍇𑌷𑍁 - அவர்கள் பார்த்துக்கொண்டே யிருக்கையில், 𑌅𑌤𑌿𑌸𑌾𑌹𑌸𑌾𑌨𑌿 - மிகப்பெரிய ஸாஹஸகார்யங் களை, 𑌵𑌿𑌤𑌤𑌾𑌮𑌿 - நன்ருய்ச் செய்கிறேன், 𑌪𑌦𑍍𑌮𑌾𑌸𑌹𑌾𑌯𑌕𑌰𑍁𑌣𑍇 - ஸ்ரீநிவாஸனுடைய தயையே, 𑌕𑍁𑌲𑌿𑌙𑍍𑌗𑌶𑌕𑍁𑌨𑍇𑌰𑌿𑌵 - குலிங்கப்பக்ஷியினுடைய (செய்கையைப்போல), 𑌘𑍋𑌰𑌂 - கொடியதான, 𑌮𑍇 𑌚𑍇𑌷𑍍𑌟𑌿𑌤𑌂 - என் செய்கையை, 𑌕𑌿𑌂 - ஏன், 𑌤𑍍𑌵𑌂 - நீ, 𑌨 𑌰𑍁𑌣𑌤𑍍𑌸𑌿 - தடுக்கிறதில்லை.

ஸாஹஸத்தை செய்யாதே என்று பிறர் காது கேட்கச் சொல்லிக்கொண்டே அந்த ஸாதுவேஷத்தை பிறர் நம்பும்படி போட்டுக்கொண்டு அவர்கள் எல்லோரும் பார்த்துக்கொண்டிருக் கையிலேயே அவர்கள் முன்னே மிதம்மிஞ்சின ஸாஹஸங்களைச் செய்கிறேன். இப்படிக்கு (ஸாஹஸம் செய்யாதே என்று கத்திக் கொண்டே ஸிம்ஹம் தூங்கிக்கொட்டாவி விடுகையில் அதன் வாயிற்குள் புகுந்து அதன் பல்லிடுக்கில் ஒட்டியிருக்கும் மாம் ஸத்தைத் தின்று வெளியேவரும்) குலிங்கப்பக்ஷியைப்போல கோரமான துணிச்சல் செய்கையை நான் செய்வதை நீ ஏன் தடுக்கக்கூடாது.

முன் ச்லோகத்தில் சாஸ்த்ரம் எத்தை விதிக்கிறதென்றும் எதைச் செய்யாதே என்று தடுக்கிறதென்றும் தாம் தெரிந்தும் சாஸ்திரக்கட்டளைகளை மீறுகிறேனென்ருர். இங்கே சாஸ்திரக் கட்டளையை நான் அறிந்தேதாடுகூட பிறருக்கும் உபதேசித்து

வருகிறேன். அப்படிக்கிருந்தும் நான் மட்டும் மீறிநடக்கிறேன் என்கிறார். உபதேசிக்கப்படும் சிஷ்யர்கள் பார்த்துக்கொண்டேயிருக்கையில் அப்படி மீறித் தப்புநடவடிக்கைகள் செய்கிறேன் என்கிறார். பிறருக்கு உபதேசிப்பது மேலுக்கு வேஷம். குலிங்கப் பக்ஷி த்ருஷ்டாந்தத்தைக் காட்டுகிறார். ‘ஸாஹஸம் மா குரு’ (ஸாஹஸம் செய்யாதே) என்ற த்வநியாக அது கத்திக்கொண்டேயிருக்கும். ஸிம்ஹத்தின் வாய்க்குள் புகுந்து அதன் பல்லிடுக்கில் ஒட்டிக்கொண்டிருக்கும் மாம்ஸத்தைக்கடித்து இழுத்துக்கொண்டு வெளியேவரும். இப்படிச் செய்துகொண்டேயிருக்கும். இந்தத் திருஷ்டாந்தத்தை சிசுபாலன் ராஜஸூய யாகத்தில் பீஷ்மாசாரியருக்கு உபமானமாகச் சொல்லி அவரைத் தூஷிக்கிறான். ‘பீஷ்மரே! ஹிமவத்கிரி பக்கத்தில் குலிங்கபக்ஷியென்று ஓர்பக்ஷியுண்டு. அதன் வாயிலிருந்து அதற்கு அர்த்தம் தெரியாமல் ‘மா ஸாஹஸம்’ என்று திரும்பவும் திரும்பவும் சப்தம் வந்துகொண்டேயிருக்கும் என்று அங்கே சிசுபாலன் பேச்சு. ஸிம்ஹாசலமென்னும் வேங்கடமலே ஸர்வேச்வரன் விஷயமாக ஸ்தோத்ரம்பண்ணத் துணிந்ததே ஸாஹஸம். ‘என்ன ஞானப் பாட்டுக்களை ஓராசிரியர் தம் சீடருக்கு உபதேசம் பாடியென்ன; குலிங்கப்பக்ஷியைப்போல் வாய்ப்பாட்டு நல்லதாயிருந்தும், தன்னுடைய துஷ்ட ஸ்வபாவப்படித்தானே ஆசரிக்கிறான்’ என்கிற பாரதச்லோகத்தையும் இங்கே நினைக்கிறார். (94)

விக்ஷேபமர்ஹஸி தயே விபலாயிதேஜபி
வ்யாஜம் விபாவ்ய வ்ருஷசைலபதேர்விஹாரம் ।
ஸ்வாதீந ஸத்வ ஸரணிஸ் ஸ்வயமத்ர ஜந்தௌ
த்ராகீயஸீ த்ருடதரா குணவாகுரா த்வம் ॥ கூரு ॥

விக்ஷேபமர்ஹஸி தயே விபலாயிதேZபி
வ்யாஜம் விபாவ்ய வ்ருஷசைலபதேர்விஹாரம் 1
ஸ்வாதீந ஸத்வ ஸரணிஸ் ஸ்வயமத்ர ஜந்தௌ
த்ராகீயஸீ த்ருடதரா குணவாகுரா த்வம் ll (95)

(ப-ரை) தயே - தயையே! விபலாயிதேZபி - நான் நீ வேண்டாமென்று அகன்று அதிதூரமோடினாலும், வ்ருஷசைலபதே: - வேங்கடபதிக்கு, விஹாரம்-(வேட்டையாடுதலென்னும்) விளையாட்டை, வ்யாஜம் - ஒரு சாக்காக, விபாவ்ய-

கல்பித்துக்கொண்டு, விக்ஷேபஸஹாஸி - என்பேரில் தாவி என்னைப்பிடித்து உன் வசமாக்கவேணும், ஶ்வாபதஸஞ்சரணி: - ப்ராணிகள் ஸஞ்சரிக்கும் வழி தெரிந்தவளாக (மான் முதலிய ப்ராணிகள் காடுகளில் எங்கே ஸஞ்சரித்தாலும் அவை இருக்குமிடமறிந்து ஓடிப்பிடிக்கக்கூடியவளாயும்), அத்ர ஜந்தௌ - இங்கேயுள்ள ப்ராணிவிஷயத்தில், த்வம் - நீ, ஸ்வயம் - உன்னிச்சையினாலே ஸ்வயமாகவே, த்ராகீயஸீ - அதிக நீளமும், த்ருடதரா - அதிக கெட்டியுமான, குணவாகுரா - (குணங்களாலமைந்த) கயிறு வலையாக இருக்கிறாய். (மிக்க நீளமும் கெட்டியுமான கயிறுவலையாகி நீ தூர ஓடி ஒளியும் என்னைப் பிடித்து உன் நாயகன் வசமாக்கவேணும்).

“ தயையே! வேங்கடமலையரசனுக்கு விஷயக்காடுகளில் ஸஞ்சரிக்கும் பிராணிகளை வலைபோட்டுப் பிடிக்கிறதென்ற வேட்டை விளையாட்டை ஒரு சாக்காக ஏற்படுத்திவைத்து, ப்ராணிகள் ஓடி ஒளியும் மார்க்கங்களையறிந்தவளும் அவற்றைப்பிடிக்கும் திறமையுடையவளுமாய் நான் எத்தனை தூரமோடினாலும் அதைவிட அதிக நீளமும், நான் எத்தனை பலமாகத்திமிறினாலும் அதனிலும் கெட்டியுமான குணமென்றும் (கயிறு) வலையாகி நீயாகவே நான் ஓடியொளியுமிடம் வரையில் நீண்டு என்னைப் பிடித்து உங்கள் வசமாக்கிக்கொள்ளவேணும்.

அரசர் வேட்டையாடுவதில் ருசியுடையவர். மலையரசர் காடுகளில் ப்ராணிகளை வேட்டையாடுவதை விநோதமாகவுடையவராயிருப்பவர். தயைக்கு விஷயமாகவே கூடாதென்று விஷயக்காடுகளில் மேய்ந்து ஸஞ்சரித்துக்கொண்டு நாம் வெகுதூரமோடி தயைக்கு அகப்படாமல் ஒளிகிறோம். வேட்டை விநோதமெனும் ஓர்சாக்கை நீயேகல்பித்து அந்தசாக்கைக்கொண்டு நீ ஸ்ரீநிவாஸனை நாங்கள் திரியும் காடுகளுக்கு அழைத்துவரவேணும். தயையான நீ கூட இருந்து நடத்திவைக்கும் வேட்டை விளையாட்டில் ப்ராணிகளைக் கொல்லுவது கிடையாது. நீண்ட கயிறு வலைகளை வீசி ப்ராணிகளை உயிரோடுபிடித்து அரண்மனைக்குக் கொண்டு போய், அங்கே தீனிபோட்டுக் குளிப்பாட்டித் தட்டிக்கொடுத்து செல்வமாக வளர்ப்பதுமட்டும்தான். விஷயக்காடுகளில் ஸ்வச்சந்தமாய் மேய்ந்து திரியும் மான்போன்ற ப்ராணிகள் நாங்கள்.

அரசன் கையில் அகப்படாமல் திரிகிறோம். எங்களைப்பிடிக்கத் தேடும்போது தூர ஓடி ஒளிவோம். வலை வீசிப்பிடிக்கப்பார்த்தால் பலமாய்த்திமிரி ஓடப்பார்ப்போம் நீயே நீண்டகெட்டிக் குண (கயிறு) வலையாகவேணும். நாங்கள் உங்களுக்கு அகப்படக் கூடாதென்று ஓடி ஒளிந்தாலும் உனக்கு எங்கள் போக்கையறிந்து எங்களைப்பிடித்து ஸ்வாதீனம் செய்யத்தெரியும். 'த்ராகீயஸீ' என்பதற்கு இன்னும் அதிக நீளமான என்பது பொருள். நான் எத்தனை தூரம் ஓடினாலும், நீ அத்தைவிட அதிக நீளமான வலை (கயிறு) ஆகி எங்களைப்பிடிக்கவேணும். நான் ஓடும் தூரத்தைக் காட்டிலும் அதிகமாக நீளும் (குணம் என்பது கயிறுக்கும்பெயர்) உன்குணவலையை நீளவீசி என்னைப்பிடிக்கவேணும். 'த்ருடதரா' என்பதற்கு இன்னம் அதிக கெட்டியான என்று பொருள். நீ எங்கள் தூரஓட்டத்திலுமதிகமாக நீண்டுபிடிக்கும்பொழுதும், பலமாய்த்திமிரி கயிறுவலையை அறுத்து ஓடப்பார்ப்போம். நீ எங்கள் பலத்திமிரைவிட கெட்டியான வலையாகவேணும். தயை மிக்க நீளமும் கெட்டியுமாகவேணும். 'பலாயிதேபி' நான் ஓடினாலும் 'வி'என்பது மிக்கதூரம் ஓடினாலும் என்பதைக்காட்டும். 'விக்ஷேபம்' என்பது எறிவதைச்சொல்லும். வேட்டையில் அம்பையோ, குண்டையோ எறிவதைச் சொல்லும். இங்கே 'தயாகடாக்ஷம்' எறியப்படுகிறது. சர விக்ஷேபமல்ல, கடாக்ஷ விக்ஷேபம் மட்டுமே என்று வேடிக்கை. பாணத்தை எறிதலல்ல, குளிர்ந்த தயாகடாக்ஷத்தை வீசுவதே. ராமபாணம்போல, ராம தயாகடாக்ஷமும். (95)

𑌸𑌂𑌤𑌨𑍍𑌯𑌮𑌾𑌨𑌮𑌪𑌰𑌾𑌧𑌗𑌣𑌂 𑌵𑌿𑌚𑌿𑌨𑍍𑌤𑍍𑌯
𑌤𑍍𑌰𑌸𑍍𑌯𑌾𑌮𑌿 𑌹𑌨𑍍𑌤 𑌭𑌵𑌤𑍀𑌂 𑌚 𑌵𑌿𑌭𑌾𑌵𑌯𑌾𑌮𑌿 ।
𑌅𑌹𑍍𑌨𑌾𑌯 𑌮𑍇 𑌵𑍃𑌷𑌗𑌿𑌰𑍀𑌶𑌦𑌯𑍇 𑌜𑌹𑍀𑌮𑌾
𑌮𑌾𑌶𑍀𑌵𑌿𑌷𑌗𑍍𑌰𑌹𑌣𑌕𑍇𑌳𑌿𑌨𑌿𑌭𑌾𑌮𑌵𑌸𑍍𑌥𑌾𑌮𑍍 ॥ ॥ ௯௬ ॥

ஸந்தந்யமாநமபராதகணம் விசிந்த்ய
த்ரஸ்யாமி ஹந்த ப்வதீம் ச விபாவயாமி ।
அஹ்நாய மே வ்ருஷகிரீச தயே ஜஹீமா
மாசீவிஷக்ரஹணகேளிநிபாமவஸ்தாம் ॥ (96)

(ப-ரை) 𑌸𑌂𑌤𑌨𑍍𑌯𑌮𑌾𑌨𑌂 - அடுக்கடுக்காய் (கட்டுக்கட்டாய்) என்னால் செய்யப்படும், 𑌅𑌪𑌰𑌾𑌧𑌗𑌣𑌂 - பாபச்

செய்கைகளின் கூட்டத்தை, விம்ருஶ்ய - நன்றாய் நினைத்துப் பார்த்து, த்ரஸ்யாமி - நடுங்குகிறேன், ஸஹஸா - உடனே (நல்ல வேளையாய்), பவதீம் - உன்னை, விபாவயாமி ச-நன்றாக நினைக்கிறேன், வ்ருஷகிரீஶதயே-வேங்கடபதியின் தயையே, ஆஶீவிஷக்ரஹணகேளிநிபாம் - கொடிய விஷப்பாம்பைப் பிடித்து விளையாடுவதற்கொப்பான, இமாம் - இந்த, மே - என்னுடைய, அவஸ்தாம் - அவஸ்தையை, அபஹாய - உடனே, ஜஹி - கொல்லு.

அடுக்கடுக்காய்ச் செய்யப்படுமென்னுடைய கோடிக்கணக்கான அபராதங்களை நினைத்து நினைத்து நடுங்குகிறேன். உடனே உன்னுடைய வைபவத்தை நினைத்து ஆறுதலையடைகிறேன். வேங்கட ப்ரபுவின் தயையே! இப்படிக்கொடிய விஷமுள்ள பாம்பைப் பிடித்தாட்டுவது போன்ற என்னுடைய அவஸ்தையை நீ தொலைக்கவேணும்.

ஸாஹஸத்திலிறங்காமல் என்னைத் தடுக்கவேணுமென்று உன்னை ப்ரார்த்தித்தேன். நீயாக விட்டுத்தொலை யென்றால் நானாகவிட்டுத் தொலைக்க முடியவில்லை, விஷயமென்னும் விஷப் பாம்பைக் கையில்பிடித்து முத்தமிட்டு விளையாடும் ஸாஹஸத்திலேயே ருசியுடையவனாயிருக்கிறேன். பாபங்களைச்செய்துவிட்டு என்ன கொடுமை செய்தேன், என்ன கடோரத் தண்டனை வருமோ என்று நடுங்குகிறேன். உடனே எல்லாத்தையும் பொறுக்கும் உன் ப்ரபாவத்தை நினைத்துத் தேருகிறேன். இப்படி பயத்திற்கும் தேருதலுக்கும் நடுவில் நான் இருந்து திண்டாடுகிறேன். விஷப்பாம்பைத்தொட்டுப் பிடித்து விளையாடுவதில் எனக்குள்ள ருசியை நீதான் தொலைக்கவேணும், கொல்லவேணும். விஷப்பாம்பு என்னைக்கொல்லுவதற்கு முன் அந்தப் பாம்போடு விளையாடுவதில் என் ருசியை நீ கொன்றுவிடவேண்டுமென்று வேடிக்கையாகக் காட்டுகிறார். 'ஜஹி' என்பதற்குக் 'கொல்லு' என்று பொருள். பாம்புவிளையாட்டு ருசியை நீ கொல்லாவிடில், பாம்பு உன் குழந்தையாகிய என்னைக்கொன்றுவிடும். பாம்பைப்பிடித்துக்கொண்டு விளையாடுமறியாக்குழந்தை. அந்த விளையாட்டு ருசியை விடும்படி தாயாகிய நீதான் செய்யவேணும். (96)

𑌔𑌤𑍍𑌸𑍁𑌕𑍍𑌯𑌪𑍂𑌰𑍍𑌵𑌮𑍁𑌪𑌹𑍃𑌤𑍍𑌯 𑌮𑌹𑌾𑌪𑌰𑌾𑌧𑌾𑌨𑍍
𑌮𑌾𑌤𑌃 𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑌯𑌿𑌤𑍁𑌮𑌿𑌚𑍍𑌛𑌤𑌿 𑌮𑍇 𑌮𑌨𑌸𑍍𑌤𑍍𑌵𑌾𑌮𑍍 ।
𑌆𑌲𑌿𑌹𑍍𑌯 𑌤𑌾𑌨𑍍𑌨𑌿𑌰𑌵𑌶𑍇𑌷𑌮𑌲𑌬𑍍𑌧𑌤𑍃𑌪𑍍𑌤𑌿𑌃
𑌤𑌾𑌮𑍍𑌯𑌸𑍍𑌯𑌹𑍋 𑌵𑍃𑌷𑌗𑌿𑌰𑍀𑌶𑌧𑍃𑌤𑌾 𑌦𑌯𑍇 𑌤𑍍𑌵𑌮𑍍 ॥

ஔத்ஸுக்யபூர்வமுபஹ்ருத்ய மஹாபராதாந்
மாத: ப்ரஸாதயிதுமிச்சதி மே மநஸ்த்வாம் I
ஆலிஹ்ய தாந்நிரவசேஷமலப்தத்ருப்தி:
தாம்யஸ்யஹோ வ்ருஷகிரீசத்ருதா தயே த்வம் II (97)

(ப-ரை) மாத: - தாயே! மே - என்னுடைய, மந: - மனது, மஹாபராதாந் - கொடியவபராதங்களை, ஔத்ஸுக்யபூர்வம் - மிக்க ஆசையோடு, உபஹ்ருத்ய - (உனக்கு) ப்ரீதியான உபஹாரமாக (உன்னிடம்) கொண்டு ஸமர்ப்பித்து, த்வாம் - உன்னை, ப்ரஸாதயிதும் - ஸந்தோஷப்படுத்த, இச்சதி - நான் ஆசைப்படுகிறேன், தாந் - அந்த உபஹாரங்களை, நிரவசேஷம் - துளிக்கூட பாக்கியில்லாமல், வ்ருஷகிரீசத்ருதா தயே - வேங்கடபதியின் தயையே! த்வம் - நீ, ஆலிஹ்ய - நக்கி சாப்பிட்டுவிட்டு, அலப்தத்ருப்தி: - திருப்தியடையாமல், அஹோ தாம்யஸி - நீ வருத்தப்படுகிறாயே (தவிக்கிறாயே).

"அம்மா! உனக்கு ப்ரீதியான உபஹாரங்களாக மிகவாசையாய் நான் என் கொடிய பாபங்களை ஸமர்ப்பித்து உன்னை ஸந்தோஷப்படுத்த இச்சிக்கிறேன். வேங்கடபதியின் தயையே! நீ அதையெல்லாம் துளிக்கூட சேஷம் வைக்காமல் லேஹநம் செய்து சாப்பிட்டுவிட்டு (வயிறு நிறம்பவில்லையே என்று) கஷ்டப்படுகிறாயே."

(தா-ம்) அம்மா! நீ எனக்குத் தாயானபடியால் விச்வோபகாரங்களையும் நீ எனக்குச் செய்கிறாய். பெற்ற பிள்ளையாகிய நான் என் தாயாருக்கு மிக்க ஆவலுடன் முன் செய்த தீவினைகளனைத்தையும் உபஹாரமாக ஸமர்ப்பித்து உன்னை த்ருப்தி செய்ய ஆசைப்படுகிறேன். தாய்க்குக் குழந்தைகளுக்கு விரோதிகளான பாபரோய்களைத் தொலைப்பதிலும் மிக்க ஸந்தோஷ

முண்டோ? நான் ஸமர்ப்பித்த பாபங்களையெல்லாம் நீ மிச்சமில்லாமல் உண்டு (ஸம்ஹாரம் செய்து, கொன்று) இத்தனைதானு பாபம், இன்னமில்லையா என்று அத்ருப்திப்படுகிறாய்; நம் அருமைக்குழந்தை இவ்வளவுமட்டும்தானு உணவு ஸம்பாதித்துக் கொடுத்தான் என்று அத்ருப்தியினால் வருத்தப்படுகிறாய். நான் உன்னைத் திருப்தி செய்ய ஆசைப்பட்டும் உனக்குப் போதுமான உன் பசி தீர உணவு கொடுக்க என்னாலியலவில்லை. ‘உலகமுண்ட பெருவாயா’ என்றவிடத்தில்போல, இங்கே ‘உண்பது’ என்பதற்கு ‘கொல்லுவது, ஸம்ஹரிப்பது, இல்லாமற் செய்வது’ என்பது பொருள். ப்ரளயத்தில் பெருமாள் உலகத்தை உண்பதுபோல, நீ என் பாபங்களையெல்லாம் உண்டு ப்ரளயம் செய்கிறாய். நீ செய்யும் பாபப்ரளயத்தில் தொலையாமல் மிஞ்சும் பாபலேசமும் கிடையாது. இதெல்லாம் சரணுகதிக்கு முன் செய்த தீவினைகள் விஷயம். நான் என் தாயாகிய உன்னை த்ருப்திசெய்யவேண்டுமென்று எத்தனையோ காலமாகத் தேடிய கர்மஸம்பத்தையெல்லாம் உனக்கு ஸமர்ப்பித்தும், உனக்கு த்ருப்தியாகவில்லையோ? ஐயோ பசி தீரவில்லையே என்று பசியினால் தபிக்கிறாய் என்று வேடிக்கையாகப் பேசுகிறார். உலகமுண்ட பெருவாயன் வயிற்றிலும் உன் வயிறு பெரிது. (97)

𑌜𑌹𑍍𑌯𑌾𑌦𑍍𑌵𑍃𑌷𑌾𑌚𑌲𑌪𑌤𑌿𑌃 𑌪𑍍𑌰𑌤𑌿𑌘𑍇𑌽𑌪𑌿 𑌨 𑌤𑍍𑌵𑌾𑌂
𑌕𑌰𑍍𑌮𑍋𑌪𑌤𑌪𑍍𑌤 𑌇𑌵 𑌶𑍀𑌤𑌲𑌤𑌾𑌮𑍁𑌦𑌨𑍍𑌵𑌾𑌨𑍍 ।
𑌸𑌾 𑌮𑌾𑌮𑌰𑍁𑌨𑍍𑌤𑍁𑌦𑌪𑌰𑌂𑌵𑍍𑌯𑌸𑌨𑌾𑌨𑍁𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌃
𑌤𑌦𑍍𑌵𑍀𑌕𑍍𑌷𑌣𑍈𑌃 𑌸𑍍𑌪𑍃𑌶𑌤𑌯𑍇 𑌤𑌵 𑌕𑍇𑌳𑌿𑌪𑌦𑍍𑌮𑍈𑌃 ॥

ஜஹ்யாத்வ்ருஷாசலபதி: ப்ரதிகேZபி ந த்வாம்
கர்மோபதப்த இவ சீதளதாமுதந்வான் ।
ஸா மாமருந்துதபரங்யஸநாநுவ்ருத்தி:
தத்வீக்ஷணை: ஸ்ப்ருசதயே தவ கேளிபத்மை: ॥ (98)

(ப-ரை) 𑌵𑍃𑌷𑌾𑌚𑌲𑌪𑌤𑌿𑌃-வேங்கடமலையரசன், 𑌕𑌰𑍍𑌮𑍋𑌪𑌤𑌪𑍍𑌤𑌃 - கடும் வெய்யலினால் காயப்பட்ட, 𑌉𑌦𑌨𑍍𑌵𑌾𑌨𑍍 - ஸமுத்ரமானது, 𑌶𑍀𑌤𑌲𑌤𑌾𑌂 𑌇𑌵 - தன்னுடைய குளிர்ச்சிஸ்வபாவத்தை (விடாமலிருப்பதுபோல்), 𑌪𑍍𑌰𑌤𑌿𑌘𑍇𑌽𑌪𑌿 - மிக்க

கோபச்சூடு வந்தபோதும், த்வாம் - உன்னை, ந ஜஹாதி - விடமாட்டார், ஸா - அப்படிக்கொத்த நீ, ஸாபராதேஷ்வபி ந்யஸநாநந்தவ்ருத்திः - மறுபடியும் உன்னைச் சரண் புகுந்து காப்பாற்றவேண்டுமென்று நான் ப்ரார்த்திப்பதை அஸஹ்ய மாக நினைப்பவளாகிய (நீ), தவ - உன்னுடைய, கேலிவெஶை: - விளையாடும் தாமரைப்பூக்களான, தவீக்ஷணை: - ஸ்ரீநிவாஸனுடைய (தாமரை மலர்) கடாக்ஷங்களால், தயே - தயையே, மாம் - என்னை, ஸ்ப்ருஶ - தொடு.

"எப்படி மஹாஸமுத்ரமானது வெய்யில் எத்தனை கடுமையாயடித்தாலும் தன்னுடைய ஸ்வபாவமான குளிர்ச்சிகுணத்தை விடாதோ, அப்படியே வேங்கடமலையரசன் எத்தனை விக்னங்களை நாங்கள் செய்து கோபச்சூடுண்டாக்கினாலும் தன் குளிர்ச்சி ஸ்வபாவமான உன்னை (தயையை) விடுகிறதில்லை. மறுபடியும் உன்னை உன் குழந்தையாகிய நான் ரக்ஷண ப்ரார்த்தனை செய்வதை அஸஹ்யமென்று நினைத்துப் பொறுக்க மாட்டாதவளான நீ உனக்கு விளையாடும் தாமரைப்பூக்களான உன் நாதன் தாமரைக்கடாக்ஷங்களால்என்னைத்தொடவேணும்."

(தா-ம்) நான் எத்தனை சூடான கோபமூட்டத்தக்க செய்கைகளைச் செய்தாலும் அந்த உஷ்ணமெல்லாம் ஸமுத்ரஜலம் போல் அகண்டமாய் அலைத்துக்கொண்டிருக்கும் உன் வெள்ளத்தால் தணிந்துபோகிறது. பெருமாள் ஸமுத்ரத்தால் சூழப்பட்டிருக்கிறார். தயையென்னும் குளிர்ந்த பெருங்கடல் அவரைச் சூழ்ந்துகொண்டிருக்கிறது. ஸமுத்திரத்தின்பேரில் எத்தனை வெய்யிலடித்தாலும், அது குளிர்ச்சியை விட்டுக்கொதிப்பதில்லை. ஸமுத்ரம் போன்ற தயாஜலத்தோடு கூடியவர் ஸ்ரீநிவாஸன். கடல்போல தயாஜலமிருப்பதால் உஷ்ணம் படுகையிலேயே வாராமல் தடுத்துக் குளிர்ச்சியான தயாஸ்வபாவமே மாறாமல் காப்பாற்றப்படுகிறது. உன் குழந்தைகளாகிய நாங்கள் இரண்டாம் தரம் எங்கள் ரக்ஷணபாரத்தை நீதானேற்றுக்கொண்டு எங்களை ரக்ஷிக்கவேண்டுமென்று ப்ரார்த்திப்பதை நீ பொறுக்கமாட்டாய். எங்கள் கொடிய குற்றங்களைப் பொறுப்பாய், அதெல்லாம் உனக்கு ஸஹ்யம். ஆனால் இரண்டாம் தரம் ப்ரார்த்தித்தால் அது உனக்கு அஸஹ்யம், அதை நீ பொறுக்கமாட்டாய். ஒரு

தரம் த்ரௌபதி ராஜஸபையில் கோவிந்தா என்று அலறினது பெருமாளைப் பெருங்கடனாளியாக்கிற்று. ஒரு தரம் பிரார்த்தித்ததே நெஞ்சில் பெரும் சுமையாய்க் கனத்திருக்கும்போது, இரண்டாந்தரம் தாயான தயையை பிரார்த்தித்தால் அது புண்ணில் ஊசியால் குத்துவதுபோல் அஸஹ்யமாகிறது. மறுபடியும் பிரார்த்திக்கவேண்டிய ச்ரமத்தை உனக்கும் வைக்காமல் நீ விளையாடுவதற்குத்தாமரைப்பூக்களான ஸ்ரீநிவாஸனுடைய தாமரைக் கண்கள் சொறியும் கடாக்ஷத்தாமரைப் பூக்கள் என்பேரில் விழுந்து என்னைத் தொடும்படி செய்யவேணும். (98)

𑌦𑍃𑌷𑍍𑌟𑍇𑌽𑌪𑌿 𑌦𑍁𑌰𑍍𑌬𑌲𑌧𑌿𑌯𑌂 𑌦𑌮𑌨𑍇𑌽𑌪𑌿 𑌦𑍃𑌪𑍍𑌤𑌂
𑌸𑍍𑌨𑌾𑌤𑍍𑌵𑌾𑌪𑌿 𑌧𑍂𑌲𑌿𑌰𑌸𑌿𑌕𑌂 𑌭𑌜𑌨𑍇𑌽𑌪𑌿 𑌭𑍀𑌮𑌮𑍍 ।
𑌬𑌦𑍍𑌧𑍍𑌵𑌾 𑌗𑍃𑌹𑌾𑌣 𑌵𑍃𑌷𑌶𑍈𑌲𑌪𑌤𑍇𑌰𑍍𑌦𑌯𑍇 𑌮𑌾𑌮𑍍
𑌤𑍍𑌵𑌦𑍍𑌵𑌾𑌰𑌣𑌂 𑌸𑍍𑌵𑌯𑌮𑌨𑍁𑌗𑍍𑌰𑌹𑌶𑍃𑌙𑍍𑌖𑌲𑌾𑌭𑌿𑌃 ॥ ॥ ௯௯ ॥

த்ருஷ்டேऽபி துர்பலதியம் தமநேऽபி த்ருப்தம்
ஸ்நாத்வாபி தூளிரஸிகம் பஜநேऽபி பீமம் ।
பத்வா க்ருஹாண வ்ருஷசைலபதேர்தயே மாம்
த்வத்வாரணம் ஸ்வயமநுக்ரஹச்ருங்கலாபி: ॥ (99)

(ப-ரை) 𑌵𑍃𑌷𑌶𑍈𑌲𑌪𑌤𑍇𑌰𑍍𑌦𑌯𑍇 - வேங்கடமலையரசன் தயையே! 𑌦𑍃𑌷𑍍𑌟𑍇𑌽𑌪𑌿 - கண்ணால் (உறுத்திப்) பார்க்கையிலேயே, 𑌦𑍁𑌰𑍍𑌬𑌲𑌧𑌿𑌯𑌂 - கலங்கும் புத்தியுடையதும் (உடையவனும்), 𑌦𑌮𑌨𑍇𑌽𑌪𑌿 - ஈட்டியைக் காட்டி அடக்கும் போதும், 𑌦𑍃𑌪𑍍𑌤𑌂 - கொழுப்புடையதும் (உடையவனும்), 𑌸𑍍𑌨𑌾𑌤𑍍𑌵𑌾𑌪𑌿 - ஸ்நாநம் பண்ணிவைத்தபிறகும், 𑌧𑍂𑌲𑌿𑌰𑌸𑌿𑌕𑌂 - புழுதியைப் பூசிக்கொள்ளுவதில் ரஸமுடையதும் (உடையவனும்), 𑌭𑌜𑌨𑍇𑌽𑌪𑌿 - ப்ரீதியோடு வேண்டிய பணிவிடையெல்லாம் செய்து ஆராதிக்கையிலும், 𑌭𑍀𑌮𑌂 - பயத்தை உண்டாக்கி பயங்கரமாக இருக்கும், 𑌤𑍍𑌵𑌦𑍍𑌵𑌾𑌰𑌣𑌂 - உன் ஆனையான (உன்னை வேண்டாமென்று தடுக்கும்), 𑌮𑌾𑌂 - என்னை, 𑌸𑍍𑌵𑌯𑌂 - நீயாகவே (நான் வேண்டாமென்று தடுத்தாலும்), 𑌅𑌨𑍁𑌗𑍍𑌰𑌹𑌶𑍃𑌙𑍍𑌖𑌲𑌾𑌭𑌿𑌃 - அநுக்ரஹமென்னும் சங்கிலிகளால், 𑌬𑌦𑍍𑌧𑍍𑌵𑌾 - கட்டி, 𑌗𑍃𑌹𑌾𑌣 - பிடித்து உன் வசமாக்கு.

நான் துஷ்டத்தனம் பண்ணால் உனக்கு விளையாட்டுத் தாமரைகளான ஸ்ரீநிவாஸன் கடாக்ஷங்களால் என்னைத்தொட்டு உங்கள் வசமாக்கு என்றார். நீயே நீண்ட வலையாக நீண்டு என்னைப் பிடித்து உங்கள் வசமாக்கு என்றார். யானையைக்கட்டிப் பிடித்து பழக்கிவைத்திருந்தாலும், எந்த வேளையில் மதம் பிடிக்குமோ, என்ன துஷ்டத்தனம் பண்ணுமோ, அடங்காமல் நம்மையே தாக்குமோ என்று நடுக்கமாகவேயிருக்கும். அதுபோன்ற யானையாகத் தம்மை வர்ணிக்கிறார். கடாக்ஷத்தால் தொட்டு வசப்படுத்த முடியாது. வலைவீசிப்பிடிக்க முடியாது. மதம் பிடித்தால் பின்னாலே தெரியாமல் வந்து கெட்டிச்சங்கிலிகளால் கட்டித்தான் அடக்கி நிறுத்தவேணும். காட்டிலேயுள்ளதை அரண்மனைக்குக் கொண்டுவந்து என்ன உபசாரம் செய்துவந்தாலும் யானை காட்டு ஸுகஸஞ்சாரத்தை நினைக்கும், இங்கேயிருப்பதையே வெறுக்கும், கோபமடையும், திமிரிஓடப்பார்க்கும். அடிக்கடி மதமும் பிடிக்கும். ஒரு ஸமயத்தில் ஆனைப்பாகன் கண்ணாலே விழித்து மிரட்டினாலும், கோழைமனதாய் பயப்படும். நீ கடாக்ஷித்தாலும் நான் மனோதைர்யமில்லாமல் நல்லொழுக்கத்தில் உறுதியில்லாமல் வழுவுகிறேன். யானையை எத்தனை மிரட்டி அடக்கினாலும் ஓர் ஓர் ஸமயத்தில் அடங்காமல் கொழுப்பாகவேயிருக்கும். அதுபோல நீ அடக்கிவைத்திருந்தாலும் ஓர் ஓர் ஸமயத்தில் அடங்காமல் கொழுப்படைவேன். நன்றாய்க் குளிப்பாட்டி உடம்பை சுத்தம் செய்தாலும் திரும்பவும் ஆசையாய்ப் புழுதியை உடனே மேலே வாரியிறைத்துக்கொள்ளும். ஸ்ரீநிவாஸன் தயையாகிய கங்காநதியில் நான் ஸ்நானம் செய்தபிறகும், பாபருசியால் பாபச்சேற்றைப் பூசிக்கொள்ளப் பார்ப்பேன். யானையைப் பாகன் எத்தனை ஆதரவோடும் லாலனை செய்துவந்தாலும், நடுவே நடுவே திடீரென்று பயங்கரமாகி பயத்தை விளைவிக்கும். நான் இப்படிக்கொத்த யானை ஸ்வபாவமாயிருந்தாலும், திரும்பவும் விஷயக்காடுகளை நினைத்துக்கொண்டு ஓடப்பார்த்தாலும், துஷ்டத்தனம் செய்யப் பார்த்தாலும், எனக்கு மதம் பிடித்தாலும், உன் யானையானதால், நானுன்னை வேண்டாமென்று விலக்கினாலும், நீ எனக்குத் தெரியாமல் பின்னால் வந்து என்னை சங்கிலிகளால் கட்டி உன் வசமேயிருக்கச்செய்யவேணும். நல்லொழுக்கத்தில் நிறுத்தவேணும்.

'த்வத்வாரணம்' என்பதற்கு இரண்டுபொருள். 1. உன்யானையை 2. உன்னை வேண்டாமென்று தடுப்பவனை. 'அநுக்ரஹம்' என்பதற்கு அனுக்ரஹ கடாக்ஷமென்றும், பின்னால் வந்து க்ரஹிப்பது என்றுமிரண்டுபொருள். முன்னாலே சங்கிலியைக் கொண்டுவந்து பிடிக்கமுடியாது. மலையரசனுக்கு ஆனைக்காடுகளிலிருக்கும் ஆனைகளைப்பிடித்து அரண்மனையில் பழக்கி அடக்கிக் கட்டிவைத்திருப்பார்கள். மதம் பிடிக்கும்போது அதைச் சங்கிலிகளால் பிடித்து ஓடாமல் துஷ்டத்தனம் செய்யாமல் கட்டிவைக்கவேணும். முன் ச்லோகத்தில் ஸாஹஸத்தில்ருசியைத்தொலைக்கவேணும் என்றார். என் விஷயருசியைத் தொலைக்கக்கூடாமற் போனாலும், துஷ்டத்தனம் செய்யாமல் என்னைக் கெட்டிச்சங்கிலிகளால் கட்டிவைக்கவேணுமென்கிறார். முன் ச்லோகத்தில் விஷயம் விஷமெனப்பட்டது. இங்கே விஷயம் மதயானைமேயுங்காடென்றும், விஷயருசி மத்தகஜத்தின் மதமென்றும் கூறப்படுகிறது. (99)

நாத: பரம் கிமபி மே த்வயி நாதனீயம்
மாதர்தயே மயி குருஷ்வ ததா ப்ரஸாதம் ।
பத்தாதரோ வ்ருஷகிரி ப்ரணயீ யதாஸௌ
முக்தாநுபூதிமிஹ தாஸ்யதி மே முகுந்த: ॥

நாத: பரம் கிமபி மே த்வயி நாதனீயம்
மாதர்தயே மயி குருஷ்வ ததா ப்ரஸாதம் ।
பத்தாதரோ வ்ருஷகிரி ப்ரணயீ யதாஸௌ
முக்தாநுபூதிமிஹ தாஸ்யதி மே முகுந்த: ॥ (100)

(ப-ரை) மாதர்தயே - அம்மா தயையே! மே-எனக்கு, த்வயி - உன்னிடத்தில், அத: பரம் - இதற்குமேல் (நான் கேட்கப்போகிறதற்குமேல்) நாதனீயம் - ப்ரார்த்திக்கவேண்டியது, கிமபி ந - ஒன்றுமில்லை, வ்ருஷகிரிப்ரணயீ - வேங்கடமலை வாஸத்தில் ப்ரியமுடைய, அஸௌ முகுந்த: - மோக்ஷமளிக்கும் இந்த ஸ்ரீநிவாஸன், பத்தாதர: - என்னிடம் ப்ரீதி வைத்து, முக்தாநுபூதிம் - நித்யவிபூதியில் முக்தர்கள் அநுபவிக்கும் ஆநந்தாநுபவத்தை, இஹ - இங்கே, யதா தாஸ்யதி - எப்படிக் கொடுப்பாரோ, ததா - அப்படி, மயி - என்னிடம், ப்ரஸாதம் - தயவை, குருஷ்வ - நீ செய்யவேணும்.

"அம்மா தயையே, நான் இதோ ப்ரார்த்திக்கப் போவதற்குமேல் உன்னைக் கேட்கவேண்டிய தெனக்கொன்றுமில்லை. வேங்கடமலையில் மிக்க ஆதரவுடன் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீநிவாஸனென்னும் முகுந்தன் என்னிடத்தில் ப்ரீதி வைத்து இங்கேயே (திருமலையிலேயே) எனக்குத் திவ்யமான பரமபதத்தில் முக்தர்கள் அனுபவிக்குமாநந்தத்தை எப்படி அநுபவிக்கக்கொடுப்பரோ அப்படி நீ என்விஷயத்தில் அநுக்ரஹிக்கவேணும்".

(தா-ம்) இது நூறாவது சுலோகம். சதகம் முடிகிறது. நாடகங்கள் முடிவில் 'இன்னமென்ன ப்ரியம் உனக்குச் செய்யவேண்டுமென்று' அநுக்ரஹிக்கும் பெரியோரொருவர் கேட்பர். ஸ்ரீஸ்துதியில் 'கிந்தே பூய: ப்ரியமிதி கில ஸ்மேரவக்த்ரா விஹாஸி' 'இன்னமென்ன ப்ரியத்தை உனக்குச் செய்யவேண்டு' மென்றபேக்ஷிக்கிறாயென்று கேட்பதுபோல புன்னகையோடு ஸேவைஸாதிக்கிறாய்' என்று ஸாதித்தார். இங்கும் தயாதேவி பெரிய பிராட்டியாரேயாதலால் அப்படியே 'இன்னமென்ன வேண்டும்' என்று கேட்கிறதுபோல அபிப்பிராயத்தைக் காட்டி 'இதொன்றுதான் கேட்கிறேன், இதற்குமேல் ஒன்றும் வேண்டாமம்மா' என்கிறார். பெரியபெருமாளை அபீதிஸ்தவத்தில் 'உம் திருமேனியை ஸர்வகாலமும் ஸேவித்துக்கொண்டு, இந்தப் பூலோகவைகுண்டத்திலேயே முக்தர்கள் ஆநந்தத்தையும் அநுபவித்து வாழவேணும் என்று ப்ரார்த்திக்கிறேன். மற்றொன்றும் வேண்டேன்' என்றார். அங்கேயும் 'முகுந்த' என்று பெருமாளை அநுபவித்தார். அங்கே 'புவி முகுந்த' என்று சேர்த்துப் படித்ததால் பூலோகத்தில் பெரிய பெருமாள் 'அச்சுவை தரும் முகுந்தன்' என்று திருவுள்ளம். 'முகுந்தன்' என்பதற்கு 'மோக்ஷமளிப்பவன்' என்பது பொருள். மோக்ஷமென்பது எல்லையற்ற ஆநந்தம். பூமியில் அதை அளிக்கும் முகுந்தன் புவி முகுந்தன். இப்புவியிலேயே முக்தர் நிர்வ்ருதியடைவேனாக என்பதும் கருத்துத்தான். இரண்டிடத்திலும் ஒட்டிக்கொள்ளலாம். அதுபோல் இங்கும் 'ஐஹ ௭ ௬ ௬ ௫ :' என்று ஒட்டிக்கொள்ளலாம். 'அச்சுவை பெறினும் வேண்டேன்' என்றபடி அநுபவம். "யயா தம் வ ௬ ௬ ஷவ்ராவ்ரும்............தயா க ௬ ௬ உயாம ஊயி" "சோகத்தால் நொந்த என் அங்கங்களால் எப்படி என் நாயகனை ஆசை தீரத் தழுவுவேனோ, அப்படி நீயென் விஷயத்தில் தயை செய்யவேண்

டும்" என்று ஸீதை எத்தனை ஆவர்த்தியோடு ப்ரார்த்தித்தாளோ அப்படியே தமக்கு திருவேங்கடமுடையான் ஸம்ச்லேஷத்தில் ஆர்த்தி என்பதை 'யயா தயா வ்ருஷாத்ரிம் அயி ஜிக்ருக்ஷு:' என்பதால் ஸூசிக்கிறார். தாம் வாஸம் செய்யும் அசேதனமான கிரியினிடமே மிக்கப்பிரணயம்செய்பவர், நான் மனமார ஆசைப்பட்டால் என்னிடத்தில்ப்ரணயம்கொண்டு, நீங்காத ஆதாரமுடையவராயிராரோ என்பதை 'ஸ்வாதீந வ்ருஷகிரி ஹ்ருதயே' என்பதால் ஸூசிக்கிறார். 'அஸௌ'என்பதால் இந்த நூறு சுலோகங்களைக் கேட்டருளிய ஸ்ரீநிவாஸன் ஆநந்தபரவசராய் ஸேவைஸாதித்து எதிரே நிற்கிறாரென்றும் காட்சியின் ஸூசனம். 'அம்ருத இஹ பவதி' என்ற ச்ருதியை அநுஸரித்து 'அம்ருத இஹ பவாநி' 'இங்கே திருமலையிலேயே அம்ருதனாகக்கடவேன்' என்று பிரார்த்தனை. அவன் நம்மிடம் ஆதரபந்தம் செய்வதால், நம் பந்தம் எல்லாமுடனே தொலையும் என்றும் ஸூசனம். நூறு ச்லோகம் பாடி முடிகையில் 'மே' மே' என்று தம் விஷயத்தில் ஓர் பஹுமதி தம்மை அறியாமல் உண்டாகிறது. ஸ்தோத்ரபாரம் தாண்டியதனால் வந்த தைர்யஸந்தோஷங்கள். 'தயே' 'தயையே'என்று இங்கே முடிவில் கூப்பிடுகிறார்.

> நிஸ்ஸீமவைபவஜுஷாம் மிஷதாம் குணாநாம்
> ஸ்தோதுர்தயே வ்ருஷகிரீசகுணேச்வரீம் த்வாம் ।
> தைரேவ நூநம் அவசைரபிநந்திதம் மே
> ஸத்யாபிதம் தவ பலாதகுதோபயத்வம் ॥ ௧0௧ ॥

> நிஸ்ஸீமவைபவஜுஷாம் மிஷதாம் குணாநாம்
> ஸ்தோதுர்தயே வ்ருஷகிரீசகுணேச்வரீம் த்வாம் ।
> தைரேவ நூநம் அவசைரபிநந்திதம் மே
> ஸத்யாபிதம் தவ பலாதகுதோபயத்வம் ॥ (101)

(பதவுரை) தயே - தயையே! நிஸ்ஸீமவைபவஜுஷாம் - எல்லையற்ற வைபவத்தை (பராக்ரமத்தை) உடைய, குணாநாம் - (பெருமாளுடைய) மற்ற குணங்கள், மிஷதாம் - (கண்ணைக்கொட்டாமல்) விழித்துப் பார்த்துக்கொண்டிருக்கையில், வ்ருஷகிரீசகுணேச்வரீம் த்வாம் - வேங்கடேச்வரன் குணங்களுக்கு ஈச்வரியான உன்னை, ஸ்தோது: மே - ஸ்தோத்திரம்

செய்யும் என் விஷயத்தில், தைரேவ - அந்த குணங்களாலேயே, அவசை: - அவசமாக, (தம்மை அறியாமல்) அபிநந்திதம் - அபிநந்திக்கப்படுகை, (இதனால்) தவ பலாத் - உன் பலத்தை முன்னிட்டு, அகுதோபயத்வம் - ஒருவரிடத்திலும் பயமற்றிருப்பது என்னும் நிர்பயத்வம் (ஸித்திப்பது), நூநம் ஸத்யாபிதம் - நிச்சயமாய் ஸத்யமென்று ரூதலிக்கப்படுகிறது.

" அம்மா தயையே! எல்லையற்ற பராக்ரமத்தை உடைய மற்ற குணங்களெல்லாம் விழித்துப் பார்த்துக்கொண்டிருக்கையிலேயே, வேங்கடேச்வரனுடைய குணங்களுக்கு ஈச்வரியான உன்னைத் துதிசெய்யும் என்விஷயத்தில் அவசமாக அந்தக் குணங்களாலேயே ஸந்தோஷத்தையே காட்டுவதாயிருக்கிறது. இதனால் உன் பலத்தை முன்னிட்டு ஒருவரிடத்திலிருந்தும் அஞ்ச வேண்டாதபடி ஸர்வதோ நிர்ப்பயத்வம் ஸித்திப்பது நிச்சயமாய் உண்டாக்கப்படுகிறது".

(தா-ம்) சதகம் முடிந்தது. 100-ச்லோகமாயிற்று. பெருமாளுடைய சக்தி, தேஜஸ் முதலிய மற்ற குணங்களெல்லாம் இந்த ஸ்தோத்ரத்தைப் பக்கத்திலிருந்து விழித்துக்கொண்டே கேட்டுக்கொண்டிருக்கின்றன, ஒருச்லோகங்கூட இந்த சதகத்தில் அவைகளைத் துதிக்காமல் முழுவதும் உன் துதியாக முடிந்தது. ஸர்வசக்தித்வம், ஸர்வஜ்ஞத்வம், தேஜஸ், வீர்யம், பலம், ஐச்வர்யம் முதலிய குணங்களுக்கெல்லாம், தம்மைத் துதிக்காமலுன்னையே துதிப்பதால் கோபம்வரவில்லை. கோபமில்லாததுமட்டுமல்லாமல் முழுவதையும் எல்லா ப்ரகாரமாயும் பூர்ணமாக அபிநந்தனம் செய்கிறார்கள். ஆநந்தபரவசமாய் அபிநந்திக்கிறார்கள். சிர:கம்பம் செய்துகொண்டே யனுபவிக்கிறார்கள். அவர்களுடைய வைபவம் எல்லையற்றதாயிருந்தாலும், உன்னைத் துதித்ததால் அவர்களுக்கு ஈர்ஷ்யையேயில்லை. வ்ருஷகிரிக்கு ஈசனான பெருமாளுடைய குணங்களுக்கு நீ ஈச்வரியானதால், உன் ப்ரஜைகளான குணங்களுக்குத் தங்கள் அரசியைத் துதிக்கையில் ஈர்ஷ்யை முதலியதற்கு ப்ரஸக்தியேயில்லை. பெருமாளுடைய ஆநந்தம் முதலிய குணங்களை யறிந்து உபாஸித்தால், 'எக்காலும் அஞ்சுகிறதில்லை, ஒன்றுக்கும் பயப்படுவதில்லை' என்று உபநிஷத்துப் பேசுகிறது. 'ஒருகாலும், ஒருவரிடமிருந்தும், ஓரிடத்திலும்

அவனுக்குப் பயமேற்படாது' என்று அபீதிஸ்தவத்தில் சொன்னேனம்மா. அந்த அபீதி பெருமாளுடைய தயையாகியஉன்னாலே தானே உண்மையாகுமம்மா. உன் பலமில்லாமற்போனால் பயத்திற்கு எல்லையிருக்குமோ, ஒழிவிருக்குமோ. அபராதிசக்ரவர்த்தியான எங்களுக்குக் குற்றங்களைப் பொறுப்புவிக்கும் உன் பலத்தால்தானே அச்சம் நீங்கி ஸுகமாயிருக்கலாம். பெருமாளிடமிருந்து உலகத்திற்குப் பயம். 'பீஷா அஸ்மாத்'. பயத்திற்கு ஹேதுவான ம்ருத்யு, வாயு, ஸூர்யன், அக்னி இந்திரன் முதலிய யாவரும் பெருமாளிடம் பயந்து நடப்பவர்கள்.பெருமாள் திருவுள்ளத்திற்கு விதேயராய் நடப்பவர். பெருமாள் மனதிற்குள் புகுந்திருக்கும் உன் பலமிருக்கையில் பயத்திற்குக் காரணமில்லை. பெருமாளுடைய மற்ற குணங்களிடத்திலிருந்தும் பயமில்லை; ஏனெனில் நீ அந்தக் குணங்களுக்கு ஈச்வரீ. அவர்கள் உனக்கு வச்யமாயிருப்பவர். உன்னைப்பற்றிப் பாடிய துதியில் அவர்கள் மகிழ்ந்து பரவசராகி என்னிடத்தில் மிக ஸந்தோஷப்படுகிறார்கள். இனி எனக்கு என்ன பயம்? (101)

𑌅𑌦𑍍𑌯𑌾𑌪𑌿 𑌤𑌦𑍍𑌵𑍃𑌷𑌗𑌿𑌰𑍀𑌶𑌦𑌯𑍇 𑌭𑌵𑌤𑍍𑌯𑌾-
𑌮𑌾𑌰𑌮𑍍𑌭𑌮𑌾𑌤𑍍𑌰𑌮𑌨𑌿𑌦𑌂 𑌪𑍍𑌰𑌥𑌮𑌸𑍍𑌤𑍁𑌤𑍀𑌨𑌾𑌮𑍍 ।
𑌸𑌂𑌦𑌰𑍍𑌶𑌿𑌤𑌸𑍍𑌵𑌪𑌰𑌨𑌿𑌰𑍍𑌵𑌹𑌣𑌾 𑌸𑌹𑍇𑌤𑌾
𑌮𑌨𑍍𑌦𑌸𑍍𑌯 𑌸𑌾𑌹𑌸𑌮𑌿𑌦𑌂 𑌤𑍍𑌵𑌯𑌿 𑌵𑌨𑍍𑌦𑌿𑌨𑍋 𑌮𑍇 ॥ ॥௧௦௨॥

அத்யாபி தத் வ்ருஷகிரீச தயே பவத்யாம்
ஆரம்பமாத்ரமநிதம் ப்ரதமஸ்துதீநாம் ।
ஸந்தர்சிதஸ்வபரநிர்வஹணா ஸஹேதா
மந்தஸ்ய ஸாஹஸமிதம் த்வயி வந்திநோ மே ॥ (102)

(ப-ரை) 𑌵𑍃𑌷𑌗𑌿𑌰𑍀𑌶𑌦𑌯𑍇 - வேங்கடமலைப்ப்ரபுவின் தயையே, 𑌭𑌵𑌤𑍍𑌯𑌾𑌂 - உன் விஷயத்தில், 𑌅𑌨𑌿𑌦𑌂 𑌪𑍍𑌰𑌥𑌮𑌸𑍍𑌤𑍁𑌤𑍀𑌨𑌾𑌂 - தமக்கு முந்தியதென்பதில்லாத, அநாதித் துதிகளான வேதங்களென்னும் துதிகளுக்கும், 𑌅𑌦𑍍𑌯𑌾𑌪𑌿-இன்றைக்கும், 𑌆𑌰𑌂𑌭𑌮𑌾𑌤𑍍𑌰𑌂 𑌤𑌤𑍍 - துதிக்க ஆரம்பித்ததோடு மட்டும் நிற்கவேண்டியதான இருப்பே(அமைந்தது) (அப்படிக்கொத்த வர்ணனைக்கெட்டாத மஹிமையையுடைய), 𑌤𑍍𑌵𑌯𑌿 - உன் விஷயத்தில், 𑌮𑌨𑍍𑌦𑌸𑍍𑌯 - மந்தபுத்தியான, 𑌵𑌨𑍍𑌦𑌿𑌨𑍋 𑌮𑍇 - (உன்)

ஸ்தோத்திரம் பாடும் வைதாளிகனான என்னுடைய, தஸ ஈஷம் ஸாஹஸம் - அப்படிக்கொத்த (பொறுக்கத்தகாத) இந்த ஸாஹஸகார்யத்தை, ஸம்ஜமிஹதஸ்வபர நிவஹஹணா-பிறரைக் குற்றம் பொறுக்கச் செய்விப்பவளும், தன்னையும் குற்றம் பொறுக்கச் செய்விப்பவளுமாக உன்னுடைய இரண்டு விதஸாமர்த்யத்தைக் காட்டிக்கொண்டு, ஸஹேயா:- பொறுப்பாயாக.

"திருவேங்கடமுடையான் தயையே! இன்று ஏற்பட்டது என்பதில்லாமல் அநாதிஸ்தோத்ரங்களான வேதங்களும் ஆரம்பத்தோடு நின்று இன்றைக்கும் ஒரு அடிகூட நகரமாட்டாமல் தொடங்கினதோடு நிற்பதாயிருக்கிறது. அப்படிக்கொத்த உன் விஷயத்தில் புத்திக்குறைவான நான் இப்படித்துதித்த ஸாஹஸத்தை நீயே பொறுத்தருளவேண்டும். பிறர் விஷயத்தில் செய்யப்படும் குற்றங்களை நீ தயையாக அவர்கள் மனதில் புகுந்து பொறுப்பிப்பதுபோல், நீயே உன்விஷயத்தில் உன் துதிபாடகனை நான் செய்த இப்பெருங்குற்றத்தை உன்னையேபொறுக்கும்படி செய்து கொள்ளவேண்டும். பிறரைப் பொறுக்கச் செய்வதற்கு நீ உதவுவதுபோல, உன்னைப் பொறுக்கச் செய்யவும் நீயே உதவுவாயாக.

(தா-ம்) காளிதாஸர் 'ரகுவம்சத்தின் ஆரம்பத்தில் தம்மை மந்தன்' என்று பேசினார். இங்கே ஸ்வாமி அப்படியே தம்மை 'மந்தன்' என்கிறார். எல்லாக்கொடிய குற்றங்களையும் தயை பொறுத்து விடுவாளென்றேன். தயையைத்துதிக்க ஆரம்பித்து நூறுபாட்டுக்கள் நீளமாக மிகத்துணிச்சலாய் பாடித்துதிசெய்து விட்டேனே. வேதங்கள் அநாதியான பகவத்குண ஸ்தோத்ரங்கள். அவைகளுக்கு முந்திய ஸ்தோத்ரங்கள் கிடையாது. வேதங்களோ ஸர்வ விஷயங்களையுமறிந்து நமக்கு அறிவிக்கச் சக்தியுடையன. அவைகள் ஆநந்தம் முதலிய பகவத்குணங்களைத் துதிக்க ஆரம்பித்து "வாக்குகளும் மனமும் எட்ட யோக்யதையில்லாமல் ஆரம்பித்ததோடு நின்றுவிட்டுத் திரும்பிவிடுகின்றன" என்று கைவாங்கி ஊமையாயின. அப்படிக்கொத்த பகவத்குணங்களில் சிறந்தவளான உன்னை அல்பபுத்தியான நான் துதிக்க ஆரம்பித்ததே ஸாஹஸம். ஆரம்பித்தாலும் வேதங்களும் ஆரம்பத்தோடு கைவாங்கின விஷயமே என்பதை நினைத்து அச்சப்

பட்டும் நிறுத்திவிடாமல், நூறு பாசுரங்கள் நீளமாகப் பிதற்றி விட்டேனே. இதனிலும் கொடிய ஸாஹஸம், பெரிய அபராதம் உண்டோ ? நான் எத்தனையோ தீவினைகளை முன்பு செய்தேன் என்று முன்பு சொன்னேன், அதையெல்லாம் பொறுக்கவேண்டும் என்று உன்னைப் பிரார்த்தித்தேன். நீயும் பொறுத்துவிட்டாய். பெருமாள் விஷயத்திலும் அடியார் விஷயத்திலும் செய்த அஸஹ்யாபசாரங்களை எல்லாம் நீ பொறுப்பிக்கச் செய்யவேண்டும் என்று உன்னைப் பிரார்த்தித்தேன். அதையெல்லாம் நீ அவர்கள் உள்ளத்தில் புகுந்து பொறுப்பித்தாய். உன் விஷயமாக நான் செய்த இக்கொடிய ஸாஹஸத்தைப் பொறுப்பிக்க நான் யாரைக் கூப்பிடுகிறது. தயையான நீ பிறர்மனதில் புகுந்து குற்றங்களைப் பொறுக்கச்செய்வாய். உன் விஷயத்திலேயே கொடிய குற்றத்தைச் செய்தால், அதில் வேறு யார் வந்து உனக்கு சிபார்சு செய்யக்கூடும். அம்மா உன் விஷயமான குற்றத்தைப் பொறுக்க உன்னைத்தானே பிரார்த்திக்கக்கூடும். தயைக்கு சிபார்சு செய்ய இன்னொரு தயாதேவியில்லையே. உனக்கு நீயே தான் சிபார்சு செய்து உன்னைப் பொறுக்கச் செய்யவேணும். 'ஸ்வபரநிர்வஹணம்'. இரண்டுபொருள்களை 'ஸம்பந்தம்' என்னும் தர்மம் சேர்த்துவைக்கும். அந்தப் பொருள்களோடு 'ஸம்பந்தம்' என்னும் தர்மத்தைச் சேர்த்துவைக்க வேறொரு 'ஸம்பந்தம்' என்னும் தர்மத்தைத் தேடமாட்டார். புறப்பொருள்களைக் கூட்டிவைக்கும் சக்தியுடைய 'ஸம்பந்தம்' தன்னையும் தானே கூட்டிவைத்துக்கொள்ளும், இந்த சக்தியை 'ஸ்வபரநிர்வஹணம்' என்பர். தயை தனக்கு இந்த சக்தியுண்டென்று காட்டவேண்டுமென்கிறார். 'நிர்வஹணம்' என்பது 'பலஸித்தியான நிறைவேறுதலை'ச் சொல்லும். ஸ்தோத்ரம் நிர்வஹணமாயிற்று. ' வந்தி ' என்று அரண்மனைகளில் துதிபாடுகிறவருக்குப் பெயர். நான் உங்கள்அரண்மனையில் உங்கள் பெருமையைக் கானம் செய்யும் தொழிலில் நீடித்த சேவகமுடையவன். திருவேங்கடமுடையான் ஆராதனகாலங்களில் நாதனம் செய்யும் 'கண்டாமணி' யென்று என்னைப் பெரியோர் நினைக்கிறார்கள். நான் உன்னுடைய ' வந்தி ' 'பாடகன்'. ஓர் ராஜகுலத்தில் சேவகம் அமர்ந்த பாடகன். நன்றாய்ப்பாடாவிட்டாலும் ராஜா பொறுப்பது உசிதம். உன் சேவகர் பாட்டை நீ கோபிக்கலாகாது. (102)

ப்ராயோ தயே த்வதநுபாவமஹாம்புராசௌ
ப்ராசேதஸப்ரப்ருதயோऽபி பரம் தடஸ்தா: ।
தத்ராவதீர்ணமதலஸ்ப்ருசமாப்லுதம் மாம்
பத்மாபதே: ப்ரஹஸநோசிதமாத்ரியேதா: ॥ ௧0௩

ப்ராயோ தயே த்வதநுபாவமஹாம்புராசௌ
ப்ராசேதஸ ப்ரப்ருதயோZபி பரம் தடஸ்தா: ।
தத்ராவதீர்ணமதலஸ்ப்ருசமாப்லுதம் மாம்
பத்மாபதே: ப்ரஹஸநோசிதமாத்ரியேதா: ॥ (103)

(பதவுரை) தயே - அம்மா தயையே! த்வதநுபாவமஹாம்புராசௌ-உன் மஹிமையென்னும் மஹாஸமுத்திரத்தில் (அதின் விஷயத்தில்), ப்ராசேதஸப்ரப்ருதயோZபி - வால்மீகிமஹர்ஷி முதலியவர்களும், பரம் - கேவலம் (அடியோடு), தடஸ்தா: - உள்ளே இறங்காமல் கரையில் நிற்பவரே, ப்ராய: - என்று சொல்லவேணும், தத்ர - அதில் (அந்த ஸமுத்ரத்தில்), அவதீர்ணம் - இறங்கி, அதலஸ்ப்ருசம்-அடித்தரை அகப்படாமல், ஆப்லுதம் - மேலே மிதக்கும் (அல்லது முழுகினதும் மேலே தள்ளப்பட்ட, அல்லது முழுகின), பத்மாபதே: - லக்ஷ்மீபதிக்கு, ப்ரஹஸநோசிதம்- சிரிப்புக்கு இடமான, மாம் - என்னை, ஆத்ரியேதா: - நீ ஆதரிக்கவேணும் (அநாதரவு செய்யக்கூடாது).

"அம்மா தயையே! உன்னுடைய மஹிமையாகிற பெருங்கடலில் வால்மீகி முதலிய பெரியோரும் இறங்கத் துணியாமல் கேவலம் கரையிலேயே நிற்பவரென்று சொல்லவேணும். அப்படிக்கிருக்க, அந்த மஹாஸமுத்ரத்தில் இறங்கி, தரையை எட்ட முடியாமல் இறங்கின க்ஷணமே முழுகி உடனே வெளிக்கிளம்பி மேலே மிதக்குமென்னைப் பார்த்து பிராட்டியோடுகூடிய ஸ்ரீநிவாஸன் சிரிக்கத் தக்கதாயிருக்கிறது. அவர்கள் சிரிப்புக்குப் பாத்திரமான என்னை நீ ஆதரிக்கவேணும்."

(தா-ம்) பெருமாள் தயாஸமுத்ரம். தயை ஓரெல்லையில்லாத ஸமுத்ரம். தயையின் மஹிமை ஓர் மஹாஸமுத்ரம். வால்மீகி முதலிய ப்ரக்ருஷ்டமான புத்தியையுடைய பெரியோரும் அந்த ஸமுத்ரத்தில் இறங்கப் பயந்து, இதினுழத்தை நம்மால்

காணமுடியாதென்று அறிந்து, இறங்காமல் கரையிலேயே நிற்பவ ராயிருக்கிறரென்று சொல்லவேண்டியிருக்கிறது. 'காகாஸுரனைக் கிருபையால் காப்பாற்றினர்' என்று உன்பேரைச் சொல்லுகிறர். அதோடு நின்றுவிடுகிறர். உன் மஹிமை வாக்குக்கு எட்டா தென்று அதன் வர்ணனத்திலிறங்க பயந்தவர்போலிருக்கிறர். இளங்கன்று பயமறியாது. பாலனுகிய நான் உன் மஹிமை ஸமுத்ரத்தின் ஆழத்தைக் கண்டுபிடித்துத் தரைவரையிலும் போய் மேலே வரலாமென்று ஸாஹஸிகமாக ' அபிஷ்டௌமி ' என்று இறங்கினேன். ஆழம் கண்டுபிடிக்கலாமென்று முழுகிறதும் தரை வரையிலும் போவதற்கு அடியோடு இல்லாமல், துளி முழுகினதும் மேலே அலைகளால் தள்ளப்பட்டு மிதப்பதுமாயிருந்தேன். இப்படி அறியாத்தனத்தால் திண்டாடிக்கொண்டிருக்கும் என்னைப் பார்த்து திவ்யதம்பதிகள் பரிஹஸித்துச்சிரிக்க இடமேற்பட்டது; அவர்கள் பரிஹாஸமாய்ச் சிரித்தாலும் நீ என்னைக் கைவிடாமல் ஆதரிக்கவேணும். காக்கை முழுக்கைப்போல் முழுகி முழுகி உடனே எழுந்து மிதக்கும்படியிருந்தது. கொஞ்சமேனும் அடியிற்போக இயலவில்லை. 9-வது ச்லோகத்தில் முதல்முதலில் பெருமாளை வர்ணிக்கையில் வேங்கடத்தில் தடஸ்தராயிருப்பவருக்குப்பெருமாள்ஸ்வயம்வ்யக்தமாக ஸேவைஸாதிக்கிறரென்றர். 'விக்ஞாதம் அவிஜாநதாம்' என்றபடி 'அறியோம்' என்று நினைப்பவரால் 'அறியப்பட்டது' ஆகும். 'நம்மால் அறிய இயலாது' என்று ஆகிஞ்சன்யமுடையார்க்கு 'தம் ஸ்வரூபத்தைத் தாமே காட்டும்'. பயந்து தடஸ்தராயிருப்பவர் அறிவார். ஸாஹஸமாய் துணிந்து இறங்குகிறவர் அறியமாட்டார். முதலில் 'தடஸ்தர் ஸேவை காண்பர்' என்றபடி இங்கும் முடிவில் "ப்ராசேதஸர் முதலிய பயந்த தடஸ்தர் நன்றய்க் காணப்பெறுவார், பஹுமானம் பெறுவர், நான் பரிஹாஸத்தைப் பெறுகிறேன்" என்கிறர்.

വേദാന്തദേശികപദേ വിനിവേശ്യ ബാലം
ദേവോ ദയാശതകമേതദവാദയന്മാം ।
വൈഹാരികേണ വിധിനാ സമയേ ഗൃഹീതം
വീണാവിശേഷമിവ വേങ്കടശൈലനാഥഃ ॥ ൧൦൪ ॥

வேதாந்ததேசிகபதே விநிவேச்ய பாலம்
தேவோ தயாசதகமேததவாதயந் மாம் ।
வைஹாரிகேண விதிநா ஸமயே க்ருஹீதம்
வீணாவிசேஷமிவ வேங்கடசைலநாத: ॥ (104)

(ப-ரை) வெங்கடெசை நாயக: - வேங்கடமலை அதிபதியாகிய, ஜெவ: - விளையாடும் ஸ்வபாவத்தை உடைய தேவன், பாலம் - சிறுவனாகிய என்னை, வேதாந்ததேசிகபதே - வேதாந்தாசார்யனென்னும் ஓர் பீடத்தில், விநிவேஸ்ய - ஏற்றிவிட்டு, வைஹாரிகேண - விளையாட்டான, விதிநா - ஓர் முறையாலே, ஸமயே - ஓர் ஸந்தர்ப்பத்தில், க்ருஹீதம் - கையிலெடுத்துக்கொள்ளப்பட்ட, வீணாவிஸேஷமிவ - ஒருவிதமானவீணையைப்போல, ஏதத் - இந்த, தயாஸதகம் — 'தயா நூறு' என்னும் ஸ்தோத்திரத்தை, மாம் - என்னை, அவாதயத் - பாடச்செய்தார். (படிக்கச்செய்தார்).

"விளையாடும் ஸ்வபாவமுடைய வேங்கடமலையதிபதி தேவன் பாலனாகிய என்னை, (அறியாத பிள்ளையாகிய தூப்புல் பிள்ளையை) வேதாந்தாசார்யனென்னும் ஆசிரியபீடத்தில் ஏற்றிவைத்து, விநோதமுறையில் வீணைக்கட்டையை ஓர் ஸமயத்தில் கையில் எடுத்துக்கொள்ளுவதைப்போல் என்னை (என் முகத்தை) ஓர் உபகரணமாக வாத்யம்போல் வைத்துக்கொண்டு இந்த தயா நூறையும் வாசிக்கும்படி செய்வித்தார்".

(தா-ம்) உன்னைத் துதிக்கும் ஸாஹஸத்தில் நான் ஆழந்தெரியாமலிறங்கி சிரிப்புக்கு இடமானேன் என்றேன். தப்பச்சொன்னேன். இத்துதி பாடினது நானன்று. ஓரசேதநமான வாத்யத்தைக்கொண்டு தம்மிஷ்டமான பத்யங்களை நன்றாகப் பேசும்படி (பாடும்படி) செய்வதுபோல், திருவேங்கடமுடையானென்னை வீணைக்கட்டையைப்போல ஓர் வாத்யமாகக்கொண்டு தம்முடைய ஸ்வந்த ஸாஹித்தியமான இந்நூறு பத்யங்களையும் பாடிவைத்தார். இந்நூறு ச்லோகங்களும் வீணையில் பாடவேண்டிய பத்யங்கள். 107-ம் ச்லோகத்தில் இவையெல்லாம் 'பத்யங்கள்' என்று ஸாதிக்கிறார், 'ம்ருதங்கம்' என்பது ஓர் சிறு தவுலுக்குப்பெயர். அது 'மண்ணுடம்பு', அதுபோல் என் மண்ணுடம்பும் ,ஓர் வாத்யவிசேஷமாயிற்று'. வீணை ம்ருதங்கம் முதலிய வாத்யங்கள் அழகாய் வாசித்தால், அவையெல்லாம் வாசிப்பவன் பெருமை. வாதகன் பெருமை. அசேதனமான வாத்யத்தின் பெருமையன்று, அப்பெருமையில் வாத்யத்திற்குப் பாகமேயில்லை. ஆனால் வாத்யம் அழகாக வாசிப்பதாகப்பேச்சுமட்டும் உண்டு. நான் அசேதந

துல்யன். நான் ப்ரயோஜ்யகர்த்தா; ஹேதுகர்த்தாவல்ல. 'தம்மைத்தாமே கவிபாடினது' என்று சொல்லக்கூடிய ஆத்மஸ்துதிப் பேச்சிற்குக்கூட இங்கே இடமில்லை. உன்னையல்லவோ பாடினர்' இது ஸ்ரீநிவாஸசதகமல்ல, தயாசதகம். ஆகையால் ஸங்கோசமில்லாமலே மனப்போக்குக்குப் பூர்ண அவகாசம் கொடுத்து நிரங்குசமாய்ப் பாடினர். 'புராணகவி' என்று வேதாந்தம் கொண்டாடும் 'ப்ரதமகவி', ப்ரஹ்மாவுக்கும் வேதாந்தோபதேசஞ்செய்த ஆதிகுரு, அவரே முதல் வேதாசார்யன், முதல் வேதாந்தாசார்யன். ஆதிகவி வால்மீகிக்கும் முன் கவி. கீதை பாடிய கவி. வேதாந்தம் செய்தவனும் வேதமறிந்தவனும் நானே' என்றங்கே பாடியவர். அந்த ஆதிவேதாந்ததேசிகர் தூப்புல் பிள்ளையென்னும் ஓர் பிள்ளையைத் தூக்கித் தாமும் யதிபதி யாமுனர் முதலிய பெரியோரும் அலங்கரித்த ஆசிரியபீடத்தில் உட்காத்திவைத்து விட்டார். மூன்றுவது பாதத்திலுள்ளது முழுவதையும் 'என்னை க்ரஹித்துப் பலவந்தமாகத் தூக்கி தம்முடைய ஓர்விசித்ரவினோத வ்யாபாரமுறையாக ஓர் பெரிய பீடத்தில் அமர்த்திவைத்துவிட்டு' என்று 'பாலனாகிய என்னை' என்பதோடும் சேர்த்து அந்வயித்துக்கொள்ளலாம். 'பாலம்' என்பதால் 'என் ஆசார்யப்ராசார்யர்கள் [illegible] என்று என்னை '[illegible] என்று வேதமோதிய ஆசார்ய பரம்பராபீடத்தில் வீற்றிருப்பானாக' என்று என் குழந்தைப் பருவத்தில் என்னை அநுக்ரஹித்தபொழுதே அவர்களநுக்ரஹத்தை ஸத்யமாக்க, உடனே தத்க்ஷணமே (நான் பாலனாயிருக்கையிலேயே) என்னை இப்பதத்தில் பிடித்து வைத்துவிட்டார் என்பது ஸூசிக்கப்படுகிறது. ருஷிகள் வாக்கு அவர்கள் திருவாக்கிலிருந்து வெளிவரும் க்ஷணத்திலேயே அதன் பொருளும் ஓடிவந்து அதோடுகூடி அந்த ஆசீர்வாதத்தை ஸத்யமாக்குமென்றார் பவபூதிகவி. தாமொரு விளையாட்டாக அகிஞ்சனனை என்னை ஆசிரியபீடத்தில் உட்கார்த்திவைத்துவிட்டபடியால், அதை உண்மையாக்கவேண்டிய சுமை அவர் தலையிலேறிவிட்டது. என்னை 'வேதாந்தாசார்யபட்டத்தில்' ஏற்றிவைத்து விட்டதை உண்மையாக்க என்ன செய்யலாம் என்று நன்கு ஆலோசித்து, உன்னைப்பற்றி இந்நூறு பத்யங்களையும் என்முகமாகத் தாமே பாடி, " அப்பா அர்ஜுனா எழுந்திராய், வில்லைக் கையிலெடு, அக்ஷௌஹிணீஸைந்யங்களையும் அநேக மஹாரதர்க

ளையும் நீயே ஜயித்தாயென்ற யசஸை நீயே அடை, நீ செய்ய வேண்டும் ஜயத்தை நான் முன்பே செய்துவிட்டேன், நீ நிமித்த மாத்திரமாகக் கடவாய்" என்று விச்வரூபத்தோடு பேசியபடி நான் ஓர் நிமித்தமாத்திரமாக இருந்தும், இவ்வரும் பெரும் சதகத்தின் கர்த்தாவென்ற யசஸை எனக்கு அளித்து, அப்பட்டத்திற்கு அர்ஹனென்றென்னை உலகம் மெச்சச் செய்கிறார். நிமித்த மாத்ரமான எனக்கு (மந்தனுக்கு) கவியசோலாபத்தை யளிக்கிறார். இந்த சதகம் ஆதிவேதாந்ததேசிகரொருவருக்குத்தான் சக்யம். அவரால் விளையாட்டுக்காக அப்பீடத்தில் எம்மாசார்ய ப்ராசார்யாசிர்வாதத்தை ஸத்யமாகச் செய்ய உட்கார்த்திவைக்கப்பட்ட பிள்ளை செய்ததென்று நினையாதே. மஹிஷியான உன்னைத் தாம் நேரில் பாட வெட்கப்பட்டு, என்னை வ்யாஜமாகக் கொண்டு, என் முகமாய்ப் பாடினார், மலையாசர்வீணை முதலிய வாத்யவாதனத்தில் ரஸிகர்; ஸங்கீதத்தில் நிபுணர். பனிமலைத் தேவர் கானரஸிகராய் கின்னரஸ்திரீகள் உச்சகானத்திற்கொத்து மூங்கில் குழல் வாத்யம் வாசிப்பதாகக் காளிதாஸர் வர்ணித்தார். 'ஸமயே' என்பதற்கு 'ஒன்றுமறியாத பாலனை நூறுபாட்டுக்கள் பாடச் செய்கிறேன்' என்று விளையாட்டுப் பந்தயம் போட்டுக் கொண்டு பாடிவைத்தார் என்றும் பொருள் கொள்ளலாம். (104)

𑌅𑌨𑌵𑌧𑌿𑌮𑌧𑌿𑌕𑍃𑌤𑍍𑌯 𑌶𑍍𑌰𑍀𑌨𑌿𑌵𑌾𑌸𑌾𑌨𑍁𑌕𑌮𑍍𑌪𑌾𑌮𑍍
𑌅𑌵𑌿𑌤𑌥𑌵𑌿𑌷𑌯𑌤𑍍𑌵𑌾𑌦𑍍𑌵𑌿𑌶𑍍𑌵𑌮𑌵𑍍𑌰𑍀𑌡𑌯𑌨𑍍𑌤𑍀 ।
𑌵𑌿𑌵𑌿𑌧𑌕𑍁𑌶𑌲𑌨𑍀𑌵𑍀 𑌵𑍇𑌙𑍍𑌕𑌟𑍇𑌶𑌪𑍍𑌰𑌸𑍂𑌤𑌾
𑌸𑍍𑌤𑍁𑌤𑌿𑌰𑌿𑌯𑌮𑌨𑌵𑌦𑍍𑌯𑌾 𑌶𑍋𑌭𑌤𑍇 𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌭𑌾𑌜𑌾𑌮𑍍 ॥௧௦௫॥

அநவதிமதிக்ருத்ய ஸ்ரீநிவாஸாநுகம்பாம்
அவிததவிஷயத்வாத் விச்வமவ்ரீடயந்தீ ।
ஸகலகுசலநீவீ வேங்கடேச ப்ரஸூதா
ஸ்துதிரியமநவத்யா சோபதே ஸத்த்வபாஜாம் ॥ (105)

(ப-ரை) அநவதிம் - எல்லையற்ற, ஸ்ரீநிவாஸாநுகம்பாம்- ஸ்ரீநிவாஸன் தயையை, அதிக்ருத்ய - விஷயமாகக்கொண்டு (குறித்து), வேங்கடேசப்ரஸூதா - (வேங்கடேசனிடம் பிறந்ததும், வேங்கடேசன் பெற்றதும்), அவிததவிஷயத்வாத்- சொன்ன விஷயங்கள் பொய்யல்லாமல் ஸத்யமானதால், விச்வம் -

எல்லோர்க்கும் (ஒருவருக்கும்), கஸ்யை ஹ்ரியை - வெட்கமுண்டாக் காததும், விவிதகுசலநீவீ - ஸகலவிதமான க்ஷேமங்களுக கும் மூலதனநிதியாயும், அநவத்யம் - தோஷமற்றதுமான, இயம் - இந்த, ஸ்துதி: - துதி, ஸத்த்வபாஜாம் - ஸத்துவகுண முடைய ஞானவான்களுக்கு, ஶோபதே - நன்றென விளங் கும் (சோபிக்கும்).

“ அளவிலடங்காத ஸ்ரீநிவாஸதயையைக் குறித்து வேங்க டேசன் பெற்றதும், துதிசெய்த பேச்சுக்கள் பொய்யல்லாததால் ஒருவரையும் வெட்கப்படச்செய்யாததும், ஸகல க்ஷேமங்களையு மளிக்கும் நிதியாயும், நிர்தோஷமாயுமுள்ள இந்தத் துதி ஸாத் விகர்களுக்கு அழகென சோபிக்கும். ”

(தா-ம்) ஸாஹஸத்தில் தானிறங்கிப் பாடிய ஸ்துதியென் ருர் 102-ல். ஸ்ரீநிவாஸன் பாடின கவியென்ருர் முன்சுலோகத் தில். வேதாந்தாசார்யரும் கவிதார்க்கிகஸிம்ஹருமாயிருப்பவர் இப்படி முன்பின் விரோதம் பேசலாமோ? இரண்டிலொரு விஷ யம் பொய்யாகாதோ? ஆகாது. இருவரும் உண்மையில் கர்த் தாக்களே. தேவன் ப்ரயோஜககர்த்தா, ஹேதுகர்த்தா; நான் ப்ரயோஜ்யகர்த்தா நிமித்தமாத்ரம்; அவர்தான் முக்ய கர்த்தா. இப்படி இரண்டு கர்த்தாக்களும் சேர்ந்து செய்வதுதானே வேதாந்தங்களின் தீர்மானம். இப்படி இரண்டு பேச்சும் பேசா விடில், வேதாந்தாசார்யனென்பது அடியோடு பொய்யாகுமே. ‘ஏஷ ஹ்யேவ ஸாது கர்ம காரயதி’ ‘இத்தேவனே நற்கர் மத்தைச் செய்விக்கிருன்’ என்கிற ச்ருதிக்கு விஷயமான ஓர் விசேஷ அதிகாரியாகவும் கொள்ளலாம். எல்லோர்க்கும் பொது வான பராயத்தகர்த்ருத்வத்தைக்கொண்டும் பேசலாம். எல்லாக் கர்த்ருத்வத்தையும் தேவனிடம் த்யாகம் செய்யுமநுஸந்தானத் தைக்கொண்டும் பேசலாம். இருவரும் கர்த்தாக்களென்பது பொய்யாகாது. இந்தத்துதியின் ஆசிரியர் ‘வேங்கடேசர்’ என்று இருவர்க்கும் பொதுப்பெயரை அழகாகக் குறிக்கிருர். பெருமா ளும் வேங்கடேசர், இவரும் வேங்கடேசர், வேங்கடேசநாமமும் அவரதே. அவர் தாஸரான எனக்கு அவர் பெயர் இரவல்தான். துதியும் பெயரிரவல் வ்யாபாரமென்று வேடிக்கையாக ஸூசனம். அவர் பெயர் எனக்கு இரவல்போல், அவர் காவ்யத்தின் பெயரும்

(யசஸும்) எனக்கு இரவல். 'வேங்கடேசன் பெற்றது'. ப்ரஸூதா என்பதற்குப் 'பெற்றது' என்று பொருள். ஒன்றுமகமாய் வேங்கடேசரால் வெளிப்படுத்தியது. அவசமாக வெளிப்பட்டது. வெறும் குழந்தைக்கு தாயை 'கர்த்ரீ-உண்டுபண்ணுபவள்' என்று சொல்வரோ; வேங்கடேசப் பெருமாள்தானே அக்குழந்தைக்கு கர்த்தா. உச்சாரணம் பண்ணின ச்ரமம்தானே எனக்கு. 'துதி' என்பதற்கு 'நன்றாய் உண்மையாயுள்ள குணங்களை உள்ளபடி வர்ணிப்பது' இலக்கணமென்று ஆழ்வான் ஸாதித்தார். 'குணியினிடமுள்ள குணத்தைப் பேசுவது' துதியென்பர். பொய்யாகத் துதித்தால், துதிக்கப்படுபவருக்கும் வெட்கமுண்டாகும், துதிசெய்பவருக்கும் வெட்கமுண்டாகும், கேட்பவருக்கும் வெட்கமுண்டாகும். இப்படி எல்லோரையும் பொய் ஸ்தோத்திரம் வெட்கப்படச்செய்யும். 'விச்வம்' என்பதற்கு 'எல்லோரையும்' என்று பொருள். இத்துதிவிஷயங்களுண்மையானதால் ஒருவரையும் வெட்கப்படுத்தவிடமில்லை. வேங்கடேசன் பெற்ற கன்யையான இந்த ஸ்துதியால் பெற்றோர் குலத்திற்கும் கீர்த்தியே பெருகும். இக்கன்யையையிட்டு ஒருவருக்கும் எக்காலத்திலும் வெட்கப்பட நேராது. பெற்ற பெண்ணிடத்தில்போல், தாம் பெற்ற இந்த ஸ்துதியில் தமக்கு அபிமானமென்பதையும், 'பெற்ற' என்பதால் ஸூசிக்கிறார். (104)

சதகமிதமுதாரம் ஸம்யகப்யஸ்யமாநாந்
வ்ருஷகிரிமதிருஹ்ய வ்யக்தமாலோகயந்தீ ।
அநிதரசரணாநாமாதிராஜ்யேऽபிஷிஞ்சேத்
சமிதவிமதபக்ஷா சார்ங்கதந்வாநுகம்பா ॥ ॥ ௧௦௫ ॥

சதகமிதமுதாரம் ஸம்யகப்யஸ்யமாநாந்
வ்ருஷகிரிமதிருஹ்ய வ்யக்தமாலோகயந்தீ ।
அநிதரசரணாநா மாதிராஜ்யேऽபிஷிஞ்சேத்
சமிதவிமதபக்ஷா சார்ங்கதந்வாநுகம்பா ॥ (105)

(ப-ரை) வ்ருஷகிரிமதிருஹ்ய-வேங்கடமலையிலேறி, உதாரம்-குணங்களால்பூர்ணமானதும், கோருவதையெல்லாம்வழங்குவதுமான, இதம் சதகம்-இந்த தயாசதகஸ்தோத்திரத்தை, ஸம்யக் - நன்றாக, அப்யஸ்யமாநாந் - திரும்பவும் திரும்பவும்

அப்யஸிப்பவர்களை (படிப்பவரை), வ்யக்தம் - நன்றாக, ஆலோகயந்தீ - பார்க்கிறவளாய், ஶார்ங்கதந்வந: - சார்ங்கம் என்னும் வில்லேந்திய ஸ்ரீநிவாஸனுடைய தயை, ஶமிதவிமத பக்ஷா - விரோதிகக்ஷிகளையெல்லாம் சாந்தப்படுத்தி, அகதி ஶரணாநாம் - வேறு கதியற்ற பேதை (அகிஞ்சனர்) களுக்குரிய, ஆதிராஜ்யே - உன்னதராஜபதவியில், அபிஷிஞ்சேத் - அபிஷேகம் செய்வள்.

"அபேக்ஷித்ததையெல்லாம் வள்ளலாய் வழங்கும் இந்த நூறு பாசுரமடங்கிய துதியை நன்றாய்ப் பாராயணமாகப் படிப்பவர்களை வேங்கடமலை மேலேறி நன்றாகப் பார்த்துக்கொண்டிருக்கும் ஸ்ரீநிவாஸனுடைய தயையானவள் விரோதக் கக்ஷிகளையெல்லாம் சமனம் செய்து (அடக்கி) வேறு கதியில்லாத அகிஞ்சனனுக்கு ஏற்ற அதிராஜபட்டத்தில் (அகிஞ்சனசக்ரவர்த்திப்பட்டத்தில்) அபிஷேகம் செய்வாள்".

(தா-ம்) மலைப்பெருமாளுடைய தயையைத் துதிசெய்வதில் இது ஒருஸௌகர்யம். கீழேயுள்ள நாடுகளில் இத்துதியைப்படிப்பவர்களையெல்லாம் மேலேயிருந்து நன்றாகக் கவனித்துப்பார்க்க ஸௌகர்யமுளது. இந்த சதகம் உதாரம். காவ்யகுணங்களாலும், கம்பீரமான பொருள்களாலும் நிரம்பினது, கோறினதையெல்லாம் உதாரமாக வழங்கக் கூடியது. தயை எப்படி உதாரையோ, அப்படியே அவள் விஷயமான தோத்திரமும் உதாரம். 'இந்தத் துதியை அப்யாஸம் பண்ணுகிறவர்கள்', அப்யாஸம் என்பது பலமுறை படிப்பதைச் சொல்லும். 'குணம்' என்பதற்கு 'குண்யதே' பலகால் சொல்லிச் சொல்லிப் புகழப்படுகிறது என்பது பொருள். ஸௌசீல்யகுணத்தின் விஷயத்தில் அப்படிப் பொருளுரைக்கப்பட்டது. தயாகுணத்திற்கும் அது ஏற்கும். தயா குணத்திற்குப் பொருந்துவது தயையின் துதிக்கும் பொருந்தும். தயையைத் தவிர வேறு கதியில்லை என்றிருக்கும் அகிஞ்சனர்களுக்குச் சக்ரவர்த்தியாக (தாழ்ந்தவரிலும் கடையோனாகத் தாழ்ந்தவனென்றும் உயர்த்தியுடைய ஸிம்ஹாஸனபதத்தில்) அபிஷேகம் செய்துவைப்பாள். கிங்கரத்வாதிராஜ்யமே நமக்கு நிகரற்ற ராஜபதம். அந்தப் பதத்தில் நமக்கு அபிஷேகம். பெருமாளை அதிபதியாக அடைந்து அநந்யாதிபதிகளாகிறோம். விமத

பக்ஷத்தையெல்லாம் தயை அடக்கிவிட்டுக் குழந்தைகளாகிய நமக்கு அபிஷேகம் செய்கிறாள். 'பாலம்' என்பதை இங்கேயும் நினைக்கவேண்டும். பாலப்பர்வத்தில் இத்துதியைப் பெரியோர்களிடம் ஸந்தை சொல்லி அப்யாஸம் செய்வர். 'விமதபக்ஷம்' என்பது 'தண்டிக்கவேணுமென்னும்' எதிர்கக்ஷி. மற்றக் குணங்கள் செய்யும் எதிர்வாதங்களைத் தக்கபடி ப்ரதிவதனம்செய்து சமனப்படுத்தி நம்முடைய விரோதிகளான பாபங்களைப்போக்கி,'சார்ங்கதந்வா' சார்ங்கமென்னும் வில்லையேந்தினவன் நம்மை ஜயித்து வசப்படுத்தத் திருமலையில் வில்லுங்கையுமாய் நின்றுகொண்டு தயாகவசத்தைத் தரித்துக்கொண்டு ஸமயம் பார்த்துக்கொண்டிருக்கிறான் என்று 28-ம் ச்லோகத்தில் ஸாதித்தார். அங்கே 'சார்ங்கீ'என்று பெருமாளைச் சார்ங்கத்தை ஏந்தினவராக வர்ணித்தார். இங்கே பெருமாளுக்கு நம்மை வசப்படுத்துவதாகிய ஜயம் ஸித்தித்ததால் பெருமாளைச் 'சார்ங்கதந்வா' என்று வர்ணிக்கிறார். பெருமாளுக்கு மனோரதம் ஸித்தித்து ஜயம் கிடைத்தது ஆனாலிங்கே அபிஷேகம், துதியைப் படித்து ஆகிஞ்சந்யத்தில் ரஸமுடைய பேதைப்ரஜைகளுக்குத் தயாதேவியால் செய்விக்கப்படுகிறது. ஆகாசகங்கை முதலிய மலை அருவியின் தீர்த்தங்களைக்கொண்டு அபிஷேகம் செய்யவும் ஸௌகர்யம்; கீழேயிருப்பவர்கள் முடியில் உயரத்திலிருந்து கங்கையை வார்க்கலாம். திவ்யதம்பதிகளுக்கு அபிஷேகமில்லை; தயாதேவிக்கு அபிஷேகமில்லை; வேதாந்தமே சிகபதத்தில் ஏற்றிவைக்கப்பட்ட கவிக்கு அபிஷேகமில்லை; துதியைப் படிக்கும் அகிஞ்சனர்களுக்கு அபிஷேகம். மனப்பாடம் ஆவதற்கு முன்பே ஸந்தை சொல்லும்பொழுதே அபிஷேகமாய் விடும். 'அப்யாஸம்' என்பது இரண்டு மூன்று ஆவ்ருத்தி செய்யும் ஸந்தையையும் சொல்லும். (106)

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible] || ௧௦௭ ||

விச்வாநுக்ரஹமாதரம் வ்யதிஷஜத் ஸ்வர்காபவர்காம் ஸுதா
ஸத்ரீசீமிதி வேங்கடேச்வரகவிர் பக்த்யா தயாமஸ்துத।
பத்யாநாமிஹ யத்விதேயபகவத்ஸங்கல்பகல்பத்ருமாத்
ஜஞ்ஜாமாருததூதசூதநயத: ஸாம்பாதிகோZயம் க்ரம:॥ (107)

(ப-ரை) விஶ்வாநுக்ரஹாதாரம் - ஸகல அநுக்ரஹங்களை யுமளிக்கும் தாயாயிருப்பவளும், வ்ருஷபஜீவாதுமாவஹம் - ஸ்வர்க்கமோக்ஷங்களைச் சேர்ப்பிப்பவளும், ஸ்வாதுஸ்ரீம் - அம்ருதம்போன்றவளுமான, தயாம் - தயையை, வேங்கடேசகவிஃ - வேங்கடேச்வரனென்னும் கவி, பக்த்யா - பக்தியி ஞல், இதி - இப்படி, அஸ்தாவீத் - துதிசெய்தார். இஹ - இங்கே, (இத்துதியில்) யஸ்யை - எந்த தயாதேவிக்கு இட்டது சட்ட மான, ஸங்கல்பம் - ஸ்ரீநிவாஸன் ஸங்கல்பம் என்கிற, கல்பத்ரோஃ-கல்பகவ்ருக்ஷத்திலிருந்து, ஸம்ஸாராவாதவாதத் தவாதஃ- பெருங்காற்றினுல் மாமரத்திலிருந்து (ஒரே க்ஷணத் தில் ஒருநூற்றுக்கணக்காக) பழங்கள் உதிர்க்கப்படுவதுபோல, வத்யானாம் - ச்லோகங்களுடைய, அயம் - இந்த, ஸம்வாதிகஃ- ஒரே கும்பலாய் புத்தியில் தோன்றிய, க்ரமஃ - ஓர் முறையா னது ஏற்பட்டது.

"எல்லா அநுக்ரஹங்களையும் விச்வத்திற்கெல்லாம் அளிக் கும் தாயாயும், ஸ்வர்க்கமோக்ஷப் பயன்களைச் சேர்க்குமவளும், அம்ருதத்தைப்போல் இனியவளுமான தயாதேவியை வேங்கடே சுவரகவி பக்தியோடு இப்படித் துதித்தார். துதிக்கப்பட்ட அந்த தயாதேவிக்கு இட்டது சட்டமான பகவத்ஸங்கல்பமென்னும் கல்பவ்ருக்ஷத்திலிருந்து என்னுடைய புத்தியில் இந்நூறு பத்யங் களும் ஏககாலத்தில் பெருங்காற்றில் அசையும் மாமரத்திலிருந்து பழங்கள் விழுவதுபோல் இறங்கிவிட்டன. (தோன்றின) உதிர்ந்தன",

(தா-ம்) தயை விஷயமான இந்த சதகம் உதாரமாகப் பலன் களை வழங்குமென்ருர். எந்தப் பலமும் பகவத்ஸங்கல்பத்தால் தான் கிடைக்குமென்பர். எப்படி தயை வழங்கக்கூடும். பகவத் ஸங்கல்பம் கல்பகவ்ருக்ஷமென்பது உண்மையே. ஆனுல், அந்த ஸங்கல்பம் தயைக்கு அதீனமானது. தயாதேவி ப்ரேரணம் செய் கிறபடி ஸங்கல்பம் வழங்குகிறது. ஏககாலத்தில் நூற்றுக்கணக் காகப் பலன்களைக் கையில் சேர்க்கும். இந்தத்துதியிலுள்ள பத் யங்கள் என் புத்தியில் ஏககாலத்தில் ஒரு நூற்றுக்கணக்காக இறங்கின. பகவத்ஸங்கல்பமென்னும் கல்பகவ்ருக்ஷத்திலிருந்து உதிர்ந்தன. இந்தப் பத்யங்கள் என் புத்தியில் தோன்றும்படி

அநுக்ரஹம் ஏற்பட்டதிலும் உயர்ந்த பலன் எனக்கு என்ன உளது? என் புத்தியால் அனந்த அர்த்தங்களை ஆலோசித்தறிந்து கவனம் செய்தாலல்லவோ ஒன்றுக்குப் பின்னொன்றாக ரசனை செய்யவேண்டும். தயை என்னும் ஓர் பெருங்காற்றடித்து பகவத் ஸங்கல்பமென்னும் கல்பவ்ருக்ஷத்திலிருந்து இந்த நூறு பத்யங்களையும் என் புத்திக்குள் தள்ளிவிட்டது. (உதிக்கச்செய்தது); அப்படி ஒரேகாலத்தில் தோன்றுகையிலும், இந்த வரிசைக்ரமப்படிக்குள்ள தொடர்ச்சியாகவே உதித்தது. 'வேதமென்னும்' கல்பவ்ருக்ஷத்திலிருந்து பாகவதமென்னும் ரஸப்பழம் விழுந்ததுபோல் என் நாவிற்கு இந்நூறு ரஸப்பழங்களும் அணுகின. 'பக்தியோடே' என்பதால், இந்தப்பத்யங்களை உச்சரிப்பதில் பக்திமட்டும் என்னுடையது என்று ஸூசிக்கிறார், பாடும் கவியின் பக்தியென்னும் ரஸம் இங்கே அம்ருதத்ரவம். அடுத்த ச்லோகத்தில் மலையுச்சியிலிருந்து கீழே விழும் மலையருவியாகத் தயையை வர்ணிக்கிறார். இங்கே தயையே ஜஞ்ஜாமாருதமென்று வர்ணிக்கிறார்.

காமம் ஸந்து மித: கரம்பிதகுணாவத்யாநி பத்யாநி ந:
கஸ்யாஸ்மிந் சதகே ஸதம்புகதகே தோஷச்ருதிம் க்ஷாம்யதி ।
நிஷ்ப்ரத்யூஹவ்ருஷாத்ரிநிர்ஜரஜரத்காரச்சலேநோச்சலந்
தீநாலம்பநதிவ்யதம்பதிதயாகல்லோலகோலாஹல: ॥ ௧0௫ ॥

காமம் ஸந்து மித: கரம்பிதகுணவத்யாநி பத்யாநி ந:
கஸ்யாஸ்மிந் சதகே ஸதம்புகதகே தோஷச்ருதிம் க்ஷாம்யதீ ।
நிஷ்ப்ரத்யூஹவ்ருஷாத்ரிநிர்ஜர ஜரத்காரச்சலேநோச்சலந்
தீநாலம்பநதிவ்யதம்பதிதயா கல்லோலகோலாஹல: ॥ (105)

(ப-ரை) ந: - எங்களுடைய, பத்யாநி - ச்லோகங்கள், மித: கரம்பிதகுணாவத்யாநி - குணம் தோஷம் ஒன்றோடு ஒன்று கலந்தனவாக, காமம் ஸந்து - வேண்டியமட்டும் இருக்கட்டும். (என்ன குற்றம் இருந்தாலும்) நிஷ்ப்ரத்யூஹ - தட்டுத் தடங்கலில்லாமல், வ்ருஷாத்ரி - வேங்கடமலையினுடைய, நிர்ஜர - அருவியின், ஜரத்காரச்சலேந - விழும் இரைச்சலென்னும் வேஷத்தை வைத்துக்கொண்டு, உச்சலந் - ஓடிவரும், தீநாலம்பந - அகிஞ்சனரான பேதைகளுக்குக் கதியான, திவ்ய

𑌦𑌂𑌪𑌤𑍍𑌯𑍋𑌃 - ஈஸ்வரதம்பதிகளுடைய, 𑌦𑌯𑌾𑌕𑌲𑍍𑌲𑍋𑌲𑌕𑍋𑌲𑌾𑌹𑌲𑌃 - தயையின் அலைகளின் கோலாஹலசப்தம், 𑌸𑌦𑍍𑌹𑍃𑌦𑍁𑌦𑌕𑌤𑌕𑍇 - சித்தஜலம்போன்ற ஸத்துக்களின் மனதை சோதகமான தேத்தாங்கொட்டையைப்போல் சுத்தம் செய்யும், 𑌅𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌶𑌤𑌕𑍇 - இந்த சதகத்தில், (நூறில்), 𑌕𑌸𑍍𑌯 - எவனுடைய, 𑌦𑍋𑌷𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌂 - குற்றப்பேச்சு காதில் விழுவதை, 𑌕𑍍𑌷𑌾𑌮𑍍𑌯𑌤𑌿 - பொறுக்கும். யார் குற்றப் பேச்சைக் காதில்விழவொட்டும்.

"எங்களுடைய இந்தப் பிரபந்தங்கள் வேண்டிய மட்டும் குற்றம் கலந்தனவாகவேயிருந்தாலும் இருக்கட்டும். வேண்டியமட்டும் விமர்சகவித்வான்கள் பணிக்குச் சொல்லப் பார்க்கட்டும். ஸத்துக்கள் (மனமாகிய) ஜலத்திற்குத் தேத்தாங்கொட்டை (கதகம்) போன்ற இந்த சதகவிஷயத்தில் எவர் குற்றப் பணிப்பு சப்தத்தை, பேதையர்க்கு ஆச்ரயமான திவ்யதம்பதிகளுடைய தடுக்கமுடியாமல் அதிவேகமாக வேங்கடமலையிலிருந்து விழும் அருவிகளின் சாக்கைக்கொண்டு பேரிரைச்சலோடு ஓடிவரும் தயையென்னும் மலையருவிகளின் கோலாஹல இரைச்சல் காதில் விழ இடங்கொடுக்கும்"?

(தா-ம்) 105-ல் இந்தத் துதி குற்றமற்றதென்றீர். நீர் பெற்ற துதி உமக்குக் குற்றமில்லை என்று தோன்றினாலும், பராமர்சிக்கும் வித்வான்கள் இதில் குற்றமும் குணமும் கலந்திருக்குமென்பரே. இப்படி ஆக்ஷேபம் வர, வேண்டிய மட்டும் குற்றஞ்சொல்லப்பார்க்கட்டும், குற்றங்களைப் பேசட்டும்; அவர்கள் குற்றப்பேச்சு ஒருவர் காதிலும் விழவொட்டாமல் திவ்யதம்பதியின் தயை மலைமேலிருந்து "சோ" என்று சப்தித்துக் கொண்டு குற்றம்பேசும் பண்டிதர் பேச்சை அமுக்கிவிடும். தயை அருவி மலையிலிருந்து விழும் கோலாஹலஇரைச்சலில் இந்தக்குற்றச்சொல் அமுங்கிப்போகும். தயை விஷயமான துதியின்பேரில் குற்றச்சொல்லைத் திவ்யதம்பதிகளும் பொறுக்கமாட்டார்கள், எல்லாக் கொடிய குற்றங்களையும் தயாதேவி பொறுத்துவிடுவாள். பொறுப்பிப்பாள். இந்தத் தோத்திரத்தின் விஷயத்தில் குற்றஞ்சொல்லுவதை மட்டும் பொறுக்கமாட்டாளென்பது வேடிக்கை. க்ஷமையே வடிவான தயையும் இத்துதியில் பிறர் குற்றச்

சொல்லை க்ஷமிக்கமாட்டாள். ஆனால், தயையானபடியால், குற்றஞ்சொல்பவரை ஹிம்ஸிக்கமாட்டாள், தண்டிக்கமாட்டாள். அவர்கள் குற்றப்பேச்சை இன்னம் அதிகமாக இரைச்சல் போடுவதால் காதில் விழாமல் அமுக்கிவிடுவாள். மலையருவிகள் மேலேயிருந்து கீழேவிழுகின்றனஎன்ற சாக்கைவைத்துக்கொண்டு பேரிரைச்சலாகக் கோலாஹலம் செய்து குற்றசப்தத்தைக் காதில் விழாமல் மறையச் செய்வாள். குற்றஞ்சொல்லுகிற வித்வானும் குணங்களும் குற்றங்களும் கலந்திருக்கின்றனஎன்று தூஷிப்பரே ஒழிய, குணமே யில்லை என்று தூஷிக்கத் துணியமாட்டார். 'பத்யங்களை'ப் பழித்தாலும் என்பதற்கு 'ஒவ்வொரு பத்யமாக எல்லாப் பத்யங்களையும் குற்றமுடையதாகத் தூஷித்தாலும் என்றும் பொருள் கொள்ளலாம். ஸ்ரீபாகவதத்தில் 'ப்ரதிச்லோகமும் அபத்தமாயிருந்தாலும்' என்பதுபோல. இந்த சதகம் 'ஸதம்புகதகம்' என்பதில் மிக ரஸங்கள் உள. அழுக்குக் கலந்த ஜலத்தில் மண்ணை மட்டும் பிரித்து விட்டு சுத்த ஜலத்தைத் தனிப்படுத்தும் சக்தியுடையது கதகம் என்னும் தேத்தாங்கொட்டை. ஸத் என்பவர் குணதோஷங்களைப் பகுத்தறியும் வித்வான். நல்லது பொல்லாதகைத் தெளியப் பிரிக்கக்கூடியவர்கள் ஸத்துக்கள். அவர்களுடைய தெளிவான புத்தி (மனது) ஜலமாக வர்ணிக்கப்படுகிறது. ராமாயணத்தில் வால்மீகி ஆச்ரமத்தின் ஓரத்திலோடும் தமஸைநதியின் சுத்தமான தீர்த்தத்தைவர்ணிக்கையில் 'ஸத்தான மனுஷ்யர்களுடைய சுத்த மனதைப்போல அழகாயும், ப்ரஸந்நமான அம்புவாயும் (தெளிந்த சுத்தஜலமாயும்) இருப்பதாயும்' வர்ணித்தார். அதைத் திருவுள்ளத்திற்கொண்டு, இங்கே வித்வான்களின் மனதை அம்புவாக (ஜலமாக) நிரூபிக்கிறார். குணதோஷங்களைப் பிரிக்கும் விஷயத்தில் அவர்களுக்குப் போதுமான புத்தித் தெளிவு இல்லாமலிருந்தாலும், அவர்கள் புத்தியைத் தெளியப்படுத்தும் இந்த சதகமாகிய கதகம். தோஷலேசமில்லாமல் 'சுத்தமான பத்யங்கள்'. இப்படித்தான், இந்த க்கவனம் இருக்கவேண்டுமென்பதை அவர்களுக்குச் சிக்ஷித்துக்கொடுக்கும் இதிலிருந்து அந்த சோதகர்கள் மாசற்ற காவ்யரீதியைக் கற்றுக்கொள்ளவேணும். அவர்கள் புத்தியிலுள்ள காலுஷ்யத்தை (அறியாமையை)ப் போக்கும் அவர்கள் மனதாகிய நீரைச் சுத்தப்படுத்தும். சோதகர் மனதைத் தெளியச் செய்யும். இன்னமிரண்டுவிதமான பொ

ருள்களுமுண்டு .ஸத்துக்களாயிருப்பவர் மனதில் நாம் முன்செய்த கொடுவினைகளையெல்லாம் ஸ்ரீநிவாஸனுடைய தயை க்ஷமிக்குமோ என்று சங்கை என்னும் காலுஷ்யமிருக்கலாம். ஸத்துக்களின் மனமென்னும் நீரிலுள்ள ஸந்தேஹமென்னும் காலுஷ்யத்தை எல்லாம் தயையின் எல்லையற்ற ப்ரபாவத்தை விளக்கும் இந்தஸ்தோத்திரம் தேத்தாங்கொட்டையைப்போல போக்கிச் சுத்தம் செய்து நிஸ்ஸம்சயமாக்கும். இது ஒரு பொருள். 'ஸதம்பு' என்பதற்கு நீர் இருப்பது நீருள்ளது என்று பொருள்கொள்ளலாம். வித்வான்கள் மனதில் 'ரஸம்' என்னும் ஜலம் கொஞ்சமேனுமிருந்தால். அடியோடு உலர்ந்த பங்கமாக (சேராக) இருந்தால், தேத்தாங்கொட்டை என்ன செய்யும்? ஜலமும் மண்ணும் கலந்திருந்தால் மண்ணைக் கீழே தள்ளி ஜலத்தைச் சுத்தமாகச் செய்யும். கொஞ்சமேனும் நீர் இல்லாமலிருந்தால் இந்தக்காவ்யமவர்களுக்கு எப்படி ஆராதிக்கச்செய்யும். 'பங்கத்தைக் கதகம் எப்படித் தெளிவுபடுத்தும், ஸந்தோஷப்படுத்தும்' என்றார் வாமனர். ரஸமுடைய ஸஹ்ருதயர்களைத்தான் காவ்யம் ரஞ்ஜிப்பிக்கும். 'ந:' என்று மூன்று கர்த்தாக்களையும் கூட்டிக்கொண்டார். பெருமாள் வேங்கடேசர், பெருமாள் ஸங்கல்பவ்ருக்ஷம், கவி வேங்கடேசர் ஆகிய மூவரையும் கர்த்தாக்களாகச் சேர்த்துக்கொண்டு 'எங்கள் சதகம்' என்றார். இந்தஸ்தோத்திரமும் தயாகல்லோலகோலாஹலமாகும். தயையின் அலைகளின் கோலாஹலசப்தமாகும். 'ஹயவதனஹேஷாஹலஹலம்' ஸ்வாமியின் கவிதைக்கு மூலம் மூலகாரணத்திலுள்ள ஹலஹலப்பதம் க்ரியமாணஸ்தோத்திரத்தின் முடிவில் 'கோலாஹலம்' என்று கொஞ்சம் ஸாம்யத்தோடு அமைந்தது.

𑌕𑌵𑌿𑌤𑌾𑌰𑍍𑌕𑌿𑌕𑌸𑌿𑌂𑌹𑌾𑌯 𑌕𑌲𑍍𑌯𑌾𑌣𑌗𑍁𑌣𑌶𑌾𑌲𑌿𑌨𑍇 ।
𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌵𑍇𑌙𑍍𑌕𑌟𑍇𑌶𑌾𑌯 𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤𑌗𑍁𑌰𑌵𑍇 𑌨𑌮𑌃 ॥

கவிதார்க்கிகஸிம்ஹாய கல்யாணகுணசாலிநே ।
ஸ்ரீமதே வேங்கடேசாய வேதாந்தகுரவே நம: ॥

𑌦𑌯𑌾𑌶𑌤𑌕𑌂 𑌸𑌂𑌪𑍂𑌰𑍍𑌣𑌮𑍍 ।

தயாசதகம் முற்றிற்று.